
வட்டூர் வீயோடை இலுப்பையடி

# ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான

# குடமுழுக்கு விழா மலர்



வெளியீடு

பிரான்ஸ் - வட்டூர்

இலுப்பையடி வீயோடை ஸ்ரீ முத்துமாரி அம்பாள்

தேவஸ்தான பரிபாலனசபைகள்

2010-03-04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

89



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வட்டூர், வீயோடை, இலுப்பையடி ஸ்ரீ முத்துமாரி அம்பாள்
தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஷ்டை

# மஹா கும்பாபிஷேக விழா

விரோதி வருஷம் மாசித்திங்கள் 20ஆம் நாள்

## 04.03.2010

### வெளியீடு

வட்டூர்
இலுப்பையடி வீயோடை ஸ்ரீ முத்துமாரி அம்பாள்
தேவஸ்தான பிரான்ஸ் பரிபாலனசபைகள்
2010-03-04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Title: Vaddoor, Veejodai, Iluppaiyadi
Sri Muththumari Ambal Devasthana
Kudamulukku Vizha Malar

Copyright : The Temple Trusteeship Board

Edition : 04 March 2010

Author: M.N.Kaneshwaran
(President, Trusteeship Board)

Publishers : Vaddoor, France
Iluppaiyadi, Veejodai
Sri Muththumari Ambal Devasthana Paripalanasapai

Printed by : Harikanan Printers,
# 424, K.K.S. Road, Jaffna, Sri Lanka

மலரின் பெயர் :- வட்டூர், வீயோடை, இலுப்பையடி
ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான
குடமுழுக்கு விழா மலர்

பதிப்புரிமை :- ஆலய பரிபாலனசபை

காலம் :- விரோதிவருஷம் மாசித்திங்கள் 20ம் நாள்
(04.03.2010) வியாழக்கிழமை

மலர் ஆசிரியர் :- ம.ந.கணேஸ்வரன்
(தலைவர், பரிபாலனசபை)

வெளியீடு : வட்டூர் - பிரான்ஸ்
இலுப்பையடி வீயோடை
ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான பரிபாலனசபை

பதிப்பு :- கரிகணன் பிறிண்டேர்ஸ்,
காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட்டூர் வீயோடை, இலுப்பையடி
## ஸ்ரீ முத்துமாரி அம்பாள் திருக்கோவில்
## வட்டூர் பரிபாலனசபை.

**போஷகர்** : திருமதி இராசலட்சுமியம்மா சிவலிங்கம் (மூத்த அறங்காவலர்)

**தலைவர்** : திருமிகு.சிவலிங்கம் இரகு (அறங்காவலர் மின்சாரத்திணைக்களம்)

**செயலாளர்** : திருமிகு. சிவலிங்கம் ரூபன், ஆசிரியர் (அறங்காவலர்)

**பொருளாளர்** : திருமிகு.அப்பாத்துரை சர்வசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற பொறியியலாளர்)

திருமிகு.பொன்னுத்துரை ஜெயரத்தினம்

திருமிகு.வர்ணகுலசிங்கம் அமரநாதன்

திருமிகு.கந்தசாமி அருட்செல்வம்

## வட்டூர், வீயோடை இலுப்பையடி
## ஸ்ரீ முத்துமாரி அம்பாள் திருக்கோவில்
## பிரான்ஸ் பரிபாலனசபை.

**தலைவர்** : திருமிகு.ம.ந.கணேஸ்வரன் (உதவிக்கணக்காளர், பிரான்ஸ்)

**செயலாளர்** : திருமிகு.சிவலிங்கம் கலையரசன் (அறங்காவலர்)

**பொருளாளர்** : திருமிகு.சிவலிங்கம் கலைவாணன் (அறங்காவலர்)

திருமிகு.கந்தையா கமலேஸ்வரன்

திருமிகு.ஆறுமுகசாமி வர்ணகுலசிங்கம்

திருமிகு.தேவராசா முருகானந்தசிவம்

திருமிகு.இராசரத்தினம் சத்தியமூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலோசனைச் சபை

*சித்தாந்தரத்தினம் கலாநிதி மா.வேதநாதன்*
தலைவர், இந்துநாகரிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்

*சாகித்தியரத்னா பேராசிரியர் அ.சண்முகதாஸ்*
யாழ்.பல்கலைக்கழகம்

*கவிஞர், கலைஞர், சித்தாந்தச்செல்வர்*
*வ.யோகானந்தசிவம் (ஓய்வுபெற்ற அதிபர்)*

*முனைவர். ம.செ.இரபிசிங்*
தலைவர், தமிழ்த்துறை, பனாரசுப் பல்கலைக்கழக
வருகைதரு பேராசிரியர், சென்னைப் பல்கலைக்கழகம்
இயக்குனர், இணையவழி தமிழ்ப் பல்கலைக்கழகம் சென்னை

*கலாநிதி ம.பழனியப்பன்*
பேராசிரியர், மன்னர்கல்லூரி புதுக்கோட்டை.

*திரு.சிவலிங்கம் இரகு (மின்சாரசபை)*

*திரு.சிவலிங்கம் ரூபன் (ஆசிரியர்)*

*திரு.சிவலிங்கம் கலையரசன்*

*திரு.சிவலிங்கம் கலைவாணன்*

*திரு.அப்பாத்துரை சர்வசுப்பிரமணியம்*
ஓய்வுபெற்ற பொறியியலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டூர் வீயோடை இலுப்பையடி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான பழையதோற்றம் 1972 கும்பாபிஷேக மலரிலிருந்து...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலரின் இதழ்களாக.....


| | |
|---|---|
| வட்டூர் - வீயோடை இலுப்பையடி ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருவூஞ்சல் | 01-04 |
| வாழ்த்துச் செய்திகள் | 05-20 |
| தோற்றமும் திருத்தல வரலாறும் | 21-28 |
| முத்துமாரியம்மன் தோற்றமும் வளர்ச்சியும் | 29-30 |
| அன்னையின் அருட்சிறப்பும் அழகுக்கோலமும் | 31-36 |
| அம்மன் வழிபாடு | 37-40 |
| அருள்மிகு வட்டூர் ஸ்ரீ முத்துமாரிஅம்மன் கோயிலும் அருட்பணிகளும் | 41-43 |
| வட்டூர். வீயோடை ஸ்ரீ முத்துமாரியம்மன் பாமாலை | 44-48 |
| கோபுர தரிசனம் பாச விமோசனம் | 49-51 |
| தேசமுத்துமாரி | 52-56 |
| ஸ்ரீ சக்கர வழிபாடு | 57-67 |
| காலமெல்லாம் காத்தருளும் எங்கள் முத்து மாரியம்மா | 68-69 |
| காக்கும் கரங்கள் | 70-75 |
| அன்பாகி அருளான ஆதிமூலமே அன்னை | 76-78 |
| திருத்தேர்க்காட்சி | 79 |
| பண்டைய தெய்வ வழிபாடுகளும் சக்தியின் தத்துவமும் | 80-84 |
| அருளாட்சிமிக்க பெருமாட்டிக்கு ஒரு கலைக்கோயில் கலைகளின் காப்பகமாக விளங்குவது | 85 |
| முத்துமாரித் தாயின் முன்றலே | 86 |
| வட்டூர் இலுப்பையடி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் | 87 |
| அம்பிகையே அடைக்கலம் | 88-89 |
| எங்கண் முத்துமாரி காவடிச்சிந்து | 90-95 |
| பிள்ளைத்தமிழ் | 96-143 |
| வட்டூர் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான பரிபாலனசபை கோபுரப் பணிக்குப் பேருதவி செய்தோர் விபரம் | 144-150 |
| வட்டூர் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான பரிபாலனசபை மண்டப, வாகன அன்பளிப்புச் செய்தோர் விபரம் | 151-152 |
| திருப்பணி வேலைகளுக்கு அன்பளிப்புச் செய்த அன்பர்கள் | 153 |
| நன்றி | 154 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டூர், வீயோடை, இலுப்பையடி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான புதிய தோற்றம்

2010-03-04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டூர், வீயோடை, இலுப்பையடி

**ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான மூலமூர்த்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டூர் - வீயோடை
# இலுப்பையடி ஸ்ரீ முத்துமாரி அம்மன்
# திருவூஞ்சல்

## காப்பு

வீயோடை வீற்றிருக்கும் வீரமுத்து மாரியின்மேற்
பாவாறு நாலும் பதிகமதாய் நாபாட
சந்திர சேகரனார் தாள்பயந்த தந்திமுகன்
கந்தமலர்ச் செஞ்சரணங் காப்பு

திருவளருங் குணகோளப் பகுதி சேர்ந்த
சீர்விளங்கு மாசியாக் கண்டஞ் சார்ந்த
உருவளரு மிலங்கையினுத் தரத்தில் வாய்ந்த
உற்றவியாழ்ப் பாணமதின் வட்டூர் மேய
மருவளரும் வீயோடை வளவெழுந்த
மாரிமுத்து மகேஸ்வரிமே லூஞ்சலேத்தக்
கருவளருங் கடகரிமா முகவன் றன்னைக்
கருதினே னவன்பாதங் காப்பதாமே.

துங்கமுறுஞ் சதுர்வேதங் கால்களாகத்
துய்யதிரு வுபநிடதம் விட்டமாகப்
பொங்கரவாம் ஆதிசேடன் கயிறதாகப்
பொலியவரு திருவூஞ்சல் புதிதாய்ப்பண்ணி
தங்கமொடு நவரத்தினம் இழைத்து வைக்க
சாம்பவியே விஞ்சன் மிசை நீயுமாட
வெங்கதிரோ னழகையர்கோன் வடந்தொட்டாட்ட
வீயோடை மாரிமுத்தே யாடீர் ஊஞ்சல்

கண்ணணொடு பண்ணவனு மாசி கூறக்
கருகரிய வீரபத்திரன் கரங்கள் கூப்ப
மண்ணினுள்ள மானிடர்கள் வணங்கியேத்த
மாதவஞ்செய் முனிவர்களும் வாழ்த்திப் போற்றக்
கன்னியர்க ளிருபுறமுங் கவரிவீசக்
கந்தருவர் வீணையிசை கரத்தால்மீட்ட
விண்ணவனை யிரங்கண்ணன் விடைகள் கேட்ப
வீயோடை மாரிமுத்தே யாடீர் ஊஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரிமுகன்மூ விருவதனன் பாங்கர் நிற்பக்
கங்கைமதி யரவணிந்தோன் வளமாய் மன்னப்
பரிவுடனே சடைவடுக நருகுசூழப்
பாங்கான மாசாத்தா னேவல் செய்ய
வரிகறுப்பன் காத்தானும் மலர்கள் தூவ
மாமகளும் நாமகளும் வடந்தொட்டாட்ட
விரிசடைநா ரதன்லோக விபரஞ்சாற்ற
வீயோடை மாரிமுத்தே யாடீர் ஊஞ்சல்.

பக்தர்களும் முத்தர்களும் பணிந்துபாட
பாங்காக அடியவர்கள் கூத்துமாட
எத்திசையு முள்ளவர்கள் தொழுதுநீட
எழிலுடனே பானுகம்பன் சங்கம் ஊத
சித்தமுடன் பரிகலங்கள் சேவைபூண
வித்தகியே உத்தமியே வேள்விகாணும்
வீயோடை மாரிமுத்தே யாடீர் ஊஞ்சல்.

சித்திரத்தீங் கதலியொடு மாவருக்கைத்
தேன்கனியுந் தெளிதேனும் பாலும் நெய்யும்
வைத்திடுகோ ரோசனைகத் தூரிகந்த
வருக்கம்பன் னீரிளநீர் வகைகலந்து
புத்தமிர்தம் சேர்த்தபிடேகஞ்செய்து
புகழ்முனிவர் பொருந்திவடந் தொட்டேயாட்ட
மெத்தியசீர் யாழ்ப்பாண வட்டூர் மேவும்
வீயோடை மாரிமுத்தே யாடீர் ஊஞ்சல்.

பிரதமையாம் முதற்கரத்திற் பெருமுத்தாட
பேணு துதி யைங்கரத்திற் சிறுமுத்தாட
திருதிசதுர்த் திக்கரத்திற் செவ்வேலாட
செய்யபஞ் சாக்கரத்தில் திருச்சங்காட
மறுசட்டிக் கரந்தனிலோர் மானுமாட
வாய்த்தசத்தக் கரந்தனிலே மழுவுமாட
விரியட்டக் கரந்தனிலோர் சக்கரமாட
வீயோடை மாரிமுத்தே யாடீர்ஊஞ்சல்.

தூபமொடு தீபங்கள் சொலித்தே மினைத்
துய்யதிருக் கோபுரத்தின் முடிகள்துன்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாபெரிய சட்ட விளக்கொளியே கால
மருவிவரு குருக்களின்வாய் மந்ரம்பன்ன
பாவவினை அகற்றுதிருப் பாதந் தன்னில்
பணிமணிகள் பலகிடந்து ஒலியே செய்ய
மாபலவு வளர்ந்தோங்கு வட்டூர் வந்த
வீயோடை மாரிமுத்தே யாடீர்ஊஞ்சல்

மலையரசன் மகளெனவே மகிழ்ந்துகாண
மாசில்லா வதியரசன் மகவாய் எண்ண
கலைகளுக்கு மெட்டாத முதல்வி நின்னைக்
காண்பரிய தொண்டர்களும் கண்டுபேண
பலபலநல் வரம்வேண்டிப் பாரோ ரெல்லாம்
பரிந்துருகி நைவேத்தியங்கள் காட்ட
விலையிலா மாமணியே மகிழுகின்றாய்
வீயோடை மாரிமுத்தே யாடீர்ஊஞ்சல்

ஆதிமுகற் பெண்சத்தி யாடீரூஞ்சல்
அகிலபுவனம் படைத்தா யாடீரூஞ்சல்
பாதியரன் இடங்கொண்டீர் ஆடீரூஞ்சல்
பாலகிருக்ஷ்ணன் தங்கையரே யாடீரூஞ்சல்
ஓதுபிரணவன் தாயே யாடீரூஞ்சல்
உற்றமகி டனைவதைத்தீ ராடீரூஞ்சல்
மாதுமையே மங்கை நல்லீர் ராடீரூஞ்சல்
மகமாரி மாரிமுத்தே யாடீர் ஊஞ்சல்.

ஆவாழி அந்தணரோ டரசர்வாழி!
அரியதவ முனிவேதா கமமும் வாழி!
தாவில்குல மங்கையர்கள் கற்பும் வாழி!
தண்டமிழும் சைவமும் தழைத்துவாழி!
பாவாக இவைபாடிப் படிப்போர்வாழி!
பற்றியே மனமுற்றுக் கேட்போர்வாழி!
மேவாத வினைமுற்றும் தீர்ப்பாய்வாழி!
வீயோடை மாரிமுத்தே வாழி! வாழி!

### எச்சரிக்கை

வீயோடை யம்பதியே வளர்வீர் எச்சரீக்கை
கார்கட தடமாமுகன் காப்பே எச்சரீக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவார் முத்துமாரி எங்கள் பொன்னே எச்சரிக்கை
புகழ்வாருனை வீயோடைநற் பதியே எச்சரிக்கை

### பராக்கு

திருவருள் வீயோடையமர் தேவி-பராக்கு
திகழானை முகவதுனை செய்யே பராக்கு
உருவளரும் உமைகௌரி உற்றாய் பராக்கு
ஓங்காரி ரீங்காரி உடையாய் பராக்கு.

### லாலி

சூலிசுப லாலிதிரி சூலிபரை லாலி
துய்ய நெடு நீலி சுபலாலி உமைலாலி
தோலானை முகன்துணையே சுந்தரியே லாலி
சொல்வீயோ டையமர் சூலிசுப லாலி.

### மங்களம்

மங்களம் மங்களம் பாக்கள் தானுரைக்கவே
வாக்கில் வந்து வாணிநீயும் தானிருக்கவே
ஐங்கரன் துணை யேகொண்டு மங்களம்மாரி உமையே
மங்களம் வீயோடையமர் மாரிதமக்கே!

**திருவூஞ்சல் முற்றும்**

---

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே !

துணையும் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பணிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையுமென் பாசாங் குசமுங் கையில்
அணையும் திரிபுர சுந்தரி யாவ (து)அறிந்தனமே

அறிந்தேன் எவரும் அறியா மறையை அறிந்து கொண்டு
செறிந்தேன் உனது திருவடிக் கேதிரு வேவெருவிப்
பிறிந்தேன் நின் அன்பர் பெருமை எண்ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழும்நர குக்குற வாய மனிதரையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டூர், வீயோடை, இலுப்பையடி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான

**மூத்த அறங்காவலர்**




**அமரர் திருமிகு கந்தன் சிவலிங்கம் (தலைமை ஆசிரியர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டூர், வீயோடை, இலுப்பையடி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான
**மூத்த அறங்காவலர்**



**திருமதி இராசலட்சுமியம்மா சிவலிங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமான் போருள்





புனித மிக்க

**மதுரை ஆதீனம்**

292 ஆவது குருமகாசன்னிதானம்

**ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்**

&

ஆதீனகர்த்தர்

தெற்காவணி மூல வீதி
மதுரை - 625 001

உ

**மதுரை ஆதீனம் 292 ஆவது குருமாகாசன்னிதானம் அவர்களின்**

## அருள்முக ஆசியுரை

பரம்பரை அறங்காவலர்

அருள்மிகு அக்னீசுவரசுவாமி
திருக்கோயில்,
கஞ்சனூர்,
தஞ்சை மாவட்டம்.

அருள்மிகு சாட்சிநாதசுவாமி
திருக்கோயில்,
திருப்புறம்பியம்,
தஞ்சை மாவட்டம்.

அருள்மிகு
கைச்சின்னேசுவரசுவாமி
திருக்கோயில்,
கச்சனம்,
தஞ்சை மாவட்டம்.

அருள்மிகு
பன்னகாபரமேசுவரசுவாமி
திருக்கோயில்,
பன்னத்தெரு,
தஞ்சை மாவட்டம்

யாழ்ப்பாணப் பகுதியில் வட்டூர் என்னும் கிராமத்தினில் எழுந்தருளியுள்ள அருள்மிகு ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயம் ஏறக்குறைய 700 ஆண்டு காலப் பழமை வாய்ந்தது. இந்த ஆலயத்தின் நினைவில் வாழும் அறங்காவலர், தலைமை ஆசிரியர் கந்தன் சிவலிங்கம் அவர்களின் பாரம்பரிய வழியில், பல்வேறு நிலைகளில் உருவாகி, இன்றைய தினம் நல்ல முறையில் ஒளிர்ந்து கொண்டிருப்பதை யறிந்து மகிழ்ச்சி கொள்கின்றோம்.

இந்த ஆலயத்தினுடைய வளர்ச்சியில், மேலும் மகிழ்ச்சிதரக்கூடிய விஷயம் என்ன வெனில், பல நூறு ஆண்டுகாலமாக நடத்திக் கொண்டிருந்த "மிருக பலி" என்னும் வேள்வியை நிரந்தரமாக நிறுத்தி, தூய சைவ ஆலயமாக உருவாக்கி, மக்களை நல்ல வழியிற் கொண்டு வந்து, பக்குவப்படுத்திய அறங்காவலர், கந்தன் சிவலிங்கம் அவர்களையும் அவர்தம் நண்பர் களையும் இவ்வாலய வர்லாறு என்றென்றும் போற்றி மரியாதை செய்து கொண்டிருக்கும் என்பதுதான்.

இப்படிப்பட்ட உன்னத உழைப்பும், தியாகமும், தொண்டுள்ளமும் கொண்டு, வைரக்கற்களைக் கொண்டு இக்கோயிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுப்ப எண்ணிய அறங் காவலர், கந்தன் சிவலிங்கம் அவர்களது உயர்ந்த எண்ணங்கள், அவரது உற்ற நண்பரும், திரு கணேசுவரன் நவரத்தினம் அவர்களது தந்தையாரும், ஆசிரியப் பெருந்தகையுமான நினைவில் வாழும் மயில்வாகனம் நவரத்தினம் அவர்களால் நிறைவேறியது என்றால் அது மிகையாகாது.

அதாவது வைரக்கற்கள் மூலம் மூலஸ்தான அம்பாள் செய்விக்கப் பெற்று மக்களால் வழிபாடு நடத்தப்பெற்று வருகின்றது.1972ஆம் ஆண்டு பங்குனித் திங்களில் பங்குனி உத்தரத் திருநாளில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்று 31 ஆண்டுகளுக்குப் பிறகு, 2003 ஆம் ஆண்டு, இந்த ஆலயத்தினுடைய வளர்ச்சியில், முன்னேற்றத்தினில் அக்கறை கொண்ட பலரும் சேர்ந்து உயர்திரு.நவரத்தினம் கணேசுவரன் அவர்களை ஆயுட்காலத் தலைவராகத் தேர்வுசெய்து, இன்றைய தினம், அவர்மூலம் தமிழ்நாட்டினில் இருந்து வரவழைக்கப்பெற்ற ஸ்தபதிகள், கட்டிடக் கலைஞர்கள் மூலமாக நீண்ட நெடிய கோபுரமும் சித்திர வேலைப் பாடுகள் நிறைந்த மண்டபங்களும் எழுப்பப் பெற்றிருப்பது மிகவும் பாராட்டுக்கு உரியதாகும்.

இப்படியான சிறப்பு வழிகளில், சைவசமயப்பணிகளை நாள் தோறும் செய்துவருகின்ற ஆயுட்காலத் தலைவரான திரு.நவரத்தினம் கணேசுவரன் அவர்களை, ஆதீனம் சார்பாக முழுமன நிறைவோடு பாராட்டி, அவர்களின் தன்னலமற்ற சேவைகளை மனதினில் கொண்டு **"சிந்தனையாளர்" "முத்தமிழ்க் காவலர்"** என்னும் இரண்டு விருதுகளை வழங்கி கௌரவித்து, அவர்தம் பணி இன்றுபோல், என்றென்றும் சிறப்புடன் தொடர்ந்து நடந்தேறிட, நமது நல்லாசிகளைத் தெரிவித்து மகிழ்கின்றோம்.

தலைவருக்கு, அனைத்து வழிகளிலும், நல்லுதவியும், ஒத்துழைப்பும் நல்கிவருகின்ற, மிகப்பெரிய சித்திரத்தேரை வழங்கிய வரும், இத்திருக்கோயிலை, பொது மக்களுக்காக அர்ப்பணித்தவரும், அறங்காவலர்களில் ஒருவருமான திரு.சிவலிங்கம் கலைவாணன் அவர்களையும், மற்றைய அறங்காவலர்களாகிய சிவலிங்கம் இரகு, சிவலிங்கம் ரூபன், சிவலிங்கம் கலையரசன் ஆகியோரையும் இலங்கையில் கோபுரம் தேர்த்திருப்பணிகள் உட்பட அனைத்துப் பணிகளையும் சிறப்பு டன் தனித்தன்மையாக நின்று மேற்கொள்ளும் திரு.அ.சர்வசுப்பிர மணியன் அவர்களையும், அனைத்திற்கும் மேலாக சைவமும் தமிழும் வளர கேட்டவுடன் கேட்ட தொகைகளை மறுப்பின்றி, மனமுவந்து திருப்பணி களுக்காகத் தந்திட்ட சைவப் பெருமக்களையும் பாராட்டி, சைவமும் தமிழும் தழைத்தோங்கிட, அனைவரும் தொடர்ந்து ஒற்றுமையுடன் இருந்து பாடுபடவேண்டுமென வாழ்த்தி, ஆசீர்வதிக்கின்றோம்.

எல்லோர்க்கும் ஆசீர்வாதம்!

ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்
குருபாதம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர்: ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்

ஆதீன முதல்வர்: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

தொலைபேசி:

நல்லூர், யாழ்ப்பாணம்,
இலங்கை.

# அருளாசிச்செய்தி



அம்பிகை அடியார்களுக்கு,

வட்டூர், வீயோடை, இலுப்பையடி ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்குப் புதிதாக அமைக்கப்பட்ட இராஜகோபுரம் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். பழமையும் பெருமையும் வாய்ந்த வட்டுக்கோட்டையம்பதியில் நிறைந்த ஆலயங்களைக் கொண்ட பிரதேசத்தில், சைவசமய நெறியில் நின்றொழுகும் மக்களும், தமிழ் கலாச்சாரப் பண்பாட்டுடன் வாழும் மக்களைக் கொண்ட பிரதேசத்தில் மூலிகை விருட்சமாகிய இலுப்பை மரத்தை அடையாளமாகக் கொண்டு மக்களின் வேண்டுகோளை வேண்டியவாறு வழங்கிக் கொண்டிருக்கும் அண்டசராசரங்களுக்கும் தாயாக விளங்கும் அன்னை இவ்வாலயத்தில் முத்துமாரி அம்பாளாக எழுந்தருளி இருந்து இவ்வூர் மக்களின் வேண்டுகோள்களை நிறைவு செய்பவளாக வீற்றிருக்கின்றாள். அம்பிகை வழிபாட்டால் அதிக வரம் பெறலாம் என்பது முதுமொழி. அம்பிகையுடைய ஆலயங்கள் அற்புதம் நிறைந்தவையாக விளங்குகின்றன. யாழ்ப்பாண சமய பாரம்பரியத்தில் முத்துமாரி அம்மன் வழிபாடு நீண்டகாலமாக இருந்து வருகின்றது. மக்களுக்கு ஏற்படும் நோய்களில் மன அழுத்தத்தை கொடுக்கின்ற நோய்களைத் தீர்ப்பவளாக அம்பிகை விளங்குகின்றாள்.

700 ஆண்டுகள் பழமைவாய்ந்த இவ்வாலயம் நீண்ட காலமாக சிறிய ஆலயமாக இருந்தது.இன்று மிகப் பெரிய ஆலயமாக நிர்மாணிக்கப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெறுவது இவ்வூருக்கும், ஊர் மக்களுக்கும் புனிதம் தருவதாகும். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு நடைபெறும் கும்பாபிஷேகம் இவ்வாலயத்தில் நடைபெறுவது இங்கு வாழும் மக்களுக்கும், வெளிநாட்டில் வாழுகின்ற இளைய தலைமுறையினரிடையே ஊரையும், ஊர் ஆலயங்களையும் சிந்தித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்களைப் புனர்நிர்மாணம் செய்வதும், ஆலயத்துக்கு வேண்டிய பணிகளைச் செய்வதும் சிறப்பம்சமாகும். இவ்வரிசையில் இன்று இவ்வாலயத்தைச் சேர்ந்த வெளிநாட்டில் வாழும் மக்களும், இவர்களோடு தலைவராக திருமிகு நவரத்தினம் கணேஸ்வரன், செயலாளர், அறங்காவலர் திருமிகு சிவலிங்கம் கலைவாணன், பொருளாளர் திருமிகு கந்தையா கமலேஸ்வரன் மற்றும் அவர்தம் குழுவினர் இணைந்து இவ்வாலயத்தின் வளர்ச்சியில் நிறைவாக பங்கினை ஆற்றி வருகின்றமை அனைத்து சைவத் தமிழ் மக்களுக்கும் பெருமையைத் தருகின்றது.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பதும், "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பதும் "நித்தமும் கோயில் தரிசனம் காண்" என்பதும் நம் சமயம் காட்டும் வழிமுறைகளாகும். இதனை நன்கு உணர்த்துகின்ற நெறியில், நிலையில்லாத வாழ்க்கையில் நிலையானவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு ஆலய வழிபாடு அவசியமானது. ஆலயத்தில் நடைபெறும் விழாக்கள் வழிபாடுகள் மனிதனை மனித நேயத்துடன் வாழவைக்கின்றன. இதனையே "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்" தேவாரம் அரிய பிறவியான மானிடப் பிறவி எடுத்த நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறுவது பொருளாகும். இன்றைய காலத்தில் அனைவரும் இறைவனை வழிபாடு செய்து மன நிம்மதியுடனும், ஆன்மீக சிந்தனையுடனும் வாழ்வது சாலப் பொருத்தமாகும். இக்கும்பாபிஷேகத்தைச் செய்யும் அனைத்து நல் உள்ளங்களையும் இறைவன் ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இறையன்பு"

20.12.2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துணைவேந்தரின் வேண்டுதல்

எங்கள் பண்பாட்டின் உயிர்ப்பு மையங்களாய், தாய்த் தெய்வ சந்நிதிகள் எழுச்சியுறக் காண்கின்றோம்.

இந்த வகையில் வட்டுக்கோட்டை, இலுப்பையடியில் அருளாட்சி புரிகின்ற முத்துமாரியம்மன் ஆலயம் இராஜகோபுரத்துடன் பொலிகின்ற செய்தியிலே மனதில் மகிழ்ச்சியும் ஆறுதலும் நிறைகின்றது.

தேசமெல்லாம் பரந்த தேசமுத்து மாரியம்மனின் பிள்ளைகளெல்லாம் கூடி இந்த ஆலயத்திருப்பணியினை நிறைவு செய்து, குடமுழுக்கு மலர் வெளியிட்டு ஆராதிக்கும் இவ்வேளை பெறுமதியானது.

இந்த அருட்பணியில் இணைந்துள்ள அடியவர்கள் அனைவருக்கும் அன்னை கோடி நலஞ் செய்திடுவாள்.

"அம்பிகையைச் சரண் புகுந்தால்
அதிக வரம் பெறலாம்"

- பாரதி

பேராசிரியர் நா.சண்முகலிங்கன்,
துணைவேந்தர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

இந்து நாகரிகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம், இலங்கை.

அலுவலகம் : 23028
இல்லம் : —

நாள் : ______

சிரேஷ்ட விரிவுரையாளர்
டாக்டர் மா.வேதநாதன்
பி.ஏ.(ஆனர்ச), டி.ஏ. டிஎஸ்.எஸ்., எம்.ஏ., பிஎச்.டி.,



# வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் வட்டூர், இலுப்பையடி ஸ்ரீ முத்துமாரி அம்மனுக்கும் பரிவாரத் தெய்வங்களுக்கும் மற்றும் புதிதாக அமைக்கப்பட்ட இராஜகோபுரத்திற்கும் மஹாகும்பாபிஷேகப் பெருவிழா மிகவும் மகோன்னத மான நிலையில் தமிழகத்திலிருந்து வருகைதந்த சிவாச்சாரியார்களும், இலங்கைச் சிவாச்சாரியார்களும் இணைந்து 04.03.2010இல் நிகழ்த்தப் பெற்ற கும்பாபிஷேகப் பெருவிழாவைக் காணும் பேறுபெற்றேன்.

மாரி என்ற பெயரே மழைத்தெய்வம் என்பதை அறிவிக்கின்றது. வெம்மையால் ஏற்படும் அம்மை போன்ற நோய்கள் ஏற்படாமல், மக்களைக் காத்து, பயிர்வளம் சிறக்கச்செய்து வேண்டுவார் வேண்டுவதை வழங்கும் அகிலாண்டேஸ்வரியாக முத்துமாரியம்மனைத் தமிழர் வழிபட்டு வருகின்றனர்.

வட்டூர் இலுப்பை மரத்தடியில் இருந்த முத்துமாரி அம்பாளுக்கு இன்று ஆகம மரபில் அமைந்த ஆலயமும், மேற்கு நோக்கிய புதியதோர் ஆலயமும், பல லட்சம் ரூபா செலவில் சிறப்பாக அமைத்துள்ளனர். மேற்குநோக்கிய இக்கோபுரம் வட்டூரில் ஒரு புதிய வரவாகும். மூன்று தளத்தில் சிறப்பான சிற்பங்களுடன் இக்கோபுரம் காட்சி தருகின்றது. இத்தெய்வீகத் திருப்பணிக்கு மனமுவந்து நிதிவழங்கிய புலம்பெயர் வாழ் அன்பர்களுக்கும், சிறப்பாக இவ்வாலய பரிபாலனசபைத் தலைவர் திருப்பணிச் செம்மல் ம.ந.கணேஸ்வரன் அவர்களுக்கும் என் உளம் நிறைந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் ஸ்ரீ முத்துமாரி அம்மனின் திருவடிகளின் பெயரால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

டாக்டர் மா.வேதநாதன், M.A., Ph.D.,
தலைவர். இந்துநாகரிகத்துறை.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டூர், வீயோடை, இலுப்பையடி

## ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான எழுந்தருளி அம்மன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டூர், வீயோடை, இலுப்பையடி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான

## குடமுழுக்கின்போது இந்தியாவில் இருந்து வருகைதந்த பிரதம சிவாச்சாரியார்கள்



1. சிவகாமசொல்லின்வேந்தர் சிவஸ்ரீ இ. ரமேஸ் சிவாச்சாரியார், திருப்பாச்சூர், தமிழ்நாடு, (இந்தியா).
2. சிவாகம ரத்னம்பூஷணம் சிவஸ்ரீ அ.ம.ரமேஷ் சிவாச்சாரியார், செய்யாறு (திருவோத்தூர்) தமிழ்நாடு இந்தியா.
3. சிவகாம ப்ரவீணா சிவஸ்ரீ இ.பரணீதர சிவாச்சாரியார், கடம்பத்தூர் தமிழ்நாடு (இந்தியா).
4. சிவகாம ரத்தினம் சிவஸ்ரீ இ.நடராஜ சிவாச்சாரியார், வேலூர், தமிழ்நாடு (இந்தியா).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண, யாழ்ப்பாண நீதிநிர்வாக வலய மேல்நீதிமன்ற நீதிபதி
கௌரவ இ.த.விக்னராசா அவர்களின்

# ஆசிச் செய்தி



வட்டுக்கோட்டை, இலுப்பையடி அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய அறங்காவல் தலைவரான ம.ந.கணேஸ்வரன் மற்றும் சிவலிங்கம் கலைவாணன், பொறியியலாளர் திரு.அ.சர்வசுப்பிரமணியம் உட்பட தன்னலம் கருதாது திருப்பணியில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்ட அடியார்கள் அனைவரதும் இடைவிடா முயற்சியினால் நீண்ட நெடிய கோபுரமும், சித்திரவேலைப்பாடு நிறைந்த மண்டபங்களும் கட்டி முடிக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்யும்வேளையில் சம்பந்தப்பட்டவர்களின் சமயப்பணியை மனமார வாழ்த்துகின்றேன்.

தூய எண்ணங்களுடன் வாழ்பவனுக்கு தூய உள்ளம் இயல்பாகவே அமைவதுபோல் திருக்கோயில்களை புனிதமாகப் பேணினாற்றான் அங்கு எழுந்தருளியிருக்கும் மூர்த்தி, தெய்வத்தன்மையை நாட்டுக்கு நல்கும் ஆலயங்கள் மாத்திரமல்ல, அர்ச்சகர், அறங்காவலர், பணியாட்கள் அனைவருமே தூய வாழ்வு வாழ்பவராக விளங்கவேண்டும்.

கருத்து, மனம், செய்கை இவை மூன்றும் ஒன்றுபட்டு செய்யும் காரியங்கள்தான் நன்மையைத் தரும். சமயம் என்பது பக்தியுணர்வை மட்டும் வளர்ப்பதோடு நின்றுவிடாது மக்களின் பண்பாட்டு வளர்ச்சியிலும் பங்கேற்கவேண்டும். அத்துடன் இதனை அனுஷ்டிப்போர் திருவருளை முன்வைத்துவாழப் பழகிக்கொள்ளவேண்டும்.

இவ்வாலயம் அறங்காவலர் சபையினர் ஆலயச் சூழலிலுள்ள வறிய பிள்ளைகளின் கல்விப் பணிக்குப் பங்களிப்புச் செய்யப் பல திட்டங்களை வகுத்துள்ளதாக அறியக்கிடக்கிறது. இத்திட்டங்கள் சம்பந்தப்பட்ட பிள்ளைகளுக்கு ஆன்மீகச் சிந்தனையுடன்கூடிய தூய கல்வியைப் பெற வழிவகுக்க வேண்டுமென அம்பாளை இறைஞ்சி, பிரார்த்திக்கின்றேன்.

**இ.த.விக்னராஜா,**
மேல்நீதிமன்ற நீதிபதி.
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதிதாசன் பல்கலைக்கழகம்
பல்கலைப்பேரூர், திருச்சிராப்பள்ளி – 620 024, தமிழ்நாடு

முனைவர் மு. பொன்னவைக்கோ
துணைவேந்தர்

# வாழ்த்துச்செய்தி



அன்புடையீர்,

தமிழர்கள் உலகின் முதல் மாந்தர்கள். தமிழ் உலக மொழிகளின் தாய் மொழி. தமிழர் பண்பாடு உலகப் பண்பாடுகளின் அடிப்படை. தமிழர்கள் இயற்கை யோடு இயைந்து வாழ்ந்தவர்கள். நீர், நெருப்பு, வளி, வான் போன்றவற்றை வழிபட்டவர்கள்."நீரின்றி அமையாது உலகம்" என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க, மழையே மக்களை வாழவைக்கும் பேராற்றல். மழையை மாரி என்றார்கள். மாரியைத் தெய்வமாகத் தொழத் தொடங்கினர். எனவே மாரியே மாந்தனின் முதல் தெய்வம். இது மாந்தனின் இறைவழிபாட்டு வரலாறு. இந்த வரிசையில் காலம் சென்ற தலைமை ஆசிரியர் அறங்காவலர் திருமிகு கந்தர் சிவலிங்கம் அவர்கள் எழுநூறு ஆண்டுகாலம் பழமைவாய்ந்த மாரி அம்மனுக்கு ஆலயம் அமைத்து வழிபட வழிசெய்தார். அவர் வழிநின்று அம்மனை வழிபட்டுவரும் மக்கள் அம்மன் வீயோடை இலுப்பை மரத்தின்கீழ் இருந்தமையால் "இலுப்பையடி ஆத்தா" என்றும், இரண்டு அரச மரங்களுக்கிடையே வீற்றிருந்தமையால் "அரசாத்தா" என்றும், வெப்பம் தணித்து மக்களைப் பெரியம்மை நோயினின்று காத்துவருவதால் "முத்துமாரியாத்தா" என்றும்"அல்லல் தீர்க்கும் அபிராமி" என்றும் போற்றிக் காலம் காலமாக வழிபட்டு வருகின்றனர்.

அறங்காவலர் சிவலிங்கனாரின் இறைபணியை அவரது நண்பர் தங்கள் தந்தை, ஆசிரியர் மயில்வாகனம் நவரட்ணம் அவர்கள் அம்மனை வைரக்கல்லால் வடித்து அழகிய சிலையாக வழிபாட்டிற்கு வழங்கியுள்ளார். மக்களும் விநாயகர் முருகன் காத்தவராசன் என பல்வேறு இறையுருவச் சிலைகளையும் அன்னதான மண்டபத்தையும் கட்டி வழங்கியுள்ளனர். இக்கோயில் குடமுழுக்கு 1972ஆம் ஆண்டு நிகழ்ந்துள்ளது. இப்பகுதிவாழ் மக்களின் இறைமாட்சிக்கு இக்கோயில் ஒரு வரலாற்றுச் சிறப்பு வழிபாட்டு மையமாக விளங்குவது போற்றற்குரியது. இக்கோயிலுக்கு மேலும் சிறப்புச் சேர்க்கக் கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறங்காவலர்களாகிய சிவலிங்கனார் அவர்களின் நான்கு மகன்களின் இசைவோடு திருப்பணிக் குழுவின் ஆயுட்காலத் தலைவராகப் பொறுப்பேற்று பிரான்சில் ஐவர் கொண்ட திருப்பணிச்சபை அமைத்து சித்திரவேலைப்பாடுகள் நிறைந்த கோபுரமும் தந்தை கனவினை நனவாக்கிய அறங்காவலர் சிவலிங்கம் கலைவாணன் சித்திரத்தேரும் அமைத்து குடமுழுக்கு செய்யவிருக்கும் உங்கள் பணியைப் பாராட்டாமல் இருக்க முடியாது. மாரியம்மன் தமிழ்த்தாய். அம்மனையும் அங்குவாழ் மக்களையும் இணைப்பது தமிழ். எனவே அம்மன் வழிபாடு என்றும் தமிழில் நடைபெறவேண்டும். இதனைத் தங்கள் திருப்பணிச் சபை செவ்வனவே செய்யும் என நம்புகின்றேன்.

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் அருடசுனைஞர் (அர்ச்சகர்) பட்டயப் படிப்பை அறிமுகப்படுத்தியுள்ளோம். இவர்கள் கோயில்களில் தமிழில் வழிபாடு. தமிழ்நெறிப்படி வாழ்வியற் சடங்குகள். தமிழ் நெறிப்படி கோயில் குடமுழுக்குச் செய்தல் ஆகியவற்றைச் செவ்வனவே செயற்ப்படுத்த தமிழ்த் திருப்புலவர் முதுமுனைவர் இளங்குமரனார், புலவர் சென்னியப்பன் போன்ற தமிழ்நெறி அறிஞர்களால் பயிற்றிவிக்கப் படுகிறார்கள். இவர்கள் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் தமிழ்நெறி அருச்சுனைஞ்ஞர் பட்டயத்தைப் பெற்று அரசுப்பணிகளுக்கு தகுதியுடையவராவர்.

பிரான்ஸ் நாட்டில் இருந்துகொண்டு தமிழ் மரபுகாக்க தன்னலம்கருதாது தாங்களும் கொழுதகு தம்பியருமான அறங்காவலர் திருமிகு சி.கலைவாணன் மற்றும் ஊரின் பொருளாளர் திருமிகு அ.சர்வசுப்பிரமணியம் தங்கள் திருப்பணிச்சபை உறுப்பினர்களும் ஆற்றிவரும் தெய்வத் திருப்பணிச்சேவை போற்றற்குரியது. தங்கள் பணி சிறக்க தமிழ் மணக்க, தமிழ்செழிக்க, தமிழர் சைவநெறி வளர, தங்கள் கோயில் குடமுழுக்கு விழா சீரும் சிறப்போடும் நடைபெற எனது இதயம்கனிந்த வாழ்த்துக்கள். வளர்க தமிழர்நெறி! வாழ்க வளமுடன்!

15/2/10

(மு. பொன்னவைக்கோ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றம் : 1901
பதிவு எண் : 2/1908

தொலைபேசி :
நிகரி (Fax) :

மதுரைத் தமிழ்ச் சங்கம்

நிறுவனர் : வள்ளல் பொன். பாண்டித்துரைத்தேவர் அவர்கள்

54, தமிழ்ச்சங்கச்சாலை,
மதுரை - 625 001.

தலைவர்
மன்னர் நா.குமரன் சேதுபதி
இராமநாதபுரம்

செயலாளர்
இரா.அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,

நாள் : 09-10-09

# வாழ்த்துச்செய்தி



மனிதனின் தெய்வ நம்பிக்கை இயற்கையிலிருந்தே தொடங்குகின்றது. இடி, மின்னல், மழை, பாம்பு முதலிய இயற்கைப் பொருட்களைக் கண்ட ஆதி மனிதன் அவற்றிற்கு அஞ்சினான். மேலும் மனிதர்களுக்குத் தேவையான காய், கனி போன்ற உணவு வகைகளைக் காடுகளிலிருந்தே பெற்றுக் கொண்டான். எனவே,இயற்கையின் மீதான அச்சத்திலிருந்து விடுபடவும், உணவுதரும் இயற்கைக்கு மதிப்பளிக்கும் வகையிலும் மனிதன் இயற்கையை வணங்கத் தொடங்கினான். படையல்கள், இயற்கையை வணங்குவதன்மூலம் தங்களை இயற்கைச் சீற்றங்களில் இருந்து காத்துக் கொள்ளலாம் என்று மனிதன் நம்பினான். எனவே மனிதன் மரம், சூரியன், பாம்பு, இடி மின்னல், முதலிய இயற்கைப் பொருட்களை வணங்கத் தொடங்கினான். இது இறை நம்பிக்கையின் தொடக்கம் ஆகும்.

காலப்போக்கில் மனித சமூகம் வளரும்பொழுது இனக் குழுக்களுக் கிடையே நிகழும் போர்களில் அந்த இனக் குழுக்களின் தலைவன் முதலானோர் இறந்துவிடும் பொழுது, அவர்களே தெய்வங்கள் ஆகின்றனர். குலம் காக்கும் பொருட்டு, போரில் இறந்த வீரர்களை அவ்வினக்குழு மக்கள் நடுகல் தெய்வங்களாக்கி வணங்கினர். இவ்வாறான தெய்வங்கள் ஒவ்வொரு இனக் குழுவிற்கும் தனித்தனியாக இருந்தன. இன்று நாம் வணங்கும் தெய்வங்கள் யாவும் இவ்விதமாக இனக் குழுக்களின் வழிபாட்டு முறைகளிலிருந்து தோன்றியவையே.

இந்து சமயத்தின் பெருங்கடவுளாக விளங்குகின்ற சிவன், திருமால், பிரம்மன், இராமன், கிருஷ்ணன், முருகன், காளி, திருமகள் முதலிய தெய்வங்கள் யாவும் பல்வேறு இனக்குழு மக்களிடமிருந்தே தோற்றம் பெற்றன எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. சர்வசுப்பிரமணியம்
வட்டு வடக்கு
சித்தன் கேணி



தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்த வரையில் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற கொள்கையோடு வாழ்ந்தவர்களாகத் தமிழர்கள் உள்ளனர்.

சங்க காலம் தொடக்கமாகக் கொண்டே ஐவகை நிலங்களுக்கும் ஐவகைத் தெய்வங்களை நிறுவித் தமிழர்கள் வழிபட்டு வந்துள்ளனர். இம்மரபானது சங்கம் மருவிய காலத்தில் சிறிது பின்னடைவைச் சந்தித்தது. இருப்பினும் இப்பின்னடைவைப் பக்தி இயக்க காலத்தில் தோன்றிய ஆழ்வார்களும், நாயன்மார்களும் நேர் செய்தனர்.

ஆழ்வார்களும், நாயன்மார்களும், மன்னனை மையப்படுத்தியே இயங்கிய தமிழ்ச் சமூகத்தைக் கோயிலை நோக்கித் திருப்பினர். அதுவரை மன்னனுக்கு இருந்த சிறப்புகள் எல்லாம் கடவுளுக்கு என்றானது. மன்னன் வாழ்ந்த இடத்தினைக் குறிக்கப் பயன்பட்ட "கோவில்" என்ற சொல் இறைவன் வாழும் இடத்தினைக் குறிப்பதாயிற்று. மன்னன் உலா வந்த நிலை மாறி கடவுளர்கள் திருவீதி உலா வந்தனர். மருத்துவம், கல்வி, நீர்ப்பாசனம், நீதி முறை என யாவும் கோயிலை மையப்படுத்தி இயங்கத் தொடங்கின. இவ்விதமாக ஆழ்வார்களும், நாயன்மார்களும் கோயில் களை நோக்கித் தேவாரம், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் முதலான ஆகச் சிறந்த தெய்வப் பனுவல்கள் தோற்றம்பெற்றன. இதன்வழியாக தமிழகம் ஆன்மிக மலர்ச்சியினைப் பெற்றது.

தமிழகத்தில் நிறுவனமயப்படுத்தப்பட்ட தெயவங்களின் வளர்ச்சி இவ்வாறிருக்க, இவற்றிற்கு நிகராக நாட்டார் தெய்வங்களான கருப்புசாமி, சுடலை மாடன், முத்தலாம்மன், கருமாரியம்மன், முதலிய தெய்வங்களின் வளர்ச்சியும் தமிழகத்தில் உயிர்ப்புடன் வளர்ந்துள்ளன. பொதுவாக இத்தெய்வங்கள் யாவும் சிறு சிறு குழுவினர்களால் வணங்கப்பட்டு வருகின்றன. பெண் என்பவள் உற்பத்தி சக்தியாகவும், காக்கும் சக்தியாகவும் விளங்குகின்றாள். எனவே அம்மை முதலிய நோய்களிலி ருந்து பெண் தெய்வங்கள் காப்பதாக மக்கள் நம்புகின்றனர். இதனால் பெண் தெய்வ வழிபாடென்பது தமிழ்ச் சமூகத்தில் வலுவானதாக உள்ளது.

இந்த மரபுகளின் அடிப்படையில் ஈழத்திலும் சமய வழிபாடானது மிகவும் சிறப்பான நிலையில் உள்ளது. எனவேதான் தமிழகத்தை விடவும் கண்ணகி வழிபாடு ஈழத்தினில் சிறப்பாக உள்ளதை உணர முடிகின்றது. இதன் அடிப்படையில் தாங்களும் தங்கள் குல தெய்வமான வீயோடை அருள்மிகு ஸ்ரீ முத்து மாரியம்பாள் திருக் குடமுழுக்குவிழாச் செய்வது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். தங்களது இறைபணி சிறக்க எனது அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மதுரை
09.10.2009

(இரா. அழகுமலை)
செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

STHANEEKAM
C.R. NATARAJA SASTRI,
S/o. C.V. RAMANATHA SASTRI,
C.N. RAMANATHA SASTRI (SRI RAM)
Hereditary Mirasdar,
Sri Kamakshi Amman Devasthanam,
Kanchipuram.

✆ : 044-27231988
Cell : 09364310545
09894631995
No.1, Kamakshi Amman
Southmada Street,
Kanchipuram - 631 502.

Camp..Kanchi..........
Date..11.12.09........

# வாழ்த்துச்செய்தி



யாழ்ப்பாணத்தில் வட்டூர் வீயோடை என்னும் வளவில் இலுப்பையின்கீழ் படத்திலிருந்து விக்கிரஹ மாக உருமாறி ஸ்ரீ முத்துமாரியம்மனாகிய எங்கும் வியாபித்திருக்கும் சக்திக்கு நெடிய கோபுரம் கட்டி, கும்பாபிஷகம் செய்ய இருக்கும் பக்த கோடிகளுக்கு, ஸ்ரீ காமகோடி ஸ்ரீ காமாட்சி அம்பாள் சகல நலன்களும், சௌபாக்கியத்தையும் அளிக்கப் பிரார்த்திக்கின்றேன்.

திரு.கந்தர் சிவலிங்கம் தொடங்கிவைத்த தெய்வீகப் பணிகளைத் தொடரும் அவர்தம் குமாரர்களும், தெய்வத் திருப்பணிகளை முன்னின்று செய்துவரும் திரு.அ.சர்வசுப்பிரமணியனும், மற்றும் இத்திருப்பணிக்குப் பணமும் திரவியமும் மற்றும் தேகத்தினால் செய்த பணிகள் செய்தவர்களும், எந்தவித குறைகளும் இல்லாமல் நீண்ட நாட்கள் இறை பணியும் பொதுப்பணியும் செய்துவர எங்கும் நிறைந்த சக்தியினை வேண்டிக்கொள்கின்றேன்.

புண்ணிய பூமி இந்தியா மட்டுமல்ல, நாங்கள் போகுமிடமெல்லாம் நம் தமிழர்கள் கோவில்களை எழுப்பி எல்லோருக்கும் புண்ணியம் சேர்த்து வருகின்றனர். இறைபணியில் எங்கிருந்தாலும் ஈடுபடுத்திக் கொள்ளும் ஸ்ரீ நவரத்தினம் கணேஸ்வரன் ஸ்ரீ அம்பாளின் திரிகோணம்போல இந்தியா, இலங்கை, பிரான்ஸ் என்ற கோணங்களில் நடுவில் அம்பாள்போல சக்தி உபாசனை செய்து வருகின்றார்.

இந்தச் சமயத்தினில் என்னுடைய வேண்டுகோள் ஒன்று தினமும் ஸ்ரீ அம்பாளுக்கு இலுப்பை எண்ணையில் தீபமிட்டு வந்தால் சந்தான ப்ராத்தியும் சரஸ்வதி கருணையும் கிடைக்கும். 48 நாட்களில் காரியம் கைகூடும். மேலும், மேலும், நல்ல காரியங்கள் நடக்கவும், உலகம் எங்கும் அமைதி நிலவவும் ஸ்ரீ அம்பாளையும், ஸ்ரீ ஆசார்யாளையும் ப்ரார்த்திக் கின்றேன். கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்து எல்லா பக்தகோடிகளும், ஸ்ரீ முத்து மாரியம்மன் கருணைக்குப் பாத்திரர்கள் ஆக ஸ்ரீ அம்பாள் அருள்பாலிக்கவும், ஸ்ரீ கணேஸ்வரன், ஸ்ரீ சிவலிங்கம் கலைவாணன், ஸ்ரீ சிவசுப்பிரமணியம், மற்றும் இறை அன்பர்களும் தங்களைத் தொடர்ந்து இறைபணியில் ஈடுபட்டு எல்லோருக்காகவும் ப்ரார்த்திக்கவும், ஸ்ரீ அம்பாள் ஆசியை வேண்டுகின்றேன்.

என்றும் இறை மற்றும் குருபணியில்

C.N. Nataraja Sastri
04/10/09.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை,

அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம் – 621 112.

திருமதி. பா. பாரதி
இணை ஆணையர் / நிர்வாக அதிகாரி,

## வாழ்த்துச்செய்தி



உலகம் முழுவதும் சக்தி வழிபாடு பரவி வளர்ந்துள்ளது என்றால் அது மிகையில்லை. தங்கள் திருக்கோயிலும், தாங்கள் செய்துவரும் திருப்பணியும் அதற்கு ஓர் உதாரணம்.

காலத்தின் அமைப்பாகிய இரவும், பகலும் மாறி மாறி வருவது போன்று உயிர்களின் அமைப்பாகிய பிறப்பும், இறப்பும் மாறி மாறி வந்துகொண்டிருக்கின்றன. உலக வாழ்க்கையில் இறப்பு இல்லாத பிறப்பு இல்லை. துன்பம் கலவாத இன்பம் இல்லை. பழையதை உட்கொண்டு புதியதைத் தோற்றுவிப்பது அன்னை சக்தியின் இயல்பு. இறப்பு, பிறப்பின்மூலம் இன்ப நுகர்ச்சியையும், வீடு பேற்றையும் வழங்கியருள்வதே அன்னை சக்தியின் நோக்கமாகும்.

தாயானவள் குழந்தையை ஈன்றதன் பின்னர் அடையும் பேறு இவ்வுலகில் அதற்கு ஈடு வேறு எதுவும் இல்லை. பின்னர் தாயும் குழந்தையும், வேறு ஆகின்றன. ஆனால் அண்டங்களையெல்லாம் ஈன்ற சக்தி என்றும் அவற்றினின்று நீங்கியவள் அல்லள் என்பதையும், அவளே உலகமாகத் திகழ்கின்றாள், என்பதையும் உலகம் முழுவதும் உத்தமியாகிய அவள் தோற்றமே என்பதையும், சாக்தம் தெளிவாகக் கூறுகின்றது. எனவே உலகை, உலகின் இயற்கையை உள்ளவாறு உணர்வது சாக்தம் போற்றும் பரம்பொருளாகிய சக்தியை, அன்னையை உணர்வதாகும்.

இங்ஙனம் 700 ஆண்டுகளுக்கும் மேலாகச் குடிகொண்டுள்ளதாக சொல்லும் அன்னை முத்துமாரியம்மன் ஆதிசக்தியாக மக்களை காத்தருள்கின்றாள். அன்னையின் அருளால் இங்கு பக்தர்களின் எண்ணிக்கை நாளொரு மேனியாய் பெருகும் என்பதிற் சிறிதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயமில்லை. அதனை தாங்களே கண்கூடாகக் காணலாம். அன்னையின் அற்புத சக்தியால் அண்டை நாடுகளிலிருந்தும் பக்தர்கள் வந்தவண்ணமாய் இருப்பார்கள்.

பேரருள் கொண்டு விளங்கும் அன்னையின் திருவீற்றிருக்கும் இவ்விடத்தின் தலபுராணம் உருவாகியிருப்பது பெரும் முயற்சியாகும். அவற்றை வெளியிட மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பெரும் வியப்பிற்குரியனவாகும்.

இத்தகையதொரு முயற்சியை கைக்கொண்ட இத்திருக்கோயிலின் அறங்காவலர்களில் ஒருவராகிய திரு. சிவலிங்கம் கலைவாணனையும், பொருளாளர் திரு. அ. சர்வசுப்ரமணியம், எல்லாவற்றிற்கும் மேலாக உறுதுணையாக இருக்கின்ற ஆயுட்காலத் தலைவர் திரு.ம.ந.கணேஸ்வரன் அவர்களையும், இவர்களுடன் ஆலய திருப்பணி செம்மையுடன், சீருடனும், சிறப்புடன் வளர உதவி பணியாளர்கள், கீழ்நிலை பணியாளர்கள் முதல் மேல்நிலை பணியாளர்கள் வரையும், பக்தர்கள், அடியார்கள் ஆகியோர்களுக்கும், தங்களையும், தங்களின் திருக்கோயிலையும் நான் பார்த்திராதிருந்தாலும் - எனது மனமார்ந்த நன்றியையும், வாழ்த்துக்களையும், தெரிவித்து மகிழ்கின்றேன். இதுபோன்ற புதிய முயற்சிகளை மேற்கொண்டு பல புதிய தெய்வ திருப்பணிகளை செய்து தெய்வ அருள் பெற்று பல்லாண்டு, பல்லாண்டு, பலகோடி நூறாண்டு வாழ அம்பாளைப் பிரார்த்திக்க, எனக்கு வாய்ப்பளித்தமைக்கு மிக்க நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்மதிப்புடன்
பா.பாரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
ஸ்ரீ குருப்யோ நம:
சிவாகம சிரோமணி, சிவாகம கலாநிதி,
சிவஸ்ரீ S.K.ராஜா பட்டர்
ஸ்தானிகர், அருள்மிகு ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி திருக்கோயில்,திருப்பரங்குன்றம்
ப்ரதான அர்ச்சகர், அருள்மிகு மீனாக்ஷி ஸுந்தரேச்வரர் திருக்கோயில், மதுரை
முதல்வர், ஸ்ரீ ஸ்கந்த குரு வித்யாலயம்
56, ஸன்னிதித் தெரு, திருப்பரங்குன்றம்
மதுரை-625 005

க்ஷேமம் உ சிவமயம் தேதி.............

# வாழ்த்துச்செய்தி

மாலும் நான்முகனும் தேடியும் கிடைக்காத இறைவன் நம் இல்லங்கள் தோறும் எழுந்து அருள் புரிகின்றான் என்றால் அது மிகையாகாது. ஆயினும் அப்பெருமானுக்குக் கோயில்களை எழுப்பி வழிபடுவது நம்முன்னோர் மரபு.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்", "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பது போன்ற பொன்மொழிகள் ஆலய வழிபாட்டின் அவசியத்தை வலியுறுத்துகின்றன.

அவ்வகையில் யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டையில், வட்டுநகர் வீயோடைவளவு தன்னில் எழுந்து அருள்பாலிக்கும் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகப் பெருவிழா நடைபெற இருப்பது குறித்து மிக்க மகிழ்ச்சி.

பல்லாண்டு காலம் இவ்வாலயத்தின் அறங்காவலராக விளங்கி, பரம்பரை வழக்கமாக இருந்த உயிர்ப்பலி இடுதலை நிறுத்தி, பல்வேறு ஆக்கப்பணிகளைச் செய்தவர் அமரர் உயர்திரு.கந்தர்சிவலிங்கம் என்பதை அறிந்தோம்.

"எவ்வுயிரும் நீங்காது உறையும் இறை சிவனென்று
எவ்வுயிர்க்கும் அன்பா யிரு" - சைவசமய நெறி

"தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை" -திருக்குறள் என்ற

சைவஸமயச் சாத்திரக் கருத்துகளை நன்கு உணர்ந்தவர் அப்பெருந்தகை என்பது அதன் மூலம் விளங்குகிறது.

அப்பெருந்தகையின் எண்ணங்களைக் கடல் கடந்து சென்றாலும் அவரது தவப்புதல்வர்களுள் ஒருவரான அறங்காவலர் திரு.சி.கலை வாணன், "பித்ரு வாக்ய பரிபாலனம்" "தந்தை சொல்மிக்க மந்திரமில்லை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற வாக்கிற்கிணங்க தந்தையாகிய மயில்வாகனம் நவரட்ணம் சென்ற வழியைப் பின்பற்றும் நமது அன்பிற்கினிய,பண்பிலே உயர்ந்த உயர்திரு. ம.ந.கணேஸ்வரன் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு திருப்பணிக்குழு அமைக்கப்பெற்று அதன் மூலம் மஹாகும்பாபிஷேகம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பது மிகவும் மகிழ்ச்சியான செய்தியாகும்.

அவர் பிரான்ஸ் நாட்டில் இருந்துகொண்டு அடிக்கடி தொலை பேசியில் நம்முடன் தொடர்புகொண்டு மஹாகும்பாபிஷேகத்தை நன்றாக நடத்த வேண்டுவதற்கான ஆலோசனைகளைக் கேட்கும்போதே தலைமைப் பதவி வகிப்பதற்கான குணங்கள் அவரிடம் இருப்பதை அறியமுடிந்தது.

அவரது பெருமுயற்சியில்,அறங்காவலர் குழுவின் ஆதரவில், திருப்பணிக்குழு உறுப்பினர்களின் ஒத்துழைப்பில், பக்தர்களின் நன்கொடையில் திருப்பணி சிறப்பாக நிறைவுபெற்று இருப்பதை நினைக்கும்போது இது கண்டிப்பாக அந்த முத்துமாரி அம்பிகையின் பேரருட்செயலே என்பதை உணர முடிகிறது.

யாழ்ப்பாணம், நல்லூர் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுக நாவலர் போன்ற பெரியோர்கள் வாழ்ந்து சைவம் வளரப் பாடுபட்ட புண்யபூமியாம் யாழ்பாணத்தில், வட்டுக்கோட்டையில் வட்டூர் என்ற கிராமத்தில் அம்பாளின் அடியார்கள் கேட்டவுடன் மறுப்பின்றி அள்ளி அள்ளிக் கொடுத்த நன்கொடையாலும் அறங்காவலர்கள் கொடுத்த ஊக்கத்தாலும் திரு.ம.ந .கணேஸ்வரனைத் தலைவராகக் கொண்டதும், அம்பிகைமேல் அளவற்ற பக்தி கொண்ட உறுப்பினரைக் கொண்டதுமான பரிபாலன சபையின் கடின உழைப்பாலும் வட்டு நகர் வீயோடை வளவு தன்னில், ஸ்ரீ முத்துமாரியாக எழுந்து அருள்பாலிக்கும் அருள்மிகு மஹாமாரியம்மன் திருக்கோயிலின் புனராவர்தன ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகப் பெருவிழா இனிது நடைபெறவும், பங்களித்தவர் களுக்கும், கிராமவாசிகளுக்கும் எல்லாவிதமான செல்வங்களும் உண்டாகவும் மதுரையம்பதியில் கோயில் கொண்டருளும் அருள்மிகு அன்னை மீனாக்ஷி அம்பிகையின் திருவடிக்கமலங்களைப் போற்றியும் திருப்பரங்கிரிதனில் கோயில் கொண்டருளும் எல்லாம்வல்ல இறைவன் தெய்வானை மணாளன் முருகப்பெருமானின் சரணாரவிந்தங்களைப் போற்றியும் பணிந்து உளமாற வாழ்த்துகிறோம்.

• களந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டூர் வீயோடை இலுப்பையடி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான
ஆலய அறங்காவலர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டூர், வீயோடை, இலுப்பையடி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான

# தோற்றமும் திருத்தல வரலாறும்

கனத்தாளே வெங்க யமுகனும் கந்தனும் சம்பந்தனும் பால் உண்டகும்பத்
தனத்தாளே அறம் வளர்த்த கரத்தாளே திரிபுரங்கள் தழலாய் வேகச்
சினத்தாளே சிறியோர்கள் செய்த பிழை பொறுத்திரக்கஞ் செய்யும் தூய
மனத்தாளே நின்கமல மலர்த்தாளே என் தலைமேல் வைத்தாள் வாய

**பரம்பரைவரலாறு:**

நாற்திசையும் நற்தமிழ் பாடும் கடலாம், அதன் அருகே எழும் தென்றற் காற்று ஓடும் நதி உயர் மலைகள், பாடும் பறவையினங்கள், எம் அரசர் பறை சாற்றும் நீண்ட நெடிய கோபுரங்கள் கோயில்கள் என சொல்லவொணா அழகு மிக்க தனக்கே உரித்தான ஈழமணித் திருநாட்டிலே பண்புக்கும் பாசத்திற்கும் வழிகாட்டியாக இருக்கும் யாழகத்தே "செல்விருந் தோம்பி நல்விருந்து காத்திருக் கும்" வள்ளுவப் பெருந்தகை வாக்கிற்கு அமைய வந்தாரைத் தன்னகத்தே துாண்டி ஈர்த்திழுக்கும் வானளாவிய அன்பைக் கொண்ட மக்கள் வாழும் வட்டுக் கோட்டை என்னும் வட்டூர்ரம்பதியில், சைவமும் தமிழும் எட்டுத்திசையும் புகழ் பரப்ப எம்மவர் ஏழு குடியினர் பல நூறு ஆண்டுகட்கு முன்பே இங்கு வந்தாரென் றும் அவர்களில் "நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும் குலத்தில் பிறந்தார் செயல்" என்பதுபோல் நல்ல குலத்தில் தோன்றியோர் இயல்புகள் அவர் பேசும் சொற்களே காட்டிவிடுவதைப் போல் பழகப் பழகத் தூண்டும் இனிய சொற்களைப் பேசும் மறைந்த ஆசிரியர் அறங்காவலர், தலைமை ஆசிரியர் திருமிகு கந்தன் சிவலிங்கம் அவர்களின் மூத்த மூதாதையரும் ஒருவராவார்கள்.

**தாயின் வரவும் முதல் வணக்கமும்**

பண்பாட்டுக் கலாச்சாரம் மாறாத பழங்குடி மூதாதையர் தாம் வரும்போதே மக்களுக்கும் தமக்கும் ஏற்படும் துன்பம் துயரம் என்பனவற்றைப் போக்கிடவே மக்கள் எல்லோரும் இன்பம் பெருகி நல்வாழ்வு வாழ்ந்திடவே, தாம் வரைந்த அம்பாள் படமொன்றினை தம்முடன் கொண்டு வந்தாரென்றும் தாம் தங்கியி ருந்த வீயோடை வளவுக்கு அருகாமையி லில் உள்ள "இலுப்பை" என்னும் விருட் சத்தின் கீழ்வைத்து வணங்கி வந்தனர் என்றும் சரித்திர வாயிலாகவும் முன்னோர் செவிவழியாகவும் அறிகின்றோம்.

உலகத்தைக் காத்தருளகின்ற உலகத்து நாயகியாக விளங்குபவள் தேவி மாரியம்மன் "நீரின்றி அமையாது உலகு" என்ற தெய்வப் புலவன் வாக்கிற்கு அமைய அந்த நீரையே மழையையே (மாரி என்றால் மழை) தருகின்றவளாக விளங்கும் மாரியம்மன், மதுரையம்பதியில் மீனாட்சி யம்மைக்கு ஒரு சொர்க்கநாதரோ அன்றி தில்லையம்பதியில் சிவகாமசுந்தரிக்கு ஆனந்த நடராசரைப்போலவும் வட்டு மாநகரில் தவறாது மும்மாரிசூரும் முத்து மாரியாகவும் விசாலாட்சி சமேத விசுவ நாதசுவாமிகோயிலும் அருகே கொண்ட இலுப்பையடி ஆத்தாவாக வாழ்ந்து அருளாட்சி செய்து வருகின்றார்.

துணையும் தொழும் தெய்வமும் பெற்ற
தாயின் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும்
- பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையும் மென்
பாசாங்குசமும் கையில்
அணையும் திரிபுர சுந்தரி - ஆவது
'அறிந்தனமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிராமி அன்னையை நான் அறிந்து கொண்டேன். அவளே எனக்குத் துணையாகவும் தொழுகின்ற தெயவமாக வும் பெற்ற தாயாகவும் விளங்குகின்றாள். வேதங்களில் தொழிலாகவும் அவற்றின் கிளைகளாகவும் வேராகவும் நிலை பெற்று நிற்கின்றாள். அவள் கையிலே குளிர்ந்த மலர் அம்பும் கரும்பு வில்லும், மெல்லிய பாசமும் அங்குசமும் கொண்டு விளங்கு கின்றாள். அந்தத்திரிபுர சுந்தரியே எனக்குத் துணை.

நீர் பாதி, நிலம் பாதி என்று நீராலும் நிலத்தாலும் நிரம்பியிருக்கும் உலகைக் காக்கின்ற உத்தமியான மாரியம்மனுக்கு நீர், நிலம் சார்ந்த நல்ல இடத்தைத் தேர்வு செய்து வணங்கும் இடமாக்கி வட்டுக் கோட்டையில் மாரியம்மனை நிறுவிய பொழுது நல்ல பொழுதாகும். இது ஏறக்குறைய எழுநூறு ஆண்டுகளுக்கு முந்தையதான வரலாறு ஆகும்.

வளமான வாழ்விற்குப் பக்தி ஒன்றே வழி என்ற தெளிவான வழியை உலகிற்கு தமிழ்த் தாயான மாரியம்மன் உணர்த்தி வீயோடையில் விருப்பத்துடன் நிற்கிறாள். அவள் நம் உணர்விலும், உள்ளத்திலும், எங்கும் எப்போதும் நிறைந்து இருக்கி றாள்.

**ஒளிப்பிளம்பும் தாயின் இருப்பிடங்களும்**

மனிதரும் தேவரும் மாயாமுனிவரும்
வந்து சென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே
கொன்றைவார் சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும்
பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் எம்புந்தி எந்நாளும்
பொருந்துகவே.
(அபிராமி அந்தாதி)

பராசக்தியானவள் சக்தியின் அருட் செயல்களை நிலைநாட்டப் பூமியில் தோன்றி பக்தருக்குக் காட்சி தருவதாக எமது சைவ சித்தாந்தங்களும், புராணங் களும் இதிகாசங்களும் போன்ற ஆதிகால வரலாறுகள் கூறுகின்றன. அதாவது பாண்டிய மன்னன் மகளாகவும், இமவன் மகளாகவும் பல்வேறு வடிவங்களாகவும் ஆதி பராசக்தி தோன்றினாள் என்னும் கருத்தை மெய்ப்பிக்கும் வகைதன்னில் யாழ் மண்ணகத்தே விண்ணினில் ஓர் ஒளிப்பிளம்பு தோன்றி, அதிலிருந்து ஏழு அன்னையர் வந்து ஒவ்வொன்றாகப் பிரிந்து ஒவ்வொரு அன்னையரும் இந்த லோகத்திலே தன்னை நினைந்து மனமுருகி வழிபடும் அன்பர்கள் வாழும் இடங்களில் நிலைகொண்டாள் என்றும் அதிலோர் அன்னை தன்னையே முழுதாக நம்பி இலுப்பையின் கீழ் வணங்கும் இலுப்பை யடி மரத்தினில் இருக்கும் படம் தன்னில் இலுப்பையடி ஆத்தாவாக கலந்து கொண்டு அருளாட்சி செய்து வருகின்றார் என்பது காலமறிந்த ஐதீகம்.

இதை உறுதிப்படுத்தும் வகையில் 22.07.2010 இல் குடமுழுக்கு நடந்தேறிய வல்லை ஸ்ரீ முத்துமாரியம்மன் அருளாட்சி மலரிலிருந்து

வட்டூர் இலுப்பையடி வீயோடை ஸ்ரீ முத்துமாரி அம்மன்

இட்டமுடனே விண்ணிலிருந்து
மண்ணிற்கு ஒளிப்பிழம்பாய்
அட்டதிக்கும் ஒளியும் பரவ இறங்கிவந்த
அன்னைமாருள்
வட்டிலுப்பை அடியை யும்மே வளமான
பதியாய்க் கருதி
உட்புகுந்த தாயே ஓங்கும் முத்துமாரி
அம்மன் என்பர்.

தொழுவாரின் துயராம் இருளைப் போக்கு
கின்றசோதி ஆகி
இலுப்பையடி ஆத்தா ளாகி எழிலாரும்
வீயோடை தன்னில்
கொலுவினிலே அமருங் கோல முத்துமாரி
அம்மன் ஆகி
எழுச்சிதரும் அன்னை யாரின் இணையடிகள்
வாழ்து வோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பனவும் உறுதிசெய்கின்றன. மேலும், கொழும்பு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் மயூரமங்கலம் குடமுழுக்கு மலரிலிருந்தும் காணலாம். 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற அராலியூர் வாலை யம்பாள் குடமுழுக்கு கும்பாபிஷேக மலரில் இருந்து

அன்னையராகத் தோன்றிய அன்னை ஒருவர்

1. சங்கானை கூடத்து அம்மன் கோயிலி லும்
2. தொல்புரம் வடக்கம்பரை கோயிலிலும்
3. வட்டுக்கிழக்கு துறவடிப்பனை கோயிலிலும்
4. சங்கரத்தைப் பத்திரகாளி கோயிலிலும்
5. அராலி வடக்குக் கோயிலிலும்
6. அராலி தெற்குக் கோயிலிலும்
7. வடடூர் இலுப்பையடி ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயிலிலும் மேவி

"அந்தர்யாமி ஆயினராம்" என உறுதிசெய்கின்றனர்.

எது எப்படியோ எல்லாம்வல்ல அந்த ஆத்தா எம் எல்லோர் கண்களில் இருந்துகொண்டு எம் துயர் போக்கி எம்மைக் காத்து வருகின்றார் என்பதை எல்லோரும் தத்தம் அனுபவங்களில் இருந்து அறிந்து கொண்ட உண்மை.

**கொட்டிலும், சுண்ணாம்புக்குடிலும்**

படமாக மட்டுமே இலுப்பை மரத்தடியில் இருந்த முத்துமாரியம்மன் போவோர் வருவோர் அனைவருக்கும் அருள்தந்தாள். அருள்பெற்ற அவளின் பிள்ளைகள் அவள் வெயிலிலும், மழையி லும், குளிரிலும் நின்று கொண்டு அருள் புரியும் நிலைகண்டு இரங்கினர். கொட்டகை ஒன்றை அவளுக்கு அமைத் தனர். கொட்டகை நிழலில் குளிர்ந்து நின்று அருள் வழங்கினாள் அன்னை.

மெல்லமெல்லக்கொட்டகை நீங்கி, சுண்ணாம்பினால் கட்டப்பெற்ற கோயில் கட்டப்பெற்றது. இலுப்பை மரம் தன் வாழ்நாளைச் சுருக்கிக்கொண்டது. அம்மனுக்கு நிழல்தந்து இயற்கைக் கோயிலாக விளங்கிய இலுப்பை மரம் உலுத்துப்போனது. இருப்பினும் இரு அரசமரங்கள் தானாய் அப்பகுதியில் முளைத்து ஒன்றுக்கு இரண்டாய் இருந்து அம்மனுக்கு நிழலளித்தன. இருமர நிழலில் சுண்ணாம்பு கொண்டு எழுப்பப் பெற்ற கட்டிடத்தில் சுத்த உருவமாய்த் தேவி காட்சி தந்தாள்.

கோயில் வளர்ந்த நிலையில் தெய்வத் திருவுருவமும் வளரவேண்டும் என்று மக்கள் விரும்பினர். ஐம்பொன் னால் ஆன சிலை ஒன்றில் அம்மனை வடித்து வணங்க மக்கள் விருப்பம் கொண்டனர்.

விருப்பங்கள் அவளருள் இன்றி ஈடேறுவதில்லை. ஐம்பொன் சிலை செய்ய முயன்ற முயற்சிகள் பல முறை தோல்வி கண்டன. இருந்தாலும் மக்கள் அம்மனின் அருள் உள்ளத்தை நாடிநின்றனர். அருள்வாக்கால் அம்மன் உத்திர நாளில் சிலை செய்யத் துவங்குங்கள்- என்றுகூற மக்கள் அகம் மகிழ்ந்தனர்.

உத்திர நன்னாளிற் சிலை வடிவம் பெற ஆரம்பித்தது. அழகின் உருவமாக, அருளின் இருப்பிடமாக, காவலின் நிலைக் களனாக முத்து மாரியம்மன் ஐம்பொன் சிலை வடிவில் மிளிர்ந்தாள். (இதே உத்திர நாளில் இக்கோயிலின் கும்பாபிஷேகமும் நடைபெறுவது என்பது தெய்வப் பொருத்தம் சார்ந்ததாகும்.)

கோயில் பிறந்தது. விழாக்கள் நிகழ்ந்தன. மக்கள் அருள் வெள்ளம் பெற்றனர். இருப்பினும் உயிர்ப்பலி என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை இவ்வம்மனின் அருள் பெறுவதற்குச் சிறந்தது என்று மக்களில் சிலர் எண்ணி அதனைச் செய்து வந்தனர். உயிர்களின் இரத்தம் அம்மனுக்குத் தேவை என்று அவர்கள் நம்பினர். அனைத்து உயிர்களையும் காத்து நிற்கிற முத்து மாரியம்மன் உயிர் வதைபடுவதை எவ்வாறு ஏற்றுக்கொள்வாள்.

மக்களின் மனதில் மாறுதலை உண்டாக்க அவள் எண்ணம் கொண்டாள். திருமிகு கந்தன் சிவலிங்கம் அவர்களை முன்னிறுத்தித் தன் உண்மை அருளை உலகிற்கு உணர்த்த அவள் எண்ணம் கொண்டாள். உயிர்ப்பலியைத் தடுத்து நிறுத்த ஆவன செய்ய கந்தன் சிவலிங்கம் அவர்களை அவள் தூண்டினாள். தூண்டா விளக்கான அம்மனின் தூண்டுதல் வெற்றி கண்டது. திருமிகு கந்தர் சிவலிங்கம் அவர்கள் தளராத முயற்சி கொண்டு பலரையும் சந்தித்து, நண்பர்களைப் பெருக்கி, நயமாகச் சொல்லி உயிர்ப்பலியிடலை இக்கோயிலில் இருந்து விலக்கி, நிறுத்தி வெற்றி கண்டார். அன்னாரின் அருட்செயல் இன்னமும் எண்ணிப் போற்றத்தக்கது. அவர் அறங்காவலராக இருந்து இக்கோயிலுக்கு ஆற்றிய பணிகள் ஆயிரம் ஆயிரம். அவற்றை நினைவு கூரும் இவ்வேளையில் அவரின் அருள் தொண்டிற்கு நன்றிகள் பற்பல உரித்தாக்குவது சாலச்சிறப்புடையதாகும்.

**வைரக்கல்லில் ஆன மூல அம்மன்**

நாட்பட நாட்பட சுண்ணாம்புக் கோயிலும் ஈனம் கொள்ள ஆரம்பித்தது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கோயில்களுக்கு குடமுழுக்குச் செய்ய வேண்டும் என்பது நியதி. எனவே சுண்ணாம்புக் கட்டிடத்தை முழுவதுமாக நீக்கிப் புதிய வடிவில் கோயிலை நிர்மாணிக்க வேண்டும் என்று அறங்காவலர் திருமிகு சிவலிங்கம் அவர்கள் எண்ணினார்.

திருமிகு சிவலிங்கம் அவர்கள் நண்பர்களை நாடினார். மக்களை அழைத்தார். காசு இருந்தோர் குவித்தனர். பணம் இருந்தோர் அளித்தனர். மனம் இருந்தோர் வேண்டிப் பெற்றனர். அவரின் குறிக்கத்தக்க நண்பரான தெய்வத்திரு மயில்வாகனம் நவரட்ணம் அவர்கள் வைரக்கல்லில் ஆன கருவறை சிலை ஒன்றைச் செய்வித்து உபயமாகத் தந்தார்.

**பிற தெய்வங்கள்**

மூலவர் சிலையைத் தொடர்ந்து முறையே

1. விநாயகர்: காத்தவராயர் திருமிகு. மு.சுப்பிரமணியமும் அவர்களும்
2. பாலமுருகன்: திருமிகு.வே.முத்துத் தம்பி அவர்களும்
3. சேத்திரபாலகர்: கலாபூசணம் திருமிகு. அ.முருகவேள் தலைமை ஆசிரியர் அவர்களும்
4. நாகதம்பிரான்: சித்திரக்கலைஞ்ஞர் திருமிகு.யோகநாதன் அவர்களும்
5. சிம்மம் பலிபீடம்: திருமிகு. இ.நமச்சிவாயம் சுந்தரலிங்கம் அவர்களும்
6. இராஜஇராஜேஸ்வரி: திருமிகு. பொன்னுத்துரை ஜெயரத்தினம் அவர்களும் உபயமாகத் தந்தனர்.

**மண்டபமும் மணிக்கோபுரமும்**

அறங்காவலர் திருமிகு. சிவலிங்கம் இரகு, திருமிகு.எஸ்.அருணகிரிநாதன், திருமிகு சதானந்தன், திருமிகு.தெ.இரவீந்திரன், திருமிகு.அ.து.சடாட்சரசிங்கம் குழுவின் கடுமையான முயற்சியாலும், மறைந்த திரு.சட்டநாதபிள்ளை பொலிஸ் உத்தியோகத்தர் அவர்கள் நடைமுறையிலும் அன்னதான மண்டபமும், திருமிகு.வே. துரைராசா இளைப்பாறிய சுங்க அலுவலர் அவர்களால் உயர்ந்த வானளாவிய மணிக் கோபுரமும் இன்னுமொரு மணிக்கோபுரம் தன்னை திருமிகு நாகமணி குமாரவேல் உபயமாகத் தந்தனர்.இன்னும் ஊர்மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் பல அறச்சேவையினைச் செய்து கொண்டனர்.

**அற்புதமும் காணி தர்மசாசனமும்**

ஒரு கிராமத்தில் ஒரு தெய்வத்தின் மீது இவ்வளவு அளவற்ற பக்திதனை மக்கள் கொண்டுள்ளார்கள் எனின், அங்கே நிச்சயம் மக்களுக்கு நன்மை நடந்திருக்க வேண்டும். பல அற்புதங்களும் நடை பெற்றிருக்கவேண்டும். அந்த வகையிலே இங்கே உள்ள எங்கள் தாயானவள் பலப் பல அற்புதங்கள் நடத்தியிருக்கின்றார் என்பது வரலாறு நானும் எனது தந்தை யார் சொல்லும்போதும் அறிந்துள்ளேன். இவ்வாலயத்தில் கலையையே காதல் கொள்ளும் கிராம மக்கள் பண்பாட்டுக் கலாச்சாரம் சிறிதுகூடமாறாது பண்டைய கிரமியக்கலைகளான தர்மபுத்திரநாடகம் என்னும் நாடகத்தை அதன் சுவையினின் றும் மாற்றம் தராமல் நடித்து அன்னையை அகமகிழ்விப்பது ஊரறிந்த விடயம். அவற்றில் பீமன், அனுமன் பாத்திரங்கள் பாராட்டத் தகுந்தவை.

இதேபோல் எமது பண்டைய பண்பாட்டு நாடகங்களை அன்றைய காலகட்டங்களில் அவற்றை நேரே பார்க்கும் எண்ணம் கொண்டு தாயானவள் கூத்து நடக்கும் களரியில் ஓர் வெண்ணிறச் சேலைகட்டிய கிழவி சிரித்த முகத்துடன் அமர்ந்து களித்து பாதிநேரமதில் எழுந்துகோவிலுக்குள் சென்று மறைந்தார். இதைக் கண்ணுற்ற அனைவரும் திகைத்தனர். அன்று முதல் இக்கோவிலில் இந்நாடகம் நிச்சயம் நடக்கும் நிகழ்ச்சி யாயிற்று.

ஒரு நல்ல மனிதர்கள் செல்வச் செழிப்போடு நீண்ட நாட்கள் வாழ்ந்து விடுவதில்லை. தீயவர்கள் சகல ஐஸ்வரியங் களும் பெற்று வாழ்கிறார்கள் அப்படி கலியுகம் நடைபெறும் காலங்களில் தெய் வங்கள் அந்தப்பாவிகளை வதைப்பதை நீரூபிக்கும் முகமாக இங்கு நடைபெறும் சூரன் போர் மிகவும் சிறப்பாக அமை வதைக் காணலாம். இதனை தற்போது மறைந்த திருமிகு.மு.சுப்பிரமணியமும் பின்னர் வழித்தோன்றல்களும் நடத்தி வருகின்றனர்.

அன்னையின் அற்புதங்களை அனுபவரீதியாகக் கண்ட எம்மவர்களும் அயற் கிராம மக்களும் ஆத்தாவை அயராது போற்றினர் அவளுக்கு இட வசதிபோதாமையைக் கண்ட அவர்கள் தங்கள் தங்கள் கிழமைகளில் கிடைக்கக் கூடிய வருமானத்தினைக் கொடுக்க முன்வந்து அதன் வழி கிடைத்த தொகை யினைக் கொண்டு மனப்பூரிப்புடனும் நிறைந்த பயபக்தியுடனும் திரு.வ.வயிர முத்து, திரு.க.சுந்தரம்பிள்ளை, திரு.க.சிவ னையா, திரு.க.லோகநாதபிள்ளை, திரு.வ.வடிவேலு, திரு.வே.இளையதம்பி, திரு.வே.பழனியாண்டி, திரு.ச.கதிரவேலு, திரு.ச.சின்னத்துரை, திரு.நா.இராசு, திரு.இ.வேலுப்பிள்ளை, திரு.த.தர்ம லிங்கம், திரு.வே.அருளம்பலம், திரு.தா. செல்லையா, திரு.சி.குலசேகரம்பிள்ளை, திரு.வே.சிவசுப்பிரமணியம் ஆகியோர் அரசாத்தாவின் எதிரேயிருந்த காணிதனை வாங்கி அவளுக்கு காணிக்கையாக கொடுத்தனர். **திருமிகு பொன்னுத்துரை ஜெயரத்தினம் திருமிகு வர்ணகுலசிங்கம் அமரநாதன் திருமிகு கந்தசாமி அருட் செல்வம் போன்றோரின் மூதாதையரான திருமிகு நல்லதம்பி பொன்னுத்துரை, திருமிகுநல்லதம்பி வர்ணகுலசிங்கம் திருமிகு நல்லதம்பி கந்தசாமி காணிதரும சாசனம் செய்தார்கள். இந்தச் செயல் அவள்மீது மக்கள் கொண்ட அசையாத நம்பிக்கை தன்னை உறுதியாகக் காட்டு கின்றன.**

**ஐம்பொன் சிலையும் வைரக்கல் சிலையும்**

படமாக இருந்த அம்மன் ஐம்பொன் சிலையாகித் தற்போது வைரக்கல் சிலையாக மிளர்கிறாள். அவளின் வளர்ச்சி நம் தலைமுறையின் வளர்ச்சியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னர் கருவறையில் இருந்த ஐம்பொன் சிலை உற்சவ மூர்த்தியாகிச் சிறப்பிக் கின்றது. புதிய வைரக்கல் சிலை கருவறை யில் காட்சி தந்து மிளிர்ந்து வருகிறது.

1972 ஆம் ஆண்டினில் பங்குனி உத்தரத்தின்போது இந்தப் புதுச்சிலையும், புதிய வடிவிலான கோயிலும் கும்பா பிஷேகம் கண்டன. மிகச் சிறப்பொடு நடந்த இவ்விழாவில் மக்கள் பலரும் கலந்து கொண்டனர். கலைவிழாவாக இது மிளிர்ந்து அம்மனைக் குளிர்வித்தது,

இக்கும்பாபிஷேகத்தின் போது பிள்ளையார், முருகன், காத்தவராயன், வயிரவர், இராஜஇராஜேஸ்வரி போன்ற துணைத் தெய்வங்களுக்கும் கோயில் எழுப்பப் பெற்று அத்தெய்வங்களும், அத்தெய்வக் கோயில்களும் சக்தி பெற்றன. இவ்வாறு வளர்ச்சிபெற்ற இக்கோயில் 2003 ஆம் ஆண்டளவில் புனருத்தாரணம் செய்வதற்காகப் பாலஸ்தானம் செய்யப் பட்டு அம்மன் கொட்டகைக் குடிலில் வாசம் செய்ய வேண்டியவளானாள். அவளின் விளையாட்டுத் தீராத விளை யாட்டு ஆகும். அம்பாள் தன் பழைய நிலைக்கு அம்மன் வந்துற்றாள். அறங் காவலர் குழு கடினமான முயற்சிகளைச் செய்தது. இருப்பினும் கட்டிடப் பொருள் களின் விலையேற்றம், உதவி செய்வார் இன்மை, பணமுடையார்க்கு மனமின்மை, மனமுடையார்க்கு பணமின்மை போன்ற பல சிக்கல்கள். அறங்காவலர் குழு மீண்டும் கூடியது. பிரான்ஸ் நாட்டில் இருக்கும் சிவலிங்கம் அவர்களின் இரு புதல்வர்களும், பிரான்ஸ்க்கு வெளியே இருக்கும் சிவலிங்கம் அவர்களின் இரு புதல்வர்களும் கலந்துபேசி கோயில் பணியை இருந்து வருந்திச் செய்யத் தக்கதொரு அருளாளரைத் தேடினர். தேடினால் கிடைக்கப் பெறுவீர்கள் என்பது அருள்வாக்கு. மீண்டும் அறங் காவலரில் ஒருவராகிய திருமிகு சிவலிங்கம் கலைவாணன் அவர்களின் மிகக் கடுமையான முயற்ச்சியின் பலனாக அறங்காவலர் குழு தக்க ஒருவரைத் தேடியது. இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல் - என்ற குறளின் வழியில் என்னவோ தெரியவில்லை திருமிகு கலைவாணன் அவர்கள் என்னை நாடினார். நான் பலமுறை மறுத்தும் அவரின் ஆழ்ந்த அன்புக்கும் மற்றையோரின் அன்பான வேண்டுகோளிற்கும் அடிமையாகி தலைவ ராக அம்மன் கோயிலின் பரிபாலன சபைக்கு ஏற்கப்பெற்றேன் மறைந்த மூத்த அறங்காவலர் சிவலிங்கம் அவர்களின் துணைவியாரும், நான்கு பிள்ளைகளும் ஒரு மனதாய்த் தேர்ந்த தலைவராக நான் அமையப்பெற்று தலைவராக பெரும் பொறுப்பை அம்மன் அருள் கொண்டு ஏற்றுக் கொண்டேன். அதன்வழி ஆக்கப் பணிகளைச் செய்வதற்காக முதலில் நல்ல அன்பர்களான திருமிகு சிவலிங்கம் கலை யரசன் பொருளாளர்திருமிகு சிவலிங்கம் கலைவாணன் திருமிகு கந்தையா கமலேஸ்வரன் திருமிகு தேரூர்ராசா முருகானந்தசிவம் திருமிகு ஆறுமுகசாமி வர்ணகுலசிங்கம் திருமிகு இராசரத்தினம் சத்தியமூர்த்தி ஆகியோரைத் தேர்ந் தெடுத்து பணிதொடர ஆயத்தமானோம். தெய்வஅருளும், கால நிலையும் கை கொடுத்தன. மக்கள் அம்மனுக்கு ஆலயம் அமைக்க பணங்களை அள்ளித்தந்தனர். இவற்றை நிர்வகிக்க முதலில் நல்ல அன்பர்களை தேர்ந்து அன்பே உள்ள மெனக் கொண்ட நல்ல அன்பர்களைக் கொண்டு ஒரு பரிபாலன சபையை ஏற்படுத்தி திருவாளர்கள் சிவலிங்கம் ரகு, சிவலிங்கம் ரூபன் சிவலிங்கம் கலையரசன், சிவலிங்கம் கலைவாணன், சர்வ சுப்பிரமணியன் ஆகியோர்களைக் கொண்டு இயங்கும் குழு உருவாகியது. இக்குழுவின் தலைவராக இருந்து கணேஸ் வரன் இயங்கி இவர்களின் முயற்சியால் தற்போது அழகான புதுக் கோயில் வீயோடையில் முத்துமாரியம்மனுக்கு உருவாகி நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் அன்பர்கள் அளித்த பொருள்களைப் பெற்றுக் கவனமுடன் கணக்கீடு செய்து வழங்கி வரும் பிரான்ஸ் பரிபாலனசபைப் பொருளாளர் திருமிகு சிவலிங்கம் கலைவாணன், வட்டூர் பரிபாலனசபைப் பொருளாளர் திருமிகு அ. சிவசுப்பிரமணியன் அவர்களின் பணி மிகவும் பாராட்டுதற்குரியது.

தமிழகத்தில் அதிசிறந்த சிற்ப வேந்தர் சிற்பக்கலை ஞானியான திருமிகு சோமஸ் கந்தரும் அவர் ஆட்களும் இருந்துத் தக்க கைவினைஞர்களைக் கொண்டு வந்து அரிதான அழகான வண்ணமிக்கக் கோயிலைக் கட்டி தந்தனர். அதனுள் அம்மனை இருத்தி அவ்வம்மனுக்கு பங்குனி உத்திரநாளில் மங்கள விழா நடத்தி நாம் அனைவரும் பெருமை பெற்றிருக்கின்றோம்.

கலைகளையும் தமிழர் பண்பாட்டு நெறிகளையும் கலாச்சாரங்களையும் கண்களாகக் கொண்ட கலைக்கோட்டம் கலைநகர்பால், கலைநகர் மக்களின் இதயக்கனியாய் வீற்றிருக்கும் சிற்பக்கலை மேதையும், மறைந்த திருமிகு சீனிவாசன் தையல் முத்து தந்த சீரோன் கலைமுத்து திருமிகு செந்துார்ராசா அவர்கள் வட்டுக் கோட்டை இலுப்பையடி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய சிற்பங்களை உயிர் ஓட்ட மாக பார்ப்பவர் கண்களையும் மனதையும் கவரும் வண்ணம் வடித்து உயிர் கொடுத்த வித்தகன் எனது அன்பனும் ஆவார்.இவர் கலைக்காக இலங்கைநாட்டினில் செய்த சேவையை வார்த்தைகளால் வர்ணித்து விடமுடியாது. இவரை அம்பாள் தேவஸ் தானம் பரிபாலன சபை பாரட்டாமல் இருக்கமுடியாது.

சிற்பக்கலைகள் வடிக்கப்பெற்றா லும் அவை இன்னமும் உயிரோட்டமாக காட்சிதருவது அதற்குரிய அழகிய வர்ணம் தருவதுதான் என்பதனை அந்த நிலை தன்னில் உள்ளோரும் மற்றோரும் அறிவர்.இவ்வகைதன்னில் கலை வர்ணங் களை தன் கண்களாகப்போற்றும் சிற்ப வர்ண மேதை சிற்பாசிரியன், எங்கள் ஈழம் தந்த அதி உன்னதமான உயர் எண்ணங் களைக் கொண்ட வார்த்தைகளாலும் எழுத்து வடிவங்களாலும் தர இயலாத செம்மல் திருமிகு அழகரட்ணம் சர்வேஸ்வரன் என்பதனை ஸ்ரீமுத்துமாரி வர்ணவேலைகளில் அருகினில் இருந்தே பார்த்துக்கொள்ளலாம். அவர் இங்கு பணத்தினை எதிர்பார்க்கவில்லை தனது பதிவையே யதார்த்தமாகத் தந்துள்ளார். அவரை தேவஸ்தானம் பரிபாலன சபை பாரட்டாமல் இருக்கமுடியாது.

இதேபோல எழில்மிகு சித்திரைத் தேரை ஒவ்வொன்றாகப் பார்த்துப் பார்த்து அதன் பரிமாணங்களில் சற்றும் குறையாது வடிவமைத்து அம்பாள் பவனி வர ஆக்கிய எமது அன்புமிகு ஜீவரட்ணம் ஜெயப்பிரகாஸ் ஆறுமுகம் சிற்பாலயம் திருநெல்வேலி இவர் மிகப்பெரிய சிற்பப் பிரகாச விநோதச் சக்கரவர்த்தி ஆவார். இவர்கள் இலங்கை நாட்டில் மட்டு மல்லாது கடல் கடந்தும் கலைச்சேவை செய்பவர்கள் ஆவார்கள் இதையாவரும் அறிவர் என்பதில் ஐயமில்லை. இவரை இந்த இடத்தில் பாராட்டல் எமக்கே பெருமை தருவதாகும்.

இதேபோல் இந்தத் திருக்கோயிலின் ஒவ்வொரு வேலைகளையும் செய்த அடியார்கள் அன்பர்கள் இதில் தவறு தலாக விடுபட்ட அன்பர்கள் எல்லோரி னதும் கூட்டுமுயற்சிகளும் பாராட்டப் படவேண்டியவை ஆகும்.

வளமான வாழ்விற்குப் பக்தி ஒன்றே வழி என்ற தெளிவான வழியை உலகிற்கு தமிழ்த் தாயான மாரியம்மன் உணர்த்தி வீயோடையில் விருப்பத்துடன் நிற்கிறாள். அவள் நம் உணர்விலும், உள்ளத்திலும், எங்கும் எப்போதும் நிறைந்து இருக்கி றாள். இவ்வம்மனை வணங்கினால் தீராத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயெல்லாம் தீர்ந்து பொய்யாகும். குறையாத செல்வம் அனைத்தும் கூடி வரும். அன்பர்கள் அணைந்து நிற்பர். தீவினையாளர்கள் ஒதுங்கிக் கொள்வர். முத்துக்குளிப்பான் என்ற அம்மை நோய் வந்து மக்களை வாட்டியபோது இவ்வம்மன் ஆடல் பாடல் வைத்து என்னை குளிர்வித்தால் இவை அகலும் எனக் கூறியதன் காரணமாக ஆடல், பாடல் நிகழ்வுகள் நடத்தப் பெற்று திருவிழா கடைசிநாள் கொண்டாடப் பெற்றது. நோயும் அகன்றது. நல்வாழ்வு கிட்டியது.

அதுபோல தீராத பயத்தைத் தீர்க்கும் நன்மருந்து இவள் ஆவாள். ஒரு முறை பில்லி சூனியம் என்று மக்கள் பெரிதும் பயந்தனர். அப்போதும் மக்களைக் காத்த மகமாயி இவள் ஆவாள். இக்கோயிலில் சிறப்பாக நாட்டுக்கூத்து டன் தீ மிதித்தல், காவடி போன்றவையும் எமது அம்மன் மீது அடியார்கள் கொண்டுள்ள அசையாத நம்பிக்கை தன்னை பறைசாற்றுகின்றன.

இவளை மக்கள் இலுப்பை மரத்தடி முத்துமாரியம்மன், அரசமரத்தடி அம்மா, முத்துமாரியம்மன் எனப் பலப்பல பெயர்கள் சூட்டி அழைத்து மகிழ்ந்து கொண்டாடிவருகின்றனர்.

இவ்வாறு துன்பம் வரும் வேளையிலே ஓடிவந்து அருள் புரியும் அம்மனின் கோயிலில் அவள் திருத்தாள் பணிவோம். அனைத்தும் பெறுவோம்.

இறுதியாக என்னுடன் வலது கரம்போல் சகலவிதமான தொழில்ப் பாடுகளுக்கும் தோழோடு தோழாக இருக்கின்ற எனது தம்பி அறங்காவலர் திருமிகு சிவலிங்கம் கலைவாணன், மற்றும் சகலவிதங்களிலும் ஒத்தாசை நல்குகின்ற அறங்காவலர் திருமிகு சிவலிங்கம் கலையரசன், மற்றும் பரிபாலனசபை உறுப்பினர்கள், இதேபோல் பணிக்காக தன்னையே அர்ப்பணித்து உயிர்வாழும் பொருளாளர் எங்கள் இதயக்கனி திருமிகு அப்பாத்துரை சிவசுப்பிரமணியம் அவர் களும், தன்னலம் கருதாது பரிபாலன சபைக்கே முழுஒத்தாசைகள் உதவிகள் செய்துகொண்டிருக்கும் உயர்ந்த எண்ண ஓட்டங்களைக் கொண்டவருமான அறங்காவலர் திருமிகு சிவலிங்கம் இரகு அவர்களும் மற்றும் அன்புக்கும் பழகு வதற்கு இனிமையான தம்பி அறங்காவலர் திருமிகு சிவலிங்கம் ரூபன் அவாகளும் மேலும் சகல விதத்திலும் ஒத்ததாசை நல்கும் மூத்த அறங்காவலர் திருமதி இராசலட்சுமி அம்மா தொலைத்தொடர்பு களுக்கு சிரமங்கள் பாராட்டாது சிரித்த முகத்துடன் சித்தித்துச் செயலாற்றும் எங்கள் சீரோன் திரு திருமதி பூபாலசிங்கம் (மீனா) குடும்பத்தாரையும் மற்றும் சகலவிதங்களிலும் ஒத்தாசை நல்கிக் கொண்டிருக்கும் அன்புள்ளங்களையும் எமது பரிபாலனசபை நன்றியுடன் பாராட்டுகின்றது.

**கோப்பு ஆக்கம்**

ம.ந. கணேஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாபிஷேகப் படங்களும், இராஜகோபுர அடிக்கல்நாட்டுவிழாப் படங்களும்,
சித்திரத் தேருக்கான ஆரம்பவிழாப் படங்களும்.

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய முதல்வர், இந்திய - இலங்கைச் சிவாச்சாரியார்கள்,
கலைஞர்கள் கௌரவிக்கப்படும்போது...

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டூர், வீயோடை, இலுப்பையடி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான குடமுழுக்கின்போது
வருகைதந்த பிரதம குருக்களும் அநுசரணோத்தமர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செந்தமிழ்ச் செல்வர், அருந்தமிழ்ச் செம்மல் புலவர், டாக்டர்
ஐ.ஆனந்தநடராஜ தீட்ஷிதர்
M.A, B.O.L.,Dip.in. Sams,PhD
தமிழ்ப் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
**சிதம்பரம் ஸ்ரீசிவகாம சுந்தரி அம்பாள்**
**சமய ஸ்ரீமத் ஆனந்த நடராசர் சுவாமி தேவஸ்தானம்**



# முத்துமாரியம்மன் தோற்றமும் வளர்ச்சியும்

"கோயில்" இறைவன் எழுந் தருளி எல்லோர்க் கும் எளிதில் அருள் புரிகின்ற தெய்வத் தன்மைமிக்க இட மாகும். பக்திமான்களும், அடியார்களும் உருகிப்பாடித் தரிசத்திருப்பதால் மிகவும் சிறப்புவாய்ந்த நிலை உடையதாகத் திகழ்கின்றது. சமயகுரவர் நால்வரும் இறைவனை நேரில் தரிசித்த பிறகும் பல கேயில்களுக்கும் பக்தியுடன் சென்று பாடல்கள் பாடியிருக்கின்றார்கள் என அறியும்போது கோயிலின் இன்றியமை யாமை புலப்படுகின்றது. "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று சான்றோர் கூறியிருப்பதால் கோயில் இல்லாத ஊர் வசிப்பதற்கு உரிய இடமே இல்லை என்று கூறலாம். கோயி லில் பூசை நன்றாக நடந்தால்தான் அவ்வூர் மக்கள் நன்றாக வாழமுடியும். இதை நாம் நேரில் காண்கின்றோம்.

ஞானவடிவமாகிய சக்தியே விரும்பின் இச்சையாகவும், இச்சை முற்றிச் செலயாற்றின் கிரியையாகவும் விரிகின் றது. அதாவது அறிவுருவான சக்தி விரும்பு கின்ற போது இச்சாசக்தி எனவும் செயலாற் றுகின்ற போது கிரியா சக்தியெனவும் பெயரடைகிறது. ஆகவே சக்தி ஒன்றுதான் அது கொள்ளும் நிலைவேறுபாட்டால் "ஞானம்" "இச்சை" "செயல்" என மூவகைப் படுகின்றது.

பரமசிவத்தின் திருவுள்ளத்திலே ஞானமேயானபோது ஞானசக்தி, அவர் ஆன்மாக்களுக்கு அருள் வழங்கத் திருவுள்ளம் பாலிக்கின்றபோது இச்சா சக்தி, அவர் செயலாற்ற அதாவது படைத் தலாகிய • ஐந்தொழில்களையும் அந்தந்தப் பதவியினிற்பார் ஆற்றுவார்களாக என் றெண்ணும்போது கிரியாசக்தி எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பன் கொண்டவன் குறிப்பிற் குடிதனப் பெண். இங்ஙனம் சக்தனைப்பிரியாது உடனாகி நிற்கும் சக்தி அவன் நவந்தரு பேதமாகி நடிக்கும்போது அவளும் நவசக்தியாகி றாள். இத்தகைய உண்மைகள் பலவற்றை உணர்ந்தபோது உயிர்மலநீக்கமும் அருட் சக்தியின் பதிவும் பெறுகிறது. அதனால் அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்ப ரென்றும் உணர்ந்து வழிபடுகிறபோது அருட்பதிவு விளைகிறது.

"அருளது சக்தியாகும் அதன் தனக்கு" என்ற உண்மை பதிந்து அருள் வடிவாகிய சக்தியை தனியே வழிபடும் முறையும் தொன்மையாக நிலவியிருக் கிறது. அத்தகைய வழிபாடுகளில் சிவன் காமேஸ்வரனாக விளங்க அவனால் விருப்பப்பெறும் காமேஸ்வரியாயும் சிவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகீசராக விளங்க அவள் வாகீஸ்வரி யாகவும் சிவன் ஞானியாக விளங்க சக்திதன் வடிவே தென்னில் தடையிலா ஞானமாகும் என்றபடி அவள் ஞானமாக வும் விளங்கி எல்லா உலகங்களையும் படைத்து உயிர்களையும் செயற்படுத்திப் பரிபாகமுறச் செய்வாள்.

**வழிபடுமுறை**

அன்னையை வழிபடும் முறையில் மக்களுடைய மனநிலைக்கும் ஒழுகலாறு கட்கும் ஒப்பச் சுத்த பூசையும் வாம பூசையும் என் இருவகை நெறிகள் உளவாயின. அவற்றுள் சுத்த பூசை முறையே தமிழகத்து நிலவுவதாயிற்று.

கும்பாபிஷேக விழாத் தொடங்கி ஒரு மண்டல காலமாவது காலைப்பூசை நேரத்தில் பெண்மக்கள் பலர் கூடிலலிதா சகஸ்ரநாமம், லலிதாதிரி சதி முதலான தோத்திர மந்திரங்களை நான்குபீசங் களுடன் இணைத்துத் தவறாமல் பாராயணம் செய்துவரின் நாடும் உய்யும் நாமும் உய்யலாம்.மகளீரோடு ஆடவரும் பாராயணம் செய்யலாம். இவ்வாறு செய்தால் மூர்த்திக்கும் மந்திரவடிவம் ஒளிவிடும். எல்லோரும் இன்பம்பெருக இனிது வாழலாம்.

இலங்கையில் உள்ள யாழ்ப்பாணத் தில் வட்டூர் என்னும் கிராமத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயத்திற்குக் கும்பாபிஷேகம் மிகவும் சீருடன் பங்குனி மாதம் (04.03.2010) அன்று நடைபெறவிருப்பதை அறிந்து மகிழ்கின்றேன், பூரிக்கின்றேன்.

இந்த ஆலயம் ஏறக்குறைய 700 ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்பர். அப்படிப்பட்ட பழமைவாய்ந்த சக்தி மிக்க இவ்வாலயம் அமரர் திரு.கந்தன் சிவலிங்கம் தலைமையாசிரியர் அறங்காவலர் அவர்களைத் தொடர்ந்து அறங்காவலர்களாகிய திருமதி சிவலிங்கம் இராசலட்சுமியம்மா (தலைவர் வட்டூர் பரிபாலன சபை) அவர்தம் குமாரர்கள் திருமிகு.சிவலிங்கம் இரகு, திருமிகு சிவலிங்கம் ரூபன், திருமிகு.சிவலிங்கம் கலையரசன், திருமிகு.சிவலிங்கம் கலை வாணன், திருமிகு திரு.ம.நவரட்ணம் கணேஸ்வரன் அவர்களை ஆயுட்காலத் தலைவராக நியமித்து, நேர்மைமிக்கதும் கடமைதவறாததும் கட்டுப்பாடுமிக்கது மான ஒரு பரிபாலனசபையை அமைத்து அடியார்களிட மிருந்து பணம் பெற்று கோயிலை நல்ல முறைதன்னில் கட்டி முடித்தமை அறிந்து பெருமையும் உவகை யும் கொள்கின்றேன். இக்கோயிலை முன்னின்று கட்டிமுடித்த உயர்திரு ம.ந.கணேஸ்வரனையும் (ஆயுட்காலத் தலைவர் பிரான்ஸ்பரிபாலனசபை), மற்றும் பரிபாலனசபை உறுப்பினர்கள் கேட்டவுடன் எவ்விதமான மறுப்புமின்றி அள்ளித்தந்த அம்பிகை அடியவர்கள் நிர்வாகசபை உறுப்பினர்கள், சகல விதங் களிலும் உதவி புரிந்த தொழிலாளர்கள், மற்றும் பொருளாளர், எல்லோர்க்கும் சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீமத் நடராஜப் பெருமான் அருளால் சர்வாங்க பீஸ்டங் களும் எல்லா நலன்களும் பெற்று இனிது வாழப்பிரார்த்திக்கின்றேன். இறைபணி சமயப்பணி தொடர்ந்து நடைபெற உளமார வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்னையின் அருட்சிறப்பும் அழகுக்கோலமும்

-பேராசிரியர் அ. சண்முகதாஸ்

இலங்கையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் வட்டுக்கோட்டைப் பகுதியில் வட்டூர் என்னும் இடத்தில் வீயோடை அருள்மிகு முத்துமாரியம்மன் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றாள். இந்த ஆலயம் 700 ஆண்டுகள் பழமை வாய்ந்த தென்பர். காலஞ்சென்ற அறங்காவலர் திரு. கந்தர் சிவலிங்கம் (தலைமை ஆசிரியர்) அவர்களுடைய மூதாதையரே இக்கோயிலைத் தாபித்தனர். 1972 இல் குடமுழுக்குக் கண்ட இந்த ஆலயம் இதனைப் புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய்வதற்கு மறைந்த அறங்காவலர் திரு. சிவலிங்கத்தின் பிள்ளைகள், பிரான்சிலே வாழும் சிவலிங்கம் அவர்களுடைய நண்பரும் வைரக்கல்லினாலான அழகிய மூலஸ்தான அம்மனைச் செய்வித்து உபயமாக வழங்கியவருமான திரு. மயில்வாகனம் நவரட்ணம் ஆசிரியரின் மகன் திரு. கணேஸ்வரன் அவர்களுடன் சேர்ந்து பணி செய்கின்றனர். அம்பாளுடைய ஆலயம் நின்று நிமிர அறங்காவலர்கள், அ. சர்வசுப்பிரமணியம், அம்பாளுடைய ஆலயத்துக்குப்பொன்னும் பொருளும் வாரி வாரிக் கொடுக்கும் அடியார்களும் அயராது உழைக்கின்றனர். அவர்களுடைய முயற்சியினால் 04.03.2010 அன்று வீயோடை அருள்மிகு முத்துமாரியம்மன் குடமுழுக்குடன் புதுப்பொலிவுடன் அவ்வாலயத்திலே வீற்றிருந்து அருள்பாலிக்கவுள்ளாள். "கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்" என்பது எமது ஆன்றோர் வாக்கு. வட்டூரில் உள்ளோரும் அவளை வழிபடுவோர் எல்லோரும் அருள்பெற இந்த ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகத்தை நடத்துதற்கு அயராது உழைக்கும் பொருளாளர் திரு. சர்வசுப்பிரமணியம், தற்போதைய அறங்காவலர்களாகிய சிவலிங்கம் ரகு, சிவலிங்கம் ரூபன், சிவலிங்கம் கலையரசன், சிவலிங்கம் கலைவாணன்ஆகியோர் பாராட்டப்பட வேண்டியவர்கள். இவர்களுக்கு மேலாக தம்பி ம.ந. கணேஸ்வரன் மிகுந்த ஊக்கத்துடன் இப்பணியிலே ஈடுபட்டுள்ளார். இவர்கள் எல்லோருடைய பணியும் தொடர அம்பாளுடைய அருள் அவர்களுக்குக் கிடைக்கவேண்டுமென அவளை வேண்டுகிறேன். அம்பாளுடைய கும்பாபிஷேகம் நினைவாக ஒரு மலரும் வெளியிடப்பட இருப்பதாகக் தம்பி கணேஸ்வரன் கூறியுள்ளார். அதற்கு அம்பாளுடைய பல அருட்கோலங்கள், அருட்செயல்கள் பற்றி ஒரு கட்டுரை எழுத விரும்புகிறேன்.

நாம் வாழும் நடைமுறை உலகிலே அன்புக்கு உதாரணமாக அமைபவள் தாய். சில புறநடைகளாகவுள்ள தாய்மாரை விடுத்து நோக்கும்போது எல்லாத் தாய்மாருமே அன்புடையவர்கள் அருட்கொழுந்தோடிய உணர்வுடையவர்கள். இவர்களுடைய அன்புநிலை இப்படியிருக்குமானால், இவர்கள் யாவர்க்கும் மேலான இறைவியாகிய எம் அன்னையின் அன்பும் அருளும் எத்தகையனவாயிருக்கும்?

மாரியென்றால் மழைபொழியும்
தாயே தாயே எங்கள்
தேவியென்றால் தேன்சொரியும்
தாயே தாயே

என்று உடுக்கடித்துப் பாடுவார்கள். மாரியைத் தருபவள் மாரியம்மன். இந்த உலக மக்களிலே அன்புடையவளாக மாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினைத் தந்து சூட்டினைத் தணிப்பதுடன் வளத்தினையும் தருபவள் அவள். பரம்பொருளைத் தலைவனாக, தாயாக, குழந்தையாக, தோழனாகப் பல்வேறு வடிவில் அடியார்கள் பக்திசெய்துள்ளார்கள். இப்பக்தி நெறிகளுள் மிக நெருக்கமாக உள்ளங்கலந்து உறவுகொண்டாடத் தாயாகக் கருதி பக்திசெய்யும் நெறியே ஏற்றதாக அமைந்தது. முழுமையான அன்பு, முழுமையான பொறுமை, முழுமையான தன்னல மறுப்பு, முழுமையான மன்னிக்கும் சுபாவம் என்பவற்றை நாம் தாய்மையிலேயே காணமுடியும். "நம்மையுமோர் பொருளாக்கி நாய் சிவிகை ஏற்றிவைத்த அம்மை" என மணிவாசகப் பெருமான் கூறுகின்றார். நாய் சிவிகை ஏற்றுவிக்கும் உள்ளம் தாய்மைக்கே உண்டு. இதனாலேயே தாய்த்தெய்வ வழிபாடு அல்லது சக்தி வழிபாடு உலகில் பல இன மக்களிடையே காணப்படுகின்றது. வேடர், இடையர், உழவர் என ஆதிகால மக்கள் நாகரிக படிமலர்ச்சி பெற்றபோது விவசாயத்திலே ஈடுபட்ட பெண்கள் சமூகத்திலே முக்கியத்துவம் பெறலாயினர். தாய்வழிச் சமூக அமைப்பும் தோன்றலாயிற்று. இக்கால கட்டத்திலேயே பெண்தெய்வ வழிபாடும் தோன்றி வளர்ந்திருக்கலாம். சக்தி வணக்கம் காலத்தால் மிக முற்பட்டதெனக் கூறுவர். கி.மு. 2000 ஆண்டளவிலே ஆரியர் இந்தியாவுக்குள் வந்தனர். அதன் முன்னர் வட இந்தியாவில் சிந்து வெளியிலே வாழ்ந்த மக்கள் திராவிடர் என அறிஞர் அபிப்பிராயப்படுகின்றனர். திராவிட மொழி பேசுவோரிடையே பண்டைக் காலந்தொடக்கம் பெண்தெய்வ வழிபாடு இருந்துவந்துள்ளது. கொற்றவை, காளி, நீலி, பிலிமக்கா, கடவா, ஒக்கரை, கங்கா, கொல்லா, அத்தி, புடுபுடுக்கி எனப் பல பெயர்களுடைய தாய்த் தெய்வங்கள் திராவிடர்களாலே வணங்கப்பட்டு வந்தன. இன்றைக்கும் தென்னிந்தியத் திராவிடர்களுள் ஒரு பகுதியினர் சூரியனைப் பெண் தெய்வமாக எண்ணி வணங்குகின்றனர். "பகவன்" என்னும் பெயருடன் அச்சூரியப் பெண்தெய்வம் வணங்கப்படுகின்றது. "அம்மன்" என்னுஞ் சொல் மகர ஈற்றுடன் பெண்பாலைக் குறிப்பதுபோல "பகவன்" என்னும் சொல்லும் மகர ஈற்றுடன் பெண் தெய்வமாகிய சூரியனைக் குறிக்கின்றது. ஜப்பானியர்களும் சூரியனை பெண் தெய்வமாகவே வணங்கினர். அமெதெரசு (Ame Terasu) என்பது அத்தெய்வத்தின் பெயராகும். சங்ககாலத் தமிழர் வெற்றித் தெய்வத்தைக் கொற்றவை என வழிபட்டனர். முருகன் கொற்றவையின் மகன் என,

"வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ"

என்னும் திருமுருகாற்றுப்படைப் பாடலடி குறிப்பிடுகின்றது. சிலப்பதிகாரம் துர்க்கை பற்றி வேட்டுவ வரியிலும் வழக்குரை காதையிலும் குறிப்பிடுகின்றது. இவ்வாறு பெண்தெய்வ வழிபாடு தமிழரிடையே பழைமை வாய்ந்த வழிபாடாயுள்ளது.

சக்தி தத்துவ மகிமையை இந்திய தேசம் முழவதிலும் பரப்பிய பெருமை ஆதிசங்கரரையே சாரும். அவர் தாம் அமைத்த பல தலங்களிலே தேவியின் அம்சமாகச் ஸ்ரீசக்கரத்தையே பிரதிட்டை செய்வித்தார். சங்கரர் இயற்றிய சௌந்தர்யலகரியும், அன்னபூர்ணாஷ்டகமும் தேவியின் சிறப்புகளைக் கூறுகின்றன. லலிதா சகஸ்ரநாமம் அம்பாளின் ஆயிரம் நாமங்களைக் கூறி அர்ச்சிக்கின்றது. இவ்வழியிலேயே அவளுடைய அருளையும் அன்பையும் அனுபவித்த அபிராமிப்பட்டர் போன்ற அடியார்கள் தங்களுடைய பாசுரங்களிலே அவற்றைப் புலப்படுத்தியுள்ளனர். அவற்றுட் சில வற்றை இக் கட்டுரை விளக்கவுள்ளது.

அம்பாளுடைய அருட்கோலங்களையும் அருளையும் அன்பையும் அருமையான தமிழ்ச் சொற்கள் கொண்டு இனிமையான பாசுரங்களை அமைத்தவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிராமிப்பட்டர். நூற்றியொரு பாடல் களைக் கொண்டது அவர் பாடிய அபிராமி அந்தாதி. மாரியென்றால் மழை பொழிகின்ற தாயின் கருணையை பட்டர் அபிராமி அந்தாதியிலே பாடுவதைக் காணலாம். புது நஞ்சை உண்டு கறுத்த மிடற்றையுடையவன் இறைவன். தேவர் கள் உட்பட்ட எல்லா உயிர்களையும் திருப் பாற்கடலிலே தோன்றிய ஆலகால விடத்திலிருந்து காப்பாற்றுவதற்காக அதனைத் தானே உண்ண விரும்பிய பெருங்கருணை உடையவன் அவன். அக் கருணைச் செயலுக்கு மேலான கருணைச் செயலைத் தாய் செய்வதாக அபிராமிப் பட்டர் கூறுகின்றார். அம்பிகை இறைவன் உண்ட அப்புது நஞ்சினையே அமுதமாக்கி விடுகிறாள். குழந்தைக்கு உண்ட பால் செமியாதபோது "அமுதமாக" என்று தாய் கூறுவாள். தாயாகிய அபிராமி இறைவன் உண்ட நஞ்சை அமுதமாக்கியது வியப் பான விடயமல்ல. அபிராமிப்பட்டர் அன்னையின் இப்பெருங்கருணைச் செயலை, அருட்செயலைப் பின்வருமாறு பாடுகிறார்:

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும்
புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி
வார்சடையோன்
அருந்திய நஞ்சமு தாக்கிய அம்பிகை
அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதமென்
சென்னியதே.

**இதன் பொருள்:** அபிராமி அன்னையே! உயிர்களிடத்திலே படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூவகை நிலைகளிலும் நிறைந்து இருப்பவளே! மாணிக்கப் பூண் அணிந்த நெருக்கமான அடர்ந்த தனங் களின் சுமையால் வருந்துகின்ற வஞ்சிக் கொடி போன்ற இடையை உடையவளே! மனோன்மணியானவளே! (அன்பர்களை ஞான நிலைக்குக் கொண்டுசெல்பவள்) நீண்ட சடையை உடைய சிவபெருமான் அன்றொரு நாள் அருந்திய விடத்தை அமுதமாக்கிய அழகிய தேவி! நீ வீற்றிருக் கும் தாமரையைக் காட்டிலும் மென்மை யான நின் திருவடிகளையே என் தலை மேல் கொண்டேன்.

அடியாரை நோக்கிவரும் கொடிய துன்பங்களையெல்லாம் போக்குபவள் அன்னை அபிராமி என்பதை இப்பாடல் மூலம் பட்டர் புலப்படுத்துகிறார்.

அன்னையை வழிபடுபவர்க்கு ஞானமும் முத்தியும் கைகூடிவிடுகின்றன. சொல்லையும் அது உணர்த்தும் பொருளையும் உணர்ந்துகொண்டவர்கள் கற்றோர் ஆவர். ஆனால் கற்றோர் எல்லாரும் ஞானிகளாகிவிடார். அதற்கு அவர்கள் ஞான மொழியினை நன்கறிந்த வராய் இருக்கவேண்டும். ஞானத்தமிழ் பயின்ற பூதத்தாழ்வார் திருமாலுக்கு ஞானவிளக்கு ஏற்றக்கூடியவராக உள்ளார்.

அன்பே தகழியாய் ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியாய்
- நன்புருக
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத்தமிழ் பயின்ற நான்.

என்று ஆழ்வாரே அதனைக் குறிப்பி டுகிறார். இத்தகைய ஞானத் தமிழை அறிந்துகொள்வதற்கு சொல்லுக்கும் பொருளுக்கும் அறிகுறியாகி நடமாடும் துணைவராகிய சிவபிரானுடன் பொருந்தி நிற்கும் அம்பிகையைக் காணவேண்டும் அவள் பாதங்களை வணங்கவேண்டும் என்று அபிராமிப்பட்டர் கூறுகின்றார். எங்கள் பெருமானுடன் இணைந்துநிற்கும் எம்பெருமாட்டியின் புது மலர்கள் போன்ற மென்மையான, அழகான, நறு மணம் வீசுகின்ற, புது மலர்ச்சியையுடைய, நீர்மையை உடைய பாதங்களை இரவும் பகலும் தொழுதால் அழியாத அரச போகமும் முத்திநெறியும் கைகூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லும் பொருளுமென நடமாடும்
துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியேநின்
புதுமலர்த்தாள்
அல்லும்பகலும் தொழுமவர்க்கே அழியா
அரசும்
செல்லும் தவநெறியும் சிவலோகமும்
சித்திக்குமே.

சொல்லும் பொருளுமாய் நிற்கும் இறைவனுடன் இணைந்து நிற்கும் அம்மையின் வடிவைக் கண்டு தொழுதால், அழியாத அரசபோகம் கிடைக்கும் அவ்வரசபோக அனுபவத்தாலே ஏற்படும் தவநெறியின் விளைவாக முத்தியும் சித்தித்துவிடும் என்கிறார் அபிராமிப் பட்டர்.

அம்பாளின் அழகுக் கோலத்தினையும் அவள் அருட்சிறப்புக்களையும் கவி நயம் தோயப் பாடியவர்களுள் அபிராமிப் பட்டருக்கு நிகர் வேறு எவருமிலர் என்றே கூறலாம். அவர் பாடிய அபிராமி அந்தாதி ஒரு முழுமை பெற்ற பிரபந்தமாகும். அம்முழுமைக்குச் சான்றாக ஓர் எடுத்துக் காட்டு மட்டும் இங்கு தரப்படுகின்றது. முதலாவது தொடக்கம் 101ஆவது வரையுள்ள பாடல்களைப் படிக்கும்போது அபிராமிப்பட்டரின் அகக்கண்ணிலே தோன்றும் அம்மையின் வடிவம் அப் பாடல்களுடே வளர்ச்சியுற்றுச் செல் வதைத் தரிசிக்ககூடியதாயுள்ளது. முதற் பாடலிலே,

உதிக்கின்ற செங்கதிர் உச்சித்திலகம்
உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம்போது
மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கடி மென்கடிக்குங்குமம்
தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமியென்றன்
விழுத்துணையே.

**இப்பாடலுடைய பொருள்:** "உதய சூரியனின் செம்மையான கதிரைப் போலவும், உச்சித் திலகம் என்னும் செம்மலரைப் போலவும், போற்றப்படுகின்ற மாணிக்கத்தைப் போலவும், மாதுளை மொட்டுப் போலவும் விளங்குகின்ற மென்மையான மலரில் வீற்றிருக்கின்ற திருமகளும் துதிக்கக்கூடிய வடிவை உடையவள் என் அபிராமியாவாள். அவள் கொடி மின்னலைப் போலும், மணம்மிகு குங்குமக் குழம்பு போலும் சிவந்த திருமேனியுடையவள். இனி அவளே எனக்குச் சிறந்த துணையாவாள்."

இங்கு நாம் நோக்கவேண்டிய விடயம் என்னவெனில், அம்பாளின் அழகுக் கோலங்களைக் கூறுமிடத்து, "மாதுளம்போது" எனப் பட்டர் கூறுவதே யாகும். அபிராமி அந்தாதி முதலாவது பாட்டிலே அம்பாள் மாதுளை மொட்டாகத் தோற்றுகிறாள். அம்மாதுளை மொட்டு ஒவ்வொரு இதழாக அவிழ்ந்து மாதுளம் பூவாக மலர்ந்துவிடுகின்றது. முதலாவது பாட்டிலே மாதுளை மொட்டாகத் தோன்றிய அம்பாள்பட்டருடைய அகக்கண்ணிலே இறுதிப் பாடலிலே மாதுளம்பூவாகத் தோற்றமளிக்கிறாள். 101ஆவது பாடல் வருமாறு:

ஆத்தாளை எங்கள் அபிராமவல்லியை
அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளைப்
புவியடங்கக்
காத்தாளை ஐங்கணை பாசாங்குசமும்
கரும்புமங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத்
தொழுவார்க்கொரு தீங்கில்லையே.

"எங்கள் தாயானவளை, அபிராம வல்லியை, எல்லா உலகங்களையும் பெற்றவளை, மாதுளம் பூப்போன்ற நிறத்துடையவளை, உலகமெல்லாம் காத்தவளை, திருக்கரங்களில் மலர் அம்புகள் ஐந்தையும், பாசத்தையும், அங்குசத்தையும், கரும்பு வில்லையும் வைத்திருப்பவளை, மூன்று கண்களையுடைய தேவியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கும் நேராது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடலிலே அம்பாளுடைய நிறம் மாதுளம் பூப்போன்றது எனக் கூறியிருப்பது கவனிக்கத்தக்கதாகும். போதுடன் தொடங்குகின்ற அந்தாதிப் பிரபந்தம் மலருடன் முடிவடைகின்ற முழுமை அபிராமிப்பட்டருடைய பக்திநலனையும் பாநலனையும் சுட்டிநிற்கின்றது.

கடம்பவனம் என்னும் திருப்பதியிலே வீற்றிருந்து அருள்பாலிக்கும் அம்மையின் அழகினைக் கண்ணுற்ற அபிராமிப்பட்ட்ர் பேரதிசயத்துடன் பரவசப்பட்டுப் பாடுகிறார்:

கண்களிக் கும்படி கண்டுகொண்டேன்
கடம்பாடவியில்
பண்களிக் குங்குரல் வீணையும்கையும்
பயோதரமும்
மண்களிக் கும்பச்சை வண்ணமுமாகி
மதங்கர்குலப்
பெண்களில் தோன்றிய எம்பெருமாட்டிதன்
பேரழகே

"என் அபிராமித் தாயே! கடம்பவனம் என்னும் பதியிலுறை அன்னையே! உன்னை என் கண்கள் களிக்குமாறு கண்டுகொண்டேன். பண்களே விரும்புகின்ற குரல், வீணை தாங்கிய கைகள், திருமுலை, மண்மகிழும் பச்சை நிறம் என்பவற்றையெல்லாம் கொண்ட மதங்கர் என்னும் குலத்திலே தோன்றும் அழகிய பெண்களைப் போன்று பேரழகுடையவளாகத் தோன்றிய எம்பெருமாட்டியின் பேரழகினை என் கண்கள் களிக்குமாறு கண்டுகொண்டேன்"

கண்ணும், பண்ணும், மண்ணும் களிக்கின்றனவாம். அம்பாளின் பேரழகைக் கண்டு அவள் அடியார் ஆகிய அபிராமிப்பட்டரின் கண்கள் களிக்கின்றனவாம். அவளுடைய மதுரமான குரலைக் கேட்டுப் பண்கள் களிக்கின்றனவாம். அவளுடைய பச்சை வண்ணத்தைப் பார்த்து மண் களிக்கின்றதாம். இம்மூன்று களிப்புகளையும் மிக நயத்தடன் பட்டர் கூறியிருப்பதை சிறிது விளக்கமாக நோக்குவாம்.

அபிராமிப்பட்டர் கண்களிக்கும்படி காண்கிறார். இறை தோற்றம் அப்படியாகத்தன் இருக்கும். சுவாமி விபுலாநந்தர்,

பாட்டளிசேர் பொற்கொன்றையோ
பாரிலில்லாக் கற்பகமோ
வாட்டமுறா தவர்க்கு வாய்த்த மலரெதுவோ
பாட்டளிசேர் கொன்றையல்ல பாரிலில்லாப்
பூவுமல்ல
நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது.

நாயகனாகிய இறை விரும்புவது நாட்டவிழியினைத்தான். இறைவியினுடைய தோற்றத்தைக் கண்ட பட்டருடைய கண்கள் களிப்படைகின்றன.

அம்பாளுடைய குரல் பண்ணாக ஒலிக்கின்றது. பண்களெல்லாம் வரிசையிலே நின்று இக்குரலல்லவோ எம்மையெல்லாம் வாழவைப்பது என்றும், இக்குரலல்லவோ மதுரமானது என்றும் களிப்படைகின்றன. இவ்விடத்தில் ஆங்கிலக் கவிஞன் சேக்ஸ்பியர் ஜஷலியஸ் சீசரின் உடலழகு பற்றிக் கூறுமிடத்து, அம் மன்னனுடைய உடலுக்கு அடிப்படைகளான ஐம்பொறிகளும் வெளியே வந்து வரிசையாக நின்று பார்த்து "இவனல்லவோ மனிதன்" என்று கூறிக்களிப்படைகின்றன என்று கூறியது நினைவுக்கு வருகின்றது.

மண் பச்சைப் பசேலென்று காட்சியளித்தால் மண்ணவர்கள் மகிழ்வார்கள். அம்மையின் அருளாலே, அவள் வண்ணத்தின் ஒளியாலே எங்கும் பசுமை உண்டாகின்றது. பசுமை உணவைத் தருவது. உடற்களைப்பைப் போக்கவல்லது. புத்துணர்வை ஊட்டுகின்றது. இந்நல்லன யாவற்றையும் அம்பாளின் திருக்கோலம் காட்டுகின்றது. எனவே, "மண் களிக்கும் பச்சை வண்ணமுமாகி" என்று பட்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுகிறார். இதனைத் தன்னுடைய அபிராமி அம்மைப் பதிகத்தில்,

"வாடாமல் உயிரெனும் பயிர்தழைத் தோங்கிவளர
அருள்மழை பொழிந்தும் இன்ப
வாரிதியிலே நின்ன தன்பெனும் சிறகால்
வருந்தாமலே அணைத்து
கோடாமல் வளர்சிற் றெறும்புமுதல் குஞ்சரக்
கூட்ட முதலான சீவ
கோடிகள் தமக்குப் புசிக்கும் புசிப்பினைக்
குறையாமலே கொடுத்து"

என்று பாடுகின்றார். இப்பதிகப் பாடலிலே விரித்துக் கூறப்பட்டனவெல் லாம் உள்ளடக்கும் வண்ணம் "மண களிக்கும் பச்சை வண்ணமுமாகி" என்று அந்தாதியிலே பாடியுள்ளார். அவளு டைய அருட்சிறப்போடு கோலச்சிறப்பும் இவ்வடியாலே உணர்த்தப்பட்டுவிடு கின்றது.

மேற்குறிப்பிட்ட பண்புகளை யெல்லாம் கொண்ட அம்பாள் அருள்மிகு முத்துமாரியாக வட்டுக்கோட்டை வட்டூரிலே கோயில்கொண்டு அருள் பாலிக்கின்றாள் கும்பாபிஷேகத்தன்று கோயில் பூட்டித் திறப்பது வழக்கம். குட முழுக்கினை முடித்து அந்தணப் பெரு மக்கள் ஆலயவாயிலில் வந்து நிற்கும் பொழுது, அப்பர் பெருமான் திருமறைக் காட்டிலே கோயில் திறக்கப் பாடிய பதிகம் பாடப்படுவது வழக்கம். அதன் முதற் பாடல்,

பண்ணி னேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத்திறந் தருள்செய் மினே

இப்பாடலிலே குறிப்பிட்டபடி வட்டுக்கோட்டையில் மாத்திரமன்றி மண்ணிலுள்ளவர்கள் கண்டு வணங்கி அருள்பெறுவதற்கு அருள்மிகு முத்து மாரியம்மன் 07.03.2010 அன்று தன்னு டைய ஆலயக் கதவுகளைத் திறந்து அருள் பாலிப்பாள். அவள் பாதம் பணிந்து அவளுடைய ஆலய அறங்காவலர்கள், பொருளாளர், ஆயுட்காலத் தலைவர் ம.ந.கணேஸவரன், பிரான்ஸ் நாட்டு அடியார்கள் யாவரும் எல்லா நலங்களும் வளங்களும் பெற்று வாழ என் மனமுவந்த வாழ்த்துக்களைக் கூறி இக்கட்டுரையை நிறைவுசெய்கின்றேன்.

---

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே கொன்றைவார் சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரும் நீயும்என் புந்திஎந் நாளும் பொருந்துகவே

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும்புணர் முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்(சு) அமு தாக்கிய அம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம் என் சென்னியதே

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட்டுர் வீயோடை இலுப்பையடி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான
## ஆலய பரிபாலனசபை- பிரான்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
ஸ்ரீ குருப்யோ நம:
சிவாகம சிரோமணி, சிவாகம கலாநிதி,
சிவஸ்ரீ S.K.ராஜா பட்டர்
ஸ்தானிகர், அருள்மிகு ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி திருக்கோயில்,திருப்பரங்குன்றம்
ப்ரதான அர்ச்சகர், அருள்மிகு மீனாக்ஷி ஸுந்தரேச்வரர் திருக்கோயில், மதுரை
முதல்வர், ஸ்ரீ ஸ்கந்த குரு வித்யாலயம்
66, ஸன்னிதித் தெரு, திருப்பரங்குன்றம்
மதுரை-625 005

உ

க்ஷேமம் சிவமயம் தேதி.............

# அம்மன் வழிபாடு

வகுத்திடும் நாவுக்கர சிவன் தன்னை
பகுத்திடும் மெய்யாகமம் இவை எல்லாம்
தொகுத்தொரு நாவிடை சொல்ல வல்லாளை
முகத்தலும் முன் எழக் கண்டு கொண்டேனே.

ஸ்ரீமத் திருமூல்ரின் திருமந்திரம்.

அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாச மாய் ஆனந்த பூர்த்தியாகி அருளோடு நிறைந்து விளங்குபவன் இறைவன். இவ்விறைவனை பதியென்றும் சிவனென் றும் சிவாகமங்கள் சுட்டுகின்றன. அப் பெருமானே பல்வேறு காலங்களில் பல் வேறு காரணங்களுக்காக பல்வேறு வடிவங்களையெடுத்து அருள்புரிந்தி ருக்கிறார் என்பதையும் சிவாகமங்கள் கூறுகின்றன.

"ஏகைவ சக்தி: பரமேச்வரஸ்ய ப்ரயோஜனார்த்தாய சதுர்விதாபூத்!
போகே பவானீ அவனேது விஷ்ணு: கோபே ச காளீ ஸமரே ச துர்கா !!"

**இதன் பொருள்:-**

பரமேச்வரனுடைய ஒரே சக்தி யானது உலக நன்மையின் பொருட்டு நான்காகப் பிரிந்தது. அது முறையே, உயிர் களுக்கு இன்பத்தை வழங்குங்கால் பவானீ எனவும், உயிர்களைக் காக்கவருங்கால் விஷ்ணு எனவும், தீயவர்களை அழிக்கக் கோபவடிவம் எடுக்கும்போது காளீ எனவும், போர்க்காலத்தில் துர்க்கை எனவும் அழைக்கப்படுகிறது. வரலாற்றின் அடிப் படையில் பார்த்தால் கூட சிவ வழிபாடு மிகத்தொன்மையானது என்பதையும், பிறகே அம்பிகையின் வழிபாடு ஏற்பட்ட தென்பதையும் நம்மால் அறியமுடிகிறது.

சிவபெருமானிடமிருந்து அச்சக்தி பிரிந்தது என்பதிலிருந்தே அச்சக்தி சிவத்திற்கு அன்னியமானது அன்று என்பது நன்கு விளங்குகிறது. மேலும், இக்கருத்தைத் தெளிவுபடுத்தும் வண்ண மாக ஸ்ரீமத் ஞானசம்பந்தர் முதலான நமது சமயாசார்யப் பெருமக்கள் அனைவரும் சிவபெருமானை உமையொருபாகன், மாதொருபாகன், மங்கைபங்கன் என்பது போன்ற சொற்களால் துதித்துள்ளனர்.

மூல ஆகமங்கள் 28னுள் 16ஆவதாக வைத்தெண்ணப்படும் ஸ்ரீமத் ரௌரவாக மத்தின் பாசவிமோசன படலத்தில் உள்ள தான 12ஸூத்ரங்களை சிவஞானம் என வழங்கும் சைவஉலகம். அதுவே சிவஞான போதம் என்று வழங்கப்படுகிறது. அந் நூலின் இரண்டாவது ஸூத்ரம்

"அந்ய: ஸந் வ்யாப்திதோ அநந்ய: கர்தா கர்ம அனுஸாரத:!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரோதி ஸம்ஸ்ருதிம் பும்ஸாம் ஆஜ்ஞயா ஸமவேதயா !!" என்பதாகும்.

**இதன் பொருள்:-**

இறைவன் உயிர்களின் வேறானவனாயினும், வ்யாப்தியினால் வேறாகாதவனாகி உயிர்களின் கர்மவினைகளுக்கேற்ப, தன்னிலும் வேறாகாத தனது ஆஜ்ஞா எனப்படும் சக்தியினால் உலகத்தைப் படைக்கிறார், என்று கூறுகிறது. இக்கருத்தையே ஸ்ரீமத் உமாபதி சிவாசார்யர் தமது திருவருட்பயன் எனும் நூலில்

"தன்னிலைமை மன்னுயிர்கள் சார தரும் சக்தி
பின்னமிலான் எங்கள் பிரான்"

என்று மிகவும் அழகாகவும் தெளிவாகவும் விளக்குகிறார். அவ்விறைவனும் இறைவியுமே உலகிற்கு அம்மையும் அப்பனுமாக விளங்குகின்றனர் என்பதை "அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர்" என வரும் திருக்களிற்றுப்படியார் வரிகள் உணர்த்துகின்றது. மஹாகவி காளிதாசரும் தமது ரகுவம்ச மஹாகாவியத்தின் மங்கள ச்லோகத்தில், சொல்லும் பொருளும் போல வேறாகாதவர்களும், உலகத்தின் தாய்தந்தையருமான பார்வதீபரமேச்வர்களை சொல்லும் பொருளும் நன்கு விளங்கும் பொருட்டு வணங்குகிறேன் என்று குறிப்பிடுகிறார்.

"வாகர்த்தாவிவ ஸம்ப்ருக்தௌ வாகர்த்தப்
ப்ரதிபத்தயே !
ஜகத:பிதரௌ வந்தே பார்வதீபரமேச்வரௌ !!"

மேற்கூறியவற்றின் மூலம் இறைவன் ஒருவனே என்பதும், அவ்விறைவனிடமிருந்தே அவனினும் வேறாகாத சக்தியானது தோன்றிற்று என்பதும் பெறப்படுகிறது. என்றாலும் வீட்டில் எப்படிப் பொதுவாகத் தந்தையைக் காட்டிலும் தாயிடத்தில் பிள்ளைகளுக்கு அன்பு அதிகம் காணப்படுகிறதோ, அது போலவே உலகத்தின் தந்தையான சிவபெருமானைக் காட்டிலும், உலகத்தின் அன்னையான பராசக்தியினிடத்தில் குழந்தைகளான நம் அனைவருக்கும் அன்பு அதிகம் காணப்படுகிறது. இதன் காரணமாகவே தான் சைவசமயத்தில் சக்தி வழிபாடு சிறப்பாகக் காணப்பட்டாலும், சாக்தம் என்ற பெயரில் சக்தி வழிபாடானது தனியாக உருவெடுத்தது எனலாம்.

சைவசமயத்தைச் சேர்ந்த ஒருவருக்கு அம்பிகை, விநாயகர், முருகன் போன்ற எந்த ஒரு மூர்த்தியும் இஷ்ட தெய்வமாக இருக்கலாம். இது சைவ சமயத்தின் அருஞ் சிறப்பாகும். எனவே தான் அகத்தியர், மார்கண்டேயர், சமயாசார்யார்கள், அபிராமிபட்டர், அருணகிரி நாதர், குமரகுருபர ஸ்வாமிகள், தாயுமான ஸ்வாமிகள் போன்ற பல்வேறு அடியார்கள் தமது பாடல்களில் அம்பிகையைப் போற்றிப் பாடிப் பரவிப் பணிந்துள்ளனர்.

தன்னை நாடி வரும் பக்தர்களுக்கு அருள்புரிவதற்காக மீனாட்சி, காமாட்சி, விசாலாட்சி, நீலாயதாலாட்சி, பர்வதவர்த்தினி, உண்ணாமுலை நாயகி, அபிராமி, காந்திமதீ, மஹாகாளீ, மஹாமாரீ, துர்க்கா, மஹிஷாஸ/ரமர்தினீ, சாமுண்டீ என்று அந்த அன்னை எடுத்த அவதாரங்களோ ஏராளம் ஏராளம்.

இனி அந்த அன்னையை நமது நூல்கள் எப்படித் துதிக்கின்றன என்பதைப் பார்ப்போம்

வடமொழியில் ஸ்ரீமத் லலிதா ஸஹஸ்ரநாமம், த்ரிசதி, ஸௌந்தர்யலஹரீ, தேவீமாஹாத்ம்யம், தமிழில் அபிராமி அந்தாதி, பிள்ளைத்தமிழ் போன்றவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையின் பக்தர்கள் தலை மேல் வைத்துக் கொண்டாடும் அரும் பொக்கிஷங்கள்.

அவற்றுள் அன்னையை ஆயிரம் திருநாமங்களால் போற்றுகின்ற ஸ்ரீ மத் லலிதா ஸஹஸ்ரநாமம் அன்னையை அன்னையாகவே போற்றித் துவங்குகிறது.

ஓம் ஶ்ரீ மாத்ரே நம:
என்பது அத்திருநாமம்

அருள் பொருந்திய தாயே உன்னை வணங்குகிறேன் என்பது இதன் பொருள். இந்த நாமத்தின் சிறப்பு என்னவென்றால் அன்னை நம் அனைவருக்கும் அன்னை என்பது தான். அதாவது இந்த இடத்தில் அம்பிகையை ஜகதம்பிகையாக ஸ்ரீ உலகன்னையாகக் காணவில்லை. ஒவ்வொரு ஜீவனுக்கும் அன்னையாகவே காண்கிறது இந்நூல். மற்றும் ஒரு அழகான திருநாமம்

ஓம் மஹாலாவண்ய சேவதயே நம: என்பதாகும்.

மஹா என்றால் பெரிய, லாவண்யம் என்றால் அழகு, சேவதி என்றால் இருப்பிடம். எனவே மஹாலாவண்ய சேவதி என்றால் மாபெரும் அழகுக் கெல்லாம் இருப்பிடம் என்பது பொருளாகும். இக்கருத்தை ஸ்ரீ தேவீமாஹாத்ம்யம் என வழங்கும்

ஸ்ரீ துர்காஸப்த சதீ ஸௌம்யா ஸௌம்யதரா அசேஷஸௌம்யேப்ய:
அதிஸுந்தரீ!
என்று குறிப்பிடுகிறது.

மது, கைடபன் என்ற இரண்டு அசுரர்களால் துன்புறுத்தப்பட்ட ஸ்ரீ ப்ரஹ்மதேவர் தன்னைக் காக்கவேண்டி அம்பிகையை பல்வேறு விதமாகப் போற்றிக் கொண்டு வருகிறார். அப்பொழுது அம்பிகையினுடைய அழகை வர்ணிக்கத் துவங்கி முதலில் "த்வம் ஸௌம்யா" அதாவது "நீ அழகானவள்" என்றார். ஆனால் அது அவருக்கு நிறைவைத் தரவில்லை. எனவே "த்வம் ஸௌம்ய தரா" என்றார் அதாவது "நீ அழகிற் சிறந்தவள்" என்றார். அதுவும் த்ருப்தியைத் தர வில்லை. அம்பிகையினுடைய அழகை வார்த்தைகளால் வர்ணிக்க முடியுமா என்ற சந்தேகம். ஆனால் எப்படியாவது சொல்ல வேண்டும் என்ற ஆவல். யோசித்துப் பார்க்கிறார். சரி இப்படிச் சொல்லி விடுவோம் என்று முடிவு செய்து "த்வம் அசேஷஸௌம்யேப்ய: அதி ஸுந்தரீ" என்றுக் கூறிவிட்டார். அதாவது "உலகில் அழகாக உள்ளது என்று எதெல்லாம் குறிப்பிடப்படுகிறதோ அவை எல்லாவற்றையும் ஒன்று திரட்டி ஒருபுறம் வைத்து மறுபுறம் அம்பிகையைப் பார்த்தால் அந்த அழகுக் கூட்டத்தைக் காட்டிலும் நீ மிக அழகாக இருக்கிறாய்" என்று கூறி மன நிறைவடைகிறார் ஸ்ரீ ப்ரஹ்மதேவர். இக்கருத்தை ஸ்ரீ அபிராமி பட்டர் தமது அபிராமி அந்தாதியில் "எம்பெருமாட்டி தன் பேரழகே" என்றுக் கூறி எங்கே அது தவறாகப் போய்விடுமோ என்று அஞ்சி அடுத்த வரியிலேயே "அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி" என்று கூறிவிட்டார்.

ஸ்ரீமத் தாயுமான ஸ்வாமிகள் அம்பிகையை வர்ணிக்கும் போது தாயே! நீ உலகனைத்தையும் ஈன்றவள் என்பது தெரியும். எனவே உன்னை அன்னை என்று அழைப்பது சரி. ஆனால் உலகனைத்தையும் ஈன்ற பிறகும் வேதங்கள் உன்னை கன்னியென்று போற்றுகின்றதே அது எவ்வாறென்று ஆச்சர்யப்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அகிலாண்ட கோடி ஈன்ற அன்னையே
பின்னையும்
கன்னி என மறைபேசும் ஆனந்தரூப மயிலே"
-என்பது அவர் வாக்கு.

அவரது கருத்தை தெளிவுபடுத்தும் வண்ணமாக ஸ்ரீ மத் அருணந்தி சிவாச்சாரி யார் தமது சிவஞான சித்தியாரில் கீழ்காணும் வண்ணம் விளக்குகிறார்.

சிவந்தான் சக்தியை ஈன்றும் சக்தி தான்
சிவத்தை ஈன்றும்
உவந்திருவரும் புணர்ந்திங்கு உலகு
உயிரெலாம் ஈன்றும்
பவன் பிரமசாரியாகும் பான்மொழி
கன்னியாகும்
தவந்தரு ஞானத்தோர்க்கு இத்தன்மைதான்
தெரியுமன்றே.

அதாவது:-

ஒரு சிலர் சிவபெருமானிடமிருந்து தான் சக்தி தோன்றியது என்கிறார்கள். ஒரு சிலர் சக்தியிலிருந்து தான் சிவம் தோன்றியது என்கிறார்கள். மேலும் இருவரும் இணைந்து தான் இவ்வுலகமும் உயிர்களும் தோன்றியது என்கிறார்கள். ஆனால் சிவபெருமான் ப்ரஹ்மசாரீ என்பதும் அம்பிகை கன்னிகை என்பதும் யாரும் அறியவில்லை அது தவமுடைய ஞானி களுக்கே தெரியும் என்கிறார்.

இப்படி பல்வேறு விதமாக அருளாளர்கள் அம்பிகையினுடைய அழகையும், பராக்ரமத்தையும், கருணையையும் வர்ணித்திருக்கிறார்கள். அவைகளையெல்லாம் குறிப்பிடயியலாது என்ற காரணத்தால், அந்த அம்பிகையுடைய கடைக்கண் நம்மீது படும் வண்ணம் அவளை வழிபட்டால் நமக்கு அனைத்தும் நிச்சயம் கிடைக்கும் என்ற ஸ்ரீ அபிராமி பட்டரின் அனுபவத் திருவாக்கை நினைவு படுத்தி நிறைவு செய்கிறேன்.

தனம்தரும் கல்விதரும் ஒருநாளும்
தளர்வறியா
மனம்தரும் தெய்வ வடிவுந்தரும் நெஞ்சில்
வஞ்சமிலா
இனம்தரும் நல்லன எல்லாந்தரும் அன்பர்
என்பவர்க்கே.

---

சென்னிய(து)உன் பொன் திருவடித்தாமரை சிந்தையுள்ளே
மன்னிய(து) உன்திரு மந்திரம் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின்அடி யாருடன் கூடிய முறைமுறையே
பன்னிய(து) என்றும்உன் றன்பர மாகம பத்ததியே

ததியுறு மத்திற் சுழலும் என் ஆவி தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருதுகண் டாய்கம லாலயனும்
மதியுறு வேணி மகிம்நனும்மாலும் வணங்கிஎன்றும்
துதியுறு சேவடி யாய் சிந்துரானை சுந்தரியே

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருள்மிகு வட்டூர் ஸ்ரீ முத்துமாரிஅம்மன் கோயிலும் அருட்பணிகளும்

பேராசிரியர் கலாநிதி ம.செ.இரபிசிங் Bsc., M.A., M.Phil., Ph.D

**தமிழர்களும் வழிபாடும்**

"கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது, தமிழர்களிடையே தொன்றுதொட்டு வழங்கி வரும் முதுமொழி. தமிழர்களுடைய மேம்பட்ட வாழ்விற்கும் "கோயில்ப் பண்பாடு" பெருமளவில் காரணமாக அமைந்துள்ளது. கோயில்கள் தமிழர்தம் வாழ்க்கையோடு பல நிலையிலும் இரண்டறக் கலந்துள்ளது. எனவேதான் தமிழர்கள் தாம் அமைத்த கோயில்களைச் சுற்றிலும் தம் குடியிருப்புப் பகுதிகளை அமைத்து கோயிலோடு நிலைத்து வாழும் மரபை நீண்ட நெடுங்காலமாகக் கொண்டுள்ளனர்.

தமிழர்கள் கோயில்களோடு கொண்டுள்ள தொடர்பால், அவர்களது சமய வாழ்க்கை பல சிறப்புக் கூறுகளைக் கொண்டு திகழ்வதோடு, அவர்களது தொன்மையான கலைகளையும், பண்பாட்டுக் கூறுகளையும், இலக்கிய வளங்களையும், பக்தி நெறிகளையும், நம்பிக்கைகளையும் பாதுகாக்கும் பெட்டகமாகவும் கோயில்கள் அமைந்துள்ளன.

**மாரியம்மன் வழிபாடு**

தமிழர்கள் வாழ்வில் சிறு தெய்வ வழிபாடும் பெரும்பங்கு வகித்து வருகின்றது. "சமயம் என்பது சமூக உறவை வளர்க்கும் ஒரு சாதனம்" என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாய்த் திகழ்வது சிறு தெய்வவழிபாடு. சிறுதெய்வ வழிபாடுகளில் மாரியம்மன் வழிபாடு சிறப்பிடம் பெற்றுள்ளது. உலகு தழுவி வாழும் தமிழர்களிடையே மாரியம்மன் வழிபாடு மிகுந்த செல்வாக்குப் பெற்றுள்ளது. சுருங்கக் கூறின் தமிழர்கள் எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ, அங்கெல்லாம் மாரியம்மன் வழிபாடு நடைபெற்று வருகின்றது. குறிப்பாக இந்தியா, இலங்கை, இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, தென்ஆபிரிக்கா, முதலிய நாடுகளில் பெருமளவில் மாரியம்மன் கோயில்களும் வழிபாடுகளும் இடம் பெற்றுள்ளன. தமிழில் "மாரி" என்றால் மழையைக் குறிக்கும்.

திருவள்ளுவரும் பிறரிடமிருந்து எந்த விதமான எதிர்பார்ப்பும் இல்லாமல் பிறருக்கு நன்மை செய்வது ஒன்றினையே குறிக்கோளாகக் கொண்டுள்ள சான்றோர்களைப்போல உலகம் தோன்றிய காலம் முதல் மக்களுக்கு நன்மை செய்வது ஒன்றினையே தலையாயப் பணியாகக் கொண்டுள்ள மழையை "மாரி"என்று குறிப்பிடுகின்றார்.

"கைமாறு வேண்டா கடப்பாட்டு மாரி மாட்டு
என் ஆற்றுங் கொல்லோ உலகு"

என்பது குறள்

மழையைப்போல மக்களுக்கு நன்மை செய்யும் அம்மனை "மாரியம்மன்" என்று தமிழர்கள் தொன்றுதொட்டு அழைத்து வருகின்றனர். சமயங்களும் சமயம் சார்ந்த வழிபாடுகளும் மனித சமூக வாழ்வில் பின்னிப் பிணைந்தவை. அந்த வகையில் மாரியம்மன் வழிபாடும் தமிழர் தம் சமூக வாழ்வில் இரண்டறக் கலந்தவை. எனவேதான் தமிழர்கள் தாம் வாழும் இடங்களிலெல்லாம் மாரியம்மன் வழிபாட்டை, வழிபாட்டிற்குரிய கோவில்களை உருவாக்குவதைப் பெரிதும் பெரும்பணியாகக் கொண்டுள்ளனர். மாரியம்மன் வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டுத் தலங்களை, கோவில்களைத் தம் பண்பாட்டைப் போற்றிப் பாதுகாக்கும் கருவூலமாகவும் அமைத்துள்ளனர்.

**அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்**

இயற்கையை - இயற்கையின் அழகைக் கண்டு மகிழ்ந்த தமிழர்கள் அழகையே (தமிழில் "முருகு" என்றால் "அழகு" என்று பொருள்) இறையாக வழி படும் தொன்மை மரபை உடையவர்கள். எனவே தாம் வழிபடும் அம்மையை - மாரியம்மனை மிக அழகிய சிவப்பு வண்ணமுகங்கொண்டவளாகவும், சிவப்பு ஆடை அணிந்த அணங்காகவும் காட்சி தரும் தெய்வமாக வழிபட்டு வருகின்றனர். மக்களின் துன்பங்களையெல்லாம் துடைத்துக்காப்பாற்றும் "மாரி" அம்ம னாக அருள்புரியும் அன்னையின் வழிபாடு நீண்ட நெடுங்காலமாக இலங்கைவாழ் யாழ்ப்பாணத்துத் தமிழர் களிடையே சிறப்புற்று மிளிர்கின்றது.

இலங்கையில் யாழ்ப்பாணத்தில் வட்டுக்கோட்டை அருள்மிகு ஸ்ரீ முத்து மாரி அம்மன் கோயில், ஒருவருக்கொருவர் உதவும், அன்பு செலுத்தும் குடும்ப உறவுகளையும், சமூக ஒற்றுமைகளையும், தமிழர் தம் அருங்கலைகளையும், பண் பாட்டுக் கூறுகளையும் பாதுகாக்கும் ஒரு புண்ணிய தலமாகத் திகழ்கின்றது. இதற்கு அடிப்படைக்காரணம், வள்ளுவப் பெருந் தகை குறிப்பிட்டது போன்று "கை மாறு வேண்டா கடற்பாட்டு மாரியைப் போல" தொண்டுளம் கொண்டுள்ள, அக்கோயில் தன்னைப் பராமரித்தும் பாதுகாத்தும் வரும் அறங்காவலர்களேயாகும்.

நெடுங்காலமாக வாய்வழியாக வந்த செவிவழிச் செய்திகளும், கதைகளும், பெரியவர்களின் கூற்றுக்களும், அறங் காவலர்கள் வாய்வழிக் கூற்றுக்களும், தலைவர் கணேஸ்வரன் கேட்டறிந்த வரலாற்று உண்மைகளும் வட்டூர் ஸ்ரீ முத்து மாரியம்மன் கோயிலின் ஸ்தலப் புராணமாக நின்று நிலவுகின்றது.

ஏறத்தாழ எழுநூறு ஆண்டுகளாகப் பழமைவாய்ந்த இக்கோயில் "வீயோடை ஸ்ரீ முத்து மாரியம்மன் கோயில் என்று அழைக்கும் பெருமை உடையது. தலை மை ஆசிரியராகவும், அறங்காவலருமாகப் பணியாற்றிய அமரர் திரு.கந்தர் சிவலிங்கம் அவர்களது முன்னோர்கள் "வீயோடை என்னும் வளவிற்கு அருகினில் உள்ள இலுப்பை மரத்தின் கீழ்வைத்து வணங்கியமையால், இப்பெயர் பெற்றது என்பர். இலுப்பை மரம் பட்டுப் போகவே பின்னர் தானாகத் தோன்றிய அரச மரங்களின் நடுவே மாரி அம்மன் வழிபாடு நீடித்தது. பல ஆண்டு காலமாக தொடர் ந்து வருகிறது. நாம் பெரிதும் விரும்பு கின்ற ஒரு பொருளை, அல்லது ஒரு நபரை, நம் விருப்பத்திற்கேற்ப பல்வேறு வகை யான அடைமொழிகளால் அழைத்து மகிழ்வதைப்போல, மன்னுயிர் காக்கும் அன்னையாம் அம்மனை, "இலுப்பையடி ஆத்தா", "அரசாத்தா", "முத்துமாரி யாத்தா", கருமாரி , அபிராமி என்றெல் லாம் மக்கள் அழைத்து மகிழ்கின்றனர்.

**அன்பரின் அருட்பணிகள்**

பழங்குடி மரபில் பின்பற்றிவந்த, உயிர்களை வதைக்கும் மிருகபலி, வேள்வி ஆகியனவற்றை முற்றிலும் நிறுத்திய தோடு, அம்மனுக்கு புனராவர்த்தனம் செய் யும் எண்ணத்தோடு இரண்டு அரசவிருட் சங்களையும் தறித்து, அன்பர்களிடத்தும், அடியார்களிடத்தும் பணம் திரட்டி 1972ல் குடமுழுக்குச் செய்ததோடன்றி, அம்மன் அருள்வாக்கினால் அலங்கார விழா எடுத்ததோடு, விழாவின் இறுதி நாளின் இரவில் பாட்டும் கூத்தும் நிகழ் வித்துப் பழந் தமிழர்களின் கலைகளைப் போற்றிப் பாதுகாக்கும் சிறந்த பணியைத் தொடங்கியவர்கள் அமரர் திரு. கந்தர். சிவ லிங்கம் அவர்களும் அவர்களுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்களும் ஆவர். அச்சான்றோர்களின் செயல் மிகவும் காலத்தால் பதிவு செய்யக் கூடியது, பாராட்டிற்குரியது. இவர்களது இச்செயல் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலின் வரலாற்றில் ஒரு திருப்புமுனை யாகவும் அமைந்துள்ளது. இப்பெருமை மிகு கோயிலின் கட்டிடத்தைக் கட்டி யமைத்த பெருமை, கோவிலின் மூத்த தர்மகத்தாவாகத் திகழ்ந்த, அமரர் திரு. க.சிவலிங்கம் அவர்களையே சாரும். அவர்களது பணியைத் தொடர்ந்து கோயிலின் மூலஸ்தானத்தை (மூலவரை), வைரக்கற்களால் அணி செய்த பெருமைக் குரியவர் இன்று இக்கோயிலின் திருப் பணியைப் பெரும்பணியாகக் கொண்டு செயல்பட்டுவரும் "சிந்தனைச் செம்மல்", எல்லாவிடயங்களையும் ஆராய்ந்து ஆழ் கருத்து நோக்கிச் செயல்படும் சிறப்பு மிகு ஆத்மநண்பர் திருமிகு நவரத்தினம் கணேஸ்வரன், அவர்களது தந்தையார் ஆசிரியப்பணிக்கும் பெருமை சேர்த்த அமரர் திரு மயில்வாகனம் நவரத்தினம் அவர்கள் என்பது குறிப்பிடத்தக்க ஒரு நற் செய்தி.

**திருமதி சிவலிங்கமும், மற்றைய அறங் காவலர்களதும் ஒத்துழைப்பும்**

மேலும் அமரர் திரு சிவலிங்கனாரின் மனைவி இராசலட்சுமியம்மாளும், அவர்தம் செல்வர் நால்வரும் வழங்கிய பரி பூரண ஒத்துழைப்புடனும், ஆசியுடனும் ஆற்றிவரும் அரும்பணி அளவிடற்கரியது. ஆயுட்காலப்பணியாக திரு.கணேஸ்வரன் ஆற்றிவரும் இப்பணிக்கு, பல்வேறு கோணங்களில் பலதரப்பட்ட சேவை களையும், ஒத்தாசைகளையும் வழங்கி வரும் அறங்காவலரில் ஒருவராகிய அமரர் திரு. கந்தர்.சிவலிங்கம் அவர்களின் புதல்வன் திரு.சி.கலைவாணன், பொருளாளர் திரு.அ.சர்வசுப்பிரமணியம், சேகரிக்கப்பட்ட நன்கொடை நிதியினை திரட்ட உதவிய அறங்காவலர் திரு.சி. கலையரசன், சகல வழிகளிலும் ஒரே மன தாகப் பாடுபடும் மற்றைய அறங் காவலர்கள் திருசி.இரகு, திருசி.ரூபன் ஆகியோருடைய பணிகளும் அவர்களின் இத் திருக்கோயில் பொதுவுடமை என்ற எண்ணங்களும் போற்றற்குரியவை.

**திருப்பணிச் சபை உறுப்பினர்கள் ஒத்துழைப்பும், அம்பாள் அடியார் உள்ளங்களும்.**

எல்லாவற்றிற்கும் மேலாக அம்மை அடியவர்கள் ஒரே மனதாய் தொண்டுப் பணிக்கு அன்பளிப்பினை அள்ளித் தந்த, தருகின்ற செயல், அம்மையின் ஈடு இணை யற்ற சக்தியின் மகிமைக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றது.

புலம்பெயர்ந்து வாழும் பிரான்ஸ் நாட்டில், திரு கணேஸ்வரனுடன் தன்னலம் கருதாது தொண்டுள்ளங் கொண்டு செயலாற்றிவரும், அறங் காவலர்கள், திருப்பணி அடியார்கள் திரு.சி.கலையரசன், திரு.சி.கலைவாணன், திரு.தே.முருகானந்தசிவம், திரு.க.கம லேஸ்வரன், திரு.ஆ.வர்ணகுலசிங்கம், திரு.சத்தியமூர்த்தி போன்றோரின் பரிபூரண செயற்பாடுகள் கோயிலின் திருப்பணிக்குப் பெருமளவில் சிறப்புச் சேர்த்துள்ளன. இக்குழுவினர் தமிழகத்தி லுள்ள கட்டிடக்கலை வல்லுனர்களைக் கொண்டு அழகியதொரு கண்கவர் கோபுரத்தையும், அரிய சிற்பங்களையும், வண்ணத் சித்திரத்தேரையும், மணி மண்ட பங்களையும் உருவாக்கிக் கோயிலுக்குப் பெருமை சேர்த்து மகிழ்ந்தனர்.

இப்படியான வரலாற்றுச் சிறப்பு மிக்க வட்டூர் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் புகழ்மிக்கதொரு கோயிலாகத் திகழ, தமிழர்களின் பண்பட்ட சமய வழிபாட்டிற்கு ஒரு கலங்கரைவிளக்காகத் திகழ, அருமை நண்பனார் திரு.கணேஸ் வரனும் அவர்தம் பரிபாலனக் குழுவும் செய்துவரும் அரும்பணிகள் மேலும் மேலும் சிறப்புற்றுத் திகழ உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வட்டூர், வீயோடை ஸ்ரீ முத்துமாரியம்மன் பாமாலை

பேராசிரியர், கலாநிதி கு.வே.பாலசுப்பிரமணியன், M.A., M.Phil., Ph.D
துறைத்தலைவர், இலக்கியத்துறை(மேனாள்),
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், தமிழ்நாடு.

*1*

கண்ணீரின் ஒருதுளிபோற் கடல் நடுவே கிடக்குமொரு
கலைநிலவாம் ஈழத் தீவே!
கதைகதையாய்த் துயரங்கள் கணக்கிலவே கண்டதொரு
காலமிதில் கசங்கும் பூவே!

மண்ணுலகிற் பலதேயம் விரைந்தோடிச் சிதறுண்ட
மாத்தமிழர் கனவு நிழலே!
மாரியெனும் தாயவளை மறக்காமல் வழிபடற்கு
வளர்கோவில் கண்ட நிலமே!

எண்ணாத பலநினைவும் ஏக்கமெனும் தொட்டிலிலே
இருந்தசையும் தாயின் மனையே!
ஈழத்தில் விளக்கேற்றும் இலுப்பையடி ஆத்தாளே
ஈசனுக்கே சமமாம் தேவி!

வண்ணமுற யாழ்ப்பாண வட்டுக்கோட்டை யென்கின்ற
வளர்நிலமே நின்ற மாரீ!
வாழ்வுன்றன் மக்களுக்கு வழங்கியருள் பாலிக்க
வந்தருள் நீ இந்த நாளே!

**2**

சிந்து - கலை வட்டூர் உன் வீடு; சிங்காரத் திருக்கோயில்
தேரோடும் வீதி யுண்டு
செகமுழுதும் உனது புகழ் செப்புமொரு தமிழினம் நின்
சேவடியை வணங்க லுண்டு

கந்தமெழு தீவினிலே காலமெழு நூறாண்டு
கண்டதொரு கோயி லின்று
கண்கவர மனம் கவரக் கலையெழில்சேர் அற்புதமாய்க்
காட்சி தரும் பெருமை கொண்டு.

இந்த இடம் வீயோடை என்னுமொரு வளைவருகே
இலுப்பையடிச் சுவட்டின் பக்கம்
ஏற்றதொரு அரசடியின் ஏகாந்த நிழலதனில்
என்னம்மை அழகாய் நிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்தநிலை உற்றவுன்றன் மைந்தரெலாம் பெற்றதுயர்
விலக அருள் செய்க தாயே!
வாழ்வுன்றன் மக்களுக்கு வழங்கி யருள் பாலிக்க
வந்தருள்நீ இந்த நாளே!

3

அம்மைநின்றன் பொன்னடிகள் அகலாத திருமனத்தார்
அறங்காவல் பூண்ட செம்மல்
ஆம் கந்தர் சிவலிங்கம் அவர் செய்த நற்றொண்டால்
ஆருயிரை வதைப்ப திலையே!

வெம்மையுற விலங்குபலி வேட்கின்ற வழக்கத்தை
விலக்கியதோர் அருள றத்தால்
மலர்ந்தெங்கும் சைவநெறி மணம்பரப்பச் செய்திடவே
மாரியருள் பெருகு நிலையே!

மம்மரறு மாரியவள் வளர் கருணை போற்றுகின்ற
வான்மேகக் கொடை மனத்தார்
மயில்வாகனப்பேரார் நவரத்தினச் சான்றோரின்
மனம் போலத்தாய்குளிர்ந்தாள்!

வம்மினங்கே வழிபடவே வழக்கமுற என்பதனால்
மக்களுளம் நிறைந்த தாயே!
வாழ்வுன்றன் மக்களுக்கு வழங்கியருள் பாலிக்க
வந்தருள்நீ இந்த நாளே!

4

அழகுருவாய் அமைந்ததொரு ஐம்பொன்சேர் சிலையதனை
ஆங்காங்கே உற்சவத்தில்
அணிபடவே கொண்டுசெல ஆக்கிவைத்துக் கருமூல
அறையினிலே அருள் பாலிக்கும்

நிலையான திருவுருவம் நேர்ந்த மயில் வாகனரின்
நிறைபணிக்கோர் எல்லையுண்டோ!
நிதியாளும் சிவசுப்பிரமணியனார் நேர்மையெனும்
நெறியாளும் செல்வரன்றோ!

கலைவாணர் அறங்காவல் கடமை பூண்டே ஆற்றுகின்ற
காரியங்கள் கணக்குமுண்டோ!
கலையரசர் சிவரூபர் கருத்துமிகு ரகுவென்பார்
கடமைகளிற் குறைவு முண்டோ!

வலைமீறும் மீன் கண்ணாள் வடிவழகி அம்மையுனை
வாழ்த்தாதார் உலகிலுண்டோ!
வாழ்வுன்றன் மக்களுக்கு வழங்கி யருள் பாலிக்க
வந்தருள்நீ இந்த நாளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

பயிலொளிசேர் நவரத்னப் பெரியாரின் வழித்தோன்றல்
பண்பாடுமிக்க செல்வர்
பிரான்சென்னும் நாடுறையும் பெருமைமிகு கணேசுவரன்
பெருமாட்டி கோயில் செய்தார்

குயில்கூவும் வட்டூரில் கோயிலினை உருவாக்கிக்
குலவுகின்ற மண்டபங்கள்
கொடிமரங்கள் வானோங்கு கோபுரங்கள் சமைத்தாரே!
கூத்துமிகு நிகழுமாறே!

வெயில் விரியும் பங்குனியாம் மலர்திங்கள் உத்தரத்தில்
விழைகின்றகுட முழுக்கே!
மாதேவி கௌமாரி வன்சூலி கொற்றவையாள்
வாராகி மறை முழக்கே!

வயிரமெனும் கற்கொண்ட வரையோங்கு திருக்கோயில்
மாமாரி அருள்க தாயே!
வாழ்வுன்றன் மக்களுக்கு வழங்கி யருள் பாலிக்க
வந்தருள்நீ இந்த நாளே!

6

கங்காளி இலுப்பையடிக் கட்டழகி அரசமரக்
காவலுறை முத்து மாரீ
கைதொழுதோம் கண்பனிக்கக் காலடியில் மெய்கிடக்கக்
கனிந்துருகி நின்றோ மம்மா!

சிங்காரி யாமளையே சீரான நாரணியே
திரிபுரையாம் குமரி யன்னாய்!
தொடர்நோய்கள் படர்துன்பம் தொல்லைதரும்
அல்லலெலாம் துடைத்தருள்நீ ஈழ நாட்டே!

வெங்காள கண்டனையே விழியாலே மயக்குமொரு
வித்தகம்சேர் நட்ட மாடி!
விதிசெய்த சதியெல்லாம் விலகிடவே அருள்பாலி!
வெற்றியருள் ஈழ நாட்டே!

மங்காத சக்தியருள் மாமாரி மங்கலங்கள்
வளரவரும் எங்கள் தாயே!
வாழ்வுன்றன் மக்களுக்கு வழங்கி யருள் பாலிக்க
வந்தருள்நீ இந்த நாளே!

7

தென்னிலங்கைத் திருநாட்டில் தேன் தமிழும் சிவநெறியும்
செழித்தோங்கப் பணி புரிந்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடியநற் செல்வமெலாம் சேவைக்கென் றாக்கிவைத்த
தீந்தமிழர் பலரும் வாழ்வார்!

என்னேயி ஃதென்னேயென் றெண்ணாத பலதுயரம்
இனத்தினையே அழித்த போதும்
இருவிழியிற் புனல்தேக்கி இரும்பாக நெஞ்சுமாக்கி
இயல் கடமை எலாம்பு ரிந்தார்.

அன்னவருள் கணேசுவரன் எனதருமை மேல் மாணாக்கர்
அவர்வேண்டிக் கொண்டவாறே
அம்மையினை வட்டூரின் அழகியுனை ஆராதிக்க
அன்புடனோர் பதிகம் தந்தேன்

வன்ன மணிக் கோவைபல வளர்கமுகக் கழுத்திடையே
வைத்தமக மாயி காக்க
வாழ்வுன்றன் மக்களுக்கு வழங்கி யருள்பாலிக்க
வந்தருள்நீ இந்த நாளே!

8

வல்லசுரர் முரணவிக்க வாளேந்து துர்க்கையெனும்
வளர்கால கண்டி சூலி
வரும் படைகள் நீறாக்க வல்லவளாம் கருமாரி
வந்துன்றன் இனத்தைக் காப்பாய்!

கொல்லயில்வேல் சூடாரின் கொடும்பகையை முடிப்பதற்கே
குறிக்கொண்ட அம்மை நீலி
கோடானு கோடியெனுங் குலம்காக்க நலம்பேண
கொணர்ந்தவரை இங்குச் சேர்ப்பாய்

அல்லிமலர் மெல்லிதழில் அருஞ்சிவப்புக் கோலமிட
அடியவரைக் காத்து நிற்பாய்!
ஆங்காங்கே பலநாட்டில் அயலான பலதிசையில்
அமைந்த தமிழ் இனத்தைக் காப்பாய்!

மல்லரினம் சரிந்துவிழ மாமேரு போலெழுந்த
மகமாயி புட்ப வல்லீ!
வாழ்வுன்றன் மக்களுக்கு வழங்கி யருள் பாலிக்க
வந்தருள்நீ இந்த நாளே!

9

விழியொன்று நோக்கினாலும் வீழும்வெம் பகையென்று
விளம்புமொழி பொய்யோ அன்னாய்!
வெந்நரக வாயிலிடை வெந்துதுயர் வேக்காட்டில்
வேவாரைக் காப்ப திலையோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழிவெட்டி உள்மறைந்து கொடும் பகையிற் சிக்காமல்
குலம்வாழ அருள்வ திலையோ!
கொடுமையெலாம் அகன்றுபின்னர் குலவுகின்ற அமைதியினைக்
கூட்டாமை என்ன நெறியோ!

பழியிங்கே உனக்கென்று பகருமொழி வாராமல்
பார்ப்பதுன்றன் கடமை அலவோ!
பாராண்ட இனமிங்குப் பதைத்தழிந்து போகாமல்
பாலித்தல் நடப்ப திலையோ!

வழியெங்கும் மலர்மாரி வானவர்கள் பூமாரி
மாமாரி கொண்ட நிலையே!
வாழ்வுன்றன் மக்களுக்கு வழங்கியருள் பாலிக்க
வந்தருள்நீ இந்த நாளே!

10

பங்குனிநாள் உத்தரத்தில் பல்லாயி ரங்கோடி
பத்தருனைத் தொழுவார் அம்மா!
பசிதீரப் பிணியகலப் பகைவெல்லப் பலநலம்சேர்
பாதையருள் காட்டு தாயே!

தெங்குயர்ந்த ஈழத்தின் தேமதுரத் தமிழினத்தார்
செய்ததிருக் கோயி லம்மே!
சேருமிடம் இஃதறிந்து தொன்மைமிகு காலத்தே
சேர்ந்தனைநீ வாழி அன்னாய்!

பொங்கிவரும் பெருநிலவு போன்றதிரு முகத்தவளே
பூதலம் போற்றும் காளீ!
பூப்பந்தல் மாக்கோலப் பொன்னரங்க வாயிலிலே
புகழ்சிறக்க எழுந்து வாநீ!

வங்கத்தைத் தாலாட்ட வரிசையுறும் அலைபோல
வாழ்த்திடுவர் உனது தாளே!
வாழ்வுன்றன் மக்களுக்கு வழங்கி யருள் பாலிக்க
வந்தருள்நீ இந்த நாளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோபுர தரிசனம் பாச விமோசனம்

Dr. PL. MUTHAPPAN. M.A., Ph.D.,

"ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே" என்பது மெய்கண்டாரின் திருவாக்கு ஆகும். இறைஉணர்வாளர்களுக்கு உருவமாக, அருவமாக, அருஉருவமாக இறைவன் காட்சி தருகிறான். இம்மூன்று வடிவமாக வேறுபட்டும், ஒன்றுபட்டும் விளங்கும் இறைவனின் இருப்பிடம் திருக்கோயிலாகும். திருக்கோயிலாகிய இறைவனின் இருப்பிடமும் சிவனாகவே கொள்ளத்தக்கதாகும். அதுவே வணங்கத்தக்கதும் ஆகும். கோபுர தரிசனம் கோடிப்புண்ணியம் என்ற வழக்கு இவ்வடிப்படையில் ஏற்பட்டதே ஆகும். ஆலயத்தின் வடிவமைப்பு என்பது வெறும் கட்டிட அமைப்பு மட்டும் அன்று. ஆன்மாவைக் கொண்ட மானிட உடம்பே ஆலயமாகும். மனித உடம்புதான் ஆலய வடிவிற்கு மாதிரி வடிவமாகும். இதனைத் திருமூலர்

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே"

என்ற பாடலின் வழி உறுதி செய்கின்றார். உடம்பில் இதயம் இருக்கும் இடம் உள்பகுதி என்ற நோக்கில் உள்ளம் என்று கூறுவதுண்டு. அந்த உள்பகுதியாகிய உள்ளமே இறைவன் இருக்கும் இடம் என்கிறார் திருமூலர். மற்ற உறுப்புகள் அவ்விறைவன் எழுந்தருளியிருக்கும் ஆலயத்தின் மற்ற பகுதிகள் ஆகும்.

ஐம்பூதங்கள் தோறும் இறைவன் விளங்கினாலும் மண் என்ற பூதத்தில் (பூமியில்) உரிய இடத்தில் ஆலயத்தை அமைத்து வழிபட வேண்டும். இவ்வாலயத்தினைக் கருவறை போன்ற பல வகைப் பாட்டுடன் அமைக்க வேண்டும். கருவறையின் மேலே அமையும் விமானம் என்பது இறைவனின் சூட்சும வடிவமாகும். கருவறையின் உள் அமையும் இறைவன், இறைவியின் திருவுருவம் என்பது ஸ்தூல வடிவமாகும். இவ்விரு வடிவங்களின் கூட்டமைவே கோயில் ஆகின்றது.

கிடந்த நிலையில் உள்ள மனித உடம்பின் தலை போன்று கோயிலின் கருவறை அமைக்கப்படுகிறது. உடம்பின் கழுத்துப் பகுதிபோல் ஆலயத்தின் அர்த்த மண்டபம் அமையவேண்டும். உடம்பின் தோள் பகுதிபோல் ஆலயத்தின் மகா மண்டபம் அமைய வேண்டும். கைகள் போல பிரகார மண்டபம் அமைய வேண்டும். மார்போல் இறைவனின் வாகனம் அல்லது இறைவியின் வாகனம் அமைய வேண்டும். தொப்புள் பகுதி போல பலிபீடம் அமைய வேண்டும். தொப்புளின் முன் உள்ள மூலாதாரப் பகுதிபோன்று கொடிமரம் அமைய வேண்டும்.

கால்கள் போல் முன்னிலையில் அமைக்கப் பெறும் பிரகார மண்டபங்கள் அமைகின்றன. உடம்பின் பாதம் போல ராஜ கோபுரம் அமைய வேண்டும். பாதத்தின் விரல்கள் போல ராஜ கோபுர கலசங்கள் அமைகின்றன. இவ்வாறு ஞானிகள் மனித உடம்பினை ஒத்த ஆலய அமைப்பினைக் கோயிலுக்கு அளித்து இறைவனை அதனுள் இருத்தி மகிழ்ந்துள்ளனர்.

இராஜ கோபுரத்தைக் கண்டவுடனே சிவனடியார்கள் இறைவனை அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவியைக் கண்டதாக மகிழ்ந்து வணங்குவார்கள். இறை அருளின் பாதங்கள் பற்றியோருக்கு, பணிந்தோருக்கு பாசங்கள் நீங்கிவிடும். ராஜகோபுரம் இறை அருளின் பாதமாக விளங்குதால் அதனைக் கண்டவுடன் பாசம் கழிந்து விமோசனம் ஏற்பட்டு விடுகின்றது. எனவே "கோபுர தரிசனம் பாவ விமோசனம்" என்பதை விட "கோபுர தரிசனம் பாச விமோசனம்" என்பதே சரியாகும்.

இறைவனின் திருவடி பாசம் நீக்கத் தக்கது என்பதை ஈசன் "எந்தை இணையடி நீழலே" என்று திருநாவுக்கரசரும், "தும்பிக்கையான் பாதம் தப்பாமல் சார்வார் தமக்கு" என்று ஔவையாரும் "அருண தள பாத பத்மம் அனு தினமே துதிக்க" என்று அருணகிரியாரும் "உன்பாத நிழல் அல்லால் மற்றோர் உயிர்ப்பிடம் காண்கிலேன்" என்று நம்மாழ்வாரும் பிறரும் இறைவன் திருவடிப் பேற்றினைப் போற்றிப் புகழ்ந்துள்ளார்கள்.

இவ்வாறு மானிட உடம்பினைப் போல் அமைந்த ஆலயத்தின் உள் உள்ள கருவறையில் ஸ்தூல வடிவமான இறைதிருக்கோலம் நின்று அருளை வாரி வழங்குகின்றது. இறைவியாகிய சக்தியை

"நாயகி நான்முகி நாராயணி கை நளின
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதி நச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கி என்று
ஆயகி ஆதி உடையாள் சரணம் அரண் நமக்கே"

எனப் பல நாமங்களில், பல உருவங்களில் கண்டு மகிழ்கிறார் அபிராமிப் பட்டர்.

சக்தியின் திருக்கண்கள் அடியார்களைத் தன் கருணையால் ஈர்த்து அருள் பாலிக்கும் நிலையில் சாந்த நிலையில் அமையும். இருப்பினும் மாரியம்மனாக அமையும் நிலையில் அவளுடைய திருக்கண்களில் சாந்தத்துடன் கூடிய அருளும், வீரமும், எழுச்சியும் நிற்கும். இது தன்னைச் சாரும் அடியார்தம் மலங்களை, குற்றங்களை நீக்க அவள் கொண்ட மறக் கருணை வடிவமாகும். சிந்தாந்த கருத்தின் அடிப்படையில் இந்நிலையை அணுகினால் "மல நீக்கம் சிவப் பேறு" என்பதாக இதனை விளங்கிக் கொள்ளலாம்.

சக்தியாம் அம்மனின் திருமுடியின் பின்புறம் ஒளிவட்டம் காணப்பெறும். "ஓங்காரமே நல் திருவாசி" என்று உண்மை விளக்கம் என்ற சாத்திர நூல் குறிப்பிடுவது போலவும் "சேண் விளங்கு அவிர் ஒளி" என திருமுருகாற்றுப்படை குறிப்பது போலவும் அவ்வொளிவட்டம் இறைஉருவங்களுக்குப் பின் அமைக்கப்படுகிறது. இருளில் ஆழ்ந்து அமிழ்ந்து கிடக்கும் ஆன்மாக்களை அம்மை ஒளிவடிவாக விளங்கி அவற்றை இருளில் இருந்து மீட்கிறாள் என்ற கருத்தே இவ்வகையில் செயல்பட்டுள்ளது.

அம்பிகையின் முக வடிவில் பற்கள் வெளிப்பட்டு நிற்பது குறிக்கத்தக்கதாகும். உமையம்மையாக அம்மை அமைதியுடன் காட்சி தரும் நிலையில் அவளின் பற்கள் வெளித்தெரிவது இல்லை. தனி அம்மனாக மாரியம்மனாக அவள் காட்சி தருகையில் அவளின் முத்துப் பற்கள் வெளிப்பட்டு நிற்கின்றன. தன்னை வணங்கும் அடியார்களின் பாவங்கள் மீது அவள் சினம் கொண்டு அவற்றை மறக் கருணை செய்து உய்விக்கவே அன்னைத் தன் பற்களை வெளிக்காட்டி நிற்கிறாள்.

அன்னையின் திருக்கரங்கள் சங்கு, சக்கரம், தாமரை மொட்டு போன்றவற்றைத் தாங்கியும், அபயமளித்தும், திருவடியைக் காட்டியும் உயிர்களுக்கு உரமளிக்கின்றன.

இறைவியின் திருவடிகள் "யான்" இ "எனது" என்னும் உயிர்களின் ஆணவ நிலையை அடக்குவதாகும். இதனைக் குமரகுருபரர் "யான் எனது என்பது அற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடியாள்" என்று மீனாட்சி அம்மைப் பிள்ளைத்தமிழில் குறிப்பிடுவார்.

இந்து சமய வழிபாட்டு மரபில் சக்தி இன்றிச் சிவம் இல்லை. சிவமின்றிச் சக்தி இல்லை . இறைவன் சிவம் - அவரே முழு முதற்கடவுள். என்றபோதிலும் அவர் அருள் வழங்குகையில் சக்தியின் மூலமா கமே செயல்படுகிறார். இதனைச் சிவஞான சித்தியார்

"இடப்பாக மாதராளொடு இயைந்து உயிர்க்கு
இன்பம் என்றும்
அடைப்பபானாம் அதுவும் முக்தி அளித்திடும்"

என்று குறிப்பிடும். எனவே அருளின் வடிவம் அம்பிகை. மாயையை, குற்றங் களை, மலங்களை நீக்கும் மறக்கருணை வடிவம் மாரியம்மனின் வடிவம். மனம் மறவாது நிமிடந்தோறும் நினைக்கும் வடிவம் வீயோடை மாரியம்மனின் திரு வடிவம். அவ்வடிவத்தை உடம்பினுள் ஏற்றி உள்ளத்தில் உறையச் செய்வோம். ஆலயத்துள் உருவேற்றிக் கருணை வடிவில் உலக மக்கள் காண வழி செய்வோம்.

இந்த இனிய கட்டுரை அன்பின் ஆற்றலால் விளைந்தது. அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ். உலக மெங்கும் எமக்கு அன்புள்ளோர் உண்டு. அவ்வகையில் என்னை இணையவழிச் சந்தித்த(2002) அன்பர் ம. ந. கணேஸ்வரன் ஆவார். இவர் எனது பாடங்களை தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் வாயி லாகக் மேல்ப்பட்டப் படிப்பிற்காகப் படித்து அறிந்தவர்.அவரின் அன்புக்கும் நட்பிற்கும் இணையாய் இக்கட்டுரை வரையப் பெற்றது. அவர் வீயோடை மாரியம்மன் கோயில் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு அப்பணியின் ஆயுட்காலத் தலைவராக இருப்பதை எண்ணி மகிழ்கின்றேன். கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழுதலே என்ற குறளின் இலக்கணமாய் விளங்கும் அவரின் உயர்ந்த பணி சிறப்ப தாகுக. அவருடன் கரம் கோர்த்துள்ள அறங்காவலர்கள், திருப்பணிச் சபை உறுப் பினர்கள் உட்பட அனைத்து உள்ளங் களின் பணியும் சிறப்பதாகுக. மேலும் இப்பணிக்காகப் பணத்தை அள்ளிக் கொடுத்த அடியார்கள், மற்றும் எல்லோர்களின் குடும்பங்களிலும் மகிழ்வு பொங்கி வளம் பெருகவும் அம்மன் அருளுவாள்என்பதுதிண்ணம்.

சுந்தரி எந்தை துணைவிஎன் பாசத் தொடரையெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தி னாள்மகி டன்தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
சுந்தரி கைத்தலத் தாள் என் கருத்தனவே

கருத்தன எந்தைதன் கண்ணன் வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பால் அழும் பிள்ளைக்கு நல்கின் பேரருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமும் செங்கைச் சிலையும் அம்பும்
முருத்தன மூரலும் நீயும் அம் மேவந்தென் முன் நிற்கவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேசமுத்துமாரி

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், M.A., M.Phil., Ph.D.

தேசிய மகாகவி பாரதியாரின் பாடல்களில் பக்திப் பாடல்களும் உண்டு. மேலைத்தேயப் பண்பாடு தமிழ்நாட்டிலே செல்வாக்குப் பெற்ற காலத்தில் தமிழர் பண்பாடு பற்றிய தெளிவை ஊட்டப் பாடியவன் பாரதி. பாட்டுக்கொரு புலவன் பாரதி என்ற சிறப்புப் பெற்றுத் தமிழ் மொழியுணர்வை ஊட்டியவன். இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞனாக நவீன தமிழ்க்கவிதையை இலக்கிய உலகிற்கு அறிமுகம் செய்து வைத்தவன். பாரதி பாடிய தோத்திரப் பாடல்கள் வழிபாட்டுணர்வைப் பரப்பும் தெய்வீகப் பாடல்களாகும். அப்பாடலில் "முத்துமாரி" பற்றிய இரு பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அப்பாடல்களில் பாரதியின் பக்தியுணர்வு வெளிப்படும் பாங்கினையே இக்கட்டுரை எடுத்துரைக்கவுள்ளது.

பாரதி பாடிய முத்துமாரி, தேசமுத்துமாரி என்றும் இருபாடல்களும் ஒரு வழிபாட்டு நிலையை உணர்த்தும் பாடல்களாகும். பாரதியினுடைய வாழ்க்கையில் புதுச்சேரியில் வாழ்ந்த காலம் மிகவும் முக்கியமானதாகும். தன்னுடைய சொந்த இடத்திலே வாழ முடியாத நிலையில் இன்னொரு இடத்திலே சென்றுவாழும் போது வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கி நிற்பது இயல்பே. சொந்த மண்ணில் வாழமுடியாத அவல நிலையை எண்ணும் போது அந்த வேதனையைப் போக்க இறைவனிடம் வேண்டுதல் செய்யும் மன இயல்பு மனித இயல்பாகும். பாரதியும் இத்தகையதொரு வேதனையை தீர்க்கவே முத்துமாரியைச் சரண்புகுந்திருந்தான். அதனால் தான் வழிபடும் முத்துமாரியைப் பற்றி அனைவரும் அறிய வேண்டுமென விரும்பினான். எனவே தனது பாடலில் முதலிலேயே முத்துமாரியை "உலகத்து நாயகியே" என விளித்துப்பாடுகிறான்.

"உலகத்து நாயகியே - எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்துமாரி
உன் பாதம் சரண்புகுந்தோம் - எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்துமாரி"

எல்லா உலகங்களுக்கும் நாயகி யான முத்துமாரியின் பாதங்களிலே முழுமையாக அடைக்கலம் புகுந்துவிட்டால் எல்லாத் துன்பங்களிலிருந்தும் விடுதலை பெற்றுவிடலாம் என்ற நம்பிக்கை பாரதியிடம் இருந்தது. இப்பாடல் பாரதியார் புதுச்சேரியில் வாழ்ந்த வீட்டிற்கு அண்மையில் இருந்த முத்துமாரி கோயில் மீது பாடப்பட்டதென்பர். (பாரதி நூற்றிருபத்தைந்தாவது ஆண்டு சிறப்பு விழா வின் போது கட்டுரையாளருக்கும் இத் தலத்தைச் சென்று வழிபடும் பேறு கிடைத்தது.) மிகச் சிறியதொரு கோயிலாக இருந்தாலும் பாரதியின் மனமாற வழிபாடு செய்ய ஏற்ற கோயிலாக இருந்தது. "முத்துமாரி" என்னும் பாடலில் முத்துமாரி என்ற சொல் பாரதியால் 32முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. முத்துமாரி என்ற சொல்லைச் சொல்கின்றபோது ஒரு மந்திரத்தை உச்சரிக்கின்ற உணர்வைப் பாரதி பெற்றிருப்பான் போலும். மிக அன்னியோன்யமாக "எங்கள் முத்துமாரி" என்றே பாரதி அழைத்துப் பாடுகிறான்.

மனித வாழ்வியலின் குறைகளையெல்லாம் பாடலிலே சொல்லிக் காட்டுகிறான். தனது வாழ்க்கையில் பெற்ற அநுபவங்கள் பாரதிக்கு ஒரு தெளிவான சிந்தனையை ஏற்படுத்தியுள்ளது. கலகத்து அரக்கர், பலகற்றும் கேட்டும் பயனற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை, நிலையெங்கும் காணாமை, மனம் வெளுக்க வழியின்மை, பேதமை போன்ற மனித இயல்பான நிலைகளையெல்லாம் பாடலிலே சொல்லி முத்துமாரியிடம் மன்றாடுகிறான்.

"நிலையெங்கும் காணவில்லை எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்துமாரி
நின் பாதம் சரண் புகுந்தோம் எங்கள் முத்து ,
மாரியம்மா எங்கள் முத்துமாரி"

எல்லா சிக்கல்களையும் முத்துமாரி தீர்த்து வைப்பாள் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் ஏற்பட வேண்டுமெனப் பாரதி விரும்பினான். மனத்துள்ளே புகுந்துள்ள தீய எண்ணங்களை ஒழிப்பதற்கு வழி பாட்டுப் பயிற்சி ஒன்றுதேவை. இந்தியாவிலே அந்நிய மொழியும் அந்நிய மதமும் செல்வாக்குப் பெறும் வேளையில் சுதேசிகள் தமது மொழியையும் மதத்தையும் கைவிட்டு அவற்றைக் கடைப்பிடிக்க விரும்பினர். இதனைப் பாரதி தடுக்க எண்ணினான். "கலகத்தரக்கர்" என்று அவற்றைக் குறிப்பிட்டுள்ளான். தவறான வழியிலே செல்லும் மக்களை நெறிப்படுத்தப் பாரதி செய்த முயற்சிகள் பல. பலவற்றைக் கற்றும் பலவற்றைக் கேட்டும் எந்தவிதமான பயனும் ஏற்படவில்லை. மனத்தைத் தெளிவுபடுத்த வழியில்லை. பிணிக்கு மருந்து இருந்தபோதும் எங்கள் பேதமைக் குணம் மாற மருந்தில்லையே என மாரியிடம் பாரதி முறையிடுகிறான். எனவே அடைக்கலம் புகுந்து விடுவதாகக் கூறுகிறான்.

வழிபாட்டு நிலையில் மாரியைப் பற்றிப் பாரதி சிந்திக்கும்போது அவளை உலகத்து நாயகியாகக் காண்பது, அவனுடைய வழிபாட்டு நிலையின் தனித்துவத்தைக் காட்டுகிறது. "ஞானபூமி" என்னும் பத்திரிகையில் உலகெங்கும் மாரி என்ற சக்தியின் நாமம் துலங்குகிறது. என பாரதி ஒரு கட்டுரை எழுதியுள்ளான். அதில் கீழ்க்காணும் பகுதி மாரி வழிபாட்டைப் பாரதி ஓர் உலக வழிபாடாக எண்ணியதை விளக்குகிறது.

"உதாரணமாக கிறீஸ்த்து நாதரின் மாதாவுக்கு மாரி என்று பெயர். (இதனை ஆங்கிலேயர் "மேரி" என்று பிழையாக உச்சரிக்கிறார்கள்) இந்த மாரி என்னும் பெயர் பலஸ்தீனா தேசத்தில் கிறிஸ்து பிறப்பதற்குமுன் எத்தனையோ நூற்றாண்டுகளாக வழங்கி வந்தது.

அங்கு மாத்திரமன்று. அங்கிருந்து வடக்கே நெடுந்தூரம் கருங்கடல் வரையும் உள்ள நிலமுழுவதிலும் மிகவும் பழமைக்காலங்களிலே மாரி என்பதோர் தெய்வப் பெயர் வழங்கிற்று. கருங்கடலுக்கும் தர்தாநெல் (இங்கிலிசில் டார்டானெல்ஸ்) ஜலசந்திக்கு மிடையே (ஸங்கரியுஸ் என்று கிரேக்க பாஷையில் சொல்லப்படும் சங்கரி நதிக் கரையில் முற்காலத்தில் பிஸ்கேனு (PISCENUS) என்றதோர் பெரிய நகரமிருந்தது. அங்கு பெருங்கோயிலொன்று கட்டி மாரியம்மா என்ற தெய்வத்தை வணங்கினார்கள்.

அதற்கருகே மாரியாந்தினி என்றோர் நகரம் இருந்தது. இந்த மாரியை உலகத்தின் தாயென்றும் எல்லாத் தேவர்களுக்கும் ஆதாரமான மகாசக்தியென்றும் அந்நாட்டிலும் சுற்று வட்டங்களிலுமுள்ளோர் கொண்டாடினார்கள். இயற்கைத் தெய்வமே மகாசக்தி என்று சொல்லப்படுகின்றது. அதனையே பூர்வகாலத்தில் பல்வேறு தேசத்தார் பல பெயர் கூறி ஈசிஸ் (ஈசி) என்றும் மாரியென்றும் துர்க்கையென்றும் வணங்கி வந்தார்கள்.

இக்கட்டுரை பாரதியின் "தேச முத்துமாரி" என்ற பாடலின் உருவாக்கத்திற்கான காரணத்தைக் காட்டுகிறது. இப் பாடல் பாரதி வழிபாட்டுணர்வின் தன்மையை நன்கு விளக்குகிறது.

"தேடியுனைச் சரணடைந்தேன் முத்துமாரி
கேடதனை நீக்கிடுவாய் கேட்ட வரந்தருவாய்
பாடியுனைச் சரணடைந்தேன் பாசமெல்லாங்
களைவாய்
கோடி நலஞ் செய்திடுவாய் குறைகளெல்லாந்
தீர்ப்பாய்."

தேசத்தைக் காக்கும் முத்துமாரியைத் "தேசமுத்துமாரி" எனப்பாரதி குறிப்பிடுவது வழிபாட்டின் வளர்ச்சி நிலையைக் காட்டுகிறது. வீட்டுநிலை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகநிலை, நாட்டுநிலையென வழிபாடு பரவலாக்கம் பெற்றது. தனியொருவரிடம் தோன்றும் பக்தியுணர்வு கோவில் வழிபாட்டுநிலையாகி, சமூகத்தவரிடம் பரவி, நாடெங்குமே பரவி விடுகிறது. பாரதி முத்துமாரி வழிபாட்டைப் புதிய தொரு நிலையில் கடைப்பிடிக்கப் பயிற்று கிறான். பாசத்தைக் களைந்து விட்டால் பல்வேறு துன்பங்களிருந்து தப்பலாம். கோடி நலங்கள் பெறலாம். குறையின்றி வாழலாம். வழிபாட்டின் உன்னதமான பயன் இதுவே. தன்னுடைய பக்தி நிலையைப் பற்றிக் கூறம்போது வருமாறு கூறுகிறான்.

"சக்தியென்று நேரமெல்லாந் தமிழ்க் கவிதை பாடி
பக்தியுடன் போற்றி நின்றால் பயமனைத்தும் தீரும்"

வாழ்கையில் எதிர்கொள்ளும் பயத்தைப் போக்க வழிபாடே சிறந்தது என்பதே பாரதியின் முடிவு. இதனை அவன் பாடிய எல்லாப் பக்திப்பாடல் களிலும் அடிநாதமாக அமைந்துள்ளான். பக்தியுடையவர் எதற்கும் பதறமாட்டார் கள். மிகுந்த பொறுமையுடன் காரியம் செய்வார்கள். சக்திமீது தமிழிற் கவிதை பாடி வழிபாடு செய்தால் எல்லாமே கிடைக்கும் தேசமுத்துமாரியின் தெய்வத்தை வருமாறு பாடியுள்ளார்.

"ஆதாரம் சக்தி யென்றே அருமறைகள் கூறும்
யாதானுந் தொழில் புரிவோம் யாதுமவள் தொழிலாம்
துன்பமே இயற்கையெனும் சொல்லை மறந்திடுவோம்
இன்பமே வேண்டி நிற்போம் யாவுமவள் தருவாள்
நம்பினோர் கெடுவதில்லை நான்கு மறைத் தீர்ப்பு
அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாம்"

இவ்வடிகளில் பாரதி காட்டும் பக்தி நெறியும், தெய்வீக உணர்வும் பாமர மக்களும் விளங்கிக்கொள்ளக் கூடியவை. நான்கு வேதங்களும் எல்லாவற்றுக்கும் ஆதாரம் சக்தியென்றே கூறுகின்றன. பாரதி காட்டிய சமத்துவ நிலையான பக்தி நெறி போற்றுதற்குரியது. நாம் செய்கின்ற தொழிலிலே எந்தவிதமான வேறுபாடும் கிடையாது. எல்லாமே தேசமுத்துமாரியின் அருளால் பெற்றவை என எண்ணும் மனப்பக்குவம் எல்லோரிடமும் இருக்க வேண்டும். இத்தகைய எண்ணம் தொழிலால் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளையும் முரண்பட்ட எண்ணங்களையும் நீக்கி விடும். எல்லோரும் ஒரு குலம், எல்லோரும் ஓர் இனம் என்ற உயர்ந்த கோட்பாட்டை உருவாக்கும். பாரதி வாழ்ந்த காலத்தில் இந்தியாவிலிருந்த மேலைத் தேயக் கலாசாரம் காட்டிய தொழில் நிலையான ஏற்றத்தாழ்வுகளைப் பாரதி ஆன்மீக நிலையில் நின்று விளக்குகிறான்.

உலக வாழ்க்கை துன்பமானது என்ற நினைப்பு அகலப் பாரதி சொல்லும் வழியே உகந்தது. இன்பத்தையே நாம் என்றும் எதிர்கொள்ள விரும்பினால் முத்துமாரியிடம் சரண்புகுதலே சிறந்தது. அதற்கான நம்பிக்கை ஒன்றை மனதிலே வளர்த்துக்கொள்ள வேண்டும். நம்பியவர்கள் என்றுமே கெடுதலுக்கு ஆளானதில்லை. அம்பிகையிடம் அடைக்கலம் புகுந்தால் யாவற்றையும் அவள் தருவாள் என்ற நம்பிக்கையை பாரதி பாடலின் மூலம் ஊட்டுகிறான். பாரதியின் இந்த வழிகாட்டல் உலகத்து மக்கள் அனைவருக்குமே பொருத்தமானது. நம்மை நல்வழிப்படுத்த ஒரு சக்தி உண்டு என்பது மனித மனங்களை ஆறுதல் படுத்தும். மக்கள் கவிஞனான பாரதியின் பாட்டு மக்களிடையே நிலவிவந்த முத்துமாரி பற்றிய வழிபாட்டு நம்பிக்கையை மீண்டும் கிளர்ந்தெழச் செய்யும் அற்புதமான பாட்டாகும்.

பாரதி புதுச்சேரியிலே வாழ்கின்ற காலத்தில் மகான் அரவிந்தருடன் தொடர்பு கொண்டிருந்தான். அதனால் சக்தி வழிபாட்டிலே மிகுந்த ஈடுபாடு கொண்டான். சர்வம் சக்தி மயம் என்பதே பாரதியின் நம்பிக்கையாக இருந்தது. அவன் சக்தி பற்றிப் பாடிய பாடல்களில் இந்நம்பிக்கை இழையோடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை பாரசக்தியை எல்லோரும் வணங்கினால் எல்லாவற்றையும் பெறலா மெனப் பாடியுள்ளான்.

"அன்னை வடிவமடா! இவள்
ஆதி பாராசக்தி தேவியடா – இவள்
இன்னருள் வேண்டுமடா – பின்னர்
யாவும் உலகில் வசப்பட்டுப் போகுமடா"

என்று எல்லையற்ற நம்பிக்கையோடும் பாடும் பாரதியின் பக்தியுணர்வு உலகு தழுவியதாக உள்ளது. தாய்த்தெய்வ வழிபாடு உலகப் பொதுமையானதொரு வழிபாடாகும். ஆனால் முத்துமாரி வழி பாடு பொதுமக்கள் வயப்பட்ட வழிபா டாக இருந்தமையால் பாரதி அதைச் சிறப்பித்துப் பாடியுள்ளான்.

பாரதிக்கு முன்னர் முத்துமாரி அம்மன் பற்றிய மக்களுடைய வழி பாட்டுச் சிந்தனைகள் காத்தான் கூத்துப் பாடல்களிலே பதிவு செய்யப்பட்டுள்ளன. இதைவிட அம்மன் கதைகூறும் குளிர்த்திப் பாடல்களும் உள்ளன. இவை நாட்டுப்புற பாடல்களாக மக்களிடையே பரவலாக்கம் பெற்றிருந்தன. இப்பாடல்களின் குறிப்பின் படி முத்துமாரி சிவனின் மைத்துனியாக வணங்கப்பட்டாள். காத்தான் கூத்துப் பாடல்களில் முத்துமாரி சிவனை "அத்தார்" என்றே அழைக்கின்றாள். அத்துடன் சின்னமுத்து, பொக்குளிப்பான், அம்மை போன்ற நோய்களை ஏவி விடுவதும், அவற்றை நீக்குவதும் ஆகிய ஆற்றல் பெற்றவளாகவும் பேசப்படுகி றாள். பொங்கல் மடை செய்வதன் மூலம் நோய் நீக்கம் பெறலாம் என்ற நம்பிக்கை யும் பொதுமக்களிடையே நிலவியது. இன்னும் முத்துமாரி இரக்கம் உள்ள அன்னையாக மட்டுமன்றி தீமைகள் செய் வோரைத் தண்டிக்கும் சீற்றம்கொண்ட வளாகவும் விளங்கினாள். அவளை உரியவாறு மடைபோட்டு வணங்கினால் கோபம் தீர்ந்து மகிழ்வாள். வேண்டு கோளை நிறைவேற்றுவாள். அதிக வரங்க ளைக் கொடுப்பாள் என்னும் பண்பாட்டு மரபும் தோன்றியிருந்தது.

ஆனால் பாரதியின் இரு பாடல் களிலும் பேசப்படும் முத்துமாரி உலகத்து நாயகியாக விளங்குகிறாள். இறை வனையே உலகத்து முதல்வன் என்று பேசப்படும் சமயமரபைப் பாரதி மாற்றிய மைத்துள்ளான். முத்துமாரியை உலக நாயகியாக தேசமுத்துமாரியாகவே கருதிப் பாடியுள்ளான். உலகத்து மக்கள் அனை வரதும் சார்பாக முத்துமாரியிடம் பேசும் பிரதிநிதியாக விளங்குகிறான். மனித மனங் களின் மனங்களிலே படிந்த அழுக்கைப் போக்குவதற்கு முத்துமாரியே அருள வேண்டும் என விண்ணப்பம் விடுத்துள் ளான். மனிதனுடைய மனதிலுள்ள மாசு கள் அவனுடைய வளர்ச்சிக்கு இடையூறு செய்பவை எனவே அவற்றையே முதலில் களையவேண்டும். இதுவே பாரதியின் பக்தி நெறியின் இலக்காக இருந்தது.

"மாரி" என்ற சொல் மழையைக் குறிப்பதாகும். உலகத்திலே மாரி இல்லா விட்டால் எந்த வளமுமே இருக்காது. மழையின் சிறப்பு பற்றி வள்ளுவர் ஓர் அதிகாரமே அமைத்துள்ளார். மழை பெய்யாவிடில் உலகிலே பசுமையைக் காணமுடியாது. மழை பொழியா விட்டால் நெடிய கடலும் வளங்குன்றும். மழை இல்லாவிட்டால் இவ்வுலகில் தேவர் களுக்கும் பூசை நடவாது. உலகத்தில் தரும மும் தவமும் நடைபெறாது. நீரில்லாமல் உலகமே இயங்காது. அதனால் மழையை "மாரி" என்ற பெயரில் வழிபட்டு வணங்கும் மரபு தோன்றியது. மழையால் உலகிலே விளைபொருட்கு மூலமான கருவளம் ஏற்படுகிறது. அந்தக் கருவளம் பெண்ணிடமும் காணப்பட்டது. எனவே மழையை மாரியாகப் பெண் தெய்வமாக பாவனை செய்து வழிபாடு செய்வது சாத்தியமாயிற்று.

இத்தகைய வழிபாட்டில் வேப்ப மரம் குறியீடாக அமைந்தது. அம்மரத்தின் பிணி தீர்க்கும் பண்புகள் மாரியின் அருட் பண்புகளாக அமையவே வேப்பமரத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையே முத்துமாரித் தெய்வமாகக் கருதி வழிபாடுசெய்யும் புதியமரபும் தோன்றியது. வழிபாட்டுடன் ஆடல், பாடல், கும்மி, கரகம், காவடி போன்ற கலைகளும் இணைந்துகொண்டன. உடுக்கு அம்மனுக்கு இசைந்த இசைக்கருவியாகிற்று. மடையிட்டுப் பொங்கல் விழாச் செய்யும் போது உடுக்கு அடித்துப் பாடும் பண்பாடும் தொடரலாயிற்று.

நோய் நீக்கம் வேண்டி குளிர்த்திப் பாடல்கள் மாரியம்மன் மீது பாடப்பட்டன. முத்துமாரியின் நோய்நீக்கும் சிறப்பு நிவேதனமாக "தயிர்ப்படையல்" இடம் பெற்றது. கிராமப்புறங்களிலே இந் நிவேதனத்தைத் "தயிர்ப்பாளயம்" என்றழைப்பர். மக்கள் கவிஞனான பாரதி முத்துமாரியை மக்கட்சார்புடைய தெய்வமாக அறிமுகம் செய்து தேசமுத்துமாரியாக எம் முன்னே காட்டுகிறான். இடம்பெயர்ந்து வாழ்ந்த பாரதியின் இன்னல்கள் தீர வழிபட்ட முத்துமாரியை எல்லாத் தேசத்தவரும் வழிபடத் தேசமுத்துமாரியாகப் பாடியுள்ளான். இன்று எம் நாட்டிலிருந்து புலம் பெயர்ந்து வாழும் மக்களுக்கு தேசமுத்து மாரியை வழிபட்டால் யாவும் அவள் தருவாள் என்ற உண்மையையும் அன்றே உணர்த்திச் சென்றுள்ளான்.

பாரதியின் முத்துமாரி பற்றிய இரு பாடல்களும் எளிமையான சொற்களால் பாடப்பட்டுள்ளன. சரண்புகுதல், அடைக்கலம் புகுதல் என்ற இரு தொடர்களைப் பாரதி இப் பாடல்களில் பயன் படுத்தியுள்ளான். "சரண்" என்பது வடசொல். அடைக்கலம் என்பது தமிழ்ச் சொல். பாரதியின் வட மொழிப்பயிற்சியை இதன்மூலம் அறியமுடிகிறது. "சரண்" என்ற சொல் மூன்று தரம் பயன் படுத்தியுள்ளான். அடைக்கலம் என்ற ஒரு தரம் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. "கேட்ட வரம் தரும்" முத்துமாரியின் திருவருட் சிறப்பைப் பாரதி சிறப்பாக எடுத்துக் கூறுவது கவனத்திற்குரியது. அந்த அருள் நிலையை மேலும் வருமாறு அடுக்கிக் கூறியுள்ளான்.

"பாசமெல்லாங் களைவாய்"
"கோடி நலம் செய்திடுவாய்"
"குறைகளெல்லாம் தீர்ப்பாய்"
"கேடதனை நீக்கிடுவாய்"

மனித நிலையிலே தேவையான வற்றையெல்லாம் மேற்காட்டிய அடிகளில் அடக்கிக் காட்டியுள்ள பாவலன் பாரதியின் கவிச்சிறப்புக்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும். மனித வாழ்வு பற்றிய தன்னிலைப்பாட்டை பாரதி வருமாறு காட்டுகிறான்.

"எப்பொழுதும் கவலையிலே இணங்கி
நிற்பான் பாவி
ஒப்பியுன தேவல் செய்வேன் உனதருளால்
வாழ்வேன்"

இதுவே பாரதி தனது வாழ்வியலூடாகப் பெற்ற தெளிவாகும். பாரதி பாடிய முத்துமாரி பற்றிய பாடல்கள் ஒரு வாழ்வியலனுபவத்தினூடாகப் பெற்ற தெளிவாகும். இதுவே பக்தி உணர்வாகும். நான் என்ற அகந்தை அகன்று தனக்கு மேலே ஒருவன் தன்னை எப்போதும் காப்பாற்றுவதற்குக் காத்திருக்கிறான் என்ற திடமான முடிவு ஒன்றின் வயப்பட்டு நிற்பது. இதுவே பக்தியின் கோலமும் நினைப்புமாகும். இந்த பக்திநிலை எல்லோருக்கும் வரவேண்டும் என்பதே பாரதியின் முத்துமாரி பற்றிய பாடல்கள் கூறும் செய்தியாகும். மணிவாசகர் இந்நிலையை "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்று கூறிப்போந்தார். பாரதி அத்தகைய ஒரு அனுபவத்தைப் பெற்றவன். அதனால் தேசமுத்துமாரியை வழிபட வழிகாட்டினான். அதை உலகப் பொதுமையான பக்திநெறியாக்க விரும்பிப்பாடுகிறான்.

"அல்லா! யெஹோவா! எனத்தொழு தன்புறும்
தேவருந்தானாய் திருமகள் பாரதி
உமையெனுந் தேவியர் உகந்தவான்
பொருளாய்
உலகெலாங் காக்கும் ஒருவனைப் போற்றுதல்
இந்நான் கேயிப் பூமியி லெவர்க்கும்"
கடமையெனப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ சக்கர வழிபாடு

**சித்தாந்தஇரத்தினம் டாக்டர் மா. வேதநாதன் M.A, Ph.D.,**
தலைவர். இந்துநாகரிகத்துறை.இணைப்பாளர். சைவசித்தாந்தமுதுகலைமாணி.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## அறிமுகம்

இந்துக்களின் புராதன கணித அறிவியற் புலமைத்துவத்தைப் புலப்படுத்தும் பண்பாட்டுச் சின்னமாக ஸ்ரீ சக்ரம் விளக்குகின்றது. இது சக்தியின் விஞ்ஞானவடிவமாகும். சக்தியின் பஞ்சதசாக்ஷரீ மந்திரவடிவமாக ஸ்ரீ சக்ரம் திகழ்கின்றது. சக்தியின் வடிவமாக விளங்கும் ஸ்ரீசக்கரத்தை வழிபடுதல் ஸ்ரீசக்ரவழிபாடு எனப்படும். சக்திக்கேயுரிய தனிச்சிறப்புடைய வழிபாட்டு முறையாக ஸ்ரீசக்ர வழிபாடு காணப்படுகின்றது. சக்தி வழிபாடு எவ்வளவு புராதனமானதோ அதேயளவு தொன்மையுடையதாக ஸ்ரீசக்ரவழிபாடு விளங்குகின்றது. இந்துக்கள் தொன்றுதொட்டு சக்தியின் சின்னமாகவே ஸ்ரீ சக்கரத்தை வழிபட்டு வருகின்றனர். இவ்வகையில் ஸ்ரீசக்ர வழிபாடு சக்தி வழிபாடு ஆகிய இரு வழிபாடுகளும் ஒரே வழிபாட்டைக் குறிக்கும் இரட்டைப் பெயர்களெனலாம். ஸ்ரீசக்ர வழிபாட்டினை ஸ்ரீயந்திரவழிபாடு எனவும் வழங்குவர். இவ்வழிபாட்டினை தாந்திரக முறையில் நிகழும் ஸ்ரீவித்தியோபாசனை என்று கூறுவது சாக்தசமய மரபாகும். சிவன் பாணலிங்கத்தில் விளங்குவது போல விஷ்ணு சாளக் கிராமத்தில் உறைவது போன்று சக்தி ஸ்ரீசக்ரத்தில் எப்பொழுதும் திகழ்கின்றாள். எனவே அருவுருவ நிலையில் நிகழும் அம்பிகையின் வழிபாடே ஸ்ரீசக்ரவழிபாடு எனப்படும். சிவனின் அருவுருவத் திருமேனியாக சிவலிங்கம் விளங்குவது போல சக்தியின் அருவுருவத் திருமேனியாக ஸ்ரீ சக்ரம் மிளிர்கின்றது. யந்திரங்களை உருவம்பெற்ற ஒருவகை விக்கிரகங்களாகக் கொள்ள முடியுமென்ற பேராசிரியர் கைலாசநாதக்குருக்களின் கருத்து இங்கு நோக்கற்பாலதாகும். சிவசக்தியின் வடிவமாக சிவலிங்கம் அமைந்தவாறே சிவசக்தி உருவமாக ஸ்ரீசக்கரமும் அமைத்து விளங்குகின்றது. இந்தியாவில் முகிழ்த்த இச் சக்ரவழிபாடானது, இன்று உலகின் பல பாகங்களிலும் நடைபெறுவது அதன் தனித்துவமான வழிபாட்டுச் சிறப்பை பிரதி பலிப்பதாகவுள்ளது.

## ஸ்ரீ சக்ர வழிபாட்டின் வரலாறு

ஆதிமனிதனின் ஆரம்ப சிந்தனைகள் கோடுகள் மூலமும் வெளிப்படுத்தப்பட்டன. பண்டைய மனிதனின் ஆன்மிக தெய்விக உணர்வுகளை வெளிப்படுத்தும் குறியீடுகளாகக் கோடுகள் விளங்கின. கோடுகள் பல இணைந்தபோது கோணங்கள் உருவாகின. ஆதிமனிதனின் தெய்வீக, ஆன்மிக சிந்தனைகளைச் சுட்டி நின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கோடுகளதும் கோணங்களினதும் வெளிப்பாடாகவே இந்து சமயத்தில் ஸ்ரீசக்ரவழிபாடு தோன்றியிருக்க வேண்டும்.

கண்ணுக்குப் புலனாகாமல் சூக்கும வடிவினதாக விளங்கும் மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை ஆகிய உடலின் ஆறு சக்கரங்களையும் வரிவடிவில் தோற்றம் பெறக்கையாண்ட வழிவகையே கோடுகளால் வரையப்படும் யந்திரத்தின் முதற் தோற்றமாகுமென்று பேராசிரியர் கைலாசநாதக்குருக்கள் குறிப்பிடுவது ஏற்புடைய கருத்தாகும்.

இந்து சமயத்தின் தொன்மையைப் புலப்படுத்தும் சிந்துவெளி நாகரிக காலத்தில் ஸ்ரீ சக்ரவழிபாடு நிலவியதென அறிஞர் குறிப்பிடுகின்றனர். சிந்துவெளிப் பிரதேசங்களில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியின் போது கிடைத்த யோனிக்கற்களும் (Ring Stones) மௌரியர், சுங்கர் காலங்களில் கிடைத்த வட்டத் தகடுகள் (Discs) போன்றனவும் தற்கால சாக்தவழிபாட்டில் இடம்பெறும் சக்ரயந்திர வழிபாட்டின் தொன்மைக்குச் சான்று பகீர்வதாக பனேர்ஜி குறிப்பிடுகின்றார். வேத இலக்கியங்களிலும் யந்திர வழிபாடுபற்றிய குறிப்புகள் ஆங்காங்கு காணப்படுகின்றன.

ஸ்ரீசக்ரவழிபாடு தொடர்பான குறிப்புகளை உபநிடத இலக்கியங்களிலும் கண்டு கொள்ள முடிகின்றன. யந்திரங்கள கோணங்கள் பற்றிய குறிப்புகள் பிருகதாரண்யக உபநிடதத்தில் இடம் பெற்றுள்ளன. யந்திரமும் உடம்பும் ஒன்றே என்ற கருத்தை பாவனோப நிடதம் தெளிவாக விளக்குகின்றது. ஸ்ரீசக்ர பூசை தொடங்குவதற்கு முன்னர் பாவனோப நிடதத்தைப் பாராயணம் செய்வது சாக்தமரபாகும் அறிபவன் அறியப்படு பொருள், அறிவு என்ற மூன்றும் ஒன்றே என்ற அபேதபாவனையே ஸ்ரீ சக்ர வழிபாட்டின் உட்பொருளென்று பாவனோப நிடதம் குறிப்பிடுகின்றது. ஸ்ரீ சக்ரத்தில் நாற்பத்திமூன்று முக்கோணங்கள் காணப்படுகின்றன. நாற்பத்திமூன்று முக்கோணங்களில் தேவி விளங்குகின்றாள் என்பதனை திரிபுரோபநிடதக் குறிப்பாலறிந்து கொள்ள முடிகின்றது.

ஸ்ரீசக்ரவழிபாடு பற்றிய சிந்தனைகள் புராணங்களிலும் இடம் பெற்றுள்ளன. பிரமாண்ட புராணத்தில் வரும் ஸ்ரீசக்ர ராஜநிலயா, மேருநிலயா, சக்ரராஜநிகேதனா, மேருநிலயா, சக்ரராஜநிகேதனா, ஸுமேருமத்யச்ருங்கஸ்த்தா, த்ரிகோணகா த்ரிகோணாந்தாதீபிகா, பிந்துமண்டலவாஸினீ, ஆகிய ஸ்ரீ லலிதாஸஹஸ்ர நாமங்கள் தேவி ஸ்ரீ சக்ரத்தில் உறைந்து விளங்குவதை விளக்கி நிற்கின்றன. ஸ்ரீ பாகவதம் என்ற புராண நூல் ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாளின் காதுகளில் ஸ்ரீசக்ரவடிவமான தோடுகள் விளங்குவதைக் குறிப்பிடுகின்றது. சிவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கள் யந்திர வழிபாட்டிற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்துள்ளன. ஆகமவழிபாட்டு முறையில் யந்திரங் கள் அடியில் வைக்கப்படாத விக்கிரக ங்கள் வழிபடப்படுவதில்லை. யந்திரங் கள் விக்கிரகங்களின் உயிர் என்பது காமிகாமத்தின் கருத்தாகும், கோடுகள் கோணங்கள், புள்ளி, வட்டம், தாமரை போன்ற அமைப்பில் அமையும் யந்திரங்கள் பற்றி அவ்வாகமம் மேலும் குறிப்பிடுகின்றது. இவ்வகையில் ஸ்ரீசக்ரவழிபாட்டிற்குரிய பெரு மையை சிவாகம சிந்தனைகளூ டாகவும் பெறமுடிகின்றது.

சாக்த தந்திரங்கள் ஸ்ரீ சக்ரத்தன் அமைப்பினையும், அதன் வகை களையும், வழிபாட்டு முறைகளையும், வழிபாட்டின் பயனையும், ஸ்ரீசக்ரத் தின் சிறப்புகளையும் சிறப்பாகச் சித்திரிக்கின்றன.

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் தென்னாட்டில் தோன்றிய அத்வைதம் போதித்த ஆதிசங்கர ஸ்ரீ சக்ரவழி பாட்டினை வளர்த்தெடுத்த பெருமைக் குரியவராக விளங்குகின்றார். சௌந் தர்யலஹரி, பிரபஞ்சசாரர் முதலிய அவரது நூல்கள் ஸ்ரீசக்ரத்தின் அமைப் பையும் அதன் சிறப்பையும் குறிப்பிடு கின்றன. ஸ்ரீ சக்ரபூசையினால் தேவி திருப்பியடைகின்றாள் என்பதை அவர ருளிய மந்த்ரமாத்ருத்தவம் என்ற பாடற் பகுதி நன்கு "புலப்படுத்துகின்றது. ஸ்ரீ சக்ர பூசையில் திருப்தியடைப வளுமான ஸ்ரீராஜராஜேஸ்வரியை வணங்குகிறேன் என்ற கருத்தில் அதன் ஒவ்வொரு பாடலிறுதியும் அமைந்து விளங்குகின்றது. ஸ்ரீ சக்ரவழிபாட்டின் சிறப்பையும், அதன் முக்கியத்துவத் தையும் எடுத்துக்காட்டு முகமாக ஆதிசங்கரர் பல சக்தி ஆலயங்களில் ஸ்ரீ சக்கரத்தைப் பிரதிஷ்டை செய்துள் ளார். காஞ்சிகாமாட்சி அம்பாள் ஆலயம், பூந்தமல்லிக் கருகிலுள்ள பிரமராம்பாள் ஆலயம், திருவொற்றி யூர் வட்டப்பறை அம்பாள் ஆலயம், கொல்லூர் மூகாம்பிகை ஆலயம் ஆகிய ஆலயங்களில் ஸ்ரீ சக்ரத்தைப் பிரதிஷ்டை செய்து ஸ்ரீ சக்ரத்தின் தெய்வீக ஆற்றலை ஆதிசங்கரர் வெளிப்படுத்தியுள்ளார். சக்தியின் உக்கிரத்தைக் குறைத்து அவ்வன் னையைச் சாந்தப்படுத்தும் தெய்வீக ஆற்றல் ஸ்ரீசக்ரத்திற்கு உண்டு என்பதை உலகுக்குணர்த்தவே ஆதிசங்கரர் தேவியின் உக்கிர சந்நிதிகளில் ஸ்ரீ சக்ரத்தைப் பிரதிஷ்டை செய்தார். திருவானைக்காவிலுள்ள அகிலாண் டேஸ்வரியின் உக்கிரத்தைக் குறைக்க அந்த அம்மனுக்கு அவர் "தாடங்கப் பிரதிஷ்டை செய்தார். அவ்வன்னை யின் ஒரு காதில் ஸ்ரீ சக்ரமும், மறுகாதில் சிவசக்ரமும் தோடுகளாக விளங்கக் காணலாம்.

ஸ்ரீ சக்ரவழிபாடாற்றும் முறையை தத்தாத்ரேயத் என்பவர் தத்ஸம்ஹிதை (18000 சுலோகங்களைக் கொண்டது) என்ற தனது நூலில் மிகவும் விரிவாக விளக்கியுள்ளார். அவருடைய சீடரான பரசுராமர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவர் அதனைச் சுருக்கி ஆறாயிரம் சூத்திரங்களில் ஒரு நூலை இயற்றினார். பரசுராமருடைய சீரான ஸுமேதஸ் என்பவர் இதனை மேலும் சுருக்கி 'பரசுராமகல்பஸூத்திரம்' என்றோர் நூலை ஆக்கினார். தென்னாட்டிலும், இலங்கையிலும் நடைபெறும் ஸ்ரீ சக்ர பூசை இந்நூலில் கூறப்பட்டுள்ள முறைப்படியே நிகழ்த்தப்படுகின்றது. பாஸ்கரராயருடைய சீடரான உமானந்தநாதர் 1775 இல் இயற்றிய "நித்யோத்ஸவம்" என்ற நூலானது பரசுராம கல்பஸூத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு ஸ்ரீ சக்ரபூசை புரியும் முறைகளை விளக்கி நிற்கின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வங்காளத்தில் வாழ்ந்த ஸ்ரீ ராமகிருஷ்ணர் (1836 - 1886) என்பவர் "சரீரம் ஒரு ஸ்ரீ சக்ரம்" என்பதை வாழ்ந்து காட்டினார். காளிதேவியைக் குலதெய்வமாகக் கொண்ட இவர் குண்டலினி யோக சாதனை மூலம் அளவற்ற ஆன்மீக ஆற்றல் பெற்ற வராகத் திகழ்ந்தார். சக்ரவழிபாட்டிற்கு அடிப்படையாகக் கருதப்படும் உடம்பிலுள்ள ஆறு ஆதாரங்களினூடாகச் சென்று சக்தியைத் தரிசித்த இவர் "அமீயந்திர துமீயந்திரீ" (நான் யந்திரம் நீ யந்திரி) என்று அடிக்கடி கூறுவது குறிப்பிடற்பாலதாகும். இவ்வகையில் உடம்பு ஒரு ஸ்ரீ சக்ர வடிவம் என்பதை வாழ்வின் மூலம் வெளிப்படுத்திய பெருமை இவருக்குண்டு.

## தமிழ் இலக்கியங்களில் ஸ்ரீ சக்ரம்

தமிழிலக்கியங்களிலும் ஸ்ரீ சக்ரம் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. மணிமேகலை என்ற நூல் குறிப்பிடும் "சக்ரவாளக் கோட்டம்" ஸ்ரீ சக்ர வழிபாட்டிற்குரிய கோயிலைக் குறித்து நிற்பதாக நாகஸ்வாமி குறிப்பிடுகின்றார். இதனை ஸ்ரீ சக்ர ராஜ நிலையா என்ற அம்பிகையின் நாமத்தோடு தொடர்புபடுத்த முடியுமென்பது அவரது கருத்தாகும்.

சக்ர வழிபாட்டினை விபரிக்கும் முதல் நூலாக திருமந்திரம் விளங்குகின்றது. இந்நூலானது ஏரொளிச்சக்ரம், சாம்பவிமண்டலச் சக்ரம், புவனாபதிச் சக்ரம், நவாக்கரிச்சக்ரம் முதலான சக்தி சக்கரங்களைச் சிறப்பாக குறிப்பிடுகின்றது.

ஸ்ரீ சக்ரத்தின் நுட்பமான அமைப்பினையும், ஆற்றலையும், அதன் அடிப்படைகளையும் திருமந்திரத்தின் புவனாபதி சங்கரம், நவாக்கிரி சக்கரம் என்பவற்றிலுள்ள பாடற்பகுதிகள் சிறப்பாகச் சித்திரிக்கின்றன. பஞ்சதசாக்ஷரீ மந்திரவடிவமாக ஸ்ரீசக்ரம் திகழ்வதை திருமந்திரத்தின் புவனாபதிச் சக்கரப் பாடலாலறியலாம். ஸ்ரீ சக்ரமஹாமேரு யந்திரத்தில் சக்தி பூசை புரியும் சித்தர்களின் பண்பாட்டினை "நம்முடைய பூசையென்ன மேருப்போலே ஓதப்பா நாற்பத்து முக்கோணம் வைத்தே உத்தமனே பூசை செய்வார் சித்தர்தானே" என்ற சட்டைமுனிச் சித்தரின் பாடல் வரிகளாலறியலாம்.

கி.பி.13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவசித்தாந்த முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாசிரியரான மெய்கண்டதேவர் என்பவர் உடம்பு ஒரு மாயாயந்திர மென்றும், அதன் உள்ளே ஆன்மா உள்ளதென்றும் குறிப்பிடுகின்றார். இதனை அவரின் மாயா இயந்திரதனு வினுள் ஆன்மா என்ற சிவஞானபோத மூன்றாகு சூத்திரத்தாலறியலாம்.

கி.பி. 14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பறச்சந்தானாச்சாரியருள் ஒருவரான உமாபதி சிவாசாரியார் என்பவர் சிதம்பரத்திலுள்ள சிவகாமி அம்பாள் ஆலயத்தின் வடக்குப் பிரகாரத்தில் ஸ்ரீசக்ரம் வரைந்து, அதற்கு முன்பாக அமர்ந்திருந்து ஸ்ரீசக்ர வடிவமாக விளங்கும் ஸ்ரீபஞ்சதசாக்ஷரீ மந்திரத்தை உபாசனை புரிந்துள்ளார்.

அபிராமி அந்தாதியில் வரும் "ஒளி நின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே" என்ற பாடல் வரியானது. சக்தி ஸ்ரீ சக்ரத்தில் திகழ்வதைப் புலப்படுத்துகின்றது. வராகிமாலை என்ற நூல் கூறும் பின்வரும் பாடலானது. ஸ்ரீ சக்கரத்தல் சக்தி வீற்றிருந்து அடியார்களைக் காப்பாற்றும் கருணைத்திறத்தை விளக்கி நிற்கின்றது.

"வீற்றிருப்பா ணவகோணத்திலே
நம்மை வேண்டுமென்று
காத்திருப்பான் கலிவந்தணு
காமலென் கண்கலக்கம்
பார்த்திருப்பாளல்ல வெங்கேயென்
றங்குச பாசங்கையில்
கோத்திருப்பாளிவளே யென்னை
யாளுங்குல தெய்வமே"

இவ்வாறான குறிப்புகள் தமிழர் பண்பாட்டிலும், சைவசித்தாந்த மரபிலும் ஸ்ரீ சக்ர வழிபாடு சிறப்புற்று விளங்கியதைப் புலப்படுத்துகின்றன.

## ஸ்ரீ சக்ரத்தின் அமைப்பு

ஸ்ரீ சக்ரமானது பிந்து, முக்கோணம், எட்டுக்கோணம், இரண்டு பத்துக்கோணம், எட்டுத் தளம், பதினாறுதளம், மூன்று வட்டம், மூன்று கோட்டுபூபுரம், என்பவற்றா லான சக்தியின் புனித வழிபாட்டுச் சின்னமாகும். இதிலுள்ள முக்கோணம், எட்டுக்கோணம், இரண்டு பத்துக் கோணங்கள், பதினான்கு கோணம் என்ற இவ்வைந்தும் சக்தி சக்கரங்கள் எனப்படும். பிந்து, எட்டிதழ்கமலம், பதினாறுகழ்க்கமலம், பூபரம் என்ற நான்கும் சிவசக்ரங்கள் என்று கூறப்ப டும். ஐந்து சக்திசக்ரங்களும் கீழ நோக்கி யும், நான்கு சிவசக்கரங்களும் மேல் நோக்கியும் விளங்குகின்றன. இவ்வாறு ஐந்து சக்தி சக்ரங்களும், நான்கு சிவ சக்ரங்களுமான ஒன்பது சக்ரங்கள் கொண்ட சிவசக்தி ஐந்து வடி வமைப்பை ஸ்ரீ சக்ரமாகும்.

## ஸ்ரீ சக்ரத்தின் மறு பெயர்கள்

ஸ்ரீ சக்ரத்தின் அமைப்பையும், அதன் சிறப்பையும் கருத்திற் கொண்டு, அதனைப் பல பெயர்களால் வழங்குவது சாக்த மரபாகும். அது ஒன்பது சக்ரங்களைக் கொண்டுள்ள தால் நவயோனி சக்ரம் எனப்பெயர் பெறும். நாற்பத்திமூன்று முக்கோணங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுடன் விளங்குவதால் அதனை திரிகத்வரியம் சத்சக்ரம் என அழைப் பர். தேவியின் மாத்ருகா சக்திகள் இதில் அடங்கியிருப்பதால் மாத்ருகாசக்ரம், எனக் கூறுவர். ஸ்ரீ சக்ரத்திற்கு ஆகாச சக்ரம், வியத்சக்ரம், பரமமங்கல சக்ரம், சிவசக்தி ஐக்ய சக்ரம், ஸதானந்த ஸம்பூரம் சக்ரம் என்ற பெயர்களும் உள்ளன.

## ஸ்ரீ சக்ரத்தின் வகைகள்

ஸ்ரீ சக்ரத்தின் அடிப்படை அமசம் ஒன்றேயாயினும் அதன் நிலையினையும், தேவையினையும் பொறுத்து பூப்ரஸ்தார ஸ்ரீ சக்ரயந்திரம், கைலாசப்ரஸ்தார ஸ்ரீ சக்ரயந்திரம், மேருப்ரஸ்தார ஸ்ரீ சக்ரயந்திரம் என மூன்று வகையாக அமைப்பார்கள். இவை முறையே தகடாகத் தட்டை யாகவும், உயரமாகவும் (அர்த்தமேரு), அதைவிட மேலும் உயரமாகவும் (மேரு) அமைந்து விளங்கும். இந்த மூன்று விதமான வித்தியாசங்களும், மந்திரபேதங்களால் ஏற்பட்டன. ஷோடாசாக்ஷரி என்ற மந்திரத்தை அனுசரித்து ஏற்பட்ட ஸ்ரீ சக்ரத்தை மேருப்பிரஸ்தாரம் என்றும் மாத்ருகா வர்ண முறைகளில் ஏற்பட்ட விக்கிர கத்தை கைலாசப் ரஸ்தாரம் என்றும் மாத்ருகாவர்ண முறைகளில் ஏற்பட்ட விக்கிரகத்தை கைலாசப் ரஸ்தாரம் என்றும் வசிநீ முதலான தேவதைகளின் பூஜாக்கிரமத்தை அனுசரித்து ஏற்பட்ட ஸ்ரீ சக்ரத்தை பூப்ரஸ்தாரம் என்றும் குறிப்பிடுகின்றனர்.

## ஸ்ரீ சக்ரத்திற்குப் பயன்படும் பொருட்கள்

ஸ்ரீசக்ரத்தை வெள்ளித் தகட்டி லோ, தங்கத் தகட்டிலோ, பஞ்ச லோகத் தகட்டிலோ, ஸ்படிகத்திலோ, கற்களிலோ அமைந்து வழிபடலாம். பட்டுத்துணிகளிலோ அல்லது பூவரசு போன்ற மரத்தின் இலையில் வரைந்தும் வழிபடலாம்.

## தத்துவம் விளக்கம்

ஸ்ரீ சக்ரத்தின் ஒவ்வொரு உறுப் பும் ஓர் உயர் தத்துவத்தை உட்பொரு ளாகக் கொண்டு திகழ்கின்றது. ஸ்ரீ சக்ரத்திலுள்ள வட்டமானது முதலும் முடிவும் இல்லாத இறைத்தன்மையைச் சுட்டி நிற்கின்றது. அதன் முக்கோண மான படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலையும் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலமென்ற முக்கால அளவுகளையும், விழிப்பு, கனவு, உறக்கம், என்ற மூன்று நிலைகளையும் சத்துவம், ரஜஸ்ம், தமஸ் என்ற மூன்று குணங்களையும் உருவகித்து நிற்கின்ற னது. மேல் நோக்கிய முக்கோணங்கள் வழிபடகின்றவர்களின் உயர்ந்த லட்சியத்தைக் குறித்து நிற்கின்றன. கீழ்நோக்கி இருக்கும் முக்கோணம் பராசக்தியின் அம்சமாகவுள்ளது. ஸ்ரீ சக்கரத்தில் காணப்படும் தாமரை மலர் போன்ற தனங்கள் உயர்ந்த கருத் தாளத்தைக் காட்டி நிற்கின்றது. தாமரை மலருக்கு சூரிய உதயத்தின் போது விரிந்து, சூரிய அஸ்தமத்தின் போது குவியும் தன்மை உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமரை விரிந்து விளங்குவது வழிபடுவோரின் ஆன்மிக உட்சக்தி விரிவடைவதைக் குறிக்கின்றது. வழிபடுவோரின் மனம் அம்பிகையிடம் குவிய வேண்டுமென்பதைக் குவிந்தமாரை குறித்து நின்கின்றது. இவ்வாறான உயரிய தத்துவங்களின் ஸ்ரீ சக்கரத்தில் காணப்படுகின்றன. உள்ளது ஒன்றே பலவாகத் தோன்றுகின்றதெற் தத்துவ சிந்தனையின் சின்னமாக ஸ்ரீசக்ரம் விளங்குகின்றது. ஆரம்பத்தில் தேவி ஒருத்தியே இருந்தாள், அவள் பின்பு ஒன்பது சக்தியானாள் இந்த ஒன்பதுடன் பத்து இந்திரியங்கள், ஐந்து பிராணங்கள், நான்கு கரணங்கள், பஞ்சபூதங்கள், பத்து விஷயங்கள் ஆக நாற்பத்துமூன்று முக்கோணங்களில் விளங்குகின்றாள் என்பதனை தர்புரோ பநிடதம் குறிப்பிடுகின்றது.

ஸ்ரீ சக்ரத்தில் பதினாறுதளம் காணப்படுகின்றது. இது அண்டமானது பதினாறு கோண திசைகளை உடையதாக விளங்குவதையும், பிரண்டமான எமது உடம்பானது இரண்டு கண்கள், இரண்டு காதுகள், இரண்டு கைகள், இரண்டு தொடைகள், இரண்டு கால்கள், தலை, மூக்கு , வாய், கழுத்து, நெஞ்சு, முதுகு என்ற பதினாறு அவயங்களை உடையதாகவும் விளங்குவதனைச் சுட்டி நிற்கின்றது.

**ஸ்ரீ சக்ர பூசை முறை**

ஸ்ரீசக்ரபூசைமுறை தனிச்சிறப்புடையது எல்லோரும் இதனை எளிதாகச் செய்யமுடியாது. ஸ்ரீ சக்ர பூசை புரிவதற்கு தனிப்பயிற்சி வேண்டும். பூசையின் ஆரம்பத்தில் பல அம்சங்களோடு கூடிய பூர்வாங்க பூசை நடைபெறும். அதன் பின்னர் பூபுரம் முதல் பிந்து சக்ரம் ஒன்பது ஆவணங்களின் பூசை நடைபெறும். ஸ்ரீ சக்ர பூசையில் நவாவரணபூசை சிறப்பிடம் பெறுவதால் ஸ்ரீ சக்ர பூசையை நவாவரணபூசை எனவும் வழங்குவர். ஸ்ரீசக்ர பூசை இரண்டு வகையாக நிகழ்த்தப்படும். ஒன்று 'லயக்கிரமம்" எனப்படும் மற்றது "சிருஷ்டிக்கிரமம்" என்று கூறப்படும் ஸ்ரீசக்ரத்தில் நிகழ்த்தப்படும் பஞ்ச பஞ்சிகாபூசை, ஷட்தர்சன பூசை, ஷடாதாரபூசை, என்பன ஸ்ரீசக்ரபூசையின் தனிச்சிறப்பைச் சுட்டி நிற்கின்றன.

நவாவரணபூசை, நிகழ்த்தப்படும் பொழுது ஸ்ரீ பாத்திரம், குருபாத்திரம், போக பாத்திரம், சக்திபாத்திரம், யோகினி பாத்திரம், வீரபாத்தரிம், பலிபாத்திரம் என்ற ஒன்பது வகையான நவபாத்திரங்கள் பயன்படுத்துவது ஸ்ரீ சக்ரபூசைக்குரிய சிறப்பம்சமாகும். ஸ்ரீசக்ரபூசைக்குதிய மேற்படி பாத்திரங்களை ஒழுங்குபடுத்தி அமைக்கும் கிரியை முறையை பாத்திர சாதனம் என வழங்குவர். இப்பாத்திரங்களை ஒவ்வொன்றும் தனி தனி தத்துவத்தைச் சுட்டி நின்கின்றன.

இவ்வகையில் சமயம், தத்தவம், கலை என்ற மூன்றையும் ஒருங்கே புலப்படுத்தும் வழிபாடாக ஸ்ரீ சக்ரபூசை முறைகள் விளங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் ஸ்ரீ சக்ர வழிபாடு

இலங்கையில் தொன்று தொட்டு ஸ்ரீ சக்ர வழிபாடு நிகழ்ந்து வந்துள்ள போதும் அவ்வழிபாட்டின் ஆதிவரலாறு பற்றி அறிந்து கொள்வ தற்குப் போதிய சான்றுகள் இல்லை என்றே கூறலாம். சக்திக்கேயுரிய திருத்தலங்களில் மட்டுமின்றி சிவன், பிள்ளையார், முருகன், பைரவர் முத லிய இந்து ஆலயங்களிலும் இங்கு ஸ்ரீ சக்ர வழிப்பாடு தற்போது நடைபெறு கின்றது.

இலங்கையிலுள்ள மிகப் புரா தன சக்தி ஆலயமாகவும் புவனேஸ்வரி பீடமாகவும் திகழும் நயினாதீவு, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் மிகப் பழைய பூப்ரஸ்தார ஸ்ரீ சக்ரயந்திரம் காணப்படுகின்றது. இவ்வாலய புராதன வரலாற்றுச் செய்திகளைப் புலன்படுத்தும் இவ்வாலய அம்மனின் திருத்தேரிலும் முன்வாயிற் கோபுரத்தி லும் ஸ்ரீ சக்ரம் சித்திரிக்கப்பட்டிருக் கின்றது. இத்தகைய குறிப்புகள் இச் சக்தியாலயத்தில் ஸ்ரீ சக்ர வழிபாடு மிகப் பழமையுடையதென்பதைப் புலப்படுத்துகின்றது. இந்தநூற்றாண் டின் ஆரம்பத்தில் பிரமஸ்ரீ சா. சுவாமிநாதக் குருக்கள் இவ்வாலயத்தில் மீண்டும் ஸ்ரீ சக்ரபூசையை ஆரம்பித்து வைத்தார். இதன் பின்பு சிவ ஸ்ரீ.ஐ. கைலாசநாதக்குருக்கள் ஸ்ரீ சக்ரமஹா மேரு யந்திரத்தை இங்கு பிரதிஷ்டை செய்தார். இச் ஸ்ரீசக்ரம் மகாமண்ட பத்தில் எழுந்தருளி அம்பாள் முன்பாகச் காணப்படுகின்றது. இவ்யந்திரரத் திற்கே ஒவ்வொரு பூரணைங்களிலும் சாரதா நவராத்திரி நாட்களிலும் ஸ்ரீசக்ர வழிபாடு நடைபெறுகின்றது. குண்டலினியோக சாதனை புரிவதற் குரிய சிறந்த தலமாக இவ்வாலயம் விளங்குவது போல அச்சாதனையோடு நெருங்கிய தொடர்புடைய ஸ்ரீ சக்ர உபாசனைக்குரிய கோயிலாகவும் இவ்வாலயம் விளங்குகின்றது.

இலங்கையில் ஸ்ரீ சக்ர வழி பாட்டின் தொன்மையினைச் சுட்டி நிற்கும் சிவத்தலமாக முன்னேஸ்வ ரத்தைக் குறிப்பிடலாம். இது ஒரு புராதன சிவாலயமாக மட்டுமன்றி அறுபத்திநான்கு சக்திபீடங்களுள் ஒன்றாகவும் விளங்குகின்றது. இவ் வாலயக் கருப்பக்கிரகத்தினுள் சிவ லிங்கமும் உலோகத்தாலான வடிவாம் பிகாதேவியின் திருவுருவமும், ஸ்ரீ சக்ரமேருமஹாயந்திரமும் காணப்படு கின்றன. இவ்வாலயத்தை முதன் முதலாகத் தரிசிப்பவர்களுக்கு இவ் வாலயம் ஒரு சிவன் கோவிலா அல்லது அம்பிகையின் ஆலயமாக அல்லது ஸ்ரீ சக்ர சந்நிதியா என்ற மயக்கம் ஏற்படக் கூடிய நிலை உள்ளது.

இப்படியான சிறப்பினை இலங்கையில் வேறு எந்தக் கோவிலும் காணமுடியாது. ஸ்ரீ சக்ரபூசை புரிவதில் மிகவும் புலமைத்துவமுள்ள பிரம்மஸ்ரீ. மு.சோமாஸ்கந்தக் குருக்களின் மேற் பார்வையில் உருவாக்கப்பட்ட ஸ்ரீ சக்ரமேருமஹாயந்திரமே இப்போது இங்குண்டு. வசந்த நவராத்திரி நாட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் இச் ஸ்ரீ சக்ரத்திற்கு நடைபெறும் ஸ்ரீ சக்ரபூசை தனிச்சிறப்புடையது. ஒவ்வொரு மாதப்பூரணை நாட்களிலும் மற்றும் சாரதா நவராத்திரி நாட்களிலும் இச் ஸ்ரீ சக்ரத்திற்கு நடைபெறும் ஸ்ரீ சக்ரபூசை தனிச்சிறப்புடையது ஒவ்வொரு மாதப்பூரணை நாட்களிலும் மற்றும் சாரதா நவராத்திரி தினங்களிலும் இங்கு ஸ்ரீ சக்ர வழிபாடு சிறப்பாக நடைபெறுகின்றது.

இலங்கையில் ஸ்ரீ சக்ர மேரு மஹாயந்திரத்தை மூலமூர்த்தியாகக் கொண்டு விளங்கும் ஒரே ஒரு சக்ர சந்நிதியாக திருநெல்வேலி வாலயம் மன் ஆலயம் விளங்குகின்றது. சுமார் இருநூறு ஆண்டுகள் பழமையுடைய இவ்வாலயத்தினை ஸ்ரீ சக்ர உபாசக ரான நாகப்பர் என்பவர் ஆரம்பித்தார். என அறிய முடிகின்றது. மகோற்சவ விழாக்கள் நடைபெற்று வந்த இவ் வாலயத்தை மேலும் சிறப்புப் பரி பாலனம் செய்வது ஸ்ரீ சக்ர உபாசகர் களது கடமையாகும்.

நல்லூர் சிவன் கோயிலென்று கூறப்படும் ஸ்ரீ கமலாம்பிகா சமேத கைலாசநாதசுவாமி கோவிலிலும் ஸ்ரீ சக்ர வழிபாடு சிறப்பாக நடைபெறு கின்றது. பேராசிரியர் கைலாசநாதக் குருக்களால் பிரதிஷ்டை செய்யப் பட்ட ஸ்ரீ சம்ரமஹாமேருயந்திரம் இவ்வாலய அம்மனின் கருவறைக்குள் காணப்படுகின்றது. இச் ஸ்ரீசக்கரத் திற்குப் பூரணை நாட்களில் மட்டு மன்றி செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களிலும் ஸ்ரீ சக்ர பூசை நடை பெறுவது இலங்கையில் வேறெங்கும் காணமுடியாத காட்சியாகும். சாரதா நவராத்திரி நாட்களில் மந்திர தந்திர வழிபாட்டோடு இங்கு நடைபெறும் ஸ்ரீ சக்ர வழிபாட தனிச்சிறப்புடை யதாகும்.

இலங்கையில் ஸ்ரீ சக்ரமஹா மேருயந்திரத்தில் ஸ்ரீ சக்ர வழிபாடு நடைபெறும் பிற ஸ்ரீ சக்ர சந்நிதிகளாக இணுவில் சிவகாமி அம்பாள் ஆலயம், ஏழாலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம், சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் கோவில், திருகோணமலை சல்லி முத்துமாரி அம்மன் கோவில், திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம், திருநெல் வேலி அரசடி சிவகாமி சுந்தரி அம்பாள் ஆலயம், நல்லூர் பாணான்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம், நாரந் தனை தான்தோன்றீஸ்வரி ஆலயம் மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம், யாழ்ப்பாணம் கன்னா திட்டிக் காளிகோவில், புங்குடுதீவு சிவன்கோவில், அளவெட்டி கும்பழா வளைப் பிள்ளையார் கோவில், வண்ணை வீரமாகாளி அம்மன் கோவில், இணுவில் பைரவர் ஆலயம், இணுவில் கண்ணகாபரமேஸ்வரி ஆலயம், நீர்வேலிக் காளிகோவில், கொழும்பு ஜிந்துப்பிட்டி சிவசுப்பிர மணியர் கோவில், கொழும்பு கொம் பனித் தெரு முருகன் கோவில் என்பன விளங்குகின்றன. கொழும்பிலுள்ள மேற்படி கோவில் இரண்டிலும் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சக்ரம் சிலாவிக்கிரகமாக காணப் படுகின்றன.

இலங்கையில் ஸ்ரீ சக்ர வழி பாட்டை மேன்மேலும் வளர்த் தெடுத்த பெருமைக்குரியவராக பேராசிரியர் கைலாசநாதக்குருக்கள் விளங்குகின்றார். முன்னேஸ்வர ஆல யத்தில் நடைபெற்ற வசந்த நவராத்திரி நாட்களில் பல ஆண்டுகளாக இவராற் றிய ஸ்ரீ சக்ர பூசை தனிச்சிறப்புடையது இந்து ஆலயங்களில் மட்டுமன்றி வீடுகளிலும் ஸ்ரீ சக்ரபூசை புரிந்து வாழும் இந்து மதத்தை வாழ்ந்து காட்டுபவராக அவர் விளங்குகின்றார்.

இவரின் ஸ்ரீ சக்ரபூஜை (ஸ்ரீ வித்யா சபர்யாபத்ததி) என்ற நூலானது ஸ்ரீ சக்ர பூஜையில் அவர் பெற்றிருக்கும் புலமைத்துவத்தையும் அனுபவங் களையும் நன்கு வெளிப்படுத்துகின்றது. கிரந்த எழுத்தில் அமைந்து விளங்கும் இந்நூல் ஸ்ரீ சக்ர பூசை புரிகின்றவர் களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். ஸ்ரீ சக்ர வழிபாட்டை மேன்மேலும் பரப்ப வேண்டுமென்ற எண்ணத்துடன் நயினை சிவஸ்ரீ.ச.மகேஸ்வரக்குருக்கள் இந்நூலை தனது அறுபதாவது ஆண்டு நினைவாக வெளியிடுவது ஸ்ரீ சக்ர வழிபாட்டில் அவருக்கிருக்கும் நம்பிக் கையினை நன்கு புலப்படுத்துகின்றது. இவ்வாறு இலங்கையில் ஸ்ரீ சக்ர வழிபுாட்டின் வளர்ச்சியினை அறிய முடிகின்றது.

## முடிவுரை

சக்திக்கேயுரிய வழிபாட்டுச் சின்னமாக ஸ்ரீ சக்ரம் விளங்குகின்றது. இது மெய்ஞானமும் விஞ்ஞானமும் இணைந்து காணப்படும். ஓர் உன்னதமான கலைப் படைப்பாகும், சக்தி வழிபாட்டிற்குரிய தொன்மை ஸ்ரீ சக்ர வழிபாட்டிற்கும் உண்டு. சக்திக் கேயுரிய வழிபாட்டுச் சிறப்பினை ஸ்ரீ சக்ர வழிபாடு சிறப்பாக சித்திரிக் கின்றன. ஸ்ரீ சக்ரபூசை தொடர்பான விரிவான விபரங்களை சாக்த தந்திரங் கள் முதலான வடமொழி நூல்களில் கண்டு கொள்ள முடிகின்றன. தமிழ் இலங்கியங்களிலும் ஸ்ரீ சக்ர வழிபாடு பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள் ளன.

ஸ்ரீ சக்ர வழிபாட்டை விபரிக் கும் முதற்றமிழ் நூலாக திருமந்திரம் விளங்குகின்றது. ஸ்ரீ சக்ர வழிபாட்டை சைவசித்தாந்திகளும் ஏற்றுள்ளனர். சக்தி வழிபாட்டைப் புனிதப் படுத்திய பெருமை ஸ்ரீ சக்ர வழிபாட்டிற்குண்டு இந்தியாவில் மட்டுமன்றி இலங்கையி லும் இவ்வழிபாடு சிறப்பாக நடை பெறுகின்றது. ஸ்ரீ சக்ரத்துக்கெனத் தனிக்கோவில் அமைத்து வழிபடும் புரான சிறப்பை இலங்கையில் கண்டு கொள்ள முடிகின்றது. இவ்வாறாக ஸ்ரீ சக்ர வழிபாடானது இந்து மதத்தின் சிறப்புக்கு இன்றும் காரணமாக விளங்குகின்றதெனலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணை நூல்கள்


1. கைலாசநாதக்குருக்கள், கா, **சைவத்திருக்கோவிற் கிரிகைநெறி**, இந்து கலாபிவிருத்திச் சங்கம் , கொழும்பு , 1963
2. கோபாலகிருஷ்ண ஐயர், ப., **இந்துப் பண்பாட்டு மரபுகள்**, வித்தியா வெளியீடு யாழ்ப்பாணம் , 1992
3. சுப்பிரமணிய அய்யர், ந.ஸ்ரீ. வித்தியாஸபர்யாவாஸனை, ஸ்ரீ பிரஹ்ம வித்தியாவிமர்சினீஸபை, சென்னை, 1940.
4. நஜன், ஸ்ரீசக்ரநாயகிகள், பிரதிபா பிரசுரம், சென்னை 1978.
5. Woodroffe Sri, J., Sakli and Sakta, Ganesh & Company, Madras, 1987.


நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்ப(து) உன்னை
என்றும் வணங்குவ(து) உன்மலர்த் தாள்எழு தாமறையின்
ஒன்றும் அரும்பொரு ளே உமையே இமயத்(து)
அன்றும் பிறந்தவ ளேஅழி யாமுத்தி ஆனந்தமே.

ஆனந்த மாய்என் அறிவாய் நிறைந்த அமுதமுமாய்
வானந்த மான வடி(வு) உடை யாள்மறை நான்கினுக்கும்
தானந்த மான சரணாரவிந்தம் தவளநிறக்
கானந்தம் ஆடரங் காம் எம்பி ரான்முடிக் கண்ணியதே.

கண்ணிய(து) உன்புகழ் கற்ப(து) உன் நாமம் கசிந்துபத்தி
பண்ணிய(து) உன்இரு பாதாம் புயத்தில் பகல் இரவா
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து நான்முன்செய்த
புண்ணியம் ஏ(து) என் அம் மேபுவி ஏழையும் பூத்தலளே.

பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணம்
காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேஎன்றும் மூவா முகுந்தற்(கு) இளையவளே
மாத்தவ ளேஉன்னை அன்றிமற் றொர்தேய்வம் வந்திப்பதே.

வந்திப் பவர்உன்னை வானவர் தானவர் ஆனவர்கள்
சிந்திப் பவர்நல் திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவர்அழி யாப்பர மானந்தர் பாரில் உன்னைச்
சந்திப் பவர்க்(கு) எளிதாம் எம்பிராட்டிநின் தண்ணளியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைவாரிதி,
கவிஞர், கலைஞர், சித்தாந்தச்செல்வர்.
**வ. யோகானந்தசிவம்**
கணிதம் (விசேட பயிற்சி),
G. A. Q., G. S. Q.,
ஆசிரிய ஆலோசகர் (த. ப.,)
ஓய்வுபெற்ற அதிபர்.




வட்டு - வடக்கு,
வட்டுக்கோட்டை.
15.10.2009.



# காலமெல்லாம் காத்தருளும் எங்கள் முத்து மாரியம்மா

நீர்வளமும் நிலவளமும் நிறைந்த வட்டூர் நிகரில்லா வீரமொடு செல்வம் தானும்
பார்போற்றும் முதுதமிழின் புலவர் என்று பண்டிதர்கள் கவிஞரென்று பலரும் சேர்ந்து
சீர்மேவும் சிவனொடு அம்மன் இங்கு சிறப்புடனே விளங்குகின்ற திருவின் ஊரே
பூர்வீகக் கிராமியக் கலைகளெல்லாம் இங்கே பொலிவினொடு பரம்பரையாய் மிளிரக் காண்பீர்!

வட்டூரின் முத்தெனவே காலம் காலம் வழங்கிவரும் தாய்த் தெய்வம் முத்துமாரி
மட்டில்லாப் புகழ்படைத்த மாரி அம்மன் மக்களெல்லாம் வளமான வாழ்வு வாழ
இ□டமுடன் வந்திங்கு கோயில் கொண்டாள் எல்லையில்லா அருள்மழையைப் பொழிந்து நின்றாள்
பட்ட துயர் அத்தனையும் பறந்து போகும் பாவையவள் கடைக் கண்ணின் பார்வையாலே!

எத்துயரும் நேராமல் எம்மைக் காக்கும் எழிலரசி முத்துமாரி இருக்கும் போது
சித்தமெல்லாம் அவள்பாலே சேர்ந்து நிற்கும் சிவனுடனே அவளருளின் சிறப்புத் தோன்றும்
அத்தனையும் அம்மையையும் நடுவி ருத்தி அன்புடனே சூழ்ந்திருக்கும் மக்கள் தானே
எத்தனையோ தெய்வங்கள் இருந்தும் எங்கள் இதயமதில் இருப்பவர்கள் இவர்கள் தாமே!

கூத்தாடி உன்தனையே குளிர வைப்பார் குவலயமே இயங்குவதும் சக்தி உன்னால்
ஆத்தாளே உன்தனுக்கு அழகிய கோபுரம், அமைத்தின்று மகிழ்கின்றார் உன்தன் அடியார்!
காத்தருளும் அன்னையாக இருக்கும் எங்கள் கண்கண்ட தெய்வம் நீ மாரி அம்மா
சாத்திரங் கூறுகின்ற தத்துவம் எல்லாம் சகலகலா வல்லியுன்தன் வடிவம் தாமே!

கும்பாபிஷகம் செய்துகுறைகள் போக்கிக்குஞ்சரியே உன்னழகைக் கூடிக் காண்பர்
தம் வாழ்வு சிறந்திடவே தாரா ளமாக தந்திடுவார் பொங்கலொடு காணிக் கைகளும்
அம்மையார்க்கு அடியவர்கள் ஆற்றுகின்ற அத்தனையும் அவளுக்கு அமிர்தம் தானே
தம்மோடு மாரி அம்மன் வந்து ஒன்றாச் சங்கமித்து விட்டாளே என்பர் உண்மை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னதானிடை யூறுகளெமக்கு வந்த போதும் எங்களுக்கு அருளிடவே அம்மை அப்பர்
பன்நெடுங் காலமதாய்யிங் கிருந்து எங்கள் பரம்பரையைக் காத்திடுவர் இதுதான் உண்மை
பொன்போன்ற திருமேனி கண்ணில் கருணை பொலிகின்ற உன்வடிவம் எமக்கா தாரம்
அன்னையவள் தாளினையே பணிந்து நாங்கள் அவனியிலே பெருவாழ்வு வாழ்கவாம் வாரீர்!

சின்னமுத்து பொக்கிளிப்பான் என்னும் நோய்கள் சிறிதளவும் அணுகிடாது காப்பாள் எம்மை
நன்மைகளே எந்நாளும் நடக்க வேண்டி நாமாற்றும் நல்லபணி குளிர்த்தி யாகும்
அன்னையவள் சூரனையே தடுத்தாட் கொண்ட அற்புதமே சூரன்போர் ஆட்ட மாகும்
என்னவித ஆட்டங்கள் சூரன் தானே இப்புவியில் வந்து நின்று ஆடு கின்றான்

மண்ணதனின் வாசனையோ வாய்த்த வீரம் மகத்தான நுண்மதியோ அறிவின் சாரம்
எண்ணரிய திறைமைகளும் இலங்கி நிற்கும் ஈடில்லாக் கிராமமென விளங்கும் வட்டூர்
கண்ணரிய எங்கள் முத்து மாரி அம்மா கயிலையுறை நாயகனின் இடது பக்கம்
விண்ணவரும் வியந்திடவே அமர்ந் திருந்து வேண்டுவரம் நல்கிடுவாள் வியப்ப தாமே!

வேள்விசெய்து பெற்றபலன் விழாவாய் மாறி வேண்டும்பயன் பெற்றிட்டோம் மகிழ்ச்சியோடு
காளியம்மா தீதழிதுக் கருணையோடு கொண்டு காட்டிடுவாள் நல்வாழ்வு என்றும் நின்று
மாளிகை வாழ்வும் மண்குடிசை வாழ்வும் எங்கள் மாரி யம்மன் மனம் மகிழ்ந்து தந்த வாழ்வே
நாளுமவள் அடியினையே தொழுது நின்று நல் வாழ்வு பெற்றிடுவோம் விரைந்து வாரீர்!

---

தண்ணளிக் கென்றுமுன் னேபல கோடி தவங்கள் செய்வார்
மண்ணளிக் கும்செல்வ மோபெறு வார்மதி வானவர்தம்
விண்ணளிக் கும்செல் வமும்அழி யாமுத்தி வீடுமன்றோ
பண்ணளிக் கும்செல் பரிமள யாமளைப் பைங்கிளியே.

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும்
ஒளியே ஒளிரும் ஒளிக்கிட மேஎண்ணில் ஒன்றுமில்லா
வெளியே வெளிமுதல் பூதங்க ளாகி விரிந்த அம்மே
அளியேன் அறிவள விற்(கு) அள வான(து) அதிசயமே.

அதிசய மான வடி(வு) உடை யாள்அர விந்தமெல்லாம்
துதிசய ஆனை சுந்தர வல்லி துணைஇரதி
பதிசய மான(து) அபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாகவன் றோவாம பாகத்தை வவ்வியதே.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காக்கும் கரங்கள்

Dr. M.PALANIAPPAN B.lit., M.A., M.Phil., Ph.D., B.Ed., PGDCA., READER IN TAMIL,
மதுரை 10.11.2009

தெய்வங்கள் காக்கும் படைக் கலன்களோடு காட்சியளிப்பது என்பது இந்து சமய மரபாக உள்ளது. கருப்பசாமி என்றால் அரிவாள், முருகன் என்றால் வேல், கணபதி என்றால் அங்குசம், சிவன் என்றால் சூலம், திருமால் என்றால் சங்கு, சக்கரம் என்று தெய்வங்களின் அடையாளங்கள் அவர்களின் ஆயுதங்களின் வழியாக அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. கடவுளர்களின் இந்த ஆயுதங்கள் தீமைகளை அழித்து, தீயவர்களை அழித்து, நல்லவர்களைக் காக்க உதவுவன என்பது மக்களின் நம்பிக்கை ஆகும்.

பெண் தெய்வங்கள் ஆண் தெய்வங் களுடன் காட்சியளிக்கும்போது மலர்ச் செண்டுகளை ஏந்தியபடியே உள்ளன. குறிப்பாக சொக்கநாதருடன் இருக்கும் மீனாட்சி மலர்ச்செண்டுடன் கூடிய கிளியோடு சாந்தமாக இருக்கிறாள். நடராசருடன் காட்சி தரும் சிவகாமியும், காசி விசுவநாதருடன் காட்சி தரும் விசாலாட்சியும், பெருமாள் அருகில் உள்ள தாயர், ஆண்டாள் போன்றோரும், சுப்பிரமணியருக்கு அருகில் இருக்கும் வள்ளி, தெய்வயானை போன்றோரும் இவ்வகையில் கருதத் தக்கவர்களே ஆவர். தனி அம்மனாய், தனித்த தெய்வமாக விளங்கும் பெண் தெய்வங்களே ஆயுதங் களுடன் காட்சி தருகின்றன.

மாரியம்மன், காளியம்மன், பிடாரிய ம்மன் போன்ற பல பெண் தெய்வங்கள் ஆயுதங்களுடன் காட்சி தருகின்றன. காளியம்மன் அல்லது துர்க்கை வைணவச் சார்புடன் சங்கு சக்கரம் கொண்டவளாக காணப்படுகிறாள். மாரியம்மன் சங்கு, சக்கரம் நீங்கிய நிலையில் மற்ற ஆயுதங் களைக் கொண்டுச் சைவச் சார்புடன் காணப்படுகிறாள். இவ்வாறு தனி அம்மன் கள் தனக்கான ஆயுதங்களுடன் அடையா ளப்படுத்தப்படுகின்றனர்.

இக்கட்டுரை மாரியம்மனின் ஆயுதங்கள் பற்றிய செய்திகளை எடுத் துரைக்கின்றது. குறிப்பாக சமயபுரம் மாரி யம்மனின் சுதை சிற்பம் சார்ந்த ஆயுதங் களை முன்னிலைப்படுத்தி இக்கட்டுரை செய்திகளைத் தொகுத்துரைக்கின்றது. சமயபுரம் மாரியம்மனே மாரியம்மன் வழிபாட்டின் துவக்கநிலை என்பது ஏற்கத்தக்கதாகும்.

**சிலப்பதிகார காலத்தில் அம்மனின் ஆயுதம்**

சிலப்பதிகாரத்தில் கண்ணகி வழக்கு உரைக்க வந்த தோற்றத்தை அரண்மனை யின் வாயில் காவலன் மன்னனிடம் சென்று எடுத்துரைக்கின்றான். அப்போது பெண் தெய்வங்கள் பற்றிய பல செய்திகள் இடம் பெறுகின்றன. குறிப்பாக வேல் என்பது கொற்றவைக்கு உரிய ஆயுதமாக விளங்குகின்றது.

அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணி
பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக் கொடி
வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை அல்லள்
(சிலப்பதிகாரம் 20 : 34-35)

இவ்வடிகளில் கொற்றவைக்கு உரிய ஆயுதமாக வேல் கொள்ளப் பெற்றுள்ளது. இவ்வேல் கந்தனின் கைக்கு அளிக்கப் பெற்று விடுவதால் இது அம்மனின் ஆயுதப் பட்டியலில் இருந்து பிற்காலத்தில் விடப்பட்டுவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அபிராமி அந்தாதி சுட்டும் ஆயுதங்கள்**

அபிராமி அம்மன் பஞ்ச பாணங்களையும், சங்கு சக்கரத்தையும், பாசக்கயிறு, வில், அம்பு போன்றவற்றையும் ஆயுதமாகக் கொண்டவள் என்று அபிராமிப் பட்டர் கருதுகிறார்.

பரிபுர் சீரடி, பாசாங்குசை, பஞ்ச பாணி
(அபிராமி அந்தாதி: 43)
தாமம் கடம்பு படை பஞ்சபாணம் தனுக்கரும்பு
(அபிராமி அந்தாதி: 73)

என்ற பாடலடிகளின் வழி அபிராமி அம்மனின் ஆயுதங்கள் தெரியவருகின்றன.

இவ்வாறு பெண் தெய்வங்கள் ஆயுதங்களுடன் இருக்கும் நிலை இந்து சமயத்தில் ஏற்கத் தக்கதாக இருந்து வருகிறது.

**மாரியம்மனின் ஆயுதங்கள்**

மாரியம்மன் என்ற உருவம் இரு நிலைகளில் வணங்கப்படும் முறைமை காணப்படுகிறது. மாரியம்மன் கோயில் கருவறையில் முழு உருவமாக மண்ணாலோ, அல்லது சுண்ணாம்பாலோ, அல்லது மரத்தாலோ செய்யப் பெற்றிருக்கும். இதன் காலடியில் ஐந்து தலை நாகம் குடைபிடிக்க கழுத்து வரையான அம்மன் உருவம் கல்லில் முன்பக்கத்தில் வடிக்கப் பெற்றிருக்கும். இவை இரண்டினையயும் சேர்த்து ஒரு சேர வணங்குவதே மாரியம்மனின் உருவ மரபாகும்.

மூலத்தானத்தில் அமைந்துள்ள இந்த இரு வடிவங்கள்- உற்சவமூர்த்தத்திற்கு வருகையில் ஒரே உருவமாக அமர்ந்த நிலையில் முழு உருவமாக ஏற்கப்படுகிறது. இந்த உருவம் மூலத்தானத்தில் உள்ள முழு வடிவம் போன்றே ஆயுதங்களுடன் வடிவமைக்கப்படுகிறது. முழு உருவமாக அமைக்கப்படும் மாரியம்மன் உருவத்தில் பல வகையான ஆயுதங்களுக்கு இடம் தரப்படுகிறது. சமயபுரம் மாரியம்மன் எட்டுக் கரங்களுடன் காணப்படுகிறாள். . இவளே அனைத்து மாரியம்மன் கோயில் திருவுருவங்களுக்கும் அடிப்படையானவள் ஆவாள்.

இவளது எட்டுக் கரங்களில் பாசக் கயிறு, உடுக்கை, வில், மலரம்பு, சூலம், மணி, பெரிய வாள், சிறு கிண்ணம் போன்றன காணப்படுகின்றன. இவை அனைத்தும் இடம் பெற்றிருக்கும் மாரியம்மன் உருவமே முழுமை பெற்றதாகும். இவ்வாயுதங்கள் குறித்துச் சில செய்திகள் விளக்கத்திற்காகத் தரப்படுகின்றன.

**உடுக்கை**

உடுக்கை என்பது சிறிய பறை ஆகும். பறை என்பது தமிழர்தம் பழமையான இசை தரும் நாட்டுப்புற இசைக் கருவியாகும். இக்கருவியைக் கரங்கள் கொண்டுத்தட்டி ஒலியெழுப்ப வேண்டும். தமிழக நாட்டுப்புறங்களில் குறி சொல்ல, தெய்வ அருளை ஒருவர் மீது ஏற்றி வைக்க இக்கருவி இன்னமும் பயன்பட்டு வருகின்றது. சிவபெருமானின சூலத்துடன் இணைந்து காட்சி தரும் இவ்வுடுக்கை மாரியம்மனின் ஒலி தரும் ஆயுதமாக விளங்குகின்றது. எனவே இது ஆக்கல் கருவியாகும்.

**பாசக்கயிறு**

இதற்கு இணையாக அமைந்துள்ள மறுகரத்தில் பாசக் கயிறு காணப்படுகிறது. இந்தக் கயிறு அழித்தல் தொழிலின் குறியீடு ஆகும். தீயவர்களை அழித்துத் தூயவர்களைக் காப்பதற்காக இவ்வாயுதம் அம்மனின் கைகளில் அலங்காரமாக விளங்குகிறது. இக்கயிற்றினை உடையவன் எமன் ஆவான். இவனின் இந்த ஆயுதத்தினைத் தக்க வகையில் நடத்தத் தெரிந்தவள் மாரியம்மன் என்பதால் அவள் கரத்திற்கு இது வந்து சேர்ந்தது.

**வில், மலரம்பு**

அடுத்த இணைக் கரங்களில் வில்லும் அம்பும் ஆயுதங்களாக மாரியம்மனிடத்தில் விளங்குகின்றன. வில்லும் அம்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களின் பழமையான ஆயுதங்கள் ஆகும். கணை கொடிது - என்று வள்ளுவர் பயன்படுத்தும் தொடரில் இருந்து இதன் பழமை தெரியவரும். வில் ஏந்தியவன் இராமன் என்பதால் அது வைணவத் தொடர்புடையதாகிவிடுகிறது. இந்த வேறுபாட்டை மறைக்க வில்லினைச் சிவனுடன் தொடர்புடைய மாரியம்ம னுக்கு ஆக்கிய முயற்சி இதுவாகும். மலரம்பு மக்களிடம் இன்பத்தை வளர்த்துக் காக்கும் முயற்சியாகும். இவை காத்தல் தொழிலின் அடையாளமாகும். மலரம்புகளை உடையவன் காமன் ஆவான். இவனின் தொழிலையும் சரிவர நடத்தத் தெரிந்தவள் மாரியம்மன் என்ப தால் இதுவும் இவள் கரத்திற்கு அழகு சேர்க்கிறது. பெண்களுக்கு உரிய நளினத் தின் அடையாளமாக இம்மலரம்பு விளங்குகிறது.

**சூலம்**

பாரதத் தாயின் ஆயுதமாக சூலம் கருதப்படுகிறது. பாரதி பாரதத்தாயினை வணங்குகையில் சூல் கரத்து ஏந்தினாய் என்று பாடுகிறார். மூவிலைச் சூலம் என்று இது இலக்கியங்களில் பெருமைப்படுகி றது. இதனை ஏந்தியவளாக மாரியம்மன் விளங்குகிறாள்.

சூலம் மூவிலை மேல் நோக்கிய பொழுது அது காக்கும் கருவியாகிறது. கீழ்நோக்கி அமைகையில் அது அழிக்கும் கருவியாகிவிடுகிறது. மேல் நோக்கிய மைந்தால் அதனை ஏற்பவள் மாரியம்மன். கீழ்நோக்கி அமைந்தால் அதற்கு உரியவள் காளியம்மன். கோபம் தணிந்தவள் மாரி.- கோபம் கூடியவள் காளி.. இந்த வேறுபாடு கருதத்தக்கது.

மேல்தலைச் சூலம் என்பது இதனால் மாரியம்மனின் நிலையான குறியீடாக ஏற்கப்படுகிறது.

**மணி**

இது மங்கலம் நிறைக்கப் பயன்ப டும் கருவியாகும். தனக்குத் தானே மாரி யம்மன் மணியோசை எழுப்பிக்கொண்டு தன்னைத் தானே அவள் பஙரீசை செய்து கொள்கிற நிலையை இந்த மங்கல மணி வெளிப்படுத்துகிறது. மணியொலிக்க தீய சக்திகள் விலகி விடும். ஓம் என்னும் நாதம் அதனுள் இருந்து வெளிப்பட்டு அனை வருக்கும் பயத்தை நீக்கும். மணி - பயம் நீக்கும் கருவியாக மாரியம்மனின் கரத்தில் உள்ளது.

**வாள்**

மன்னர்களின் தெய்வமாகவும் மாரி யம்மன் விளங்குகிறாள் என்பதற்கு அவள் வைத்துள்ள நீண்ட வாளே சான்றாகும். மாரியம்மனின் வலது முக்கிய கரத்தில் நீண்ட வாள் காணப்படுகிறது. பட்டை தீட்டப்பட்டு கூரிய முனையுடன் காணப் படும் இந்த வாள் பகைவர்களை நடுங்கச் செய்வதாக உள்ளது. வீரத்தின் அடையாள மாக விளங்குகிறது.

**கிண்ணம்**

முக்கிய இடது கரத்தில் சிறு கிண்ணம் காணப்படுகிறது. இக்கிண்ணம் அவள் அருளான குங்குமத்தை வழங்குக றது என்றும் எண்ணத் தோன்றுகிறது. அதே நேரத்தில் இந்தக் கிண்ணத்தில் தீயோர் இரத்தமும் சேமிக்கப் பெற்று அதுவும் புனிதப்படுத்தப்படுகிறது என் றும் எண்ணத் தோன்றுகிறது.

இவ்வாறு படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், இன்பந்தருதல் என்ற பல்தொழிலையும் நடத்தும் திறமை உடையனவாக மாரியம்மனின் ஆயுதங்கள் விளங்குகின்றன. அபிராமி பட்டர் சொன்னது போன்று பஞ்ச பாணம் என்ற நிலையில் வில், அம்பு, பாசக்கயிறு, சூலம், வாள் என்ற ஐந்தையும் உடையவளாக மாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யம்மனின் காட்சி அமைக்கப் பெற்றுள்ளது. இவற்றோடு இன்னம் மூன்னு ஆயுதங்கள் சேர்ந்து எட்டு என்ற எண்ணிக்கை கிடைக்கிறது.

எட்டுக் கரங்களிலும் எட்டு ஆயுதங்களைக் கொண்டு எண்திசைகளையும் காத்துவரும் நாயகி மாரியம்மன் ஆவாள். வாளை எடுத்து வந்து மன்னருக்கும் காவலாகி, உடுக்கையை ஏற்று வந்து ஏழைகளுக்கும் நாயகியாகி அவள் உலா வருகிறாள்.

இவளின் இருக்கை தலைமீது ஐந்து தலை நாகம் குடைபிடிப்பது போன்ற நிலையில் உள்ளது. பாற்கடலில் பள்ளி கொள்ளும் பரந்தாமன் ஐந்தலை நாகத்தின் கீழ் இருக்கும் நிலையின் மாற்றுப் பிரதியீடாக இந்த இருக்கை உள்ளது. பாம்பு - படுக்கையானால் அது திருமாலுக்கும், பாம்பு - இருக்கையானால் அது மாரியம்மனுக்கும் உரியது என்ற தெளிவை இதன் மூலம் பெற இயலும்.

சமயபுரம் மாரியம்மனின் இத்திருவுருவக் காட்சி , ஆயுதக் காட்சி பக்தர்கள் மனதில் நீங்கா இடம் பெற்று நிலை பெற்றுவிட்டது. இதனை உலக மக்கள் அரிய ஆங்காங்கே இவ்வம்மனின் பிரதியீடாக மாரியம்மன் கோயில்கள் எழுப்பப் பெற்று வருகின்றன. இவற்றுள் ஒன்று வீயோடை மாரியம்மன் கோயில் ஆகும். இம்மாரியம்மன் தமிழகத்தில் இருந்துக் கிளம்பி, இலங்கையில் வளர்ந்து, வெளி நாடுகளிலும் குடி கொண்டுள்ளாள். உலகத்து நாயகி என்றால் அது இவளுக்கே மிகப் பொருந்தும். இம்மாரியம்மன் தீமிதி விழா நாயகி ஆவாள். பக்தர்கள் இவள் மீது பெருத்த நம்பிக்கை வைத்துத் தீமிதித் திருவிழாவினை நடத்தி அவளின் சக்தியை உலகம் காணச் செய்கின்றனர். இவளின் சக்தி பெருகி உலகம் எல்லாம் நலம் பெறும் என்பது சத்தியம்.

**வீயோடை மாரியம்மனின் தனிச் சிறப்புகள்**

வீயோடை மாரியம்மனின் உருவினைக் காணக் கண்கோடி வேண்டும். வைரக்கல்லால் ஆன சிலையாக இவள் அருள்காட்சி தருகிறாள். இவ்வைரக்கல் மாரியம்மனைத் தற்போதைய கோயில் புணரமைப்புக் குழுவின் தலைவராக விளங்கும் திருமிகு கணேஸ்வரன் அவர்களின் தந்தையார் தெய்வத்திரு மயில் வாகனம் நவரட்ணம் அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்னரே செய்தளித்தார். இவர்தம் எண்ணத்தில் விளைந்து செயலில் கனிந்த அருள்வடிவமாக அன்னை வீயோடை மாரியம்மன் விளங்குகிறாள்.

இம்மாரியம்மன் திருவுருவப் படமாக இருந்து ஐம்பொன் சிலையாகித் தற்போது வைரக்கல்லால் ஆன சிலையாக வளர்ந்திருக்கிறாள். அவளின் வளர்ச்சி நம் தலைமுறையின் வளர்ச்சியாகும்.

**தெய்வத்திரு.கந்தர் சிவலிங்கம் அவர்களின் இணையற்ற சேவை**

இக்கோயிலுக்கு மற்றொரு சிறப்பும் உண்டு. அதாவது இக்கோயிலில் உயிர்பலி இடுதல் பரம்பரை வழக்கமாக இருந்து வந்தது. இதனைத் தடுத்த நிறுத்த திரு கந்தர் சிவலிங்கம் அவர்கள் தளராத முயற்சியினை மேற்கொண்டார். மக்கள் பலரையும் சந்தித்து, நண்பர்களைப் பெருக்கி, நயமாகச் சொல்லி உயிர்ப்பலியிடலை இக்கோயிலில் இருந்து விலக்கி, நிறுத்தி வெற்றி கண்டார். அன்னாரின் அருட்செயல் இன்னமும் எண்ணிப் போற்றத்தக்கது. அவர் அறங்காவலராக இருந்து இக்கோயிலுக்கு ஆற்றிய பணிகள் ஆயிரம் ஆயிரம். இதுபோல அவரின் குடும்பத்தாரும் இன்னமும் பற்பல உதவிகளை இக்கோயிலுக்குச் செய்து வருகின்றனர்.

**1972**ன் குட முழுக்கு விழாவின் பின்னர் இக்கோயிலின் தற்போது நடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறும் குடமுழுக்கு விழா பல்லாண்டுகளுக்கு முன்னதாக திட்டமிடப்பட்டதாகும். இது தற்போதுதான் கைகூடி வந்துள்ளது. ஒரு கட்டத்தில் இக்கோயிலை 2001ம் ஆண்டில், தந்தையான தெய்வத்திரு. கந்தர் சிவலிங்கம் அவர்களின் 1986-1987 காலப்பகுதியின் எண்ண ஓட்ங்களான கொடித்தம்பம் அமைத்தல் சித்திர மணித்தேர் உருவாக்குதல் முன் மணி மண்டபம் கடடுதல் போன்றனவற்றையும், திருக்கோவில் இன்மும் அழகும் சித்திரவேலைப்பாடுகள் நிறைந்த மணிமண்டபங்கள் என்பன வற்றையும் கட்ட எண்ணிய அறங்காவலர் திரு.சிவலிங்கம் கலைவாணன் அதற்காக பல கோணங்களில் பாடு பட்டும் வந்தார். அதில் இருந்து இக்கோயிலை மீட்டெடுக்கப் பல முயற்சிகள் எடுத்தார். பலன் கிடைக்காமல், 2003ல் பாலஸ்தாபன கும்பாபிஷேகத்தின் பின்னர் அறங்காவலர் பரிபாலனசபையும் திரு. சிவலிங்கம் கலைவாணன் கூட்டு முயற்சியும் திருமிகு ம. ந. கணேஸ்வரனின் ஒப்பற்ற சேவையும் இலங்கையில் இருக்கும் தெய்வத்திரு சிவலிங்கம் அவர்களின் இரு புதல்வர்களான திரு.சிவலிங்கம் ரகு, திரு.சிவலிங்கம் ரூபன் பிரான்ஸ் நாட்டில் இருக்கும் மேற்படி அவரின் இரு புதல்வர்களான சிவலங்கம் கலையரசன், திரு.சிவலிங்கம் கலைவாணன் என்போர் கலந்துபேசி கோயில் பணியை இருந்து வருந்திச் செய்யத்தக்கதொரு அருளாளரைத் தேடினர் பலமுறையும் முயற்சி மேற்கொண்டும் பலன்தராமல்போகவே

தேடினால் கிடைக்கப் பெறுவீர்கள் என்பது அருள் வாக்கு. அறங்காவலர் குழு தக்க ஒருவரைத் தேடியது. இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல் - என்ற குறளின் வழியில் - தக்கவராய்த் திருமிகு ம. ந. கணேஸ்ரன் அவர்களை 16.02.2003ல் இக்குழுவினர் கண்டனர். திருமிகு ம. ந. கணேஸ்வரனின் தந்தையார் அவர்களே முன்னாளில் இவ்வம்மனுக்கு வைரக் கல்சிலையைச் செய்து அளித்தவர் ஆவார். அவரின் தொண்டு அவர் மகனார்க்கும் விளைந்து தற்பொழுது வாழ்நாள் பணித் தலைவராக அம்மன் கோயிலின் திருப்பணிக் குழுவிற்கு அன்னார் ஏற்கப் பெற்றார்.

தெய்வத்திரு.கந்தர் சிவலிங்கம் அவர்களின் துணைவியார் திருமதி இராசலட்சுமியம்மா சிவலிங்கமும், நான்கு பிள்ளைகளும் ஒரு மனதாய்த் தேர்ந்த தலைவராக திருமிகு ம. ந. கணேஸ்வரர் அமைந்தார். வாழ்நாள் தலைவராக பெரும்பொறுப்பை அம்மன் அருள் கொண்டு ஏற்றுக் கொண்டு அன்பர் கணேஸ்வரன் ஆக்கப் பணிகளைச் செய்யத் தொடங்கினார்.

தெய்வ அருளும், கால நிலையும் கைகொடுத்தன. மக்கள் அம்மனுக்கு ஆலயம் அமைக்க கேட்ட நொடியில் தயக்கம் காட்டாது பணங்களை அள்ளித் தந்தனர். இவற்றை நிர்வகிக்க முதலில் நல்ல அன்பர்களை ம. ந. கணேஸ்வரர் தேர்ந்தார். அன்பே உள்ளமெனக் கொண்ட நல்ல அன்பர்களைக் கொண்டு அன்னார் ஒரு நிர்வாக திருப்பணிச் சபையை ஏற்படுத்தினார். திருவாளர்கள் சிவலிங்கம் ரகு, சிவலிங்கம் ரூபன் சிவலிங்கம் கலையரசன், சிவலிங்கம் கலைவாணன், வட்டூரில் தலைவர் திருமதி இராசலட்சுமியம்மா சிவலிங்கம், பொருளாளர் திருமிகு அ.சிவசுப்பிரமணியம்

ஆகியோர்களைக் கொண்டு இயங்கும் நிர்வாக பரிபாலனக் குழு இக்கோயிலுக்கு உருவாகியது. இக்குழுவின் தலைவராக இருந்து அன்பர் கணேஸ்வரன் இயங்கினார்: இவர்களின் முயற்சியாலும், பரிபாலனசபை உறுப்பினர்களாலும், அத்தோடு நில்லாது தலைவருக்குப் எப்போதுமே பக்கபலமாக கோவிலுக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல வழிகளிலும் உதவிகள் செய்துவரும் அறங்காவலர்களில் ஒருவருமாகிய திருமிகு சிவலிங்கம் கலைவாணன் தந்தையின் எண்ண ஓட்டமான அழகிய சித்திரத்தேரையும் தந்தார். மேலும் மற்றுமொரு அறங்காவலர் திரு.சிவலங்கம் கலையரசன் அம்பாள் அடியார்களால் போடப்பட்ட நன்கொடை தன்னைப் பொறுப்பாகப் பெற்று திருப்பணி நிர்வாக சபையிடம் வழங்கினார். இப்படியாக சகலரதும் முழுமையான ஒத்துழைப்பாலும், கூட்டுமுயற்சியாலும் எல்லாவற்றிலும் மேலாக அம்பாளின் அடியார்கள் கேட்டவுடன் மறுப்பின்றி அள்ளி அள்ளிக் கொடுத்த நன்கொடையாலும் தற்போது அழகான புதுக் கோயில் கோபுரம், தேர், வாகனங்கள் சகடை, என வட்டூர் வீயோடையில் முத்துமாரியம்மன் தலை நிமிர்ந்து உருவாகி நிற்கிறது.

அன்பர்கள் அளித்த பொருள்களைப் பெற்றுக் கவனமுடன் கணக்கீடு செய்து வழங்கி வரும் பொருளாளர் திருமிகு அ. சர்வசுப்பிரமணியன் அவர்களின் பணி மிகவும் பாராட்டுதற்குரியது. தமிழகத்தில் இருந்துத் தக்க கைவினைஞர்களைக் கொண்டு வந்து அரிதான அழகான வண்ணமிக்கக் கோயிலைக் கட்டி அதனுள் அம்மனை இருத்தி அவ்வம்மனுக்கு பங்குனி உத்திரநாளில் மங்கள விழா நடத்தி கண்டுகொள்வதில் நாம் அனைவரும் பெருமை பெற்றிருக்கிறோம்.

இவளின் அருளால் மக்களுக்குப் பயம் நீங்கி, மங்கலம் பெருகி, நோய்நொடிகள் நீங்கி, செல்வம் குவிந்து குறை நீங்கி நிறைநிலை கிட்டும்.

உலகத்து நாயகியே எங்கள் முத்து
மாரியம்மா!
உன்னதமான வாழ்வினை எமக்களிப்பாயே
முத்து மாரியம்மா!

---

வவ்விய பாகத்(து) இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள்திருமணக் கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற் பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன்என் மேல்வரும் போது வெளிநிற்கவே.

வெளிநின்ற நின்திரு மேனியைப்பார்த்தென் விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்ற தென்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே.

உறைகின்ற நின்திருக் கோயில்நின் கேள்வர் ஒருபக்கமோ
அறைகின்ற நான்மறை யின்அடி யோமுடி யோஅமுதம்
நிறைகின்ற வெண்திங்க ளோகஞ்ச மோஎன்றன் நெஞ்சகமோ
மறைகின்ற வாரிதி யோபூர ணாசல மங்கலையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்பாகி அருளான ஆதிமூலமே அன்னை

-பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன், எம்.ஏ -

கருத்துப் பொருளாகிய அன்பு, ஐம்பொறி வழிபட்ட ஐம்புலன்களோடு சேர்ந்து தொழிற்படும்போதுதான், அன்புடைய பேச்சு, அன்புடைய செயல் என்றெல்லாம் உணர்கின்றோம். உலகத்தினுடைய இயற்கை இயல்புகளால் உயிர் உடலோடு கூடிப்பிறப்பை அடைந்து வாழ்ந்துகாட்ட, அன்பு துணையாகின்றது. அதுவே "அன்போடியைந்த வாழ்கென்பதும்" "அன்பின் வழியே துயிர் நிலை" என்பதும் ஈண்டு சிந்தித்து இன்புறத்தக்கது. கருத்துப் பொருளான உயிருக்கு காட்சிப் பொருளான உடல் வேண்டும். எந்த ஒரு நுண்பொருளுக்கும் கருப்பொருளினது பற்றுக்கோடு தேவை. அதற்கொப்ப உயிர் அன்போடியைந்து உடலினை இருப்பிடமாகக் கொண்டு அருட்பேறு பெற்று உயிருக்கு உயிரான மூலப் பொருளை உணர்ந்து செம்மைப் படும்போது மனித வாழ்வின் அர்த்தம் தெரியவருகின்றது. எல்லாவற்றிற்கும் மூலசுருதி அன்பின் பிணைப்பே - அன்பின் கருவி அன்னை. அன்பினால் உண்டாகும் அருளின் வடிவம் தாய். ஆதலால் உடம்பைப் பேணி உயிரைக் காத்து அன்பின் பிணைப்பால் வாழ்வைக் காணலாம்.

வாழ்வுக்கு வேண்டிய அந்த அன்பனுபவம் யாருக்கும் முதன்முதலிலே கிட்டுவது தாயினாலேதான். எனவே தாயன்புக்கு இணையாக முதலில் எதனைக் காட்டலாம்? ஒன்றுமில்லை ஏன்? தாய் தன் குழந்தைக்காகத் தன்னைத்தருவாள். தன்பாலைச் சுரந்து ஊட்டுவதல்லாமல் அப்பாலின் தன்மை, தரம் தன் சுகத்திலே உள்ளதென்பதைக் கண்டு அதற்காகப் பத்தியம் இருப்பவளும் அவளன்றோ!

"பாலுண் குழவி பசுங்குடல் பொறாஅ தென்னு
நோயுண் மருந்து தாயுண்டாஅங்கு"

என்ற குமர குரபரர் கூற்றும் ஒப்பு நோக்கத்தக்கது. அந்த அன்பு அவளைத் தியாகத்திற்கு இட்டுச் செல்கின்றது. தாயன்பை அறியாதார் இல்லை.அவள் செய்யும் தியாகம் அளவிட்டுக் கூற முடியாது. அந்த ஈடுசெய்ய முடியாத தாயன்பு ஒன்றே உயர்ந்தது என முடிவு செய்யலாம். அத்தகைய தாய்க்காக எத்தன்மை வாந்த மகனும் எந்தப்பழியையும் செய்யத் தயங்கான். பாவமான பழியை விலக்குவதற்கு என்ன செய்யலாம்? எதனைக் கூறி பழியின் தன்மையை உணர்த்தலாம் எனச் சிந்தித்த தெய்வப் புலவன் எடுத்துக்கொண்ட உதாரணம் தாய்.

"ஈன்றாள் பசிகாண்பா ளாயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை"

என்று காட்டித் தாயன்புக்காக வேனும் சான்றோர் பழிக்கும் வினைகளைச் செய்யக்கூடாது என வலியுறுத்தினான்.

பசித்தபோது (உணவுக்காக) அதைப் போக்குவதற்காகத் தவறான முறையில் ஏதேனும் செய்தவரைக்கூட இரக்க சிந்தனையாளர் மன்னித்து விடுவதை உலகிற் காணலாம். உண்மைக் கடமையுணர்ந்த நன் மக்கள் தாம் பசித்திருக்க நேர்ந்தாலும் தாய் பசித்திருப்பதைக் கண்டு சகிக்க மாட்டார்கள்.

தாய் காட்டிய பரிவால் வளர்ந்த குழந்தை பலரிடத்திலும் அன்பு காட்டக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றுக் கொள்கிறது. அவ் வளர்ச்சிப் போக்கால் தோழர்களிடத்து நட்பாகவும், தாய் தந்தையரிடத்து கடமை கலந்த பிணைப்பாகவும் குருவினிடத்தில் பக்தியா கவும் உயர்ந்து ஓங்கித் தெய்வத்தின்பாற் பயபக்தியாகப் பரிணமிக்கின்றது. அன்புதானே தியாகத்திற்கும் அடித்தளம் அந்தத் தியாக அன்பு தாயிடத்தில் சிறந்து காணப்படும். தாயிடத்துக் குடிகொண்டி ருக்கும் தியாக அன்பு அருள் எனத் தகும். தொடர்பு இல்லாரிடத்தும் உண்டாகும் அருள் கருணையின் பாற்படும் இந்த அருள்தனைக் குலசேகர ஆழ்வார்.

"அரிசினத்தால் ஈன்றதா யகற்றினும் மற்று
அவள்தன் அருள்நினைந் தேயழுங் குழவி"

என்கின்றார். எவ்வாறாயினும் அறி வைக்கூடப் புறம்போகவிட்டு அருளாகி உயர்ந்து நிற்கும் அன்பு அந்த அன்புக்காகச் செயற்படும் மனிதனின் அறிவு, நாள்களின் வளர்ச்சியில் ஆராய்ச்சிக்குட்பட்டு அவன் இயற்கையைக் கூர்ந்து நோக்குகின்றான். தன்னால் அனுபவிக்கப்பட்ட இன்பங் களும் அழிகின்றன என உணருகின்றான். அந்த உணர்வினது செயற்பாட்டால் நிலையானதைத் தேடும் மனப்பாங்கைப் பெறுகின்றான். அவ்வாறு தேடுகின்ற காலத்தே முன்னோர் காட்டிய வழியும் அவர்சென்ற வழியும், அவனைப் பரம் பொருள் உணர்ச்சிக்கு இட்டுச்செல்லும். அவனாற் காணப்படுகின்ற இயற்கையும் தெயவாம்சமாகவே தோற்றம் பெறும்.

இயற்கையன்னையின் அழகுக் கோலம் பரந்து பட்டுக்கிடக்கின்றபோதி லும் எல்லோரது கண்களுக்கும் பளிச் சிட்டுக் கிடப்பது மலைக் குகைகளிலும் ஆற்றங்கரைப் படுக்கைகளிலும் சோலை யெனச் செழுமை தோன்றும் இடங்களி னூடாகவுமே!

காடுகளும் மலைகளும் சீரழிந்து வரும் இந்த நாகரிக யுகத்திலுங்கூட மலைக்காட்சிகளும் மலைத் தொடர்களும் இயற்கையன்னையினது தெய்வீக இருப் பைக் காட்டி, நமக்கு ஆத்மிக எழுச்சியை ஊட்டுகின்றன. விண்தொட்டு நிமிரும் நீண்ட நீலமலைகளும் கண்ணைக் கவர்ந் தீர்க்கும் கவின் மலிந்த காடுகளையும் மலைக்குத் துகிலை உடுத்தாற்போல் மின்னி அருளெனப் பொங்கிவரும் அருவி ஆறுகளும் புறக்காட்சியாய் நின்று அதனூடே அகக் காட்சியாய் உயிரெல் லாம் புரக்கும் அன்னை தரிசனம் தருப வளே!

பச்சையாப் பசுங்கொடியாய் இன்பம் தரும் இயற்கை அன்னையாய், எழில் கொஞ்சும் ஏந்திழையென அருள் சுரந்து பயபக்தியைத் தூண்டும் பாரின் சக்தியாகப் பராசக்தியாகக் காட்சி தரவில்லையா?

"திங்கள்முடி சூடுமலை
தென்றல் விளை யாடுமலை
தங்குமுகில் சூழுமலை
தமிழ் முனிவன் வாழுமலை
அங்கயற்கண் அம்மைதிரு
அருள்சுரந்து பொழிவதெனப்
பொங்கருவி தூங்குமலை
பொதியமலை என்மலையே"

எனப் பொதிய மலைக் குறத்தி பாடுவதாக வரும் பாட்டு நெஞ்சைத் தொடவில்லையா? எவ்வாறாயினும் தெய்வத்தை அன்னையாகக் காணுதல் பல சமயங்களிலும் வருவதுதான்.

"அன்னையின் பாதத்தை முத்தமிடுகின்றவன்
சொர்க்கத்துக்குப் போகின்றான்".

என்று நபிகள் நாயகம் கூறியிருப்ப தும், தாய் வடிவே தெய்வம் என்பதைக் காட்டும். மனிதன் நாகரிக ஏணியிற் படிப்படியாக ஏறிவரும்போது தன்னைச் சூழநிற்கும் இயற்கையும் தன் அன்னையை ஒத்திருக்கின்றதைக் கண்டுகொண்டான். இயற்கையன்னை தெய்வமாவாள். இயற் கைச் சக்தி அனைத்தும் தெய்வப்பெயரைச் சொல்ல வைத்தான். நாகபூஷணி அன்னையும் அந்த இயற்கைத் தெய்வமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகமெங்கும் அந்த சரித்திர காலத்திற்கு முன்பே இயற்கைச் சக்தி வழிபாடு நிலவியது. "வேதோபநிக்ஷத்" காலங்களில் ஸ்துால சக்திகளைக் காட்டிலும் சூட்சும சக்திகள் முக்கியமானவை என்று கருதப்பட்டன.

"ஆதி மகா சக்தியே அதிசூட்சும மகா சக்தி" அச்சக்தியில் வேரூன்றி வளர்வதே சௌந்தரியம் என்பதால் பரப்பிரமத்தை உபநிடதங்கள் வருணிப்பதுபோல ஆதிசக்தியைத் தந்திரங்கள் வருணிக்கின்றன.

ஆதிசக்தியாகிய உலகத்தாயை நீ ஆண் அல்லை பெண் அல்லை என்றெல்லாம் வருணிக்கக் காணலாம். இப்படிப் பரப்பிரமத்தை ஒத்திருக்கும் மகா சக்தியைத்தான் சண்டிகாதேவி என்ற பெயராற் தந்திர நூல்கள் குறிப்பிடுகின்றன.

"நாணயத்தின் ஒருபுறம் பரப்பிரமம் மறுபுறம் மகா சக்தி எனக் கூறுவர். நிர்க்குணப் பிரமம் குணங்கள் முதலியவற்றை ஏற்றுக் கொண்டு சகுனப்பிரமமாகக் காட்சி தருவதுபோல சண்டிகாதேவி மகாலட்சுமியாகக் காட்சி தருவாள் என்பர். எனினும் இந்த மகாலட்சுமி வேறு திருமாலின் தேவியாக வைஷ்ணவரால் வழிபடப்பெறும் மகாலட்சுமி வேறு எனவும் கொள்வர். தாந்திரியங்களில் மகாலட்சுமி "மகிக்ஷாசுரமர்த்தனியே". இவளுடைய அம்சமே மகாகாளி சுத்த தத்துவ அமிசம் மகா சரஸ்வதி. இவ்வாறு தேவியின் தோற்றம் விரிவடையும்.

தேவியின் தோற்றத்தில் இறையைக் கண்டவர்கள் அநேகர். இராமகிருஷ்ணர், அபிராமிப்பட்டர், போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் இயற்கையில் அமைந்த பூமி, நதி, வனம் போன்ற சக்தியாகி அன்னைக்கும் அவள் அன்புக்கும் கலைத்துவம் கொடுத்து வழிபாடு இயற்றவும் காண்கின்றோம். கலையின் விளக்கே தெய்வம். அந்தக்கலை எங்கும் ஏற்றம்பெற்று அன்பாகி அருளான ஆதிமூலமாய் அன்னைவடிவில் வந்து உதவுதல் கண்டு இன்புறுவோமாக!

அன்னை பாதம் பணிவோம் அவளருள் பெற்றுய்வோம்!

**நன்றி: மகாசக்தி மகத்துவமலர்**

---

மங்கலை செங்கல சம்முலை யாள்மலை யாள்வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயில் தாவுகங்கை
பொங்கலை தங்கும் புரிசடை யோன்புடை யாள் உடையாள்
பிங்கலை நீலிசெய் யாள்வெளி யாள்பசும் பெண்கொடியே.

கொடியே இளவஞ்சிக் கொம்பே எனக்குவம் பேபழுத்த
படியே மறையின் பரிமள மேபனி மால் இமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே
அடியேன் இறந்(து) இங்(கு) இனிப்பிற வாமல்வந்(து)
[ஆண்டுகொள்ளே

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டூர், வீயோடை, இலுப்பையடி

**ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான திருத்தேர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேகத்தின்போது - 04.03.2010

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அருள்மிகு வட்டூர் வீயோடை மாரியம்மன் உலா வருவதற்கான**

திருத்தேரைச் செய்தளித்த அறங்காவலர்
திருமிகு.சிவலிங்கம் கலைவாணன் அவர்களும்
அவர்களின் குடும்பத்தாருக்கும் எங்களது நன்றிகள்

# திருத்தேர்க்காட்சி

தவம்மிக்க வியோடை கோயில் தன்னில்
தரம்மிக்க மாரியம்மன் தேரும் வந்தது
சிவலிங்கம் கலைவாணன் தந்த சீரால்
சிறப்பான மாரியம்மன் தேரும் வந்தது
நவமான உமையாளினி, சிந்துஸன்
கனிவான சுபாங்கினி லக்ஜியா
கவனமுடன் அடியார்களும் சேர்ந்து இழுக்க
காத்தருளும் மாரியம்மன் தேரும் வந்தது.

Dr.பழனியப்பன், B.lit., M.A., M.Phil., Ph.D., B.Ed., PGDCA.,READER IN TAMIL,

**பிரான்ஸ் – வட்டூர் பரிபாலனசபைகள் சார்பாக**
**தலைவர் ம.ந.கணேஸ்வரன்**

வட்டூர்ச் சிவன் வடக்கு வீதியிலே வீயோடை வளவு தன்னில்
எட்டுத் திசையும் அருள் செய்யும் எங்கள் முத்துமாரிக்கு
-வலம் வரவே

கட்டுக்குலையாத கருங்காலி வேம்பு பாலை
இஷ்டமுடன் இலுப்பை தேக்கு மருது மரம் கொண்டு
கொட்டும் முரசொலியுடனே கொழுந்து விட்டெரியும்
கற்பூரச்சட்டிகள் புடை சூழ - உலாவரும்
நித்தம் அவள் அழகைக் காணும் சித்தம் கொண்டு
சித்திரத்தேர் தந்திட்டான் சிவலிங்கம் கலைவாணன்

தந்தை எண்ணமதை தரணியிலே நிலை நிறுத்திடவே
சிந்தை கொண்டு செயல்பட்டான் சீரான செல்வ மகன்
வண்ணமொடு வடிவான சித்திரத்தேர் வடிவம் கண்டு
திண்மொடு செய்து சிறப்பிக்க எண்ணியிங்கே
எண்ணம் நிறைந்து நின்றான் எழில் வதனம் மாறாமல்

வந்தது பார் ரதம் இங்கே வடக்கு வீதியிலே - அது
சென்றது பார் சிவன் வீதி ஊர் சுத்தி செழிக்க எம்மக்கள்
நன்றது செய்திட்டான் சைவத் தமிழ் மணக்க
என்று நாம் வாழ்த்திடுவோம் அவன் நற்பணி தழைத்தோங்க

ஆக்கம்: ம.ந.கணேஸ்வரன் (பிரான்ஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய தெய்வ வழிபாடுகளும் சக்தியின் தத்துவமும்

– ம.ந.கணேஸ்வரன் –
தலைவர் பரிபாலனசபை.
உதவிக் கணக்காளர் (பிரான்ஸ்)

"அடிசேர்வன் என்னளம் ஆதியை நோக்கி
முடிசேர் மலைமக னார்மக ளாகித்
திடமார் தவஞ்செய் தேவர் அறியப்
படியார் அர்ச்சித்துப் பக்தி செய்தாளே"

இந்த உலகம்தான் திருவழிபாட்டிற்கு உகந்த இடம். ஒரு செய்கையால் உலகிற்கும் ஊருக்கும் நன்மை கிடைக்குமானால் அது சிறந்த செயலாகும். நிலத்தே திருகோவில்கள் அமைத்துப் பூசை செய்வதும் அப்பூசை தன்னைக் கண்டு வழிபட்டு உய்பவர்க்கும் பலன் உண்டாகும். வானுலகத்திலோ அன்றி அவரவர் மனைகளிலோ பூசை செய்வதால் அவை பிறர்க்குப் பயன்படுவதில்லை அதனாலே சிவன்-சக்தி அருளுமிடமாக பூவுலகத்தில் திருக்கோவில்கள் அமைத்து அருளுகின்றனர். இதனையே தமிழாகமமான சிவஞான சித்தியார்

"வானிடத்தவரும் வந்து
மண்மேல் அரன்றனை அருச்சிப்பர்."

என்று சாற்றுவதாயிற்று. எனவே தான் உன்னி உலகத்திலேயே உயர்ந்த உச்சியினையுடைய வட எல்லையின் பனி மலையின் மகளாக பூமியில் உமையவள் தோன்றி, இறைவனை வணங்கினாள். ஆகவே, இது இங்கு கோவில் எதற்கு விழா எதற்கு எனக் கேட்போருக்கு ஒரு எடுத்துக் காட்டாக அமைகின்றது.

சுழலும் பூமி தன்னிற் பலகோடி ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய மனிதன் இவை இவைதான் இறைவன் என வணங்கினான் என்பதை உறுதியாக கூறமுடியாது எனினும், அவன் தன்னைச் சுற்றியுள்ள சிறுசிறு செயற்பாடுகளுக்கும் ( நெருப்பு, நீர், வளி, வான் , விலங்கினம்) பயந்து நடுங்கி ஒளிந்து கொண்டிருந்தான் என்பது விஞ்ஞான மெஞ்ஞான உண்மைகளாகும். எனவே தன்னைச்சுற்றி இருக்கும் செயற்பாட்டில் இருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும் அவைகளின் கோபங்களிலிருந்து தன்னை விடுவிக்கவும் அவைக்கு தலை வணங்கினான் போலும் எனவே மணிதன் முதலில் வணங்கியது இயற்கையையே. இப்படிப்பட்ட மனிதன் வழியில் காணும் கல்லைக்கூட வழிபடத் தொடங்கினான். இதை இன்றுகூட பல வீதிகள், சந்திகளில் காணலாம்.

பண்டைய காலமான சங்க காலத்தில் சிவ வழிபாட்டிற்கு அடையாளமாக சிந்து வெளிப்பள்ளத்தாக்கின் கண்டு பிடிப்புக்களும், சிவலிங்க வழிகாடுகளும், எகிப்து நாட்டுப் பழம்பெரும் சமாதிகளில் லிங்க உரு வழிபாடும் சிவவழிபாடும் உலகளாவியதை அறிவோம். மேலும் தொன்மைச் சமயமான சைவ சமயத்தின் காலம் வரையறுக்க முடியாவிட்டாலும் சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளாகச் சிவபெருமானைக் குறிப்பிடுவர். சிவபெருமான் படைத்தல், காத்தல், அழித்தல் அருளல், மறைத்தல், போன்ற தனது ஐந்து தொழில்களையும் வழங்குவதற்குரிய வடிவம் சக்தியாகும். சைவ சமயத்தின் முதன்மை நூல் சைவத்திருமுறைகள் என்று கூறுவதுண்டு. அங்கே சிவன் இருப்பிடம் யாவும் சக்தி இருப்பிடம் என இரண்டையும் பிரித்துப் பார்க்காது வழிபட்டிருப்பதைக் காணலாம். தமிழ் மொழியின் தொன்மை இலக்கியமான சங்க இலக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத்தில் ஒன்றான திருமுருகாற்றுப் படையில் முருகனைக் குறிப்பிடும் போது "கொற்றவை சிறுவ" என்று குறிப்படுகின்றது.
(அடி-258)

கொற்றவையை அகநானூறு
"ஓங்கு புகழ் காடமர் செல்வி"

என்று குறிப்பிடுகின்றது. கலித் தொகை குறிஞ்சிக் கடவுள் முருகனை குறிப்பிடும்போது சிவன் உமையவள் இருவரின் மகனாகக் குறிப்பிடுகின்றது. (பாடல்-81) இவ்வாறு சங்க காலத்தில் சிவனின் அருள் துணையாகவும் முருகப் பெருமானின் தாயாகவும் சக்தி உமையவள் வணங்கப் பெற்றிருக்கின்றாள். சங்க காலத்தின் மருவிய காலமான காப்பிய காலத்தில் (கி.பி 2- கி.பி 6 வரை) சிலப்பதி காரம், மணிமேகலை அந்தக் கால ஐவகை நிலங்களையும் வாழ்வு நெறி தெய்வ வழிபாடு நம்பிக்கை தந்தாலும் சிவவழிபாடு சுருங்கக் கூறப்பட்டுள்ளது. சிலப்பதிகார காதை வேட்டுவ வரியில் கொற்றவை வழிபாடும், காங்கேயன் காதையில் திருநீறு பூசும் வழக்கமும், சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் சக்திக்கு தேவையாகிய தனிக் கோவி லாகிய கோட்டம் அமைக்கப்பட்டது. சங்க காலத்தில் அருள் வழங்குவற்குரி யவளாக கொற்றவை கருதப்பட்டாள் எனவே போருக்கு செல்பவர்களும் வெற்றி பெற்றுத் திரும்புகின்றவர்களும் சக்தியை கொற்றையவையாகப் போற்றி வழி பட்டனர். எனவே சக்தி வழிபாடு அங்கும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

சங்க இலக்கிய, காப்பிய காலத் திற்குப் பின்னால் தோன்றிய தேவாரம் உள்ளிட்ட திருமுறைகளில் சக்தி உமைய வளாக, கயிலைச் செல்வியாகப் போற்றப் பெற்று சிவபெருமானுக்கு உரிய பெண் தெய்வமாக அம்மன் வழிபாடாக மாறிற்று. எனவேதான் சிவன் கோயில் களில் அம்மன் கோயில்கள் பத்தாம் நூற் றாண்டிற்குப் பிறகு தனிச் சந்நிதியாகத் தோன்றின. இங்கு ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். சிவலிங்க வடிவத்தில் சிவனும் சக்தியும் சேர்ந்து இருப்பதாக (சிவன்: லிங்க உரு, சக்தி ஆவுடை) வழி பட்ட நிலை பத்தாம் நூற்றாண்டிற்குப் பிறகு மாறத்தொடங்கியது. அது தனி அம்மன் வழிபாடாகப் பரிணமித்தது. இதனால்தான் தேவாரம், திருவாசகம் போன்ற திருமுறைகளில் ஒவ்வொரு திருத்தலத்திலும் இறைவனின் பெயர் குறிக்கப்படுகிறதே அன்றி அம்மன் பெயர் காணப்படவில்லை. பொதுவாக உமையம்மைஎன்றுதான்குறிக்கப்பெற்று ள்ளது. இந்தத் தனி அம்மன் சந்நிதிகள் கிராமங்களில் பெண் தெய்வ வழிபாட் டிற்கு அடிப்படையாக அமைந்தது. அருள் வழங்குகின்ற சக்தி கிராம மக்களுக்குக் குலதெய்வமாக மாறினாள். விவசாயத் தொழில் தான் கிராமத்தின் முக்கியத் தொழில். அந்த விவசாயத்திற்கு மழை மிக முக்கியம். கிராம மக்கள் மழையை நம்பியே வாழ்ந்தார்கள். மழையைத் தருவது இறைவனுடைய அருள் என்று முழுமையாக நம்பினார்கள். அந்த அருளைத் தருபவள் பெண்தெய்வம் என்பதால் அவளை மாரி என்றே அழைத் தார்கள். கருமாரி, முத்துமாரி என்றெல் லாம் பெயரிட்டுச் சக்தியை வழிபடத் தொடங்கினார்கள். கிராமங்களில் சிவன் கோயில்கள் உள்ளதோ இல்லையோ தனி அம்மனாகிய மாரியம்மன் கோயில்கள் கட்டாயம் இருக்கும் நிலை ஏற்பட்டது. இதுதான் மேலோட்டமாக அம்மன் வழிபாட்டு வரலாறாகக்கூறப்படுகிறது.

இந்த அம்மன் வழிபாட்டைச் சைவ சித்தாந்த சாத்திரங்களும் சிறப்பித்துக் கூறுகின்றன. சிவஞான சித்தியார் சைவ சித்தாந்த சாத்திர நூல்களில் ஒன்றாகும். இதனைப் பாடியருளியவர் அருணந்தி சிவாச்சாரியார் ஆவார். இந்நூல் சிவஞான போதம் என்ற சாத்திரநூல்களில் தலைமை பெற்ற நூலின் விளக்கமாக அமைந்த தாகும். இந்நூலில் சக்தி பற்றிய கருத்துக் கள் விரிவாகத் தரப்பெற்றுள்ளன. அவற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுள் பின்வரும் கருத்துக்கள் குறிக்கத் தக்கனவாகும்.

**1. சக்தியே ஞானம் ஆகும்**

வழிபாட்டு முறைகளைக் கூறுவன திருமுறைகள் ஆகும். வழிபாட்டிற்குரிய இறைவனைப் பற்றியும் உயிர்களைப் பற்றியும் உயிர்களுக்கு ஏற்படுகின்ற இன்ப துன்பங்களைப் பற்றியும் கூறுவன சாத்திரங்கள் ஆகும். எனவேதான் திருமுறைகளைத் தோத்திரங்கள் என்றும், சாத்திரங்களைத் தத்துவங்கள் என்றும் சைவசமயத்தவர்கள் போற்றுகின்றனர்.

சாத்திர நூல்கள் பதினான்கும் பதி, பசு, பாசம் என்ற முப்பொருளைப் பற்றி விரிவாக விளக்குகின்றன. பதியாகிய இறைவனின் தத்துவங்கள் குறித்தும் இவை விரிவாகப் பேசுகின்றன. இறைவன் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்களைச் செய்கின்றான். அந்த ஐந்துத் தொழில்களைச் செய்கின்றபோது இறைவன் ஐந்து வடிவங்களை ஏற்றுக் கொள்கிறான். பிரமன், திருமால், உருத்திரன், திரோதானம், சக்தி என்ற ஐந்தும் அவனுடைய வடிவங்களாகும். இது சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கை. சிவன் படைக்கின்ற தொழிலைச் செய்யும் பொழுது அந்தந்த தெய்வவடிவங்களை ஏற்றுக் கொள்கிறான். எனவேதான் சிவஞான சித்தியார் நூலின் எண்பத்தோராவது பாடலில் சக்தி வடிவம் பலவாக இருப்பதற்குக் காரணத்தை- அரசன் - அமைச்சன் உவமையால் விளக்குகிறது.

அரசன் ஒருவனாய் இருக்க, அமைச்சர் பலராக இருக்கின்றனர். அரசனுடைய ஆணையைச் செயல்படுத்துவதற்கு ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு அமைச்சர் அமைகின்றார். அதுபோலச் சிவபெருமானுடைய அருளாகிய சக்தி ஒன்றாக இருந்தாலும் தொழில்படும் போது பல வடிவங்களை ஏற்றுக் கொள்கிறது என்பது அப்பாடல் தரும் கருத்தாகும்.

இத்தகைய சக்தியின் வடிவங்கள் பலவாக இருந்தாலும் அருள் தொழிலைச் செய்யும் பொழுது அவ்வடிவம் நேரிடையாகப் பெண்வடிவமாகக் கொள்ளப் பெறுகிறது. அப்பெண் தெய்வம் தடையில்லா ஞானத்தின் வடிவமாகும் என்று இந்நூலின் எண்பத்து இரண்டாம் பாடல் குறிப்பிடுகிறது. உயிர்களுக்கு இருக்கக் கூடிய ஆணவ மலம் நீங்கிப் பரிபக்குவம் அடைவதற்குச் சக்தி தோன்றாத் துணையாக இருப்பதால் அவளின் வடிவத்தை ஞானவடிவம் என்று இப்பாடல் குறிப்பிடுகிறது. இதனையே சிவப்பிரகாசம் என்ற தத்துவ நூலும் சுத்தமாம் சக்தி ஞானச் சுடராகும்(பாடல்-75) என்கிறது. எனவே கலைமகளாக பராசக்தியாக தமிழர்கள் போற்றி வணங்குவதும் சக்தி ஞானத்தைத் தருவதால்தான். எனவே சித்தாந்த அடிப்படையில் சக்தியாகிய பெண் வடிவம் ஞானத்தின் வடிவாகக் கொள்ளப் பெற்றிருக்கிறது என்பது தெரியவருகிறது

**2. சக்தியின் வடிவம் பல**

இறைவன் அருவவடிவமாக இருக்கும் பொழுது சிவம் , சக்தி, நாதம், விந்து என நான்காக இருக்கிறான். உருவத் திருமேனியாக இருக்கும் பொழுது மகேசுவரன், உருத்திரன், திருமால், பிரமன் என நான்காக இருக்கிறான். அருவுருமாக இருக்கும் பொழுது சதாசிவமாக இருக்கிறான். இத்தகைய ஒன்பது வகைகளைத் தான் நவம் தரும் பேதம் என்று தத்துவ நூலோர் குறிப்பிடுவர். இதனைச் சிவஞான சித்தியாரின் நூற்று அறுபத்து நான்காம் பாடல் குறிப்பிடுகிறது.

இந்த ஒன்பது பேதங்களுக்கு ஏற்ப சக்தியும் ஒன்பது பேதங்களைக் கொண்டுள்ளாள் என்று கூறுகிறது இதற்கு அடுத்தபாடல். சிவம், சக்தி, நாதம், விந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோன்மணி, மகேசை, உமை, இலக்குமி, சரசுவதி என்பன அவை என்று அப்பாடல் சக்தியின் ஒன்பது நிலைகளைக் குறிக் கின்றது. சிவபேதங்கள் ஒன்பதிற்கு ஏற்ப சக்தி பேதங்களும் ஒன்பது என்று குறிப்ப தோடு இப்பாடல் - எத்திறம் நின்றாள் அத்திறம் அவளும் நிற்பாள் - என்று கூறி முடிக்கிறது. இந்தத் தொடர் மிக இன்றி யமையாத தொடராகும். சிவம் வேறு சக்தி வேறல்ல. சிவன் செய்ய நினைக்கிற தொழிலை எல்லாம் சக்தி ஏற்று நடத்து கிறாள் என்பதை இத்தொடர் வலியுறுத் துகின்றது. அருள் வழங்க எண்ணும் பொழுது சிவமாகவும், அருளை வழங்கு கிற தொழிலைச் செய்கின்றபோது சக்தியா கவும் இறைவன் விளங்குகின்றான் என்பதை இத்தொடர் அழுத்தமாகக் குறிப்பிடுகின்றது. இந்த வடிவங்களை எல்லாம் மூன்று நிலைகளுக்குள் அடக்கிவிடலாம் என்பதையும் சித்தியார் குறிப்பிடுகிறது.

எண்பத்திமூன்றாம் பாடலில் இச்சாசக்தி என்றும் கிரியா சக்தி என்றும் ஞானசக்தி என்றும் என்றும் மூன்று வகையாகக் குறிப்பிட்டு அப்பாடல் அவற் றுக்கான விளக்கத்தையும் தருகின்றது. இச்சாசக்தி என்பது உயிர்களுக்கு மலத்தை நீக்கி சிவத்தை வழங்கவேண்டும் என்ற இரக்கம் உடையதாகும். இதனை இச்சை உயிர்க்கு அருள் நேசம் என்று பாடல் குறிப்பிடுகின்றது. அதுபோல ஞானசக்தி என்பது இரக்கம் கொண்டபின் அதனைச் செயல்படுத்துவதற்கு உரிய உபாயங்களை (வழிமுறைகளை ) நினைப்பது ஆகும். ஞானசக்தியால் நயந்து அறிவது என்று இதனை இப்பாடல் குறிக்கிறது. அடுத்து கிரியா சக்தி என்பது உயிர்களுக்கு அருள்வழங்கும் செயன்முறைகளைச் செயல்படுத்துவதாகும். இதனை இப் பாடல் கிரியை நாதன் அருளைத் தன்னால் ஆக்குவது என்று குறிப்பிடுகிறது. இவ்வாறு சக்தியின் வடிவங்களைப் பற்றிய தத்துவச் செய்திகளை சிவஞான சித்தியார் என்ற சித்தாந்தத் தத்துவ நூல் எடுத்து ரைக்கின்றது.

### 3. சக்தியின் பயன்

இறைவன் அருள் வழங்க சக்தி வடிவத்தைக் கொண்டிருப்பதால் உலகிற்கு என்ன பயன் என்பதையும் சிவஞான சித்தியாரின் எண்பத்தியோராவது பாடல் எடுத்துரைத்துள்ளது.

சக்தியும் சிவனும் ஆய தன்மை இவ்வுலகம் எல்லாம்
ஒத்து ஒவ்வா ஆணும் பெண்ணுமாக உணர்குண குணியும் ஆகி
வைத்தனன் அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்வை எல்லாம்
இத்தையும் அறியார் பீடலிங்கத்தின் இயல்பும் ஓரார்.

இப்பாடலின் பொருள்: இறைவன் சக்தியும் சிவமுமாக இருவேறுபட்ட தன்மைகள் உடையவனாய் இருத்தலால் உலகத்தின் எல்லாப் பொருளும் வடி வத்தில் ஒத்து, இயல்பால் வேறுபட்டு ஆணும் பெண்ணுமாகக் குணமும் குணிப் பொருளுமாக அமைந்துள்ளனர். இவ் வுலக வாழ்க்கை எல்லாம் சிவனும் சக்தியும் கூடுவதால் அமைகின்றன. இதனை உணராதவர்கள் சிவசக்தியை உணர மாட்டார்கள். லிங்க வடிவில் அமைந் துள்ள பீடத்தையும் லிங்கத்தின் கூம்பின் பொருளையும் உணர மாட்டார்கள் என்பதாகும். எனவே இறைவன் சிவமும் சக்தியுமாக இருப்பதால்தான் இவ்வுல கத்தில் ஆண், பெண் வடிவங்கள் அமைந்து வாழ்க்கை முறை அமைகிறது என்று சிவசக்தியின் பயன் இந்நூலில் கூறப் பெற்றுள்ளது.

### 4. சிவமும் சக்தியும் வேறல்ல

இறைவன் சிவனும் சக்தியுமாக இருந்தாலும் இருவரும் ஒருவரே என் பதைச் சிவஞான சித்தியார் வலியுறுத் துகிறது. அருள் எனப்படுவது இறைவனின் சக்தியாகும். சக்தியிலிருந்துச் சிவத்தைப் பிரித்தறிய முடியாது. சிவத்தில் இருந்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியாகிய வேறுபொருள் இல்லை. எப்படி சூரியனும் சூரிய கதிர்களும் ஒன்றாக இருக்கின்றனவோ அதுபோலச் சக்தியும் சிவமும் ஒன்றே. இருளை ஓட்டி வெளிச்சத்தைத் தருகின்ற சூரியனும் சூரிய கதிர்கள் போல சிவமும் சக்தியும் உயிர் களுக்கு உரிய குற்றங்களாகிய இருளை ஓட்டி அருளைத் தருகின்றன என்று இருநூற்றுமுப்பத்தொன்பதாம் பாடல் குறிப்பிடுகின்றது. இந்தப் பிரிக்கமுடியாத நிலையைத்தான் அர்த்த நாரீஸ்வரர் வடிவமும் காட்டுகிறது. இதனையே மணிவாசகரும் திருவாசகத்தில் "உடை யான் உந்தன் நடுவுள் இருக்கும் உடையாள் நடுவுள் நீ இருத்தி" - என்று பாடுகின்றார்.

**5. சக்தியை வழிபடுவதால் முக்தி கிடைக்கும்**

தமிழர்கள் வழிபாட்டில் சக்தி வழிபாடு முதன்மையான வழிபாடாகவும், இன்றியமையாத வழிபாடாகவும் அமைந் துள்ளமையை மறுக்க இயலாது. அம்மன் வழிபாடு அனைத்து மக்களாலும் ஏற்றுக் கொள்ளப் பெற்று எளிமையாகவும் சிறப் பாகவும் கொண்டாடப்படுகிறது. என்றைக்கும் கிடைக்கக் கூடிய வேப்பிலை மாலையும் , எவ்வளவு வறுமை வந்தாலும் கிடைக்கக்கூடிய கூழ் படையலும் அம்ம னுக்கு உரியதாகக் கொள்ளப் பெறுகிறது. அம்மன் வழிபாட்டிற்குரிய ஆடையாக எளிய மஞ்சள் ஆடை கொள்ளப் பெறு கிறது. இவற்றை எல்லாம் நோக்கும் பொழுது மக்களின் வாழ்க்கைமுறையோடு இணைந்திருக்கின்ற வழிபாடு அம்மன் வழிபாடே என்பதை உணரலாம். இன்னும் குறிப்பிட்டுச் சொன்னால் அம்மனுக்கு வழிபாடு செய்ய வேத ஆகமங்கள் கற்றிருக்க வேண்டியதில்லை. அடித்தட்டு மக்களும் கூட வழிபாடு செய்பவர்களாக அமையலாம்.

கோயில்களில் அமைகின்ற இடமும் மாட மாளிகை கூட கோபுரங்கள் உடை யது அல்ல. மரத்தடிகள், ஊர் எல்லைகள், சுடுகாட்டுப் பகுதிகள் ஆகியவைதான் சக்தியின் இருப்பிடங்களாகக் கொள் ளப்பட்டன. வீயோடை முத்துமாரி யம்மனின் தோற்றமும் அவ்வம்மன் இலுப்பை மரத்தடியில் அமைந்திருந்த நிலையையும் இதற்கு மிகப்பொருத்த மாகக் கொள்ளலாம்.

அம்மனுக்கு வடிவம் என்று வருகிற பொழுது கல்லில் அல்லது ஐம்பொன்னில் வடிக்கவேண்டும் என்று இல்லாது சுண்ணாம்பு அல்லது மண்ணால் அமைக்க லாம் என்ற எளிய நிலையும் அம்மன் வழிபாட்டில் நிலவி வருகின்றது. இன் றைய அறிவியல் காலத்தில் கூடச் சிறு கிராமங்களில் மூன்று செங்கள்களை வரிசையாக நிற்க வைத்து மஞ்சள் தடவி குங்குமம் வைத்துக் கிராம தேவதையாக வழிபடுவதைக் காணலாம்.

எனவே எளிய நிலையில் ஏற்றத் தாழ்வின்றி அனைத்து மக்களாலும் அம்மன் வழிபாடு ஏற்கப் பட்டு உலகம் முழுவதும் நடை பெற்று வருகின்றது. இத்தகைய வழிபாட்டிற்குக் காரணம் உலகத்து நாயகியாக இருக்கின்ற முத்து மாரியாம் சக்தி உயிர்களுக்கு ஏற்படும் அம்மை நோய் போன்ற பிணிகளை நீக்கி மழையைப் பெய்ய வைத்து பயிர்களை வளர வைத்து உலகத்தையே காப்பாற்று கிறவள் அவளே முக்தி தரக்கூடியவள் என்பதாகும். அந்த வகையில் நாமும் எம்மால் ஆன முயற்சினை மேற்கொண்டு எவ்வளவோ இன்னல்கள் மத்தியில், எம்மவர்களும் மற்றைய மக்களும் தங்கு தடைகள் இன்றி அந்த மாரி தன்னை வணங்கி எல்லா நன்மையும் பெற வேண்டும் என்ற நோக்கினில் எம் தாயான வளைப் புனரமைத்து மகா கும்பா பிஷேகம் செய்துள்ளோம். அம்மன் வழிபாடு வளரவேண்டும் உயிர்கள் எல்லாம் உய்ய வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**நேருஜி சனசமூக நிலையம்**

**NEHRUJEE COMMUNITY CENTRE**

பதிவு எண்:-Regd No:~ 431:~19~10~56

Kalainagar
SITHANKERNY

கலை நகர்,
சித்தன்கேணி

31-12-2009

# அருளாட்சிமிக்க பெருமாட்டிக்கு ஒரு கலைக்கோயில்

வட்டூரில் கோயில் கொண்டு அருளாட்சி செய்துவரும் ஆலயங்களில் தொன்மையும் சிறப்பும் வாய்ந்ததொன்றாக விளங்கிவரும் வீயோடை, இலுப்பையடி ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயம், புதுப்பொலிவுடன் ஒரு கலைக்கூடமாக குடமுழுக்கு காண்பதனையிட்டு நாமெல்லாம் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்.

சைவத்தையும் தமிழையும் வளர்த்துப் போற்றுகின்ற நிலைக் களமாக சைவாலயங்கள், என்றும் விளங்கி வருகின்றதென்பது கண்கூடு. அந்த வகையில் எமது மக்களால் போற்றிப் பாதுகாத்து வரப்பட்ட நாட்டுக் கூத்தும், நாட்டார் கலைகளான காவடியாட்டம், புரவி நடனம், பொம்மலாட்டம் அனுமார் ஆட்டம் போன்றவைகளின் காப்பகமாகவே அம்பாள் ஆலயம் விளங்கி வருகின்றது. அன்றியும் அம்மைபோன்ற கொடிய நோய்களிலிருந்து மக்களைக் காப்பவரும் இவ்வனையே என்று மக்கள் பெரிதும் நம்பிக்கையுடன் வழிபட்டு வருகின்றார்கள்.

இவ்வாறான சிறப்புக்கள் வாய்ந்த அம்பாள் ஆலயத்தை ஒரு முழுமையான தேவஸ்தானமாக ஆக்குவதற்காக உள்ளூர் திருப்பணிச் சபையினரதும், அறங்காவலர் களினதும் ஒத்தாசையுடனும், பிரான்ஸ் திருப்பணிச் சபை மேற்கொண்டுவரும் உன்னதமான நற்பணி போற்றப்பட வேண்டிய ஒன்றாகும்.அவர்களால் ஆக்கப் பெறும் கும்பாபிஷேக மலர் சிறக்கவும், அவர்கள் பணி மென்மேலும் தொடர்ந்து மக்களுக்குப் பயன் படவும் எல்லாம்வல்ல வீயோடை இலுப்பையடி ஸ்ரீ முத்துமாரியம்பாள் பொற்பாதங்களை வணங்கி வாழ்த்துகின்றோம்.

தலைவர் : இ.புரந்திரதேவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆரம்பம் - 1949 பதிவு இல - J/V44/CC170

# காந்திஜி சனசமூக நிலையம்
# GHANDIGI COMMUNITY CENTRE

Sinthupuram சிந்துபுரம்
Vaddukoddai வட்டுக்கோட்டை
21.12.2009

## கலைகளின் காப்பகமாக விளங்குவது முத்துமாரித் தாயின் முன்றலே

செந்தமிழும் சீரிய நற் கலைவடிவங்களும் தன்னகத்தே அமைந்த வட்டூரின் நடுவே, கலைகளின் தாயாக வட்டூர் இலுப்பையடி முத்து மாரியம்மன் அமர்ந்திருந்து அருள் பாலித்துக்கொண்டுள்ளார்.

வட்டூரின் வனப்புமிகு கலைவடிவங்கள் இன்று உலகெங்கும் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. இக்கலை வடிவங்களுள் நாட்டுக் கூத்தும், நாட்டார் கலைகளான காவடியாட்டம், புரவி நடனம், பொம்மலாட்டம் அனுமார் ஆட்டம் போன்றவைகளின் வளர்ப்பிடமாகவும் விளங்குவது முத்துமாரித் தாயின் முன்றலே.

ஒரு இனம், ஒரு மொழி, ஒரு சமூகம் தொடர்ந்து நின்று நிலைக்க வேண்டுமாயின் அதன் பாரம்பரிய கலைப் பண்பாட்டு விழுமியங்கள் பேணிப் பாதுகாக்கப் படவேண்டியது அவசியமாகின்றது. இப்பாரம்பரிய பண்பாட்டுக் கலை வடிவங்களைப் பேணுவதில் ஆலையங்கள் பிரதான நிலைக் களங்களாக விளங்குகின்றன. இவற்றுள் குறிப்பாக, எமக்கே உரித்தான பண்பாட்டுக் கலைவிழுமியங்களின் காப்பகமாக, காக்கும் தாயாக வீயோடை முத்து மாரியம்மன் விளங்குகின்றாள்.

அம்மனின் உற்சவ காலங்களில் முத்து மாரித்தாயின் ஆலய முன்றலிலே இக் கலைவடிவங்கள் அரங்கேற்றப்படும் பாரம்பரியம் அன்று தொட்டு இன்றுவரை பேணப்பட்டு வருகின்றது. இனிவரும் காலங்களில் இது தொடரவேண்டும். இதற்காகக் கலைக்குழுவினரும் ஆலய அன்பர்களும் மனதாரச் செயற்படவேண்டும். கலைகளின் பிறப்பிடமாக வளர்ப்பிடமாகத் திகழும் ஆலயமும், இன்று புதுப் பொலிவு பெற்று ஒரு சிற்பக் கலைக்கூடமாக, வரலாற்றுக் காப்பகமாக வளர்ச்சி கண்டுள்ளது. இதற்காக உழைத்த அடியார்களும் பிரான்ஸ் நாட்டில் வாழும் நம் ஊரவர்களின் பணியும் போற்றற்குரியது. இவர்கள் பணி ஆலயக் கட்டிட வளர்ச்சியுடன் மட்டும் நின்றுவிடக்கூடாது. மகேசன் பணியுடன் மக்கள் பணியும் தொடரவேண்டும். இப்பணிகள் தொடர அம்மன் பாதங்கள் பணிந்து வாழ்த்துகின்றோம்.

தலைவர்
ப.சோழன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Retired Lecturer
Palaly Teachers College,
Vasavilan

# A.ARIARATNAM J.P

"Sivapathy"
Vaddu-West
Vaddukoddai
Date 07/12/2009



## வட்டூர் இலுப்பையடி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன்

வட்டூரில் வாழ்ந்துவந்த எமது முன்னோர்கள், தெய்வ நம்பிக்கை மிக்கவர்கள். இவர்களின் தெய்வ வழிபாடும், தெய்வ சிந்தனையும் இவர்களின் பின்தோன்றல்களின் வாழ்க்கை சிறக்கக் காரணமாய் இருந்து வருகின்றது. இவ்வூரில் வாழ்ந்தோரும், இப்போது வாழ்ந்து வருகின்றவர்களும் ஒவ்வொரு செயற்பாட்டிற்கு முன்னரும் தெய்வ சிந்தனையுடன் சிந்தித்து தங்களது நிகழ்வுகளை ஆரம்பித்து வருகின்றனர். இவ்வாறு ஆரம்பிக்கும் நிகழ்வுகள் மிகச் சிறப்பாக, மனத்திருப்தியோடு நிறைவேறி வருகின்றன. வட்டுக்கோட்டையில் 25க்கு மேற்பட்ட ஆலயங்கள் சிறப்பான பூசைகளுடன், நித்திய நைவேத்திய முறையில் பக்தியோடு நடைபெற்று வருகின்றன.இவற்றுள் வட்டூர் இலுப்பையடி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயமும் ஒன்று.இது தற்போது கோபுரம் மாட மண்டபங்கள் தேர்த்திருவிழா எனப் பல சிறப்பம்சங்கள் நிறைந்து பக்தர்களுக்கு அருள் பாலிப்பதை மக்கள் அனுபவ ரீதியாக உணருகின்றனர்.

இவ்வாலயத்தை எமது ஆதி முன்னோர்கள் தொடங்கி, இன்றுள்ள அறங்காவலர்கள், பெரும் திருப்பணிச் சபையினர்வரை இலுப்பையடி ஆத்தா என மிகுந்த பக்தியோடு போற்றுவதைக் கண்கூடாக அறியலாம். இவ்வாலயத்தினில் எமது முன்னோர்களால் பலதரப்பட்ட சமய விழாக்கள் நடைபெற்று வந்தது என்பதை யாராலும் மறுக் முடியாது. அவர்களைத் தொடர்ந்து இவ்விழாக்கள் இன்றும் நடைபெறுவதை அவதானிக்கலாம். குறிப்பாக குளிர்த்தி, தைப்பொங்கல், ஆடிப்பூரம், கார்த்திகை விளக்கீடு, மகோற்சவம், சூரன்போர், திருவெம்பாவை விசாகப் பொங்கல் என்பன மக்களின் ஒத்துழைப்புடன் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இவ்வாலயம் சிவனின் வடபுறம் அமைவதால் மேலும் சிறப்படைகின்றது. சிவமும் சக்தியும் ஒன்றிணைவதால் அர்த்தனாரீசுவரர் வடிவமாகின்றது இதனைச் சிவன்பாதி உமைபாதி என்பர். இவ்விரு கோயில்களையும் இரு கண்களாக்பபோற்றி தைப்பொங்கல் பூசைகள் செய்து தங்கள் நேர்த்திக் கடன்களைச் செய்வார்கள். இக் கோயிலின் இறுதிநாளன்று எமது ஊரின் பழம்பெரும் கலைச்செல்வமாகிய வடமோடி நாடடுக்கூத்தின் விரார நாடகம், தர்ம புத்திர நாடகம் போன்ற நாடகங்கள் மேடையேற்றப்படும். இக்கூத்துக்கள் ஆடப்படுவதால் நாடடு மக்கள் தமது நோய் நொடியிலிருந்து காக்கப்படுவதாக ஐதீகம்.

இப்படிப்பட்ட மிகவும் சக்தி வாய்ந்த முத்துமாரிக்கு, அன்னை அடியார்களிடம் இருந்து பணம்புரட்டி வரும் அன்பளிப்பை நேர்மை பொறுமை மிக்க பொருளாளர் அ.சர்வசுப்பிரமணியனும் பெற்று புனருத்தாரணம் செய்வதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைவதோடு தலைவர் திரு.ம.ந.கணேசுவரன் அன்பான வேண்டுகோளிற்கு இணங்கி இச் சிறு வாழ்த்துமீடலை முடித்துக்கொள்கின்றேன். எல்லோர்க்கும் அம்பாள் அருள்புரிவாராக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Veluppillai Thambaiya J.P.

Retired Principal

## அம்பிகையே அடைக்கலம்

எமது ஊரான வட்டுக்கோட்டையம்பதியில் சொல்லத்தக்க ஆலயங்களில் வீயோடை முத்துமாரி அம்மனை அறியார் ஒருவருமிலர். இத்தாயின் திருவிளையாடல்களை எழுத்துவடிவில் எளிதில் கூறிவிடமுடியாது. அதற்குப் பக்கமும் தரப்படவில்லை. எமது மூதாதையர் காலம் தொட்டு 6, 7 நூற்றாண்டு காலமாக ஆத்தாளின் அருட் செயல்களைக் கண்டு எம்மவர் மாத்திரமல்ல அயல் கிராமங்களிடையே வாழும் மக்களும் இலுப்பையடி ஆத்தா என மனமுருகி வணங்குவதையும் அது என்காலத்திலும் தொடர்வதையும் கண்கூடாகக்காணலாம். அத்தகைய சக்திகொண்ட தெய்வமவள். இவளை மனமுருகி வேண்டுவன எல்லாம் கண்டிப்பாக கிடைப்பதையும் அவரவர் அனுபவரீதியாகக் காணலாம். அதாவது ஒரு் தாயிடத்து மகன் கொண்ட பாசமும் அத்தாய் தன்னலம் கருதாது மக்களை வாழவைப்பதும் அவள் ஒருத்தியாலே என்பதை அவர்கள் உணர்வார்கள்.

ஒரு சுகயீனம் எற்படுமிடத்து எப்படித் தாய் அருகிருந்து மருந்துவகை பத்தியம் தந்து மனவைராக்கியத்தைத் தருகின்றாளோ அதேபோல் அதே தாய்ப்பாசத்தில் பற்றுவைத்து எமக்குவரும் பொக்கிளிப்பான், அம்மை போன்ற நோய்களை அவளைநோக்கிக்கூறி விரதமிருந்து அவளுக்குப் படைத்த அமிர்தத்தை உண்ணும்போது நோய் பஞ்சாய்ப் பறந்து உடலுக்கும் மனதுக்கும் பேரின்பம் கிடைப்பதை உணர்கின்றோம். வேப்பிலைக்காரியின் வேப்பிலைக் காற்றாலும், ஊற்றப்படும் கஞ்சியினாலும் உடலும் உள்ளமும் உரம் அடைவது திண்ணம். இந்தத் தாயாலேதான் எமது கிராமமும் மக்களும் காப்பாற்றப் படுவதாக ஐதீகம். உண்மையான அன்புவைத்து உணர்வு பூர்வமாகத் தாயை எண்ண, எண்ணிய எண்ணம் ஈடேறுவதையும் காசு பணம் இன்பமல்ல அவளை நாடுவதே பேரின்பம் என அறியலாம்.

இப்படிப்பட்ட உயிர்களிடத்தே அன்பு காட்டும் எம்தாயின் முன்றலிலே நடந்து வந்த கொடிய உயிர்ப் பலியைத் தவறென எண்ணிய எனது ஆருயிர் மைத்துனரான அறங்காவலர் கந்தன் சிவலிங்கம் தலைமை ஆசிரியர் அவர்களும், அவர்தம் நண்பர்களும் இணைந்து நிற்பாட்டி

இங்கு அலங்காரத்திருவிழாவாக்கிய பெருமை அவரையே சாரும் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை. இன்னமும் சுவையான விடயம் என்னவெனில் இங்கு நடைபெறும் எமது பாரம்பரிய நாடகமான கர்ண நாடகம், விராட நாடகம், தருமபுத்திர நாடகம் என்பவை தாயைக் குளிரவைத்து மும்மாரியும் பொழிவதாகவும் ஐதீகம். இது நான் கண்கூடாகக் கண்ட உண்மையும் கூட இந்த நாடகங்கள் எப்போ வரும் என ஏங்கிய காலமும் உண்டு. இப்படிப்பட்ட தாய்க்கு மைத்துனரும் அவர் குழுவும் வண்ண மூலஸ்தானம் அமைத்து 1972ல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது அதைத் தொடர்ந்து இன்று பாரீஸ் பிரதான பரிபாலன சபையினால் எனது அருமைத் தம்பி எழிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறங்காவலர்களாகிய மருமக்கள் கலையரசன் கலைவாணன் அவர்களின் குழுவினால் தாய்க்கு வண்ண வானளாவிய கோபுரமும் தேரும் மண்டபங்களும் அடியார்கள் ஆதரவால் கட்டப் பெற்று 04.03.2010 அன்று மகா கும்பாபிஷேகம் நடை பெறுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இப்பணிதொடர்ந்து பல ஆக்கபூர்வமான பணிகள் தொடர இருப்பதாகவும் அறிந்து இன்னமும் பெருமைகொள்கின்றேன். இன்று 04.03.2010இல் கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு ஆனந்தமும் பெருமகிழ்ச்சியும் கொள்கின்றேன்.

எல்லோர்க்கும் அன்னையின் அருள்கிடைக்கட்டும். வாழ்க மக்கள், தொடர்க சமுதாயப்பணி!

---

கொள்ளேன் மனத்தில்நின் கோலம் அல் லா(து) அன்பர் கூட்டந்
விள்ளேன் பரசம யம்விரும் பேன்வியன் மூவுலகுக்(கு) [தன்னை
உள்ளே அனைத்தினுக் கும்புறம் பேஉள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்கும் களியே அளியஎன் கண்மணியே.

மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கழ கேஅணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே

பின்னே திரிந்து உன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண் டேன்முதல் மூவருக்கும்
அன்னே உலகுக்(கு) அபிராமி என்னும் அருமருந்தே
என்னே இனி உன்னை யான்மற வாமல்நின்(று) ஏத்துவனே

ஏத்தும் அடியவர் ஈரே ழுலகினை யும்படைத்தும்
காத்தும் அளித்தும் திரிபவ ராம்கமழ் பூங்கடம்பு
சாத்தும் குழல் அணங்கேமணம் நாறும் நின்தாள் இணைக்(கு) என்
நாத்தங்கு புன்மொழி ஏறியவாறு நகையுடைத்தே.

உடைத்தனை வஞ்சப் பிறவியை உள்ளம் உருகும் அன்பு
படைத்தனை பத்ம பதயுகம் சூடும் பணி எனக்கே
அடைத்தனை நெஞ்சத் (து) அழுக்கைஎல் லாம் நின் அருட்புனலால்
துடைத்தனை சுந்தரி நின்னருள் ஏதென்று சொல்லுவதே.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கண் முத்துமாரி

## காவடிச்சிந்து

வீயோடை வீற்றிருக்கும் எங்கண் முத்துமாரி
விண்ணவரும் எண்ணவரும் எங்கண் முத்துமாரி
பூவாடை வீசிவரும் எங்கண் முத்துமாரி
புன்முறுவல் பூத்துநிற்கும் எங்கண் முத்துமாரி

இலுப்பையடி ஆத்தாளே எங்கண் முத்துமாரி
இறைஞ்சாவுன் பூத்தாளே எங்கண் முத்துமாரி
வலுப்பெறநம் பக்தியுத்தி எங்கண் முத்துமாரி
வட்டூர்க்கு வந்துறைவாய் எங்கண் முத்துமாரி

நீலநிறத் திருமாதே எங்கண் முத்துமாரி
நெஞ்சிலிரு செஞ்சொல்லாள் எங்கண் முத்துமாரி
வேலைதுயின் மாலின்றங்கை எங்கண் முத்துமாரி
வேண்டும் வர நல்கு நங்கை எங்கண் முத்துமாரி

ஆனைமுகன் வேலனுக்கும் எங்கண் முத்துமாரி
அன்னையாக மன்னி வாழ்க எங்கண் முத்துமாரி
மானைவென்ற கயல் விழியாள் எங்கண் முத்துமாரி
வந்துவாழ்க வீயோடை எங்கண் முத்துமாரி

பாரேழி ரண்டும் போற்றும் எங்கண் முத்துமாரி
பருவதமேற் கோயில் கொண்டாள் எங்கண் முத்துமாரி
ஈரேழு தலைமுறைகாண் எங்கண் முத்துமாரி
இன்னும் பல ஊழீ வாழி எங்கண் முத்துமாரி

மலையத்துவச பாண்டியன் மகள் எங்கண் முத்துமாரி
மாமதுரை மீனாட்சி எங்கண் முத்துமாரி
வலைவீசு மரன் மனைவி எங்கண் முத்துமாரி
வந்தனைமகிழ் சுந்தரியுமா எங்கண் முத்துமாரி

ஆனிமுத்து மூக்குத்தியாழ் எங்கண் முத்துமாரி
ஆலவாயின் மீனாட்சி எங்கண் முத்துமாரி
பேணிவளர் எம்பிராட்டி எங்கண் முத்துமாரி
பித்தன் பாதி வைத்தசோதி எங்கண் முத்துமாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்துபுரம் வந்ததேவி எங்கண் முத்துமாரி
தீராதநோய் தீர்க்கவல்லாள் எங்கண் முத்துமாரி
இந்துமக்க ளிதயமுறை எங்கண் முத்துமாரி
ஈஸ்வரியுமை காளிதுர்க்கை எங்கண் முத்துமாரி

அம்பிகையே நம்பிவந்தோம் எங்கண் முத்துமாரி
அருளமுதம் தந்திடுவாய் எங்கண் முத்துமாரி
இமயர் வாழ வீயோடைவா எங்கண் முத்துமாரி
எல்லோர்க்கு நல்லவளே எங்கண் முத்துமாரி

சிம்மா சனக் கொலு மேல் எங்கண் முத்துமாரி
சிரித்த முகங் காட்டியிரு எங்கண் முத்துமாரி
அம்மா வுனைத் தொழுவோம் எங்கண் முத்துமாரி
அருட்சோதிப் பிழம்பாய்நில் எங்கண் முத்துமாரி

அமுதபிள்ளைக் கின்பாலீ எங்கண் முத்துமாரி
அன்பருள்ளக் கோயில் கொண்டாள் எங்கண் முத்துமாரி
தொழுபவர்பை சூரி தொலை எங்கண் முத்துமாரி
தோணிபுரப் பதிவதியும் எங்கண் முத்துமாரி

வட்டூருள் வீயோடை வாழு முத்துமாரி
வழுதிகுலப் பெண்ணல்லவோ எங்கண் முத்துமாரி
நிட்டூரந் தீர்த்திருப்பாள் நீலிமகா சூலி
நீடுழி வாழி வாழி எங்கண் முத்து மாரி

## விநாயகர் தோத்திரம்

கற்பகப் பிள்ளையாரே எங்கள் கணநாதா
பொற்பாதம் போற்றினோம் எங்கள் கணநாதா
சுந்தரி மேற் சித்தருள எங்கள் கணநாதா
துணையுந்தன் பாதமலர் எங்கள் கணநாதா

## முத்துமாரி அம்மன் தோத்திரம்

வீயோடை வீற்றிருக்கும் எங்கள் முத்துமாரி அம்மா
எங்கள் முத்துமாரி அம்மா
எங்கள் முத்துமாரி

வேள்விகள் கண்டவளே எங்கள் முத்துமாரி

ஆதிசிவன் அயல் தனிலே எங்கள் முத்துமாரி அம்மா
எங்கள் முத்துமாரி அம்மா
எங்கள் முத்துமாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியாரைக் காத்தருள்வாய் எங்கள் முத்துமாரி

ஐம்பத்தோரட்சரத்தில் எங்கள் முத்துமாரி அம்மா
எங்கள் முத்துமாரி அம்மா
எங்கள் முத்துமாரி

ஆடியமர்ந்தவளே எங்கள் முத்துமாரி அம்மா

முக்கோண சக்கரத்தில் எங்கள் முத்துமாரி அம்மா
எங்கள் முத்துமாரி அம்மா
எங்கள் முத்துமாரி

முதன்மை பெறுநாயகியே எங்கள் முத்துமாரி

வீரபத்திரர்க் கினியவளே எங்கள் முத்துமாரி அம்மா
எங்கள் முத்துமாரி அம்மா
எங்கள் முத்துமாரி

வினையறுக்கும் வீரியல்லவோ எங்கள் முத்துமாரி

பாவவினையறுக்கும் எங்கள் முத்துமாரி அம்மா
எங்கள் முத்துமாரி அம்மா
எங்கள் முத்துமாரி

பாவுகூத்தாட்டு வித்தாய் எங்கள் முத்துமாரி

இலுப்பையடி யமர்ந்தாய் எங்கள் முத்துமாரி அம்மா
எங்கள் முத்துமாரி அம்மா
எங்கள் முத்துமாரி

இடர்களைய எண்ணியல்லோ எங்கள் முத்துமாரி

வன்னியரைக்காக்க வந்தாய் எங்கள் முத்துமாரி அம்மா
எங்கள் முத்துமாரி அம்மா
எங்கள் முத்துமாரி

வட்டுநகர் கோவில் கொண்டாய் எங்கள் முத்துமாரி

மலையரசன் மகளலவோ எங்கள் முத்துமாரி அம்மா
எங்கள் முத்துமாரி அம்மா
எங்கள் முத்துமாரி

மங்கை மகமாரியல்லலோ எங்கள் முத்துமாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| மாயன் சகோதரியே | எங்கள் முத்துமாரி அம்மா<br>எங்கள் முத்துமாரி அம்மா<br>எங்கள் முத்துமாரி |
| மாதங்கி மாரிமுத்தே | எங்கள் முத்துமாரி |
| நாற்றிசைக்கும் காவலிட்டாய் | எங்கள் முத்துமாரி அம்மா<br>எங்கள் முத்துமாரி அம்மா<br>எங்கள் முத்துமாரி |
| நகர்நடுவே வீடுகொண்டாய் | எங்கள் முத்துமாரி |
| மகிடாசுர சங்கரியே | எங்கள் முத்துமாரி அம்மா<br>எங்கள் முத்துமாரி அம்மா<br>எங்கள் முத்துமாரி |
| மறுசாபம் இட்டவளே | எங்கள் முத்துமாரி |
| சிவனுக்கோர் முத்திட்டாய் | எங்கள் முத்துமாரி அம்மா<br>எங்கள் முத்துமாரி அம்மா<br>எங்கள் முத்துமாரி |
| சிறியோர் செய்பிழை பொறுப்பாய் | எங்கள் முத்துமாரி |
| ஈரேழுலகுக்கும் | எங்கள் முத்துமாரி அம்மா<br>எங்கள் முத்துமாரி அம்மா<br>எங்கள் முத்துமாரி |
| எழில் கொடுக்கும் தாயல்லவோ | எங்கள் முத்துமாரி |
| சோதனை செய்யவேண்டாம் | எங்கள் முத்துமாரி அம்மா<br>எங்கள் முத்துமாரி அம்மா<br>எங்கள் முத்துமாரி |
| சொப்பனத்தில் வாருமம்மா | எங்கள் முத்துமாரி |
| தனிவழியே போவதற்கு | எங்கள் முத்துமாரி அம்மா<br>எங்கள் முத்துமாரி அம்மா<br>எங்கள் முத்துமாரி |
| தமியேனைக் காத்திடுவாய் | எங்கள் முத்துமாரி |
| கந்தனுடன் அமர்ந்தாய் | எங்கள் முத்துமாரி அம்மா<br>எங்கள் முத்துமாரி அம்மா<br>எங்கள் முத்துமாரி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தானைக் காவல்கொண்டாய் எங்கள் முத்துமாரி

ஓங்காரி ரீங்காரி எங்கள் முத்துமாரி அம்மா
எங்கள் முத்துமாரி அம்மா
எங்கள் முத்துமாரி

ஓபெரிய வீயோடைவாழ் எங்கள் முத்துமாரி

**சரணம்**

சரணம் சரணமம்மா சங்கரியே சரணமம்மா
சீர்மேவு முன்பாதம் சிரமேற் சரணமம்மா
தாயே சரணம்மா தயாநிதியே சரணமம்மா
தாளாத் துயரடைந்தேன் தயாபரியே சரணமம்மா
அடியாரைக் காத்திடவே அம்பிகையே சரணமம்மா
அரனார் அடிபணிந்த அழகி சரணமம்மா
ஓங்காரி சரணமம்மா ரீங்காரி சரணமம்மா
பாங்கான வட்டுநகர் பார்வதியே சரணமம்மா

**வாழி**

வாழி வாழி அம்மா வாழி வாழி
வட்டுநகர் வீயோடை மாரி வாழி
அரனும் வாழி அடியாரும் வாழி
அறமும் வாழி அந்தணரும் வாழி

ஆதி வாழி ஆதி சக்தி வாழி
ஆவும் வாழி ஆகமமும் வாழி
விரைவாக வினைமுற்றும் தீர்ப்பாய் வாழி
வீயோடை மாரிமுத்தே வாழி வாழி

**காப்பு**

சீர்மேவு வட்டுநகர் சேர்மாரி யம்மையின்மே
லேர்மே வகவ லியம் பிடவே- நேர்மேவு
இந்துநதி சூடுசிவ னீன்றெடுத்த வேழமுகத்
தைந்து கரன் செஞ்சரணங் காப்பு

**நிலைமண்டல வாசிரியப்பா**

சீர்மலி வட்டூர் சிறந்திட விளங்கொளி
யேர் பெறப்ப ரப்பி யாவையும் புரக்கும்
நீலி சுபாலி நிராமயச் செல்வி
ஆலமர் கடவுட் பாகத் தமர்ந்தோய்

வீயோடையிலே வீற்றிருப்பவளே
தாயே யனையாய் தண்ணளி யுடையாய்
பாண்டியன் மகளாய்ப் படிமிசை யுதித்தோய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய வரங்களை விருப்புடனீவோய்
யை: யை செய்பவளே யாதி நாயகியே
வையக மெல்லாம் வணங்க நின்றவளே
யட்ட லக்குமியே யருமருந் தனையாய்

நட்டனின் தேவி ஞானச்சுடரே
பவளச் செவ்வாய் தவள வெண்ணகையாய்
யவலப் படுவோர்க் கருள் செய்திடுவாய்
ஆதி சக்தி யாகி நின்றவளே
சோதிப் பொருளே துர்க்கைமாதேவி
தாயினு மரிய வென் தாயே வாவா
சேயெனை யாதரி செவ்வேட் பயந்தோய்
மூவர்கள் முதல்வி தேவர்கள் தலைவி
பாவலர் போற்றும் பரையே வாவா

யண்னாயின்னே யாதரி யெனைநீ
பொன்னே மின்னே பூரணி வாவா
உனைநான் அனுதின முவந்து வணங்கிட
நினைதொறு நினைதொறு நெக்கு ளமுருகியுன்
பாதந் தொழுதிடப் பண்பொடு மருள்தா
வேதப் பொருளாய் விளங்கி நின்றவளே
பாலகலெனைநீ பாதுகாத்திடுவாய்
மாலவன் சோதரி மாரிபார் பதியே
சேய்செய் திடுபிழை தீர்த்திடலுன்கடன்
நாயேயனையேன் நாடினே னுனையே
கர்மவினை தனைக்கழித்து நானுய்திடப்
பெரியாய் யருள்நீ பீடுடையவளே
அம்மா வாவா ஆதி வாவா
இம்மையு மறுமையு மிலங்குவாய் வாவா
மூவுலகாளும் முதல்வி வாவா
தேவர்கள் போற்றும் செல்வி வாவா

புத்திரர் மித்திரர் பொலிந்து மேவாழப்
பக்தியோடடியேன் பாரினில் விளங்கிடக்
கல்வியுஞ் செல்வமும் கருது நற்சுகமும்
பல்விதநலனும் பலுகிட அருள்தா
உன்னையே நம்பினே னுனைவிட யினியொரு
பின்னையோர் தெய்வம் பிரீதியுமில்லை
யென்னையாட் கொள்வாய் ஈஸ்வரிசடாச்சரி
கன்னியே குமரி காரணி நாரணி
சுயரூபத் தோடு சுறுக்கிலென் கண்முன்
நயமாய் வந்துன் நல்லருள் தாதா
வாழிய சிவமதம் வாழிய தொண்டர்கள்
வாழிய வட்டூர் வளம்பெறக் குடிகள்
வாழிய வுலகம் வாழியபாவலர்
வாழிய விக் விக வழித்தினோர் உகந்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிள்ளைத்தமிழ்

புலவர்மணி, பண்டிதர், நாற்கவிராயர், கலாபூஷணம்
க. மயில்வாகனனார்

இது அறு பத்துநான்கு பிரபந்த வகைகளுள் ஒன்று பிள்ளைக்கவி என்றும் கூறப்ப டும். இது ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என இரு வகைத்து பெண்பாற் பிள்ளைத் தமிழ்.

1. காப்புப்பருவம்
2. செங்கீரப்பருவம்
3. தாலப்பருவம்
4. சர்ப்பாணிப்பருவம்
5. முத்தப்பருவம்
6. வாரானைப் பருவம்
7. அம்புலிப்பருவம்
8. அம்மானைப் பருவம்
9. நீராடற்பருவம்
10. ஊசற்பருவம்

என பத்துப்பருவங்களாற் கூறப்படும் கதாநாயகியை குழந்தையாகப் பாவித்து, தம் அன்புடைமை தோன்றச் செய்யுள் செய்வர்.

**1. காப்புப்பருவம்**

இப்பருவத்தில் பாட்டுடைத் தலைவியாகிய முத்துமாரி அன்னையைக் காத்தருளும்படி திருமால் முதலிய தேவாதியர் வேண்டப்படுகின்றனர்.

**செங்கீரைப்பருவம்:**

குழந்தை நாயகிக்குச் சொல் முளையாத பருவம் செங்கீரைப் பருவம் இது அவர் பிறந்ததிலிருந்து 5ஆம் மாசம் முதல் 7ஆம் மாச எல்லை வரையான காலத்தைக் குறிக்கும். இப்பருவத்தில் குழந்தை தானாக உடல் புரட்டி ஒரு முழங்காலையும் கைகளையும் ஊன்றி முகம் நிமிர்த்தி முன்னிற்போரை ஆவலோடு பார்த்தல் நிகழும். செங்கீரை என்பது செவ்விய பேச்சு குழந்தை பேசுவ தாகக் கூறி மகிழுந் தன்மை இடம்பெறலால் இப்பெயர் பெறலாயிற்று.

**தாலப்பருவம்:**

குழந்தையைத் தாலாட்டுவதாக வரும் நிகழ்ச்சியை உடையது. தால் என்பது குழந்தையை உறங்கச் செய்யும் நோக்கில் ஒலிக்கும் வாய்ப்பாடல் எனலாம். 7-9 மாதங்களுக்குடையில் வரும் நிகழ்ச்சி இதுவாகும்.

**சப்பாணிப்பருவம்:**

கதாநாயகி கால்கள் இரண்டையும் அகட்டி மடித்து முன்சேர்த்துக் கொண்டு கைகளை எடுத்தசைத்துக் குதூகலித்திருக்கும் பான்மையைக் குறிப்பது. 9-11 ஆம் மாசம் வரையுள்ள காலப்பகுதியாகும்.

**முத்தப்பருவம்:**

முத்தமிடும்படி வேண்டுவது இப்பருவம் 11-13 ஆம் மாசம் வரை உள்ள காலப் பகுதியாகும்.

**வாரானைப்பருவம்:**

குழந்தையை முன்னின்று கைநீட்டி வருக வருக என்று அழைக்கும் காலப்பகுதியாகும். இது 13ஆம் மாசம் முதல் 15 ஆம் மாச எல்லை வரையுள்ள காலப்பகுதியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அம்புலிப்பருவம்:**

குழந்தை சந்திரனை (அம்புலியை) நோக்கிக் கையசைக்கும் நிகழ்வு கொண்ட காலப்பகுதியாகும். இது 15ஆம் மாசம் முதல் 17ஆம் மாசம் வரையான காலப்பகுதியாகும்.

**அம்மானைப் பருவம்:**

அம்மானை என்பது ஒருவகை விளையாட்டு அதாவது இருவரேனும் எழுவரேனும் சேர்ந்து விளையாடும் கூத்து 17-19 ஆம் மாசம் வரையான காலப்பகுதியாகும்.

**நீராடற் பருவம்:**

நீராட வரும்படி அழைக்கப்படும் பாங்கினது. 19ஆம் மாசம் முதல் 21ஆம் மாசம் வரையான காலப்பகுதியாகும்.

**ஊசற் பருவம்:**

ஊஞ்சலாடுவது 21 ஆம் மாசம் முதல் 23 ஆம் மாசம் வரையான காலப்பகுதியாகும்.

**பெண்பாற் பிள்ளைத் தமிழில் வரும் பருவங்கள்**

1. காப்புப் பருவம்
2. செங்கீரைப் பருவம்
3. தாலப் பருவம்
4. சப்பாணிப் பருவம்
5. முத்தப் பருவம்
6. வாரானைப் பருவம்
7. அம்புலிப் பருவம்
8. அம்மானைப் பருவம்
9. நீராடற் பருவம்
10. ஊசற்பருவம்

## வட்டுக்கோட்டையூர் வீயோடை இலுப்பையடி

## அருண்மிகு

# முத்துமாரி அம்மன் பிள்ளைத்தமிழ்

### விநாயகர் வணக்கம்

நீராருஞ் செஞ்சடையில் நிலவுடனாய்க்
கொன்றைபு னை நிமல மூர்த்தி,
நேயமலி பழவடியர் துரிசகற்றும்
நேரிழையை இடப்பாற் கொண்டேன்,
பேராருஞ் செம்மேனிச் சிவபரன்முன்
பயந்துதவும் ஞானக் கன்று,
பெருகியெழு விக்கினங்கள் இரிந்தோடப்
பிளிற்றி நிற்கும் கணேசப் பெருமான்
சீராரும் நறைசிந்தி வான்முட்டும்
தருவினங்கள் திகழ்ந்து யாண்டும்
செல்வமலி வட்டூரில் வீயோடை
சேர்ந்துறையும் தேவி சூலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எராரும் மாதங்கி இறைவிமுத்து
மாரித்தாய் திருவ டிக்கே
எடுத்தபிள்ளைக் கவிதானும் இனிதியலத்
திருவருளும் வழங்கும் நன்கே.

## I. காப்புப் பருவம்

### திருமால்

1. பொன்மகளும் பூமகளும் புறங்காப்பப்
பயோததியில் பள்ளி கொள்வோன்
புகழ்படைத்த பாண்டவர்க்காய்த் தூதன்று
போந்தருளுங் கமலக் கண்ணன்
பன்னவரு வாரணமுன் ஓலமிடப்
பரிவினொடு புன்கண் தீர்த்தோன்
பதுமபதஞ் சிரத்திருத்திக் கரங்கூப்பிப்
பக்தியுடன் பணிந்து நிற்பாம்
கன்னலொடு செந்நெல்லுங் கழனிதொறும்
கலித்தோங்கிச் செல்வம் விஞ்சக்
கற்றோரும் மற்றோரும் காதலுடன்
அறத்தாறு காத்து நிற்ப
மன்னிவளர் வட்டூரில் வீயோடை
மதுரகநிழல் தக்க தென்னா
வந்தமர்ந்த முக்கண்ணி அன்னைமுத்து
மாரிதனைக் காக்க என்றே!

### சிவபெருமான்

#### (வேறு)

2. மானின் கன்றைக் கையேந்தி
மலையைத் தனுவாய்க் கொண்டபரன்
மருவார் கொன்றை மாலையொரு
மதியைச் சூடும் மாதேவன்
தேனின் நீபத் தெரியலுடன்
சேவ்வேல் தாங்கு கந்தனைமுன்
தேவர் வேண்டத் தந்தசிவன்
செஞ்சேவடிகள் போற்றிவாம்
ஊனின் உடலில் உள்ளுறைவாள்
ஒவா துலகைப் புரந்தருள்வாள்
உருகிக் குழைந்து பணிவார்க்கே
உண்மை உருவம் காட்டிடுவாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானின் அமரர் அடிபரவ
வளமார் வட்டூர் புக்குறைவாள்
வனிதை வாலைப் பொற்றொடியாள்
மாரி தன்னைக் காக்க என்றே

## மாணிக்க விநாயகர்

(வேறு)

3. ஒருகோட்டன் இருசெவியன் முக்கண்ணன்
நால்வாயன் ஐங்க ரத்தோன்
ஓங்காரத் துருவானோன் உற்றுவரும்
இடர்க்குலங்கள் ஓட்டுந் தேவன்
குருவாய அகத்தியனார் குண்டிகைநீர்
காவிரியாய்க் குலவ வைத்தோன்
குவலயத்தோர் தெரிந்துணரப் பாரத்தை
குன்றினிடைப் பொறித்த மெம்பான்,
திருவாரும் வட்டூரில் தச்சனொல்லைத்
திருத்தளியில் கோயில் கொண்டேன்
தேவரெலாம் பணிந்தேத்தும் மாணிக்கப்
பிள்ளைதனை வேண்டி நிற்பாம்
மருவாரும் வீயோடை மதூகநீழல்
வந்தமர்ந்த மாத ரெங்கள்
மாதங்கி வேதவதி திரிசூலி
மாரிதனைக் காக்க என்றே

## குமரவேள்

4. ஆறுதலைத் தரவேண்டி ஆறுமுகம்
கொண்டுற்றே அமரர் வேண்ட
அழகொளிரும் சரவணத்துப் பூம்பாயல்
அமர்ந்தருளி அறுவ ரூட்டும்
வீறுதரு பாலருந்தி வேலேந்தி
வெஞ்சூர்க்கும் அருள்சு ரந்தோன்
வேதமதன் பொருளுணரா விரிஞ்சனாரை
வினவிப்பின் சிறையி லிட்டும்
ஏறுகைக்கும் ஈசர்க்கும் குருபரனாய்
உபதேசம் இயற்றி நின்றும்
என்னிதயக் குகையுறையுங் கந்தவேளைக்
கைகூப்பி இறைஞ்சு கிற்பாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேறுதரும் பெருமாட்டி வட்டூரில்
பிறங்குநல்வீ ஓடை யுற்றாள்
பெண்ணணங்கு மலைமங்கை உமைமுத்து
மாரிதனைக் காக்க என்றே

## வைரவர்

5. செவ்வியதாம் திருவதனம் திருவருளை
திசைகடொறும் அள்ளி வீசத்
திருக்கரத்தே திரிசூலம் கபாலபாசம்
தமருகமும் திகழா நிற்ப
எவ்வெவரும் அயல்நின்றே இகபரபோ
காதிகாளை இரந்து கேட்ப
எழில்குலவு ஞமலிமிசை இருந்தமர்ந்தே
ஈந்துவக்கும் வடுகன் காக்க
நவ்வியதன் நோக்கைவென்ற நங்கையரை
மகிழ்விப்பான் நயந்து நின்று
நம்பியர்கள் நவரசமும் நனிசொட்ட
நாளெல்லாம் நடமும் செய்வார்
எவ்வமிலா வகைமாந்தர் வாழுகின்ற
வட்டூரின் வீயோடைக்கண்
இருந்தருளும் ஈசுவரி இறைவிமுத்து
மாரியினை இனிது தானே.

## இலக்குமி
### (வேறு)

6. பாலா ராழிப் பார்த்திபன் ஈன்ற
பாவைத் திருமகளை
பாடிப் பரவ பற்பல வளமும்
பாங்காய் அருள்பவளை
நூலோர் எட்டாம் நாமங் கொண்டே
நுவல மகிழ்வாளை
நுந்தா விளக்காய் இல்லம் எங்கும்
நண்ணும் சோதிதனை
மாலார் மார்பில் மன்னித் திகழும்
மாமறு ஆயவளை மனதால்
மனத்தால் வாக்கால் மெய்யால் என்றும்
வணங்கித் துதித்திடுவாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேலார் கழனி வட்டூர் வாணர்
செய்த தவப் பயனை
தெவிட்டா அமுதாம் மாரி யெங்கள்
தாயைக் காக்க என்றே.

## சரசுவதி
### (வேறு)

7. வண்டர் ஊத மதுப்பில்கும்
வண்ணக் கமலத் துறைவாளை
வளரும் உலகை ஆக்கியருள்
மலரோன் நாவில் வாழ்பவளை
கண்டின் சுவையார் பாடல்செய்
கவிஞர் இதய மன்றினிலே
காதல் உடனாய் நடஞ்செய்யும்
கலைமாச் செல்வி காத்தருள்க
மண்டுங் கயல்கள் கழனிதொறும்
வந்து குதித்து விளையாட
வளருஞ் சாலி யொடுகூலம்
வாய்ப்ப உழவோர் மகிழ்விஞ்சக்
கண்டா நீர்மை வட்டூரில்
தகைசால் வீயோ டைப்பதியாள்
தலைவி உமையாள் மாமுத்தாம்
தாயைத் தானும் இனிநன்கே

## சத்தமாதர்
### (வேறு)

8. ஓதிமம் ஊர்வாள் உயர்விடை தன்மேல்
உற்றே நடமிடுவாள்
ஓதும் பிணிமுகம் மீமிசை
யாண்டும் ஓகை கொடுந்திரிவாள்
காதலொ டன்பர் கண்டே போற்றக்
கலுழன் மிசைவருவாள்
கண்டவர் அஞ்சக் கதமுறும் அரிமிசை
கடுகி நடமிடுவாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியதாகும் ஐரா வதமதில்
அமர்ந்தே போந்திடுவாள்
அஞ்சிடும் அலகை தனிலமரரிவை
ஆமிவ ரைத்தொழுகேம்
தாதிமிர்சோலை வட்டூர் வருதளி
தங்கி அருள் பொழியும்
தற்பரை எங்கள் முக்தணி முத்து
தாயைக் காத்திடவே

## முப்பத்து முக்கோடி தேவர்
**(வேறு)**

9. சீர்திகழும் சென்னிமிசை நவமணிகள்
குயிற்றியநல் மகுடம் மின்ன
சிறுபிறையின் கீறனைய திருநுதலில்
செம்மணியின் சுட்டி வீக்கி
ஏர்தவழுந் துண்டமிசை மாணிக்க
மூக்குத்தி இலங்கி நிற்ப
இணையிலவாங் குண்டலங்கள் செவிகளிலே
எழில்தந்தே அசைந்து தொங்க
மார்பதனில் மதாணியொடு மணிவடமும்
மன்னிடவே பட்டு டுத்தி
வட்டூரில் வீயோடை வந்தமர்ந்த
மாரிமுத்தைப் புரக்க என்றே
ஓராழித் தேரினரே உருத்திரரே
வசுக்களுடன் மருத்து வேரராய்
ஓதநிறை முப்பத்து முக்கோடி
தேவர்தமை ஏத்து வோமே

## நால்வர்

10. மண்ணுலகில் வாழ்வார்கள் தமைமயக்கும்
மலங்கடமைக் கழுவ வேண்டி
வந்தசைவ சாத்திரங்கள் சோபான
வழிகடமை வகுத்துக் கூறும்
எண்ணுங்கால் சன்மார்க்கம் சகமார்க்கம்
சற்புத்ர தாச மார்க்கம்
எனுமிவற்றை ஏவர்களும் இனிதுணந்தே
இன்புறவிங் கவத ரித்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணளிசேர் திருவாத வூரிறையே
சந்தரசம் பந்தர் அப்பர்
தகவுமலி அருட்குரவர் அவர்கள்தம்
தாமரைத்தாள் சென்னி வைப்பாம்
வண்ணவயல் வட்டூரில் வீயோடை
வான்பதியில் கோயில் கொண்ட
வடிவழகி அன்னைமுத்து மாரியெனும்
அம்பிகையைக் காக்க என்றே

## செங்கீரைப் பருவம்

11. அன்பெனும் ஆழிமிசை எழுந்தபேர்
அமிர்தமே ஆணி முத்தே
ஆருயிர்க் குலமெல்லாம் இன்பநலம்
எய்தவே அருள்சு ரப்பாய்!
முன்பிள மதலையென மேனைபால்
வந்து நீ மேவு நாளில்
மோகனப் புன்னகை உதிர்த்துமே
அணைத்திட மகிழ்வு கொண்டாய்
துன்புள அகன்றிடத் துணைக்கரம்
தூக்கியே அசைந்து நின்றாய்
துய்யமெய் ஞானமாம் திருவடி
ஊன்றியே தவழு கின்றாய்!
கன்னியே தேவியே காமாட்சி
செங்கீரை ஆடி யருளே!
கவினொழுகு வட்டூரின் மகமாரி
செங்கீரை ஆடி யருளே

12. எந்தையாம் பிஞ்ஞகன் ஆணைவழி
உலகினைத் தோற்று விப்பாய்
ஈறுசெய் நாளினின் மறைப்பினை
ஈந்துமே இன்பு கொள்வாய்!
அந்தரி பார்பதி அபிராமி
மோகினி ஆனந்த ரூபிநீயே!
ஆயிழையர் சூழவே சிறுவீ
டாக்கியே வண்டல் அயர்வாய்
விந்தைசேர் மாதையர் கதிரேசர்
வேண்டநீ விழைந்து புக்காய்!
விமலையே மதூகநிழல் தக்கதென
வீற்றிருந் தருளு கின்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரி திரிசூலி தேவியுமை
செங்கீரை ஆடி அருளே
கவினொழுகு வட்டூரில் மகமாரி
செங்கீரை ஆடி அருளே

13. வரிவண்டு கிளையோடு மகிழ்விஞ்சி
வந்தூத மொக்குள் அவிழ
வருதேறல் தனையுண்டு மலரெங்கும்
ஆடிமகிழ் வகைய நல்லூர்
வருதந்து புகழ்மேய வீயோடை
மருவுநல் இருப்பை நீழல்
வாணியொடு திருமகளும் சேவிக்க
வந்தமர்ந்தாய் மாரி முத்தே
தெரிகின்ற மதிவதனம் அருணிலவு
சிந்திடவும் நெற்றி மீது
திருநீற்றின் கோட்டினயல் சிந்தூர
திலகமது அழகு தரவும்
கருவாதை கழிக்கவரு குழவியே
செங்கீரை ஆடி அருளே
கவினொழுகு மாதங்கி மகாமாரி
செங்கீரை ஆடி அருளே

14. வானவரும் தானவரும் வளங்குலவு
பாற்கடலைக் கடைந்த ஞான்று
வலனழிந்து நடுநடுங்க வந்தநஞ்சை
வாரியுண்ட வேணிப் பெம்மான்
தேனமரும் கொன்றையனை லிங்கமதில்
சேவித்த காலை தன்னில்
சீறியெழு கம்பைநதி சிதைக்காமே
தழுவிமுலைத் தழும்பு செய்தாய்
பானலன கண்ணியே பழவடியர்
பணிந்தேத்து குழவி யானாய்
பைந்தொடியும் பாடகமும் கலகலப்பப்
பவழவாய் சிந்த உமிழ்நீர்
கானமரும் வேம்பணியும் தெய்வதமே
செங்கீரை ஆடி அருளே
கவினொழுகு வட்டூரின் மகமாரி
செங்கீரை ஆடி அருளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. நீலநிற வண்ணனவன் தங்கையென
நேயமுடன் எவரும் போற்ற
நின்றருளி உலகெல்லாங் காத்தோம்பும்
நிருமலையே லோக மாதா
கோலமலி வேணியிலே கங்கையொடு
மதிசூடி பாங்கி ருந்தாய்
குலவலயத்தோர் பல்பெயரால் நாளெல்லாம்
கும்பிட்டே வாழ்த்தி நிற்பார்
சாலவெங்கள் சந்ததியர் வேண்டிநிற்பத்
தளிரடிகள் ஊன்றி வந்தாய்
தக்கதனிப் பதியாக வட்டூரில்
இருப்பைநிழல் கண்ட மர்ந்தாய்
காலடிகள் நேஎகுமனாய் சிரமுயர்த்திச்
செங்கீரை ஆடி யருளே
கவினொழுகு வட்டூரின் மகமாரி
செங்கீரை ஆடி அருளே

16. ஏடேறு வனசமலர் மேலானும்
இந்திரனும் மாலும் ஏத்த
எழில்குலவு கடுக்கையுடன் மதிமத்தம்
ஆதியன எடுத்த ணிந்தே
பீடேறி உலகுய்ய நடமியற்றும்
பெம்மானின் பாங்கர் மேவி
பாணியொடு சீர்தூக்குத் தந்துநிதம்
பார்த்துநீ உவகை கூர்வாய்
மாடேறிக் கயலினங்கள் குதிகொண்டங்
இரிந்தோடும் வயல்கள் மிக்கு
வருவாரும் மீள்வாரும் வாங்கைகொடு
கைதூக்கி வாழ்த்தெ டுப்பக்
கோடேறும் இருப்பை நிழல் குடியமர்ந்தாய்
செங்கீரை ஆடி யருளே
கவினொழுகு வட்டூரின் மகமாரி
செங்கீரை ஆடி அருளே

**(வேறு)**

17. பண்டைப் பிரளய வெள்ளத்தே
பாரகம் முற்றும் மூழ்கிடுநாள்
பாதலம் எய்தா உயர்புகலி
பண்ணு தவத்தால் வருவிரகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டிட ஞானத் தின்னடிசில்
ஊட்டி வைத்தாய் உமையவள் நீ
உன்னற் கரிய அம்பிகையே
உன்னருள் ஆடல் புகலரிதால்
வண்டர் கிண்ட மதுப்பில்கும்
மலர்மலி சோலைய வட்டூரில்
வந்த இருப்பை நீழல் வாழ்
வனிதா மணியே சுந்தரியே
அண்டர் தொழும்நல் ஆத்தாளே
ஆடுக நன்கே செங்கீரை
ஆயிழை எங்கள் மகமாரி
ஆடுக நன்கே செங்கீரை

18. வந்திடு கடுவிசை வானதியை
வானோர் அஞ்சா வகைசடையில்
வைத்தருள் எம்மான் மகிழரசி
மாதையர் மற்றும் கதிரேசர்
தந்திடு பூசனை ஏற்றவனே
தாயே பூரணி மோகினியே
முந்தி சிரந்தனை மேலோச்சி
முறுவல் சிந்திப் போர்ந்திடுக
நந்தும் வட்டூர் இருப்பைநிழல்
நாடி அமர்ந்த நாயகியே
நாளும் பொழுதும் தொழுதேத்தி
நல்லோர் இன்பம் கொண்டிடவே
எந்தம் ஆயே முத்தாச்சி
ஆடுக நன்கே செங்கீரை
ஆயிழை எங்கள் மகமாரி
ஆடுக நன்கே செங்கீரை

19. நட்டம் பயிலும் நம்பனை வேண்டி
நற்றவஞ் செய்தவளே
நாத னுடலிற் பாதி நல்க
நன்கே இணைந் தவளே
வட்ட வரிநுதல் மேனை போற்றம்
மருந்தும் ஆயவளே
மன்னும் மதுரைக்கரசி ஆகி
மாமுடி கொண்டவளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இட்டம் உடனாய் வேண்டு மடியர்க்
கின்பம் ஈபவளே
எழிலார் தெய்வ மகளிர் நின்றார்
ஈங்குத் தவழ்கின்றாய்
வட்டூரில் தன்னில் வந்தருள் தாயே
செங்கோ செங்கீரை
வாழ்வே எங்கள் எப்பினில் வைப்பே
செங்கோ செங்கீரை

20. சிந்தை தன்னில் இனிக்கும்
எங்கள் தெவிட்டாத் தெள்ளமிர்தே
திருவின் மாமறு மார்பன் திகிரிப்
படையோன் தங்கையரே
வந்திடு தேவர் வாதை
நிக்கிச் சிறையும் வீட்டிடவே
வள்ளற் பெருமான் குமரன்றன்னை
ஈந்திடும் அருளாளன்
எந்தை சிவனின் இடப்பால்
வைகி இருக்கும் பெருமாட்டி
எழிலுக் கரசி கலையின்
வடிவே இமவான் திருமகளே
முந்தும் புகழ்சேர் வட்டூர்
ராளே செங்கோ செங்கீரை
வாழ்வே எங்கள் எப்பினில்
வைப்பே செங்கோ செங்கீரை

## 3. தாலப்பருவம்

**(வேறு)**

21. பற்றொன் றில்லோன் பரஞ்சுடராம்
பகவன் பாங்கில் அமர்பவளே
பாடும் அடியர் பிணிதீர்க்கும்
பாவாய் உமையே பகவதியே
செற்றங் குரோதம் அற்றோரின்
சிந்தைக் கோயில் விழைபவளே
சிறியேந் தம்மை உளத் தெண்ணிச்
சேர்ந்தாய் ஈங்கண் சிறுமகவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றா அன்பின் மாதையரே
வழுவொன் றில்லார் கதிரேசர்
வந்தடி தொழவே அருள்செய்தீர்
வளருங் களப தனத்தாளே
கற்றோர் புகழும் வட்டூருக்
கரசீ தாலோ தாலேலோ
தாமோ தரனார் தங்கையரே
தவமே தாலோ தாலேலோ

**(வேறு)**

22. உலகு புரக்கும் உத்தமி
புலவோர் உவக்கும் குறுநகையாய்
உம்பர் போற்றக் கணபதி தனைமுன்
உவந்தே தந்தருள்வோன்
வலமலி கங்கை வார்சடை
வைத்தோன் வற்றா அருளாளன்
வையம் உய்ய இடமதில்
வைத்த வாலைப் பெண்கொடியே
நலமுடன் அடியர் நாளும்
பரவ நகைவள் தீர்ப்பவளே
நங்கள் மரபோர் வேண்ட
வந்தே நாடி அமர்ந்தவளே
தலமலி வட்டூர் வாழ
வந்தாய் தாலோ தாலேலோ
தாமோ தரனார் தங்காய் தவமே
தாலோ தாலேலோ

23. ஒன்னலர் அரணம் ஒருநொடி
தண்ணில் இலையாய் வீவித்தே
ஊங்கண் அவர்க்கும் ஆரருள்
செய்த ஒப்பில் சருவேசன்
தன்னில் வைகி முப்பத் திருபான்
தருமம் ஒப்பிடுவாய்
தாயே நின்னருள் தன்னை
வேண்டத் தாழா தேயருள்வாய்
கன்னல் வாழை மாவொடு
பூகம் கலித்திட நாளெல்லாம்
செஞ்நெற் கழனிகள் சேல்கள்
பாயும் திறநுறு வட்டூரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்னும் வீயோடப் பதி
வந்தாய் தாலே தாலேலோ
தாமோ தரனாய் தங்காய் தவமே
தாலோ தாலேலோ

24. கல்லா வினையேன் கலையின்
வடிவாய் காணு முதல்விநினை
கசிந்துள் உருகிப் பணிவார்
பாதம் கண்டும் தொழுதறியேன்
நல்லார் தாமே பற்றென் றெண்ணி
நாளும் உற வாடேன்
நங்காய் நின்றன் கோயில்
புக்கே நன்றே செய்துமிலேன்
எல்லோர் தமக்கும் இனிதே
செய்யும் எண்ணம் சிறிதுமிலேன்
என்றாய் சொல்ல நின்புகழ்
கேட்டேன் எங்கள் மாரிமுத்தே
வல்லார் வாழும் வட்டூர்க் கரசி
தாலே தாலேலோ
தாமோ தரனாய் தங்காய் தவமே
தாலே தாலேலோ

25. மலையின் அரையன் மகிழும்
மகவாய் வந்தாய் முனைநாளில்
மாதே மாந்தர் வாழ்வை
எண்ணி வழுதி மகளானாய்
அலையார் கடல்சூழ் உலகின்
உயிர்கள் அவலம் அடையாமே
அனையே நீயும் முக்கண்
நோக்கால் ஆரருள் புரிகின்றாய்
கலைஞர் உறையும் வட்டூர்
வந்த கற்பகம் ஆயவளே
களிப்பு விஞ்சி மழலை
சிந்திக் காட்சி தருகின்றாய்
அலையின் வாரா ஆரமு
தானாய் தாலே தாலேலோ
தாமோ தரனார் தங்காய்
தவமே தாலே தாலேலோ .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. கண்டுன் அடியர் களிப்புடனே
கைமலர் கொண்டு பணிந்தெழவே
கல்வி செல்வம் வீரமெலாங்
கருதித் தந்து காப்பவளே
மண்டும் திருவருள் வடிவான
மலரடி நோவ வந்துற்றாய்
மாதையர் மரபோர் செய்தவமே
மாரி முத்தே ஆத்தாளே
தண்டை கொலிசு சலசலக்க
தரள வடங்கள் ஒளிகூட்ட
தண்டேன் துளிர்க்கும் மலர்மாலை
தன்னில் வண்டார் இசைபாட
தண்டா வளவயல் வட்டூராய்
தாயே தாலோ தாலேலோ
தாமோ தரனார் தங்காய்யெம்
தவமே தாலோ தாலேலோ

27. மன்னும் முடியின் மீமிசையில்
மகுடம் நிலவின் ஒளிகாலும்
மணமார் கூந்தல் நறவுண்டு
வண்டார் கூடி இசைபாடும்
எண்ணும் நுதலின் பூதியயல்
இட்ட திகலம் மணமூட்டும்
இருவிற் புருவ மீமிசையே
இலங்கும் மையும் எழில்கூட்டும்
நண்ணுங் கடக முடனாக
நல்ல மதாணி மிளிர்தருமால்
நற்பொன் ஆடை தனையுடுத்தி
நம்பன் பங்கில் அமர்ந்தவளே
தண்ணென் சோலை வட்டூராய்
தலைவீ தாலோ தாலேலோ
தாமோ தரனார் தங்காயெம்
தவமே தாலோ தாலேலோ

28. பொங்கிடும் அன்பர் விழிவழி
பொழிதரு புதுப்புனல் தன்னோடும்
புகலநீ அன்றிப் பிறரிலை என்றே
புலம்புநர் கண்ணீரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்குதி ரண்டே ஆடுநர்
பாடுநர் ஆனோர் விழிநீரும்
ஆறென ஓடப் புன்னகை
காட்டி ஆரருள் செய்பவளே
திங்கள் மிலைச்சும் பரனார்
கூத்தைத் தினமும் காண்பவளே
திருமிகு வட்டூர் வாணர்
கூத்தில் தெவிட்டா இன்பினளே
மங்கல மேய மதூக
நிழலாய் தாலோ தாலேலோ
மாரித் தாயே பகவதி
சூலி தாலோ தாலேலோ

29. நேரே எவரும் இல்லாத்
தேவி நிருமலி ஒங்காரி
நீலவண்ணன் சோதரி என்றே
நிகழ்த்த மகிழ்பவளே
வாரார் தனத்தாய் வையம்
வாழ மகிழ்வு விஞ்சிடுவாய்
வற்றா அன்பின் வடிவிவள்
என்று வழுத்த மகிழ்பவளே
தீரா அம்மை முதாலாம்
நோயால் சிறிதும் வருந்தாமே
தினமும் கையிற் பொற்பி
ரம்போடு திரிந்து காப்பவளே
காரார் வட்டூர் இருப்பை
நிழலாய் தாலோ தாலேலோ
மாரித்தாயே பகவதி சூலி
தாலோ தாலேலோ

30. சீரை மிக்க தேவி
நின்னைச் சிந்தை வைத்திட்டோர்
தினமும் கோயில் புக்கே
பணிவார் எந்தை கதிரேசர்
பேரை மிக்க ஆயே
எங்கள் பீடார் பெருமாட்டி
பிறங்கும் கோயிற் கதவு
காணார் பெரிதும் மாழ்குற்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏரை மிக்க கதவம்
பண்ணி இணைத்தே இன்புற்றார்
எங்குடி தன்னை இனிதே
ஓம்பி என்றும் காக்கின்றாய்
காரை மிக்க கூந்தலி னாளே
தாலோ தாலேலோா
கன்னித்தாயே பகவதி சூலி
தாலே தாலேலோ.

## 4. சப்பாணிப்பருவம்
(வேறு)

31. அம்பிகையே பராசக்தி அபிராமி
கைமவதி அழகின் செல்வி
அஞ்சாத திறலுடையன் மகிடனைமுன்
அடல்கெடுத்தே அருளிக் காத்தாய்,
பம்புமிசை மலைவில்லி பராபரனார்
பாங்கமர்ந்து மலநோய் தீர்ப்பாய்,
பல்லுயிரும் பைரவியே நின்னருளால்
போகமெலாம் துய்த்து நிற்கும்,
இம்பரிலே எழில்குலவு வட்டூரில்
வீயோடை இருப்பை நீழல்
எளியேங்கட் கருளவென இன்புடனே
இளமழலை குழந்தை யானாய்,
உம்பர்கள் பணிசெய்ய உட்னின்றார்
சப்பாணி கொட்டி அருளே
உமையவளே ஆத்தாளே மாரிமுத்தே
சப்பாணி கொட்டி அருளே

32. தாவகலும் தண்ணிலகை காலுகின்ற
சந்திரர்கள் பல்லோர் வெள்க,
தகவுடனே காந்திதனைப் பரப்பும்நின்
சந்தமலி வதனம். ஆயே!
ஒவறவே அருட்கரங்கள் ஒருகோடி
முகில்களிலும் மேல தாக
அள்ளி யள்ளி அருள்மாரி
உலகுய்யநாளெல்லாம் கொட்டி நிற்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர்கள் தொழுதேத்த ஞானநலம்
நயந்தருளும் திருத்தாள் கேட்டி
நவநிதியே வட்டூரில் இருப்பைநிழல்
நம்பொருட்டாய் வந்த மர்ந்தாய்
ஆவலுடன் பணிந்தெழுகேம் அபிராமி
சப்பாணி கொட்டி அருளே
உமையவளே ஆத்தாளே மாரிமுத்தே
சப்பாணி கொட்டி அருளே

33. கற்றுணர்ந்தே பன்னூல்கள் காலமெலாங்
, காமமொடு குரோதம் மற்றும்
கழறவரு லோபமத மார்ச்சரியம்
கைவிடுத்தே விரதங் காத்துச்
சற்றெனினும் நவையிலராய்க் காலமெலாம்
விழமியங்கள் ஓம்பி வாழும்
சான்றோரை உயர்த்திவைக்கும் சாமுண்டி
திரிசூலி முத்து மாரி
சிற்றறிவோர் செய்தவத்தின் பாங்கெல்லம்
சிந்தைவைத்தே தேவி நீயும்
சிவசத்தி ஓங்காரி தற்பரையே
திருவுள்ளம் கொண்டு வந்தாய்
அற்றமிதில் வீயோடை ஆலயத்தாய்
சப்பாணி கொட்டி அருளே
உமையவளே ஆத்தாளே மாரிமுத்தே
சப்பாணி கொட்டி அருளே

34. அங்கமுதல் வேதங்கள் ஓதுநாவர்
ஆகமத்தின் வழியில் நின்றே
அருத்திமிக ஏத்திட நீ அகமுவந்து
புன்னகைசெய் பொலிவு என்னே
துங்கமலி வட்டூரில் வீயோடை
துரிசற்ற இடமாய் எண்ணி
தோகையரே துணையடிகள் நோவவந்து
துணையாம் அஞ்சீர் என்றீர்
அங்கயலின் கண்டையாய் ஆச்சிமுத்தே
ஆதிபரன் பாங்கி ருந்தீர்
ஆடலிலும் பாடலிலும் ஆசைகொண்டீர்
அன்பருனை வழுத்து கின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரியே சோதிமுத்தே ஓங்காரி
சப்பாணி கொட்டி அருளே
உமையவளே ஆத்தாளே மாரிமுத்தே
சப்பாணி கொட்டி அருளே

35. ஏர்பயிலும் வண்டினங்கள் இசைபாடி
எழிலாரும் அளகம் தன்னில்
என்னாளும் அகலாதே நின்றாடும்
இயல்புந்தான் என்னே என்னே
கார்பயிலும் கண்மணியே மீனாட்சி
காமாட்சி எங்கள் தாயே
காலமெலாம் அகலாதே தொண்டியற்றி
அருளமுதை மாந்த வைத்தாய்
பேர்பயிலும் வட்டூரில் பெருமாட்டி
வீயோடைப் பெண்ண ணங்கே
பெரும்பித்தன் மன்றாடி தன்னுடனாய்
நடமதிலே இன்பங் காண்பாய்
சீர்பயிலும் செகமனைத்தும் ஈன்றவளே
சப்பாணி கொட்டி யருளே
உமையவளே ஆத்தாளே மாரிமுத்தே
சப்பாணி கொட்டி அருளே

36. ஆறுமுகம் படைத்துடைய அன்புருவாம்
செவ்வேளார் அன்றோர் நாளில்
அடங்காத மேடமதை அடக்கிவைத்தே
அனைவருக்கும் அரிய செய்தார்.
ஏறுசுவை மாங்கனிக்காய் அண்டமெங்கும்
ஏறிவந்தும் கிடையா தாக
இன்சுவைய பழநீயே இனிநினக்கேன்
பழமென்றே அணைத்தாய் தாயே
வீறுபுகழ் குயில்கூவ மயிலாலும்
வட்டூரர் குழந்தை ஆனாய்
விண்ணவர்கள் போந்தீங்கு பணிந்து நின்றார்
விருப்புடனே வேத வல்லி

நீறணந்தே பரவுகின்றோம் நின்பாதம்
சப்பாணி கொட்டி அருளே
உமையவளே ஆத்தாளே மாரிமுத்தே
சப்பாணி கொட்டி அருளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. முன்னாள் உலகிற் கொடுமைபல
முட்டா தியற்றும் அசரவிருள்
முற்றும் இரியச் செய்தவளே
முதிரா இளமை கொண்டவே ள
இன்னா செய்யும் எவரையும்
இட்டே தீயில் பொன்செய்வாய்
எண்டோள் கொண்டவளே
ஈச்சுரி புவனை இறைவியரே
தென்னா தென்னா எனவண்டர்
திரியுஞ் சோலை வட்டூரை
தேடிப் போந்தார் தெள்ளமிர்தே
சிறியேம் வாழ்வும் ஓங்கியதே
அன்னாய் எங்கள் தவமகளே
ஆயே கொட்டுக சப்பாணி
அடியர் ஏத்தி மகிழ்ந்திடவே
ஆயே கொட்டுக சப்பாணி.

38. அம்பல மீதில் நடமிடுவேன்
ஐந்தொழில் செய்யும் ஆதிபரன்
அண்ணல் நந்தி முழவிசைக்க
அயலில் பூதர் கூடிடவே
இம்பரில் வாழும் உயிர்களுடன்
ஏனைய வானோர் யாருமுளார்
என்றும் இன்பம் எய்திடவே
இறைவீ சதிநீ கூட்டிடுவாய்
பம்பும் சீர்த்தி வட்டூரில்
பாங்கார் வீயோ டைப்பதியாய்
பவழ வாயில் நீர்சிந்தப்
பாவாய் போந்தாய் அருமகவாய்
எம்பெரு மாட்டி கையூன்றி
ஈங்கு கொட்டுக சப்பாணி
அடியர் ஏத்தி மகிழ்ந்திடவே
அம்பிகை கொட்டுக சப்பாணி

39. முன்னாள் மணிசெய் மாளிகையில்
மூளும் அன்பில் கட்டின்மிசை
மொழியும் ஆண்டு பதினாறாய்
முனிவோர் தேவர் பரவிடவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்னும் பஞ்ச பாணமுடன்
தூமதி சூடும் லலிதாவாய்த்
தோகை நீயும் அமர்ந்தருளித்
துயர்கள் தீர்ந்தாய் எனப்புகல்வர்
அன்னை நின்னைக் காமாட்சி
என்றும் அறைவர் சிலபேர்கள்
ஆரணி பூரணி அம்பிகையே
ஆயிரம் நாமம் உள்ளவரே
கன்னல் மலியும் வட்டூராய்க்
காரணி கொட்டுக சப்பாணி
கௌரி மனோகரி சாமுண்டி
கமலை கொட்டுக சப்பாணி.

40. வரியார் புலிதன் அதழுடுத்தே
வகையாய் யானைத் தோல் போர்த்தி
வருமோர் எருமைக் கருந்தலைமேல்
வந்தே நடமிடு மர்த்தனியே
தெரியும் மறையின் மறையாகத்
திகழ்ந்தே நிற்கும் கொற்றவையே
செய்ய கரத்தே வாளேந்தி
திரியும் இரலை ஊர்பவளே
அரியார் அயனார் அம்புயனார்
ஆயோர் இதயத் தமர்சோதி
அகிலம் முழுதும் பணிந்து தொழும்
ஐயன் பங்கில் உறைபவளே
பரவும் சோலை வட்டூரார்
பாவை கொட்டுக சப்பாணி
கௌரி மனோகரி சாமுண்டி
கமலை கொட்டுக சப்பாணி.

## 5. முத்தப்பருவம்

41. கங்கை தன்னை முடிவைத்தே
கடுவார் அரவை இடைவீக்கி
காதல் கொண்டு பதமதிலே
கழலைக் கட்டி ஆடுமரன்
பங்கில் அமரும் ஆத்தாளே
பாண்டி மன்னர் பாவையரே
பவளத் துவர்வாய் நீர்சிந்த
பாரோர்க் கென்றும் அருள்புரிவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துங்கம் மிக்க மாரியரே
துணையடி தூக்கி வந்தோடி
துயர்கள் அகன்று நாம்வாழ
தொல்லை வினைகள் இரிந்தோட
எங்கும் இன்பம் பொங்கிடவே
இறைவீ முத்தம் தந்தருளே
ஏசாச் சிறப்பின் வட்டூராய்
இனிய முத்தம் தந்தருளே

42. அன்னை நீயும் அமலன்பால்
அன்றோர் வைகல் அமர்ந்தினிதே
அவனி மாந்தர் தம்முள்ளே
அறிவு குறைந்தோர் நோயாளர்
பின்னும் வறுமைப் பிணியுற்றோர்
பெரிதாம் வாழ்வு பெற்றிடவே
பெரியோய் வழிதான் ஏதென்றாய்
பெருமான் அதனைக் கேட்டருளி
கன்னல் மொழியாய் ரேணுகையாய்
கடுகி நடந்தே அருளென்றார்
களிப்பு மிக்கே அதுசெய்தாய்
காசினி யோர்கள் வாழ்வுற்றார்
மன்னும் மாரி வாலையரே
வந்தே முத்தம் தந்தருளே
ஏசாச்சிறப்பின் வட்டூராய்
இனிய முத்தம் தந்தருளே

43. ஓங்குஞ் சீர்த்தித் காளத்தி
உற்ற திண்ண ணார்தாமும்
ஒருகண் இடந்தும் அமையாராய்
ஒருவா மறுகண் இடந்திடுவான்
வாங்கி எடுப்பக் கையுயர்த்தி
வருந்தேல் வருந்தேல் நில்லென்றே
வலத்தில் இருந்தும் வள்ளலிடம்
வைகும் மாதே மாரிமுத்தே
ஈங்கண் வட்டூர் தொல்குடியோர்
இயற்றும் தவத்தின் பயனாலே
இறைவி நீயும் மகிழ்வோடே
இருப்பை நீழல் வந்தமர்ந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூங்குழல் மாதே பூவையரே
பூரணி முத்தம் தந்தருளே
ஏசாச் சிறப்பின் வட்டூராய்
இனிய முத்தம் தந்தருளே

*44.* செப்புங் கரதலம் மீமிசையே
செந்துவர் வாயுடை அன்னையரே
திறனார் கட்க கபாலமுடன்
திகழும் தமருக பாசமுமே
ஒப்பில் வதனம் பிரபைதரும்
ஓதும் பிரம்பும் உறுத்திடுமே
உமையே வேப்பிலை கைக்கொண்டே
உலகைச் சுற்றி வலம்வருவாய்
தப்பில் சேடன் குடை கொணர்வான்
தாளம் மேளம் ஒலிகூட்டும்
தையல் தாராய் அருளென்றே
தவத்தோர் வேண்டி உருகிடுவார்
துப்பார் பவளத் திருவாயாய்
தூயாய் முத்தந் தந்தருளே
ஏசாச் சிறப்பின் வட்டூராய்
இனிய முத்தம் தந்தருளே

**(வேறு)**

*45.* பண்டிந்தப் பாரிலுயிர் தமையெல்லாம்
பரிவின்றி வருத்தி நின்ற
பாபியர்கள் யாவரையும் பல்வேறாம்
வடிவுகொடு மாய்த்தாய் நீயே!
கண்டுன்னை மாதையரும் முன்னாளில்
கைதொழநீ விரும்பி வந்தாய்!
கார்முகில்கள் எழுந்தோடி வந்து படி
தருமன்னு சீர்வட் டூரில்
எண்டிசையும் ஏத்தவுயர் வீயோடை
இருப்பைநிழல் போந்து றைந்தாய்!
ஈங்கண் வைசூரி முதனோய்கள்
எய்தாமே காத்து வப்பாய்
தண்டாத கருண்நெறி கமலையே
மகமாரி முத்த மருளே
காரணியே பூரணியே காமாட்சி
கௌமாரி முத்த மருளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46. கன்னியரே சாமுண்டி கங்காளி
முத்தலைகொள் சூல மேந்தி
காமனைமுன் காய்ந்திட்ட கண்ணுதலோன்
கறைகண்டன் பாங்கில் உற்றாய்
பன்னிநின்று நினையன்றிப் பிறதெய்வம்
பாரதனில் இல்லை என்றே
பணிந்தெழுநின் தொழும்பருக்குப் பற்பலவாம்
போகங்கள் பகிர்ந்த ளிப்பாய்
மன்னுபல தருவினங்கள் வளர்ந்தோங்கிப்
வட்டூரர் வனிதை நீயும்
வந்தின்று யாமுமுளம் என்றிருப்பை
வளர்நிழலில் வதிகின் றாயால்
அன்னையரே மாரிமுத்தே ஆரமிர்தே
ஆத்தாளே முத்த மருளே
ஆரணியே பூரணியே காமாட்சி
கௌமரி முத்த மருனே

47. மறையறிநன் மார்க்கண்ட மாணிக்காய்
மறலியைமுன் செற்ற பெம்மான்
மாண்புடனே வயதுபதி னாறுகொடும்
இளமையுடன் வாழ வைத்தோன்
அறைதருசீர் விடைக்கொடியோன் ஆதிமூர்த்தி
அயல்தனிலே அமர்ந்த தாயே
அனைத்துயிரும் உய்ந்திடவே அறமான
எண்ணான்கும் ஆற்று கின்றாய்
உறைந்தனைநீ ஓங்கியுயர் வட்டூரில்
உத்தமியே இருப்பை நீழல்
உனையன்றிப் பிறதெய்வம் இல்லையம்மா
ஓங்காரி மாரி முத்தே
முறையுடனே கையசைத்து ஓடிவந்து
முறுவலித்து முத்த மருளே
ஆரணியே பூரணியே காமாட்சி
கௌமாரி முத்த மருளே

**வேறு**

48. முன்னே அமணாம் ஆதர்
முனிந்தே கல்லிற் பூட்டியுமே
முழங்கும் ஆழி நடுவண்
கொடுபோய் வீசித் தள்ளுதலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னும் அரசர் ஐந்தெழுத் தோதி
மகிழ்வோ டேத்திடவே
வருந்தா வகைதான் கல்லே தெப்பம்,
என்ன உதவுபரன்
தன்னே ரில்லாத் தலைவன்
பாங்குறை தகரக் குழலாளே
தாயே மாரி உமையே சூலி
தாட்சா யினியாளே
பன்னும் வட்டூர்த் தலைவி
பாவாய் முத்தந் தந்தருளே
பார்வதி ஆரியை பரமேஸ்வரியே
முத்தந் தந்தருளே

49. உண்டே அருள்தான் என்றே
அடியர் உள்ளங் குளிர்தரவே
ஓங்கா ரத்தின் உருவாய் நின்ற
உத்தமி திரிசூலி
கண்டே அமுதே கனியே பாகே
காரணி மகமாரி
கார்பயில் சோலை வட்டூர் முதல்வீ
கனதன கங்காளி
பண்டே தத்தாத் திரையர்
கம்பர் காளி தாசரொடு
பகரும் குமர குருபரர்
ஆதிபத்தர்க் கருளினையே
எண்டோள் முதல்வள் பாங்கில்
அமர்வாய் முத்தந் தந்தருளே
பார்வதி ஆரியை பரமேச் வரியே
முந்தந் தந்து அருளே

50. கதிரோன் குணபால் எழவும்
காரிருள் அகலும் பான்மையென
கன்னி நின்னருள் நிலவும்
எழவே இடரிருள் கடிதேகும்
அதிரும் சிம்மம் மீமிசை
நீயும் அமர்ந்தே கொலுவிருப்பாய்
ஆயிர வதனம் உடையவளே
எங்கள் ஆதி பராசக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதிரும் அன்பால் வட்டூர்
வாணா வேண்டப் புகுந்தவளே
முன்னே இமவான் வேண்ட
மகவாய் முன்னி உதித்தவளே
சதிரும் ஆடித் தமியேம்
மகிழ முத்தம் தந்தருளே
தவமே ஆரியை பரிமேச் வரியே
முத்தந் தந்தருளே

## 6. வாரானைப் பருவம்

**(வேறு)**

51. அன்னையே அபிராமி ஆரணம்
அறியொணா அமலையே அத்தன்பால்
அமர்ந்துமே அண்டங்கள் அனைத்தையும்
அக்கிபின் ஆரருளைச் சுரந்துளிற்பாய்
மன்னுநின் வதனமது முண்டகம்
தனைவென்று பொழிதரும் அருளதனை
மாண்புறு மதிவாணர் போற்றிடு
மலர்ப்பதம் ஞானமதை நல்கிநிற்கும்
துன்னுபல் தருகுலவு வட்டூரில்
வீயோடை வந்தமர் மாரிமுத்தே
தோகைநீ துணையென்ன வந்துநின்
தொழும்பரை ஓம்பியே மகிழ்வுகொண்டாய்
அன்னமென் நடைகற்கும் ஆயிழை
அம்பிகை வருக நீவருகவே
அப்பனை ஆட்டியருள் அமரியே
முக்கண்ணி வருகநீ வருகவே

52. முன்னரே அசுரரொடு மூண்டதோர்
வெங்சமரில் வெற்றிகொள் வானவாதி
முற்றிடுந் தமதுபெரு வலியினால்
வந்ததென ஓகையுற் றார்ப்பரிக்க
பொன்னவிர் செஞ்சடையர் பொருந்து சிறு
துரும்பதனை நாட்டியே அசைமினென்ன
புங்கவர் ஆற்றகிலர் புலம்பப்
பூரணிநீ ஆங்குப் போந்துநின்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னையர் அல்லாது பரம்பொருள்
ஏவர்களுக் இலையென இயம்பிவைத்தாய்
இமயவர்தம் வேந்தனும் ஆயினானால்
கன்னல் மொழிபயில் கெளரியே
காமாட்சி வருக வருகவே
அப்பனை ஆட்டியருள் அமரியே
முக்கண்ணி வருகநீ வருகவே

53. தேவியே சித்ரூபி மோகினி
திருமாலின் சோதரி மகமாரியே
திருமகள் கலைவாணி ஆதியர்
தலைவாயில் தன்னிலே காத்திருந்தார்
ஆவியே கௌமாரி அபலையே
அன்பர்கள் குழுமியே பாட்டிசைப்பார்
ஆதியே முத்தம்மை அன்பினின்
பிழிவுநீ அல்லையோ அலங்காரியே
கூவியே பெருமாட்டி குழைந்துமே
சிறியேங்கள் வேண்டுதல் கேட்வில்லையோ
குற்றமில் வட்டூர் மாரியே
கோதை சற்றுமே இரங்குதாயே
பாவியம் ஆயினும் பழவடியர்
பாவையே வருக வருகவே
அப்பனை ஆட்டியருள் அமரியே
முக்கண்ணி வருக நீ வருகவே

54. ஆவியுள் ஆவியாகி ஆரணம்
அறிய வொண்ணா அற்புதத் தெய்வநீயே
அருக்கனிற் சோதியானாய் அணிமித்த
தண்மையுநீ அறைந்திடில் அமலைகேட்டி
தாவகல் புவியுளைந்தாய் தண்புனல்
தன்னினுள் தந்திடு நான்குமானாய்
தீயினுள் மூன்றுமாகித் திகழ்வழி
இரண்டுமாகி வெளிதனில் ஒன்றுமானாய்
மேவரு மதலையென்ன மிக்குயர்
மதூகநீழல் மாரியே இன்றமர்ந்தாய்
வாலையே தொண்டருள்ளார் வந்துனைச்
சரண்புகுந்தார் வரம்பல நல்குவாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவினுட் சுவையுநீயே பற்றினர்
பற்றுநீயே வருக வருகவே
அப்பனை ஆட்டியருள் அமரியே
முக்கண்ணி வருகரீவருகவே

55. அதிபரை ஆனவேர அமரரெலம்
அடிபணிந்தே பரவும் தாயே
அருளுருவே மீனாட்சி காமாட்சி
ஆயபல் பெயர்கள் கொண்டாய்
பாதிமதி சூடபரன் பாங்கிருப்பாய்
ஐந்தொழிலும் பாத்து வப்பாய்
பற்றினர்தம் பற்றானாய் பாவாணர்
பத்திசெய்து பாட்டி சைப்பார்
சோதியுருக் கொண்டவளே சுந்தரியே
சாமுண்டி மாரி ஆத்தா
தோமறுசீர் வட்டூரில் தொன்மைமலி
இருப்பைக்கீழ் வைகும் பாவாய்
பாதமிசைப் பாடகந்தான் கலகலப்பப்
பாமினியே வருக வருகவே
பழவடியர்க் கருள்புரியும் பவளவாய்
கோமளமே வருக வருகவே.

56. பேறுதரு பெருமானார் எருதேறி
பண்டொருகால் கான கத்தில்
பெற்றெடுத்த தாய்ப்பன்றி பெரும்பிரிவும்
எய்திடவே குருளை யெல்லாம்
ஆறுதலொன் றின்றியங்கண் அலக்கணுற்றே
கிடந்துருண்டு மாழ்குங் காலை
அன்புமிகும் அனையாகிப் பாலூட்டி
ஆதரிந்த பெற்றி கேட்டேம்.
ஏறுபுகழ் மாரியரே முக்கண்ணி
ஈசுவரி கோம ளாங்கி
ஈங்கெளியேம் இடர்துரப்ப எய்த்து நின்றேம்
முறையாமோ இயம்பாய் அம்மா
சீறடியில் பாடகந்தான் கலகலப்பத்
தேவியரே வருக வருகவே
சீர்த்திமலி வட்டூரார் திருமகளே
முத்தாச்சி வருக வருகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

57. அன்னை வருக அனைத்துலகும்
அருளிக் காக்கும் அம்பிகையாம்
அமுது வருக அராவணியும்
அமலன் பாங்கில் குடியிருக்கு
மின்னார் வருக விரும்புவரம்
வேண்ட நல்கும் வித்தகியாம்
விமலை வருக விண்ணோர்கள்
மேவிப் பணியும் பூரணியாம்
பொன்னார் வருக புகழ்மேய
பொருளாம் அடியர் புகலிடமாம்
புவனை வருக ! புலவரெலாம்
போற்றிப் பாடும் பூங்கொடியாம்
தென்னா என்னா வண்டிமிரும்
வட்டூர்ச் செல்வி வருகவே!
சிந்தா மணியே கோமளளே
தேவி வருக வருகவே

58. பொங்கல் குளிர்த்தி விழவினிலே
பூரிப் படையும் மாரியரே
புவன மெங்கும் வாழ்வோர்கள்
பொருந்துங் கொடிய நோய் நொடிகள்
இங்கணகற்றி இகவாழ்வில்
ஏற்றம் நல்கும் ஈஸ்வரியே
ஏங்கித் துடிக்கும் அன்பருடன்
இருந்தே இன்னல் தீர்ப்பவளே
எங்கள் பரனார் கியைபூசை
இனிதே இயற்றும் காலைதனில்
அங்கண் சாத்தி ஆழி பெற்ற
அரியின் சோதரி ஆனவரே
துங்கம் மலியும் வட்டூரர்
தோன்றாத் துணையே வருகவே
சிந்தா மணியே கோமளமே
தேவீ வருக வருகவே

59. தாயாய் முலையைத் தந்தவளே
தமியேன் தன்னை வளர்த்தெடுத்தாய்
தலையாம் தமிழைப் பருகவைத்தாய்
தக்கோர் புகழ வழிசமைத்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயே வாலை அழகியரே
அணங்கே அமுதே அபிராமி
அன்பர் ஈங்கண் வந்துற்றார்
அரற்றும் ஓசை கேட்கலையோ
சேயேன் நின்புகழ் பாடிடவே
திருவாய் தந்தாய் தென்னமிர்தே
சிறியேன் நின்னை நினைத்திடவே
திருவே நெஞ்சம் அருளினையே
தேயா அன்பின் வட்டூரார்
செல்வி வருக நீ வருகவே
சிந்தா மணியே கோமளமே
தேவி வருக நீ வருகவே

60. பன்னும் புவியைத் தாங்கிடுவோன்
பவனன் உடனாய்ப் பற்பலநாள்
பலரும் காண அமரிட்டோன்
பதஞ்சலி எனவும் வந்துற்றோன்
தன்னை ஈங்கட் குடையாகத்
தகைசால் பாயல் தானாக
தாழா அன்பிற் கொண்டுற்ற
கோபா லன்றன் சோதரியே
கன்னல் வாழை தெங்குமலி
கவினார் வட்டூர் வீயோடை
காதல் கொண்டே வந்தமர்ந்தாய்
காலிற் சதங்கை கொஞ்சிடவே
தென்னன் தனக்கும் மகவானாய்
செல்வி வருக நீ வருகவே
சிந்தா மணியே கோமளமே
தேவி வருக நீ வருகவே

## 7. அம்புலிப்பருவம்
## (வேறு)

61. தோத்திரம் செய்து தொழுதிடும்
அடியர் துயரம் போக்கிடுவான்
துன்பம் எதுவும் எய்தா
வண்ணம் காத்து வளர்த்திடுவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்திரம் எல்லாம் தற்பரை
என்றே சாற்றும் முத்தாச்சி
சங்கரன் பாங்கில் இருந்தே
தரணி தன்னை ஆளுகின்றான்
புத்தொளிர் சோலை வட்டூர்
வாணர் பொற்கொடி யிவளன்றோ
பொன்மகள் பூமகள் ஆமிரு
வோரும் புறத்தே காத்திருந்தார்
ஆத்தாள் எங்கள் அன்னை
உடன்நீ அம்புலி யாடவாவே
அழகொளிர் முத்துமரி உடன்நீ
அம்புலி யோடவாவே

62. வானாய் நிலனாய் வரையாய்
யாறாய் மறியுங் கடலாகி
வருபல் உயிரின் உயிராய்
எங்கும் வைகும் அருளன்னை
கோனாம் பரமன் கூறாய்
நிற்கும் கோதை அருட்குமரி
குற்றம் போக்கிக் குணமே
நல்கும் கோதை அருளரசி
கானார் பொழில்சூழ் வட்டூர்
இருந்தாள் கன்னி வடிவழகி
கண்ணன் தங்கை அருளின்
ஆடல் கண்டே களித்திடலாம்
ஆனா அமுதாம் அம்பிகை
உடன்நீ அம்புலி ஆடவாவே
அழகொளிர் முத்து மாரி
. உடன்நீ அம்புலி ஆடவாவே

(வேறு)

63. பேருயருங் காசிதனில் அமர்ந்தருளி
அமுதூட்டும் பெண்ண ணங்கு
பிறங்குபுகழ்ப் பாண்டியர்தம் குலக்கொடியாய்
போந்தரசு செய்த பூவை
சீருயரும் இடபமிசைத் திரிந்தருளுஞ்
சிவனார்தம் செம்பாதி ஆனாள்
செப்புமிள மதியேறி எந்தையவர்
திருமுடியில் இடமுங் கொண்டாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்படியுஞ் சோலைநெறி வட்டூரர்
கழல்பரவும் மதலை அன்றோ!
கருதுங்கால் இருவோர்க்கம் காலமெலாம்
கேண்மையதும் உண்டே கேட்டி
ஏருயரும்ஈசுவரி எம்மனையோ
டம்புலியே ஆட வாவே
எழிலரசி மகமாரி ஏந்திழையோ
டம்புலியே ஆட வாவே

*64.* செம்மேனிச் சிவபரனார் திருச்சடையில்
கங்கையொடு தும்பை பாந்தன்
திகழ்தரவே வைத்தடியர் சேவித்துத்
தொழுதேத்த நிற்கின் றாரால்
அம்மதியே பாலாழி வந்துற்றாய்
அவர்சடையில் இடமும் கொண்டாய்
அமுதநிலா மாந்தருண அள்ளியள்ளிக்
கொடியகம் மகிழ்கின் றாயால்
செம்மைமலி நின்பண்பு பிறந்தகுடி
தந்தவுயர் பழக்க மாமோ
செங்குமுத மாதவளுன் செயல்கண்டே
உவகையொடு திளைக்கின் றாளால்!
அம்மையிவள் வட்டூரர் ஆயிழையோ
டம்புலியே ஆட வாவே
எழிலரசி மகமாரி ஆத்தாளோ
டம்புலி ஆட வாவே

*65.* விழியூடு கண்டெவரும் விரைந்துபுக்கு
விழைந்து நினைக் கவர்வ ரென்றோ
விரைந்துசெலும் முகிலூடு அடிக்கடி நீ
மறைந்தொதுங்கி நிற்கின் றாயால்
வழியேதும் காண்கிலையோ அவமேதான்
மாழ்கிமனம் வருந்து கின்றாய்
வானோர்கள் வந்திறைஞ்சித் திருநாமம்
பலசொல்லி வேண்டு கின்றார்
எழிலாரும் சோலைநெறி வட்டூரை
எய்திநின்று தொழுதெ ழுந்தால்
இமவானின் இரும்புதல்வி சாமுண்டி
அபயமுந்தான் ஈந்து வப்பாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிவில்லைப் பாவையவள் தன்னோடும்
அம்புலி ஆட வாவே
எழிலரசி மகமாரி ஆத்தாளோ
டம்புலி ஆட வாவே

66. வாதைதரு கொடுநோய்கள் தீர்ந்த பேர்கள்
வைசூரி வாட்ட நொந்தோர்
வருகைதந்து புகலளித்த தாயவட்கு
வாஞ்சையுடன் பூசை செய்வார்
காலொடு கலைஞருளார் காற்சதங்கை
கலகலப்பக் காலில் வீழ்வார்
காதன்மகப் பேறுபெற்றோர் கனகாபி
டேதமதும் செய்து வப்பார்
தாதசிந்து சோலைமலி வட்டூரர்
தம்மிறைவி கடைக்கண் செய்வாள்
தாளமொடு மத்தளமும் துடியுமங்கு
தாளாதே ஓசை கொட்டும்
ஆதிபரை அன்பூ ரணியோடு
நீயும்கூடி அம்புலீ ஆடவாவே!
எழிலரசி மகமாரி ஆத்தாளே
அம்புலி ஆட வாவே!

**(வேறு)**

67. அண்டம் யாவும் ஈன்றருள்வாள்
ஆரருள் வடிவே கொண்டிடுவாள்
அம்பல வாணன் அயல்நின்றே
ஆனந்த நடமும் ஆட்டுவிப்பாள்
பண்டிப் பாரிற் பாண்டியர்க்காய்
பாவை வேடம் கொடுவந்தாள்
பார்த்தற் காக வெங்கானில்
பரம னுடனாய் சென்றவள்காண்
கண்டல் வேலி நெய்தலிலே
கானவன் மகவாய் வந்தவள்காண்
காரிகை எங்கள் பராசத்தி
கவினுறு வட்டூர் முத்தாச்சி
ஒண்டொடி பாரதி இவளுடனாய்
அம்புலி ஆட வாராயே
அன்னை கௌரி உமையுடனாய்
அம்புலி ஆட வாராயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

68. பார்பதம் அண்டம் முற்றூடும்
பரந்த சோதி மாரிமுத்தார்
பங்கையன் வாசவன் ஆதியரும்
பரவும் பரிசு கொண்டவள்காண்
பேர்மலி வட்டூர்க் கரசியிவள்
பிஞ்ஞகன் ஏவ இங்குற்றாள்
பெரியன் மேலோன் மாதாச்சி
பிறங்கும் எழிலோன் கதிரேசர்
சீர்மலி பூசைக் குவந்தவர்காண்
தீதெதும் இன்றிப் புரக்கின்றாள்
சிந்தை செய்வோர் சித்தவெளி
சேர்ந்து நடமும் செய்கின்றாள்
ஆரணி பூரணி இவளுடனாய்
அம்புலி ஆட வாராயே
அன்னை கௌரி உமையுடனாய்
அம்புலி ஆட வாராயே

69. தேயம் புகழும் தண்மதியே
தினமும் வானில் வருபோழ்தில்
திகழும் மறுவொடு வருகின்றாய்
திருட்டி தோடம் கழித்திடவோ
நேயம் மிக்க நேரிழையார்
நீடும் ஒளிதிகழ் வதனத்தே
நியமம் தவறார் கரும்புள்ளி
நிதமும் தீட்டுதல் அதுவாமோ
வேயன தோனி மகமாரி
விரிபொழில் வட்டூர் வித்தகியாள்
வேதந் தானுங் காணாதாள்
வேண்டும் வரங்கள் ஈந்திடுவாள்
ஆயவள் சுந்தரி தன்னோடு
அம்புலி ஆட வாராயே!
அன்னை கௌரி உமையுடனாய்
அம்புலி ஆட வாராயே

70. சாந்தம் தனது வடிவானாள்
தழல்போல் சடையும் தரித்துள்ளாள்
தனிவிழி மூன்றும் கொண்டுள்ளாள்
தகவுறு குண்டலம் ஒளிவீசும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏந்தும் நாந்தக காபாலம்
இயையும் துடியும் தரித்துள்ளாள்
எழிலார் சிம்ம வாகினியாள்
எங்கும் சுற்றிப் போய்வருவாள்
தீந்தமிழ் பயிலும் வட்டூராள்
திருவும் வாணியும் உடனின்றார்
தேவி அவளும் மகிழ்வோடும்
சிறுமாக வாகி அணைந்திட்டான்
ஆந்துணை ஆகிய அவளுடனாய்
அம்புலி ஆட வாராயே
அன்னை கௌரி உமையுடனாய்
அம்புலி ஆட வாராயே

## 8. அம்மானைப் பருவம்

71. காட்டகத்தில் முன்பொருகால் கூளியெலாம்
தொழுதேத்தும் தேவி ஆனாய்
கருத்துடனே அவைதந்த கூழமுதைக்
களிப்புடனாய் வாங்கி உண்டாய்
நாட்டகத்தில் பரிப்பாகன் எனவந்த
நம்பனிடம் பாதி கொண்டாய்
நாவலர்கள் பாவலர்கள் நாளெல்லாம்
புகழ்புரவ நனியு வப்பாய்
ஏட்டினிலே எழுதவொணா எழிலுடையாய்
எங்குடியோர் மகளும் ஆனாய்
இன்பநலம் ஈந்தருளும் ஏந்திழையே
திரிசூலி மாரி முத்தே
பாட்டுடனே கூத்தோவா வட்டூராய்
அம்மானை ஆடி அருளே
பகவதியே திருவதனி பார்வதியே
அம்மானை ஆடி அருளே.

72. வாட்டடங்கண் மாரிமுத்தே வற்றாத
அருளூற்றே நுங்கோன் முன்னாள்
வனவேடன் திண்ணன்செய் பூசைதனை
வாஞ்சைகொடும் ஏற்ற துண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுமிசைக் கோமளமே கோதையரே
ஆகமத்தின் கொள்கை யின்றி
குடியடிமைத் தொழும்பாளர் பொங்கலுடன்
குளிர்த்திசெய மகிழ்வு பூத்தாய்
நாட்டமுடன் ஞானப்பால் நம்பெருமான்
சம்பந்தர்க் கூட்டி வைத்தாய்
நாளுமவர் சொன்மாலை சாத்திடவே
நாயகியே இன்பு கொண்டாய்
பாட்டுடனே கூத்தோவா வட்டூராய்
அம்மானை ஆடி அருளே
பகவதியே திருவதனி பார்வதியே
அம்மானை ஆடி அருளே.

73. வாட்டமிலா மலர்கொண்டு கருங்குழலை
வகைவகையாய் அழகு செய்து
வளர்குவளை தோற்றேங்கும் கட்புருவம்
தனில்வேறு மையும் பூசி
ஈடுமெழில் அதரத்தில் செந்நிறத்தை
எடுத்தள்ளிப் பொருத்தி வைத்து
ஏவர்களும் அதிசயிக்கும் எழிலுருவம்
இன்புடனே தாங்கி நின்று
கூட்டுமுயர் பீடத்தே கொலுவிருந்து
கூறிடுவார் குறைகள் கேட்டு
கோற்றொடியே மாரிமுத்தே குலமாதா
குறையனைத்தும் தீர்த்து வைப்பாய்
பாட்டுடனே கூத்தோவா வட்டூராய்
அம்மானை ஆடி அருளே!
பகவதியே திருவதனி பார்வதியே
அம்மானை ஆடி அருளே!

74. ஈட்டியதாம் வினையிரண்டும் நேராக
இயைந்தக்கால் ஈங்கண் மேலும்
எய்துமல பரிபாக சத்நிபாதம்
என்னுநிலை கூடும் பின்னும்
சேட்டமுறும் இந்நிலையில் உயிர்களின்பில்
திளைத்திடுவர் என்றே எல்லாம்
சாத்திரங்கள் கற்றுணர்ந்த சான்றோர்கள்
முன்னாளில் சாற்றி வைத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டமவை மூன்றுடைய நாயகியே
நம்குடியோர் தவத்தி னாலே
நடந்துவந்தே வட்டூரில் இருப்பைநீழல்
நண்ணியமை நவிலக் கேட்டோம்
பாட்டுடனே கூத்தோவா வட்டூராய்
அம்மானை ஆடி அருளே
பகவதியே திருவதனி பார்வதியே
அம்மானை ஆடி அருளே.

75. நாட்டினிலே குருந்தின்கீழ் வந்தமர்ந்து
நம்பெருமான் வாத வூரர்
நலம்பெறவே பிட்டமுதை உட்கொண்டு
பிரம்படியும் பெற்ற ஈசன்
வேட்டருள உவந்தமர்ந்து வினைவளங்கள்
தீர்த்தருளும் அன்னை நீயும்
விரும்பிநின்று வட்டூரில் வீயோடை
இருப்பையடி கோயில் கொண்டாய்
தாட்டுணையே தஞ்சமென்று தலைகொள்வார்
சித்திமுத்தி பெறுவர் திண்ணம்
தானவர்க்கும் அருள்சுரந்த தற்பரையே
சங்கரியே முத்து மாரி
பாட்டுடனே கூத்தோவாப் பழம்பதியாய்
அம்மானை ஆடி அருளே
பகவதியே திருவதனி பார்வதியே
அம்மானை ஆடி அருளே

76. கூடுந்தொண்டர் குழாத்துள்ளார்
கூத்தொடு கரகம் காவடியும்
கொண்டே ஆடிப் பரவிடநீ
குறித்த பேறிங் குதவுவையே
நீடும் வானே நிலனொடுகால்
நீரும் தீயும் நீயானாய்
நேயப் புனல்கொண் டுன்னடிக்கே
நித்தம் ஆட்ட அருள்புரிவாய்
வாடும் பயிர்க்கு வான்மழைந்
வற்றா அருளின் ஊற்றானாய்
வரையைக் குடைசெய் கோபாலன்
வாழ்த்தும் தங்கை ஆனவளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீடார் வட்டூர் மாரிமுத்தே
பெண்ணே ஆடுக அம்மானை
பிறவா அமுதே ஆத்தாளே
பிடியே ஆடுக அம்மானை

77. நாடு போற்றும் நாயகியே
நம்பன் பங்கில் உறைபவளே
ஏடார் நிம்ப பத்திரத்தை
எடுத்தே கையில் வலம்வருவாய்
கூடா மாரா சுரனைமுனம்
கொன்றே தீர்த்த பரிசதனால்
மாமா ரிப்பேர் கொண்டனையால்
வந்தே நாகம் குடைபிடிக்கும்
ஓடாப் பூட்கை உடையவளே
உவந்தே இடக்கால் தனையூன்றி
ஒகை யுடனாய் வலந்தொங்க
ஒலக்கந்தான் வீற்றிருப்பாய்
பீடார் வட்டூர்மாரிமுத்தே
பெண்ணே ஆடுக அம்மானை
பிறவா அமுதே ஆத்தாளே
பிடியே ஆடுக அம்மானை.

78. ஆயிழை அம்பிகை அபிராமி
அகிலம் முற்றும் பயந்தவளே
அன்பே அருளே அறமாதி
அகிலம் எல்லாம் உறவேண்டும்
காயும் வெயிலுக் கருநிழல நீ
காரணி பூரணி காமாட்சி
கவலை பிணிகள் இல்லாத
காலந் தானும் வரவேண்டும்
தேயம் பரவும் வட்டூரில்
திருவளர் வீயோ டைப்பதியாய்
தேவி சங்கரி முத்தாச்சி
தெய்வத் தாயே தற்பரையே
பேயோ டாடி பங்கினளே
பெண்ணே ஆடுக அம்மானை
பிறவா அமுதே ஆத்தாளே
பிடியே ஆடுக அம்மானை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

79. வாசக கமலம் அலர்வாவி
வற்றாக கூவல் உடனாக
வளஞ்சேர் வட்டூர் வீயோடை
வைகுஞ் செல்வத் தாயாரே
மாசொன்றில்லா மணிக் குன்றே
மாரி முத்தே மாதுமையே
மலர்கொண் டுன்னடி இணைஏத்த
மனமும் வைத்திங் கருளினையே
பாசத்துடனே தொழுது எழுவார்
பண்ணிய வினைகள் நீறாக
பரவி நீறு பூசுமரன்
பங்கில் வைகும் பாவையரே
பேசற் கரிய புகழாளே
பெண்ணே ஆடுக அம்மானை
பிறவா அமுதே ஆத்தாளே
பிடியே ஆடுக அம்மானை

80. செந்திரு மாதுங் கலைமாதும்
சேவை புரிவார் அரமாதர்
சேர்ந்தே நடமும் இயற்றிடுவார்
சிறிதே புன்கை பூத்திடுவாய்
நந்திடு மலநோய் வீந்தோட
நாளும் உயிர்கட் இதம்புரிவாய்
நாயகி தேவி பராபரையே
நம் பெரு மாட்டி உமையாளே
முந்திடு சோலை மீதேறி
முகில்கள் படியும் வட்டூராய்
முக்கணி சூலி ஓங்காரி
முத்தே இறைவீ தாயாரே
பந்தன விரலி பார்பதியே
பைரவி ஆடுக அம்மானை
பிறவா அமுதே ஆத்தாளே
பிடியே ஆடுக அம்மானை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. நீராடற் பருவம்

### (வேறு)

81. காரிட்ட கொடுமிருள் ஒத்திட்ட
மூலமலம் கடிதின் ஏக
கருணையெனும் அருட்சுடரை விரித்திடும்
கண்மூன்று கொண்ட தாயே
ஏருற்ற குறுநகைசெய் ஏந்திழையர்
எய்திநின்றிங் சேவல் கேட்ப
இருப்பையதன் நீழலிடை எழில்விஞ்ச
இன்புடநீ வீற்றி ருந்தாய்
வாரிட்ட பூண்முலைகொள் வடிவழகி
வாள்கொண்டு சிம்ம மூர்வாய்
வற்றாத வாய்மையும் தூய்மையும்
வழங்கியெனை அடிமை கொள்வாய்
சீருற்ற வடிவழகி மகமாரி
தீம்புனலில் ஆடி அருளே
தென்னனொடு மலைமன்னன் திருக்குமரி
தீம்புனலில் ஆடி அருளே.

82. அன்னையரே பராசக்தி அருள்பிலிற்றும்
ஊற்றென்ன விளங்குகின்றாய்
ஆதவனின் ஒளியாயும் அழகுமதி
நிலவாயும் நிலவு கின்றாய்
மன்னுகின்றாய் மலரிடத்தில் மணமுமாகப்
மற்றுமிங்கண் நீரினது தன்மை நீயே
மாதங்கி சாமுண்டி கௌரியாதி
மன்னுபல பெயர்கள் கொள்வாய்
பன்னவரு பார்வதியே காலமெல்லாம்
பற்றினர்தம் பற்று மாவாய்
பாவையரே நம்நோக்கில் பாவங்கள்
பொடிப் பொடியாய் போகு மென்றோ
துன்னுபுகழ் வடிவழகி மகமாரி
தீம்புனலில் ஆடி அருளே
தென்னனொடு மலைமன்னன் திருக்குமரி
தீம்புனலில் ஆடி அருளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

83. மூவாத முழுமுதலே மூவர்க்கும்
காண்பரியாய் மூப்பும் இல்லாய்
முக்கண்ணி நினையன்றி எமக்குதவ
யாரேனும் உண்டா அம்மா
தேவாதி தேவனுடன் சேர்ந்துநின்று
சிருட்டித்திதி செப்பிற் பின்னும்
சுங்காரம் திரோபவமே அனுக்கிரக
ஆதியன செய்து வைப்பாய்
காவாத பசுவில்லைக் கன்றதனை
கயல்விழியே கடைக்கண் பாராய்
கருணையதன் வடிவான கற்பகமே
காமாட்சி அருள்தான் தாராய்
துன்னுபுகழ் வட்டூராய் மகமாரி
தீம்புனலில் ஆடி அருளே
தென்னனொடு மலைமன்னா திருக்குமரி
தீம்புனலில் ஆடி அருளே.

84. கன்னலன மொழிபயிலும் பரவைதன்பால்
காரிருளில்தூது சென்றோன்
கருதுபல உயிரினங்கள் இன்புறற்காய்
காண்டகுபல் வடிவம் கொள்வான்
அன்னையரே ஆருயிர்கள் நனிவாழ
அதிகார சக்தியுடன் வீரசக்தி
அடுத்திட்ட போகமொடு தேவ சக்தி
ஆதியபல உருவு கொள்வாய்
உன்னருவுள் உம்பர்கோன் உறைவனென
ஓதிடுமே மறைகள் தாமும்
உண்ணாத முலையினளே ஓங்காரி
ஈசுவரி லோக மாதா
துன்னுபுகழ் வட்டூரில் மாரிமுத்தே
தீம்புனலில் ஆடி அருளே
தென்னனொடு மன்னன் திருக்குமரி
தீம்புனலில் ஆடி அருளே.

85. காரிருளாம் அவுணருளார் இரிந்தோடிக்
களம்புகுந்து விடியல் தந்தோன்
கவினொழுகு முகமாறும் கரங்கள்
பன்னிரண்டும் கொண்ட வர்க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏருயரும் அன்னையரே எண்டோளன்
முக்கண்ணன் பாங்கி ருந்து
எல்லையில்சீர் ஞானசக்தி வேலதனை
ஈந்துதவி இன்பங் கண்டாய்
வாராரும் பனைமுலையாய் வட்டூரில்
வீயோடை இருப்பை நீழல்
வந்தமர்ந்து முந்தையோர் வழிபட்டேத்த
வரம்நல்கி மகிழ்ந் திருந்தாய்
தாராரும் வடிவழகி மகமாரி
தீம்புனலில் ஆடி அருளே
தென்னனொடு மலைமன்னன் திருக்குமரி
தீம்புனலில் ஆடி அருளே.

**(வேறு)**

86. அடியர் வேண்ட அகமுவந்தே
அருளைப் பொழியும் தனிமுகியே
ஆங்கா ராதி மலமூன்றின்
ஆற்றல் போக்கும் மாரிமுத்தே
கடியார் பொழில்சூழ் வட்டூரைக்
கருதிப் புகுந்தே வீயோடை
குடியாய்க் கொண்ட கோமளமே
கொடுநோய் பிணிகள் தீர்ப்பவளே
கொடியாய்ச் சிம்மம் கொண்டவரே!
கொற்றம் தன்னி வடிவினளே!
குலவும் திருவடித் தாமரைகள்
கூடும் ஞானத் தேன்பிலிற்றும்
துடிநேர் இடையின் மாரியரே
தீம்புனல் ஆடி அருளுதியே
தோன்றாத் துணையாம் கண்ணாத்தா
தீம்புனல் ஆடி அருளுதியே.

87. வரவு தவறா வகைவானின்
வந்தெழு ஞாயிறு தனையொத்தே
வாலை நீயும் வழுவாமே
வந்துன் அடியர் முன்னிற்பாய்
பரவும் நிலவைப் பொழிந்துதவும்
பண்புறு மதியின் மேலாகப்
பாவை நீயும் அருணிலவை
பாரோர்க் கள்ளிக் கொட்டுகிறாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரவுங் கழனி யாங்கணுமே
வீழ்ந்தே கயல்கள் குதிகொள்ளும்
வீயோடை ப்பதிவாழ் முதல்வியரே
வித்தகி சுந்தரி நர்த்தகியே
கரவொன் றில்லார் களைகண்ணே
தீம்புன லாடி அருளுகவே
தோன்றாத் துணையாம் கண்ணாத்தா
தீம்புனலாடி அருளுகவே.

88. மதுரம் குலவும் மலையாளம்
வந்தே பயிலும் மடப்பிடியே
மதியாக கம்சன் தனைமாய்த்த
மாயன் பேணும் தங்கையரே
கதிர்கள் கோடி தருபிரபை
காட்டுந் திருமுகம் உடையவரே
கந்தன் மணவணி காண்பதற்காய்
கண்ணுத லோடுடன் வந்தவரே
உதிருங் கதிர்சேர் கழனிதொறும்
உலவுங் கயல்மலி வட்டூரில்
உறையும் தாயே ஓங்காரி
உலவா அமுதே திரிசூலி
துதிசெய் அடியர் துயர்தீர்ப்பாய்
தீம்புன லாடி அருளுகவே
தோன்றாத் துணையாம் கண்ணாத்தா
தீம்புன லாடி அருளுகவே.

**(வேறு)**

89. சிந்துரம் இட்டெழில் காலும்
திருநுதல் சேர்க்கும் சுடரொளியும்
செப்பன கொங்கையில் அப்பிய
சாந்தும் செய்யும் நறுவிரையும்
முந்துறு கைகளில் இட்டி
கடகம் முகிழ்க்கும் முழுநிலவும்
முளரிப் போதனை காலில்
கட்டிய தண்டை தருமிசையும்
அந்தர மெங்கணும் அற்புதம்
செய்ய அமைந்தாய் வட்டூரில்
ஆறணி சடையெம் ஐயனை
ஆட்டும் அமலை மகமாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரி அந்தரி சோதி
சொரூபி தூ நீர் ஆடியருள்
தோன்றாத் துணையாம் கண்ணாத்தா
தூநீர் ஆடியருள்

90. முந்தை ஓர்கால் ஆதி
பகவதி முற்றும் உணர்ந்தவளே
முண்டக மேலோன் வேண்டிட
ஆங்கண மொழிந்ததும் உண்டாமால்
வந்தருள் பரம சிவனோ
டியைந்தேன் வகுப்பிற் பேதமிலை
என்றே இயம்பி ஏவரும்
தொழவே இன்புற் றிருந்தனையால்
மந்த புத்தி கொண்டோ
பேதம் மறந்து காண்கின்றார்
மாநிலம் உயிரிறை ஊடே
உற்றிடும் ஆற்றல் யானென்றாய்
சுந்தரி அந்தரி வட்டூர்ச்
சோதி தூநீர் ஆடியருள்
தோன்றாத் துணையாம் கண்ணாத்தா
தூநீர் ஆடியருள்.

## 10. ஊசற்பருவம்
(வேறு)

91. மின்னியொளிர் கனகமதை எடுத்துருக்கி
வார்த்திட்ட தம்ப மீதில்
மேதகுநல் வயிரங்கள் கொண்டுசெய்
உத்தரம் மேவ வைத்துத்
துன்னுசுடர் வீசியொளிர் தளரநிரை
மாலைகள் தொங்க விட்டு
தூக்குபல மலர்மாலை நறுமணம்
தொலைதூரம் வீச வைத்து
பன்னுதற் கரியபல பவளநிரை
பதித்திட்ட பலகை ஏற்றி
பாவையரே திருவூஞ்சல்
பண்ணிவைத்தோம்
மண்ணுபுகழ் வட்டூரில் மாமாரி
பொன்னூசல் ஆடி அருளே
மட்டுவார் குழலம்மை மாதங்கி
பொன்னூசல் ஆடி அருளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

92. கொன்றைபுனை சடையனொடு கூடவிருந்
தைந்தொழிலும் ஆற்று கிற்பாய்
கூடாரை வெல்லுஞ்சீர் கோவிந்தன்
தங்கையென கூற நிற்பாய்
அன்றலர்ந்த மனமலரை வென்றிட்ட
அழகுமுகம் அருளை வீசும்
அம்மையே திரிசூலி முத்துமாரி
அமரர்கள் வாயிலில் காத்திருந்தார்
துன்னுபுகழ் சோலைசெறி வட்டூரில்
வீயோடை தளிவி ளைந்தாய்
தூரவழி போனாலும் தணையாகத்
தொடர்ந்துமே வந்த ருளுவாய்
மன்னுமெழில் வட்டூரில் மாமாரி
பொன்னூசல் ஆடி அருளே
மட்டுவார் குழலம்மை மாதங்கி
பொன்னூசல் ஆடி அருளே.

93. வேப்பிலைதன் உள்ளிருக்கும் விந்தைகளை
விரித்துரைக்க வல்லா ருண்டோ
வினைவயத்தால் கொடுநோய்கள் வந்தக்கால்
வீடுதோறும் தொங்க வைப்பார்
காப்புதவும் நின்னருளால் படிமத்தான்
அதையேந்தி இல்லம் போந்து
கடித்தோக்கிப் பாவைசெய கண்டகொடு
நோயெல்லாம் நீங்கிப் போகும்
பூப்பொலியும் தாதிறைக்கும் பூஞ்சோலை
மேயவட்டூர் வீயோ டைவாழ்
பூங்கொடியே பகவதியே உத்தமியே
பொய்மையிலை மாரி முத்தே
மாப்பெரிய கொழுகொம்பே மாதரசே
பொன்னூசல் ஆடி அருளே
மட்டுவார் குழலம்மை மாதங்கி
பொன்னூசல் ஆடி அருளே.

94. கூத்தாடுங் கொட்டகையுள் முன்பெல்லாம்
கோமளமே கொலு இருப்பாய்!
கொட்டுகின்ற மேளத்துக் கேற்றபடி
ஆடுநரின் ஆட்டம் காண்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்தாளே அம்பிகையே சாமுண்டி
அபிராமி வாலைத் தேவி
அழகான உடையுடுத்தி அணிபூண்ட
காட்சிதனை கண்ணால் கண்டேன்
காத்தாளும் முக்கண்ணி கவினொழுகும்
வட்டூருக் கரசி நீயே
கண்ணதனைக் குளமாக்கிக் கைதொழுவார்
களைகண்ணே மாரி முத்தே
மாத்தவளே முன்னவர்க்கும் முன்னவளே
பொன்னூசல் ஆடி அருளே
மட்டுவார் குழலம்மை மாதங்கி
பொன்னூசல் ஆடி அருளே.

95. நீடுகொம்பா வீற்றிருந்த குயில்கூடல்
நினைந்துகுஞ்சுக் குயிலார் தாமும்
நில்லாதே எதிரெதிரே கூவுகின்ற
நீர்மையது மல்கும் வட்டூர்
தேடிவந்தே கோயில்கொள் திருவிளக்கே
தேயமெல்லாம் புகழும் தேவி
திங்களிலே தண்மைநீ தினகரனில்
திகழ்ந்தொளிரும் பிரபை நீயே
ஆதியந்தம் இல்லாத ஆரணங்கே
அன்பர்கள் வேண்டி நின்றால்
அன்னையராம் பிராமியுடன், வைணவியே
ரௌத்திரியாம் வடிவங் கொள்வாய்
மாடுநின்றார் தொண்டர்குழாம் மனோன்மணியே
பொன்னூசல் ஆடி அருளே
மட்டுவார் குழலம்மை மாதங்கி
பொன்னூசல் ஆடி அருளே.

**(வேறு)**

96. பழகுறு மடியவர் பக்கல்
அமர்ந்தே பாடிப் பரவுகிறார்
பற்றொடு சிலபேர் கரகம்
தேந்திப் போந்தே ஆடுகிறார்
அழகுறு காவடி தூக்கி
சிற்சிலர் அன்புடன் ஆடுகிறார்
அமரர் வாழ அலைகடல்
நஞ்சை அயின்றோன் பங்கினளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழவுகள் மலிதரு சீருயர்
வட்டூர் வீயோடைப்பதிய
வித்தகி மாலினி எங்கள்
முதல்வி விமலை மாரிமுத்து
புழுகு பூகிய பொற்கொடி
ஊசல் ஆடி அருளுதியே
பூரணி எங்கள் பொன்னே
ஊசல் ஆடி அருளுதியே.

97. பரவும் முத்தே மணியே
மரகதம் பவளம் அணையவரே
பகரும் மலரே மலரின்
நறவே பத்ம பதத்தினரே
அரவம் புனையும் அரனின்
பங்கில் அமரும் மீனாட்சி
உயிரின் உயிராய் உலவா
அமிர்தாய் உற்றருள் காமாட்சி
விரவும் சோலை வட்டூர்
உறையும் விரிசுடர் மாரிமுத்தே
வேண்டும் அடியார் வினைகள்
களைவாய் வித்தகி பார்வதியே
பிரசங் கமழும் பொற்கொடி
ஊசல் ஆடி அளுருதியே
பூரணி எங்கள் பொன்னே
ஊசல் ஆடி அருளுதியே

95. ஓங்கும் நிலவாம் அமுதைப்
பொழியும் மதிநேர் நுதலினனே
உண்மை அன்பர்க் கள்ளிக்
கொட்டும் வன்னற் பெருமாட்டி
தேங்கும் செந்தேன் பிலிற்ற
அதனைக் குடிப்பான் அறுகால்களே
திரியும் மலர்கள் திகழும்
அளகம் கொண்ட இளம்பிடியே
நீங்கில் மாதை கந்தர்
முதலோர் செப்பணி ஏற்றவளே
திகழும் சோலை வட்டூர்
மேய தேவி மாரிமுத்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாங்கார் தெய்வப் பூங்கொடி
ஊசல் ஆடி அருளுதியே
பூரணி எங்கள் பொன்னே
ஊசல் ஆடி அருளுதியே.

99. அன்னாய் அமுதே உயிருக்
குயிரே அருளே மாரிமுத்தே
அப்புயம் நேர்ப்பதம் தம்மில்
வரித்த அரிச்சிலம் பொலிகூட்டும்
துன்னும் பட்டுடை கட்டி
மேகலை தொங்க வீற்றிருப்பாய்
துணையாம் தனத்தே தரள வடங்கள்
தொங்கி எழில் கூட்டும்
மன்னும் மங்கல நாளும்
கழுத்தில் மரபில் தரித்திருப்பாய்
மதிமுக வதனப் புன்னகை
தன்னால் மன்னுயிர் கருள்சுரப்பாய்
பன்னும் வட்டூர்ப் பாவாய் ஊசல்
ஆடி அருளுதியே
பூரணிஎங்கள் பூங்கொடி ஊசல்
ஆடி அருளுதியே.

100. மண்ணக முற்றும் வாழும்
உயிர்கள் மகிழ்வொடு வாழியரே
மருவும் சரியை கிரியை
யோக மார்க்கம் ஓங்குகவே
நண்ணுங் குருவொடு லிங்க
சங்கமம் நாளும் வாழியரே
நலமருள் பூதி கண்டிகை
முதல நன்மை நல்குகவே
பண்ணவன் அருளொடு பஞ்சாக
கரமும் பரவிப் பயிலுகவே
பழமைச் சிவநெறி பாரகம்
முற்றும் பரவிப் பயிலுகவே.
எண்ணும் வட்டூர் இறைவீ
ஊசல் ஆடி அருளுதியே
ஏந்திழை முத்து மாரி
ஊசல் ஆடி அருள்பென்றே.

புலவரமணி, பண்டிதர், நாற்கவிராயர்,
கலாபூஷம், க.மயில்வாகனனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டூர் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான பரிபாலனசபை, கோபுரப் பணிக்குப் பேருதவி செய்தோர் விபரம்

1. திரு. திருமதி ம. நவரத்தினம் கணேஸ்வரன்
கணேஸ்வரன் ராம்கிருஸ்ணா
கணேஸ்வரன் பாக்கியா
கணேஸ்வரன் தாட்சாயினி
2. திரு. திருமதி கந்தையா கமலேஸ்வரன்
கமலேஸ்வரன் மருஷா
கமலேஸ்வரன் பிரணா
கமலேஸ்வரன் காயத்திரி
கமலேஸ்வரன் கஜானன்
3. திரு. திருமதி ஆறுமுகசாமி வர்ணகுலசிங்கம்
வர்ணகுலசிங்கம் தனுசியன்
வர்ணகுலசிங்கம் டினீசன்
வர்ணகுலசிங்கம் கோபிதா
4. திரு. திருமதி தேவராசா முருகானந்தசிவம்
முருகானந்தசிவம் சுகன்யா
முருகானந்தசிவம் தேவதீசன்
முருகானந்தசிவம் டியானி
5. திரு. திருமதி தருமலிங்கம் தங்கவடிவேல்
6. திரு. திருமதி இலங்கராசசிங்கம் கணேசராசசிங்கம்
7. திரு. திருமதி நடராசா சுகுமார்
8. திரு. திருமதி முத்துத்தம்பி பஞ்சலிங்கம்
பஞ்சலிங்கம் கௌதமன்
9. திரு. திருமதி உமாபதிசிவம் திருமாறன்
10. திரு. திருமதி முத்துத்தம்பி சர்வேஸ்வரன்
சர்வேஸ்வரன் யசித்தா
சர்வேஸ்வரன் தனுஷா
சர்வேஸ்வரன் மிருஷா
11. திரு. திருமதி முத்துத்தம்பி லிங்கேஸ்வரன்
லிங்கேஸ்வரன் விஜித்
லிங்கேஸ்வரன் சுஜிதனா
லிங்கேஸ்வரன் சுகேஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. திரு. திருமதி சண்முகம்பிள்ளை சிவானந்தன்
சிவானந்தன் சஞ்ஜீவி
சிவானந்தன் நிவேதன்
சிவானந்தன் மோனிசா
சிவானந்தன் சமுத்திரா

13. திரு. திருமதி நவரட்ணம் கேசவராசன்
கேசவராசன் றிஜித்தா
கேசவராசன் கோவர்த்தன்
கேசவராசன் லாகுலன்

14. திரு. திருமதி புலேந்திரன் சுமந்திரன்
சுமந்திரன் சுலோஜெனன்
சுமந்திரன் ஸ்ரீர்த்தனா
சுமந்திரன் சுலக்சன்

15. திரு. திருமதி மகாலிங்கம் தனபாலசிங்கம்
தனபாலசிங்கம் பிரியா
தனபாலசிங்கம் தனம்
தனபாலசிங்கம் கேமன்
தனபாலசிங்கம் கற்பகன்

16. திரு. திருமதி விஜயகுமார் மிருஸ்குமார்

17. திரு. திருமதி துரைச்சாமி சதீஸ்குமார்

18. திரு. திருமதி தேரூர்ராசா தவராசா
தவராசா கஸ்தூரி
தவராசா யுவாணி
தவராசா சதீஸ்வரன்

19. திரு. திருமதி மயில்வாகனம் முருகானந்தன்
முருகானந்தன் விதுர்சன்
முருகானந்தன் மயூரன்
முருகானந்தன் பவித்திரன்

20. திரு. திருமதி சிவஞானமூர்த்தி வரதராசா
வரதராசா சதீஸ்
வரதராசா கிருஷ்ணன்
வரதராசா விதர்ஷன்
வரதராசா கீர்த்திகா

21. திரு. திருமதி இராசகோபால்நாதன் திரைமாறன்
திரைமாறன் விருஷா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைமாறன் வித்தியா
திரைமாறன் யசிக்கா
திரைமாறன் கௌசிமாறன்

22. திரு. திருமதி சிவப்பிரகாசம் குகானந்தன்
குகானந்தன் தீபிகா
குகானந்தன் திபகன்

23. திரு. திருமதி இராசகோபால்நாதன் இராசமாறன்

24. திரு. திருமதி சிவப்பிரகாசம் சதானந்தன்
சதானந்தன் சுஜந்தினி
சதானந்தன் லஸ்மிலா
சதானந்தன் கிரிசாந்

25. திரு. திருமதி சிவப்பிரகாசம் இராசானந்தன்

26. திரு. திருமதி மாணிக்கவாசகர் கருணதேவதாசன்
கருணதேவதாசன் தனேஸ்குமார்
கருணதேவதாசன் பாமினி
கருணதேவதாசன் கேமஉசா
கருணதேவதாசன் கேமப்பிரியா
கருணதேவதாசன் சுஜிதா
கருணதேவதாசன் டர்சனா

27. திரு. திருமதி கந்தசாமி மதிவண்ணன்
மதிவண்ணன் கிஷோதன்
மதிவண்ணன் சிரஞ்ஜீவிதன்
மதிவண்ணன் மதிவாணி

28. திரு. திருமதி வீரசிங்கம் வீரசுப்பிரமணியம்
வீரசுப்பிரமணியம் ஜெயபாலன்
வீரசுப்பிரமணியம் அருட்குமரன்
வீரசுப்பிரமணியம் நேசராசன்
வீரசுப்பிரமணியம் நந்தினி
வீரசுப்பிரமணியம் சுதாகினி

29. திரு. திருமதி தேவராசா தேவவிரதன்
தேவவிரதன் கமலினி
தேவவிரதன் நந்தவேணன்
தேவவிரதன் மிதுர்சன்
தேவவிரதன் திவ்வியா

30. திரு. திருமதி சின்னையா கோபாலபிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. திரு. திருமதி அழகரத்தினம் தங்கேஸ்வரன்
தங்கேஸ்வரன் திவாகர்
தங்கேஸ்வரன் ஸ்ரீஷானி
தங்கேஸ்வரன் பிறேமினி
தங்கேஸ்வரன் திலீபன்

32. திரு. திருமதி சிவகணேசமூர்த்தி கோகிலதாசன்
கோகிலதாசன் தாட்சாயினி
கோகிலதாசன் வாகீசன்
கோகிலதாசன் வாகினி
கோகிலதாசன் வாசுகி

33. திரு. திருமதி வர்ணகுலசிங்கம் அமிர்தநாதன்

34. திரு. திருமதி தில்லையம்பலம் யோகேஸ்வரன்

35. திரு. திருமதி இராஜபூபதி ரவீந்திரன்

36. திரு. திருமதி நடராசா சிவசோதி
சிவசோதி ஜீவித்
சிவசோதி இதயராணி

37. திரு. திருமதி வேலும்மயிலும் சிறீஸ்கந்தராசா
சிறிஸ்கந்தராசா மதுரா
சிறிஸ்கந்தராசா சிந்துயா
சிறிஸ்கந்தராசா வர்மிகா
சிறிஸ்கந்தராசா சிவசிறி

38. திரு. திருமதி நடராசா அருட்சோதி
அருட்சோதி பிறேம்நாத்
அருட்சோதி திவ்வியன்
அருட்சோதி துர்க்கா

39. திரு. திருமதி சோதிலிங்கம் லிங்கதாசன்
லிங்கதாசன் சோபியன்
லிங்கதாசன் நிசோபினா
லிங்கதாசன் சொரூபிணி

40. திரு. திருமதி தேவராசா மோகனராசன்
மோகனராசன் கோபுனா
மோகனராசன் தேமதுரன்
மோகனராசன் குகபரன்

41. திரு. திருமதி சுப்பிரமணியம் ஏகாம்பரநாதன்
ஏகாம்பரநாதன் அருட்செல்வன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. திரு. திருமதி இராமசாமி வசந்தராசன்
திரு. திருமதி இராமசாமி நாகம்மையார்
திரு. திருமதி வசந்தகுமாரன் பிருந்தா
வசந்தகுமாரன் றோமிதா
வசந்தகுமாரன் நிசாந்தி
வசந்தகுமாரன் அழகேஸ்வரி

43. திரு. திருமதி நமசிவாயகம் விக்கினேஸ்வரநாதன்
விக்கினேஸ்வரநாதன் வசீகரன்
விக்கினேஸ்வரநாதன் மணிமேகலா
விக்கினேஸ்வரநாதன் வர்மிலா
விக்கினேஸ்வரநாதன் சுஜித்குமார்

44. திரு. திருமதி நமசிவாயகம் முருகநாதன்
முருகநாதன் அஞ்சனா
முருகநாதன் கமல்ராஜ்
முருகநாதன் கார்த்திகா

45. திரு. திருமதி அமரசிங்கம் சிறீதரன்

46. திரு. திருமதி தில்லையம்பலம் யோகராசா
யோகராசா பிறேமினி
யோகராசா பிரியா
யோகராசா ஜனனி
யோகராசா தயாநிதி

47. திரு. திருமதி வேல்ச்சாமி சர்வேந்திரன்

48. திரு. திருமதி வீரவேல் விமலராசா
விமலராசா ரூபிணி
விமலராசா சிவராம்

49. திரு. திருமதி தெய்வேந்திரம்பிள்ளை பிரபாகரன்
பிரபாகரன் பாரத்
பிரபாகரன் லக்ஸ்சன்

50. திரு. திருமதி கதிரமலைநாதன் தர்மசீலன்

51. திரு. திருமதி கந்தசாமி இராஜகோபால்நாதன்
இராஜகோபால்நாதன் பிரதீபா
இராஜகோபால்நாதன் சிவசுதன்
இராஜகோபால்நாதன் ரஞ்ஜித்
இராஜகோபால்நாதன் நிவேதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53. திரு.திருமதி அரியரத்தினம் சத்தியதேவன்
54. திரு. திருமதி கந்தசாமி வரதராஜா
வரதராஜா கார்த்திகா
வரதராஜா ரூபிகா
வரதராஜா நிவேதா
வரதராஜா எழிலி
55. திரு. திருமதி தவரட்ணசிங்கம் செல்வநாதன்
செல்வநாதன் பாலமுரளி
செல்வநாதன் குருபரன்
செல்வநாதன் பிரபா
செல்வநாதன் மாதவி
56. திரு. திருமதி தவரட்ணசிங்கம் அருமைநாதன்
அருமைநாதன் திவாகர்
அருமைநாதன் ஜெனீஸ்வரி
அருமைநாதன் ஜெனிதா
57. திரு. திருமதி பாலசிங்கம் தேவரஞ்சன்
58. திரு. திருமதி தியாகராசா குணபாலன்
59. திரு. திருமதி நடராசா ரவீந்திரமூர்த்தி
ரவீந்திரமூர்த்தி சுஜீத்தா
ரவீந்திரமூர்த்தி மயூரா
60. திரு. திருமதி தேவராசா கணேசராசா
கணேசராசா திவாஸ்கரன்
கணேசராசா பகீரதன்
கணேசராசா சந்திரகாந்
61. திரு. திருமதி முருகுப்பிள்ளை சச்சிதானந்தசிவம்
சச்சிதானந்தசிவம் திருவேகரன்
சச்சிதானந்தசிவம் கார்த்திகா
சச்சிதானந்தசிவம் தீபா
62. திரு. திருமதி கனகதம்பிராசா உமைபாலன்
உமைபாலன் காருண்யன்
உமைபாலன் யாதவன்
உமைபாலன் கிருத்திகன்
63. திரு. திருமதி செல்வநாயகம் முகுந்தன்
64. திரு. திருமதி பரமேஸ்வரன் சோமேஸ்வரன்
65. திரு. திருமதி பூபாலசுந்தரம் உதயகுமார்
66. திரு. திருமதி பஞ்சாட்சரசிவம் அச்சுதன்
67. திரு. சரவணபவன் குகநேசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

68. திரு. திருமதி வீரமுத்து சோமலிங்கம்
69. திரு. திருமதி சிவசுந்தரநாதன் கருணாகரன்
கருணாகரன் றோஜிதன்
கருணாகரன் றிஜிதன்
70. திரு. திருமதி இராஜதுரை சிவானந்தன்
சிவானந்தன் சாம்பவி
சிவானந்தன் அஜந்தன்
சிவானந்தன் கஜந்தன்
சிவானந்தன் சுஜிந்தன்
71. திரு. திருமதி அழகரட்ணம் ஸ்ரீராசசேகரம்
ஸ்ரீ ராசசேகரம் சுதர்ஜினி
ஸ்ரீ ராசசேகரம் விஜிந்தன்
72. திரு. திருமதி சோமலிங்கம் நந்தகுமார்
73. திரு. திருமதி குலத்துங்கம் சிவஞானம்
74. திரு. திருமதி பூபாலசுந்தரம் சுரேஸ்குமார்
75. திரு.திருமதி செல்லத்துரை சோதிநாதபிள்ளை
76. திரு. மயில்வாகனம் சசிதரன்
77. திரு. திருமதி கந்தசாமி சோதிநாதன்
78. திரு. திருமதி தவராசா தீபதூபநாதபிள்ளை
79. திரு.திருமதி பரராசசிங்கம் தவராசா
80. திரு. திருமதி மயில்வாகனம் அழகேசன்
81. திரு. திருமதி திருமுத்துராசா மணிவண்ணன்
82. திரு. பண்டாரிநாதன் சிவகுமாரன்
83. திரு. திருமதி பாலகிருஷ்ணன் சிவநேசன்
84. திரு. திருமதி அரியரத்தினம் அருளானந்தன்
85. திரு. திருமதி அழகரட்ணம் குணசேகரம்
அழகரட்ணம் உதயபானு
86. திரு. திருமதி அழகரட்ணம் சர்வேஸ்வரன்
87. திரு. திருமதி குணசேகரன் ரமேஸ்
88. திரு. திருமதி தம்பித்துரை சிவதாஸ்
89. திரு. திருமதி தியாகராசா இராசசுரேஸ்
90. திரு. திருமதி சோமலிங்கம் யசோதரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டூர் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான திருப்பணிப் பரிபாலன சபை மண்டப, வாகன அன்பளிப்புச் செய்தோர் விபரம்

- மூலஸ்தான மண்டபம்
  அன்பளிப்பு திரு. திருமதி சிவலிங்கம் கலைவாணன் குடும்பம்

- முன் வளைவு மண்டபம் அதாவது மூலஸ்தானத்திற்கு நேர் உள்ள மண்டபம்
  அன்பளிப்பு: திரு. திருமதி சிவலிங்கம் கலையரசன்

- வசந்தமண்டபம்
  அன்பளிப்பு : திரு. திருமதி முருகுப்பிள்ளை, திருஅழகன் குடும்பம்

- வசந்தமண்டப நேர் மண்டபம்
  அன்பளிப்பு: திரு. திருமதி இராஜரத்தினம் சத்தியமூர்த்தி குடும்பம்

- வசந்தமண்டபப் பக்க மண்டபம்
  அன்பளிப்பு: திரு. திருமதி இரத்தினசிங்கம் இன்பலோலன் குடும்பம்

- சண்டேஸ்வரர் மண்டபம்
  அன்பளிப்பு: திரு.திருமதி மாணிக்கம் கவிரட்ணசிங்கம் குடும்பம்

- காத்தவராயர் மண்டபம்
  அன்பளிப்பு: திரு. திருமதி முருகானந்தம் உதயகுமார் குடும்பம்
  திரு. திருமதி முருகானந்தம் பரணிதரன் குடும்பம்

- யாக மண்டபம்
  அன்பளிப்பு: திரு. திருமதி விவேகானந்தசிவம் சிறீகாந்தன் குடும்பம்

- இராஜேஸ்வரி மண்டபம்
  அன்பளிப்பு: திரு. திருமதி நாகலிங்கம் யோகேஸ்வரன் குடும்பம்

- மடப்பள்ளி மண்டபம்
  அன்பளிப்பு: திரு. திருமதி தமிழ்ச்செல்வன் குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தாமரை வாகனம்
  அன்பளிப்பு: திரு. திருமதி சிவகுரு வசந்தராஜன் குடும்பம்

- அன்ன வாகனம்
  அன்பளிப்பு: திரு. திருமதி சிவசுந்தரராசா சிவகுகன் குடும்பம்

- ஐந்துதலை நாக வாகனம்
  அன்பளிப்பு: திரு. திருமதி உமாபதிசிவம் தொல்காப்பியன் குடும்பம்

- சகடை வாகனம்
  அன்பளிப்பு: திரு. திருமதி கந்தசாமி திருவானந்தராசா குடும்பம்
  திரு. திருமதி கந்தசாமி தவானந்தன் குடும்பம்
  கந்தசாமி தயானந்தன் குடும்பம்

- கொடிமரம் உபயம்
  அன்பளிப்பு: திரு. திருமதி செல்லத்துரை ஆசிரியர் குடும்பம்

- நந்தி பலிபீடம் உபயம்
  அன்பளிப்பு : திரு. திருமதி நமசிவாய சுந்தரலிங்கம் குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பணி வேலைகளுக்கு அன்பளிப்புச் செய்த அன்பர்கள்

01. நடராசா சிவசுந்தரராஜா
02. அருளானந்தசிவம் பங்கைய மணாளன்
03. குணரட்ணம் ஜெயநாதன்
04. சதாசிவம் அருணகிரிநாதன்
05. அமிர்தசிகாமணிப்பிள்ளை அமிர்தராசா
06. முத்துலிங்கம் ரவிச்சந்திரன்
07. துரைராசசிங்கம் கிருபாகரன்
08 கனகசுந்தரம் அன்பழகன்
09. தம்பித்துரை சிவதாஸ்
10. முருகுப்பிள்ளை சதானந்தா
11. சதாசிவம் அருட்குமார்
12. சச்சிதானந்தபிள்ளை கங்காசீலன்
13. அருணகிரிநாதன் றமேஸ்வரன்
14. நாதன் குடும்பம்
15. ஆறுமுகசாமி மகேந்திரம்
16. வடிவேல் சிந்து
17. தளையசிங்கம் சத்தியசீலன்
18. கிருபைநாயகி ஜெயானந்தம்
19. வேலுப்பிள்ளை தம்பையா
20. தங்கராசா மோகனராசா
21. சொக்கலிங்கம் சிவதேவி
22. கந்தையா சொக்கலிங்கம்
23. குருசாமி தவராசசிங்கம்
24. தேவராசா குணசேகரம்
25. விநாயகமூர்த்தி பத்மசிவம்
26. சீனிவாசகம் ஸ்ரீராசமூர்த்தி
27. பாக்கியமுத்து சுவாமிநாதன்
28. மணிவாசகம் சிவச்சந்திரன்
29. மீரா சத்தியரூபன்
30. வீரபத்திரர் சிவசோதிநாதன்
31. வீரசிங்கம் மீனேஸ்வரன்
32. மணிவாசகன் குகதாசன்
33. இராசரத்தினம் சத்தியமூர்த்தி
34. நாகராசா சர்வேஸ்வரன்
35. அருணாசலம் அரியரத்தினம்
36. மணிவாசகம் சுரேந்திரன்
37. ஐயாத்துரை மணிவாசகன்
38. சந்திரதாஸ் சிவகணேசமூர்த்தி
39. துரைராசா இராமச்சந்திரன்
40. குணசீலன் கவிதா
41. ஜானகி கனிநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் உள்ளம் கனிந்த நன்றி

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு இணங்க வட்டூர் வீயோடை இலுப்பையடி முத்துமாரி அம்பாளுக்குச் சித்திர வேலைப்பாடுகள் மிளிரும் சிறப்புமிக்க எழில்வாய்ந்த கலைக்கோபுரம் அமைத்து தென்னிந்திய சிவாச்சாரியர்களைக் கொண்டு ஆகம விதிப்படி அற்புதமாகக் கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம், திருவிழா ஆகியவற்றை அழகுற நடத்தி ஆனந்தம் அடைந்திருக்கிறார்கள். அம்பாளின் பேரருள் பெற்றிருக்கிறார்கள். அம்பாள் அடியார்களும், ஆலய தேவஸ்தானமும் பரிபாலனசபையினரும்.

இப்பெரும் கைங்கரியத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் அளப்பரிய பொருள் உதவியும் அள்ளி அள்ளி வழங்கிய அன்பு உள்ளங்கள் அத்தனைபேருக்கும் தேவஸ்தான பரிபாலனசபையினர் நன்றியினைக் கூறிக்கொள்கின்றோம்.

தனித்தனியே ஒவ்வொருவருடைய பெயரையும் குறிப்பிட்டுக் கூறுவது அழகல்ல, பண்பல்ல, என்ற காரணத்தால் இப்பெரும் முயற்சிக்குத் தூண்களாக நின்று தாங்கிய சகலருக்கும், அம்பாள் சகல செல்வங்களும், நீண்ட ஆயுள்களும் பெருவாழ்வும் என்றென்றும் நல்க அவளின் திருப்பாதங்களை வணங்கி அமைகின்றோம்.

நன்றி

**அறங்காவலர்கள்,**
**பரிபாலனசபையினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் உள்ளம் கனிந்த நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org